36.2

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY
Acc. No. 11775
MADRAS

# காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள்

# Inscriptions of Kanchipuram District

# காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள்


பதிப்பாசிரியர்

தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.,

சிறப்பு ஆணையர்

உதவிப் பதிப்பாசிரியர்கள்

க. குழந்தைவேலன்

முனைவர் ஆ. பத்மாவதி

அர. வசந்தகல்யாணி



வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை

எழும்பூர், சென்னை - 600 008.

2006

## BIBLIOGRAPHICAL DATA


| | |
|---|---|
| Title | **Inscriptions of Kanchipuram District** |
| Editor | **Special Commissioner of Archaeology** |
| Copy right | T.N. State Dept. of Archaeology |
| Subject | Epigraphy |
| Language | Tamil & English |
| Edition | First |
| Publication No. & Year | 179 / 2006 |
| Type point | 11 pt |
| No. of Pages | xxxii + 252 |
| Paper used | 80 GSM Maplitho |
| Type Setter | **Pavai Printers (P) Ltd.,**<br>Royapettah, Chennai - 600 014<br>Ph: 28482441, 28482973 |
| **Price** | **Rs. 121.00** |
| Printed at | **TAMCOS**<br>Royapettah,<br>Chennai - 600 014. |
| Publisher | **T.N. State Dept. of Archaeology,**<br>Tamil Valarchi Valagam<br>Halls Road, Egmore<br>Chennai - 600 008. |



TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY. MADRAS
11775
LIBRARY,
Acc No
Date


முன் அட்டை : சிவன் கோயில், சிவன் கூடல் - தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னம்

பின் அட்டை :

1. நந்திவர்ம பல்லவன் கல்வெட்டு, உலகளந்த பெருமாள் கோயில், காஞ்சிபுரம்.
2. விட்டலேஸ்வரர் கோயில், விட்டலாபுரம் - தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னம்

# பதிப்புரை

'வரலாறு' என்பது ஒவ்வொரு மனிதனுக்கும், ஒவ்வொரு பொருளுக்கும் உள்ளது. இன்றைய செய்தி நாளைய வரலாறு. தலைமுறைகள் கடந்து சொல்லப்படுவது வரலாறு. இதனைப் பல வகையிலும் பதிவு செய்து சென்றுள்ளனர் நம் மக்கள். அப்பதிவினை அணுகி ஆராய்ந்து வரலாறு படைப்பதும் அடுத்த தலைமுறையினர் அறியும் வகையில் விட்டுச் செல்வதும் நம் அனைவரின் கடமையாகும். அவ்வகையில் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை தமிழக வரலாற்றின் பல்வேறு கூறுகளையும் பலவகையான சான்றுகளையும் ஆய்வு செய்து, அவற்றைப் புத்தகமாக வெளியிட்டு வருகின்றது.

வரலாற்றை அறிய நமக்குக் கிடைக்கும் சான்றுகள் தொல்லியல், காசுகள், கல்வெட்டுகள், கலைகள், இலக்கியங்கள் எனப் பல்வேறான வகைகளில் உள்ளன. அவற்றைக் காலவாரியாகப் பகுத்தும், தொகுத்தும் பார்க்கும்போது முழுமையான வரலாறு கிடைக்கின்றது. மேற்கூறியவற்றுள் கல்வெட்டுகள் வாயிலாக நமக்கு ஏராளமான செய்திகள் கிடைக்கின்றன. இதில் குறிப்பாகத் தமிழகத்தில் 60 விழுக்காடு கல்வெட்டுகள் உள்ளன என்பது பெருமைக்குரிய செய்தியாகும். இவை முழுமையும் வரலாற்றை அறிய உதவும் வகையில் உள்ளதால் சிறப்பாக ஆய்வு செய்து பாதுகாக்கப் பட வேண்டும் என்ற சீரிய நோக்கத்தில், சிறப்பானது முதல் சிதறிக் கிடப்பவை வரை அனைத்துக் கல்வெட்டுகளும் முறையாகப் படியெடுக்கப்பட்டுப் பதிவு செய்யப் படுகின்றன. நூல்களாக வெளியிடப்பட்டும் வருகின்றன. 2004-2005 ஆம் ஆண்டில் வரலாற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்த ''கல்வெட்டு முனைப்புத் திட்டம்'' என்ற திட்டம் செப்டம்பர் 2004-ல் ஆரம்பிக்கப்பட்டுக் கல்வெட்டு கள் அதிவேகமாகப் படியெடுக்கப்பட்டன. அதன் பயனாய் செப்டம்பர் 2004 முதல் டிசம்பர் 2005 வரை ஏறத்தாழ 9,000 கல்வெட்டுகள் உட்பட மொத்தம் 16,000 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு, பல மாவட்டங்களில் கல்வெட்டுப் படியெடுக்கும் பணி நிறைவுற்றுள்ளது. சுமார் 4,000 கல்வெட்டுகள் படித்து முடிக்கப்பட்டுள்ளன. இதுகாறும் 24 கல்வெட்டுத் தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்க சிறப்பம்சமாகும்.

இவ்வாண்டில் ''காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள்'' வெளியிடப்படுகிறது. காஞ்சிபுரம் என்ற சொல்லே வரலாற்றுச் சிறப்புடையது. சங்க காலம் முதல் இதன் வரலாறு நமக்குத் தெளிவாகக் கிடைக்கிறது. இன்றைய காஞ்சிபுரம் மாவட்டம் அன்று தொண்டை மண்டலம் எனும் பரந்த பகுதியினுள் இருந்துள்ளது. தொண்டை மண்டலம் மிகப் பழமையான வரலாற்றுத் தடயங்களைக் கொண்டது. வரலாற்றுக்கு முற்பட்ட பழைய கற்கால மனிதன் வாழ்ந்த தடயங்களாக குடியம் குகை, கோற்தலை யாற்றுப் படுகையில் கிடைக்கும் கற்கால மனிதன் பயன்படுத்திய கற்கருவிகள் ஆகியவற்றைக் காணலாம். சங்க இலக்கியங்கள் போற்றும் காஞ்சிபுரம் போன்ற ஊர்கள்

இருந்த பகுதி, கலைக்கருவூலம், வரலாற்றுப் பெட்டகம் எனப் போற்றும் வகையில் பல்லவர் ஆட்சி புரிந்து தொண்டைநாடு எனப் பெயர் பெற்ற பகுதி. சோழர், பாண்டியர், சம்புவராயர், விஜயநகரர் என அரச மரபுகள் தொடர்ந்து ஆட்சி புரிந்து வளம் சேர்த்த பகுதி. இத்தகைய பெருமைகளைக் கொண்ட தொண்டை மண்டலத்தின் திலகம் போல் அமைந்தது காஞ்சிபுரம் மாவட்டம். இம்மாவட்டத்தில் தமிழக மக்களின் நாகரிகத்தை, பண்பாட்டை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் எழில்மிகு கோயில்களின் அருமையான கல்வெட்டுகளைத் தொகுத்து வழங்க வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாகக் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள கோயிற் கல்வெட்டுகளைப் படியெடுத்து, அவற்றுள் முதற் தொகுதியில் சில ஊர்க் கல்வெட்டுகளை வெளியிடுகிறோம். தொடர்ந்து அடுத்தடுத்த தொகுதிகளும் வெளிவர உள்ளன.

கல்வெட்டுச் சிறப்பும், கோயிற் சிறப்பும், கலைச் சிறப்பும் மிக்க சிறுதாவூர், சிவன்கூடல், மாகறல், காஞ்சிபுரம், திருவடிசூலம், விட்டலாபுரம் ஆகிய ஊர்க் கல்வெட்டுகளும் இன்னும் பிற ஊர்க் கல்வெட்டுகளும் இந்நூலில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் சிவன்கூடல், விட்டலாபுரம் ஆகிய ஊர்க் கோயில்கள் எமது துறைக் கட்டுப்பாட்டில் உள்ளன. அவை பழுதுபார்க்கப்பட்டுச் சிறப்பாகப் பராமரிக்கப் பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

**''காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள்''** தொகுதியில் வெளியிடப்பட்டுள்ள கல்வெட்டுகளைச் சிறப்பாகப் படியெடுத்துப் படித்தவர்கள் திரு. க. குழந்தைவேலன் (ப.நி), முனைவர் நா. மார்க்சிய காந்தி, முனைவர் சு. இராஜகோபால், முனைவர் ஆ. பத்மாவதி ஆகியோர் ஆவர். 2004-ம் ஆண்டு முதல் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கல்வெட்டு முகாம் மேற்கொண்டபொழுது மேற்பார்வையாளராக பணிபுரிந்தவர் திரு. ச. கிருஷ்ணமூர்த்தி ஆவார். மேலும் இந்த நூலைப் பதிப்பிக்கும் வகையில் செம்மைப் படுத்தி நூலாக்கம் செய்த கல்வெட்டாய்வாளர்கள் திரு. க. குழந்தைவேலன் (ப.நி) மற்றும் முனைவர் ஆ. பத்மாவதி, திருமதி அர. வசந்தகல்யாணி ஆகியோர் ஆவர். இவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகள்.

கல்வெட்டு வாசகங்களின் இடையிடையே வரும் கிரந்த எழுத்துகளைக் கணினியில் தட்டச்சு செய்வதற்கு உதவிபுரிந்த திரு இரா. கோபு, திரு. குமரவேல் மற்றும் நூலுக்குரிய நிழற்படங்கள், முகப்பு அட்டை அமைப்பு ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்து தந்த நிழற்படக்காரர் திரு மு.த. ஸ்ரீதரன் ஆகியோரையும் பாராட்டுகிறேன். ஊர்தோறும் சென்று கல்வெட்டுகளைச் சிறப்பாகப் படியெடுத்து வரும் துறைக் கல்வெட்டுப் பிரிவினர் அனைவருக்கும் என் பாராட்டுகள்.

துறை அலுவலர்கள் பலரது உழைப்பாலும் முயற்சியாலும் இதுபோன்ற நூல்களை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்த வரலாற்று அடிப்படைச் சான்றுகளை ஆய்வாளர்களும், சான்றோர்களும், ஆர்வலர்களும் பயன்படுத்தித் தமிழகத்தின் பண்டைய வரலாற்றுச் சிறப்புகளை உலகளவில் எடுத்துரைக்க வேண்டும் என்பதே எம் ஆவல்.

சென்னை : 600 008.
நாள் : 17-2-2006

**சிறப்பு ஆணையர்.**

# முன்னுரை

நகரங்களில் சிறந்தது காஞ்சி - என்று காளிதாசர் கூறியதற்கிணங்கப் பல்லாற்றானும் சிறந்து விளங்கிய ஊர் காஞ்சிபுரம். காஞ்சி நகரக் கடவுளாகத் திகழ்ந்தவர் விஷ்ணு. அவரைக் கல்வெட்டுகள் 'திரு ஊரகத்து நின்றருளின எம்பெருமான்' என்று கூறுகின்றன. காஞ்சி நகரின் மையப் பகுதியில் ஊரகம் என்றழைக்கப்பட்ட மண்டப வடிவிலமைந்த கோயிலில் விஷ்ணு நின்ற நிலையில் அமைக்கப்பட்டிருந்தார்.

புகழ்பெற்ற சென்னை அருங்காட்சியகச் செப்பேடு உத்தமசோழன் காலத்தைச் சார்ந்தது. அச்செப்பேடு திருஊரகத்து நின்றருளின எம்பெருமானாகிய விஷ்ணு கோயிலுக்கு அளித்த கொடையையே குறிப்பிடுகிறது. இன்று இக்கோயில் உலகளந்த பெருமாள் கோயில் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.

இவ்வூர்க் கல்வெட்டொன்றில் இவ்வூர் வியாபாரிகள் விஷ்ணுவைத் தங்கள் கிராம தேவதையாகக் குறிப்பிடுகின்றனர்.

தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தில் விடேல் விடுகு குதிரைச் சேரியில் உள்ள வியாபாரிகள் கற்பூரம் முதல் செருப்பு வரை உள்ள பொருட்களை வியாபாரம் செய்யவும், கடைஏறி வாணிகம் செய்யவும் அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

முதலாம் குலோத்துங்க சோழனின் இரண்டு கல்வெட்டுகள் (1-10) மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. மன்னன் காஞ்சிபுரம் வந்திருந்தபோது அங்குள்ள அரண்மனையின் உள்ளே ஜயங்கொண்ட சோழன் திருமாளிகையின் வடபக்கத்து இராஜாதிராஜன் மண்டபத்தில் உள்ள பள்ளிக்கட்டிலில் அமர்ந்திருக்கும்போது அவ்வூர் திருவூரகத்து அடியாரும் அரசியாருமாகிய ஆதித்தன் கம்பதேவியாரான திருபுவன முடையாள் பல்வேறு வழிபாட்டுச் செலவிற்காக ஓர் ஊரை இறையிலி தேவதானமாக அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒரூர் கம்பதேவி நல்லூர் என்ற பெயரில் தானமளிக்கப்பட்டதைத் தெரிவிக்கிறது. அதுபோலத் தக்கோலமான குலோத்துங்க சோழபுரத்து அரண்மனையின் உள்ளே வடபக்கத்திலுள்ள வழிபாட்டுத் தலத்தில் வணங்கிவிட்டு பள்ளிப்பீடத்தில் மன்னன் அமர்ந்திருக்கும்போது அதே அரசியார் கம்பதேவியும் ஆதித்தன் ஆண்ட குட்டியாரான அணுக்கியார் சோழகுலவல்லி என்பவரும் இந்த ஊரகத்து ஆழ்வாராகிய விஷ்ணுவுக்குச் சொந்தமான பழைய நிலம் மீண்டும் அவருக்கே அளிக்கப்பட வேண்டும் என்று விண்ணப்பம் செய்தபடி நிலம் அளிக்கப்பட்டதைத் தெரிவிக்கின்றது. மேலும் மன்னர் கோயிலினுள் வந்து வழிபடுவது, தானமளிப்பது போன்றவற்றை ஒரு நாடகம் போலச் சித்திரிக்கிறது இக்கல்வெட்டு (எண் 10)

ஸ்ரீகண்டர் கண்டன் கோல் - என்ற அளவுகோலின் பெயரும் அளவும் இக்கோயில் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

சிறுதாவூர்க் கோயில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கல்வெட்டுகளை தாங்கி நிற்கின்றன. ஆனால் கோயில் இடிந்து சரிந்து கிடக்கிறது.

களத்தூரில் கொங்கரையர் கள்ளப்பெருமானார் கல்வெட்டு மன்னன் பெயரைக் குறிப்பிடவில்லை. தொண்டை மண்டலத்தில் கி.பி. 8,9-ம் நூற்றாண்டில் பல்லவர்களின் வலுவான ஆட்சி தளர்ந்திருந்தபோது ஆங்காங்கே உள்ள சிற்றரசர்கள் சுயாட்சி போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர் என்பது தெரிகிறது. கொங்கரையர் கள்ளப் பெருமானார் என்ற இவர் களப்பிர மன்னர்களின் வழித் தோன்றலாக இருந்திருத்தல் வேண்டும்.

மாகறல் கோயில் இறைவன் பெரும்பற்றப் புலியூரில் எழுந்தருளியிருக்கும் போது, மன்னன் இக்கோயில் இறைவனை வணங்கி தேவதானமாக நிலம் வழங்கி யிருக்கிறான். அவ்வூர் மடத்தருகே சம்பந்தருக்கு கோயில் இருந்திருக்கிறது.

நென்மேலி மற்றும் திருவடிசூலம் ஆகிய இரு ஊர்களிலும் தமிழதரையர்கள் காணப்படுகின்றனர். இவர்கள் குழுக்களாகச் செயல்பட்டிருக்கின்றனர். நென்மேலியில் தமிழதரையர்களுக்கு காணியாக ஏராளமான நிலங்கள் இருந்தன. அந்நிலங்களின் சில பகுதிகளை அவ்வூர் அவிமுத்தீஸ்வரமுடையார் கோயிலுக்கு நிமந்தமாக அளித்துள்ளனர். இவர்கள் இந்நிலங்களைத் தங்கள் காணியாகக் குறிப்பிட்டுள்ளனர். மேலும் இவர்கள் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துக் களத்தூர் கோட்டத்துக் களத்தூர்த் தமிழதரையர்கள் என்று தங்களைக் குறிப்பிடுகின்றனர். இவர்கள்தாம் திருவடி சூலத்திலும் காணப்படுகின்றனர். இங்கு இவர்கள் மருமக்கள்தாயத்தால் நிலங்கள் பெற்றிருந்ததையும் அந்நிலங்களைக் கோயிலுக்கு சுப்ரதி கிரஹமாக நீர்வார்த்துக் கொடுத்ததையும் குறிப்பிடுகின்றனர்.

மருமக்கள் தாயம் என்ற சொத்துரிமை மரபு சேர நாட்டில்தான் வழக்கத்தில் இருந்தது. மருமக்கள் தாயம் என்பது ஒரு குடும்பத்தில் பிறந்த ஆண்வழியினருக்குச் சொத்து சேராமல் பெண் வழியினருக்கே சேரும் என்பதாகும். இவ்வூர் தமிழரையர்கள் மருமக்கள்தாயத்தால் பெற்ற நிலம் என்பதால் தாய் வழியில் வந்த சொத்துகள் என்பது தெரிகிறது. அவ்வாறெனின் திருவடிசூலத்தில் சேரநாட்டினர் பலர் வந்து குடியேறி அதே சொத்துரிமை மரபினைக் கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள். சேரநாட்டிலிருந்து குடியேறியவர்களுக்குக் காணியாக மிகப்பெரிய அளவில் நிலங்கள் இருந்ததை நென்மேலி கல்வெட்டுகளும் தெரிவிப்பதால் இவர்கள் படைவீரர்களாக இருந்திருத்தல் வேண்டும்.

குளப்பாக்கம் என்ற ஊரில் அகத்தீசுவரமுடையார் கோயில் உள்ளது. இக்கோயிற் சுவர்களில் முதலாம் குலோத்துங்க சோழன், விஜயகண்ட கோபாலன், இரண்டாம்

இராஜராஜ சோழன், மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆகியோர் காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

இக்கல்வெட்டுகளுக்கு முற்காலத்தைச் சேர்ந்த இராஜகேசரிவர்மன், விஜயமகாராயர் கோபார்த்திவேந்திராதிவர்மன் ஆகிய அரசர் பெயர்களைக் கொண்ட கல்வெட்டுகள் தனிக் கற்களாக கோயில் வளாகத்தில் கிடைக்கின்றன. இக்கல்வெட்டுகளும் அகத்தீசுவர முடையார் கோயிலுக்கு வழங்கப்பட்ட கொடை பற்றியே கூறுகின்றன. எனவே இம் மன்னர்கள் காலத்தில் இக்கோயில் செங்கல் கோயிலாக இருந்த காரணத்தினால்தான் பலகைக் கற்களில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. முதலாம் குலோத்துங்கன் காலத்தில் கற்றளியாக மாற்றப்பட்ட பின் அவனது கல்வெட்டுகளும் அவனுக்குப் பின் ஆட்சி புரிந்த மன்னர்கள் கல்வெட்டுகளும் கோயில் சுவர்களில் காணப்படுகின்றன.

தனிப் பலகைக் கற்களில் காணப்படும் கல்வெட்டுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இராஜகேசரிவர்மனைக் குறிப்பிடும் கல்வெட்டு முதலாம் ஆதித்தசோழன் காலத்தைச் சேர்ந்ததாக இருத்தல் வேண்டும். கோபார்த்திவேந்திரவர்மன் என்ற அரசன் சுந்தரசோழன் காலத்தில் பல்லவ நாட்டை ஆட்சி புரிந்த சிற்றரசன். சுந்தரசோழனின் மூத்த மகன் ஆதித்த கரிகாலனுடன் பார்த்திவேந்திரவர்மன் வீரபாண்டியனுடன் சேவூரில் நடந்த போரில் கலந்து கொண்டு வீரபாண்டியனைக் கொன்று வெற்றி பெற்றதில் பங்காற்றி இருத்தல் வேண்டும். அதனால்தான் பாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரி என்று ஆதித்த கரிகாலனுக்குப் பெயர் வழங்கியது போல பார்த்திவேந்திரவர்மனுக்கும் அப்பெயர் வழங்கியதைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

மற்றொரு கல்வெட்டு விஜயமகாராஜர் என்ற பெயரைத் தாங்கி இருக்கின்றது. இக்கல்வெட்டுகளை 1990ல் படியெடுத்து ஆய்வு செய்த இந்நூலாசிரியர்களுள் ஒருவரான திரு. குழந்தைவேலன் அவர்கள் விஜயமகாராஜர் என்று கூறப்படும் இம்மன்னன் பார்த்திவேந்திரவர்மனே என்று பல சான்றுகளுடன் சரியாகக் குறிப்பிட் டுள்ளார். (பார்க்க க.எண். 5)

குளப்பாக்கம் கல்வெட்டுகளைப் போல பழனையூர், பொழிச்சலூர், செரப்பனஞ் சேரி, களத்தூர் ஆகிய ஊர்களில் உள்ள கல்வெட்டுகளையும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை முதன் முறையாகக் கண்டுபிடித்து, படித்து ஆய்வு செய்து இத்தொகுப்பில் சேர்த்துள்ளது.

பழனையூரில் மகாகாளேசுவரர் கோயில் உள்ள முதலாம் இராஜராஜசோழன் கல்வெட்டுகள் தனிக் கற்கள் மற்றும் தூண்களில் காணப்பட, முதலாம் குலோத்துங்க சோழன் காலக் கல்வெட்டுகள் முதல் கோயில் சுவர்களில் உள்ளன. ஆதலால் முதலாம் இராஜராஜசோழன் காலத்தில் செங்கல் தளியாக இருந்த இக்கோயில் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் கற்றளியாகத் திருப்பணி செய்யப்பட்டிருக்கிறது என்று ஊகிக்கலாம். மன்னன் பெயர் கூறப்படாது இருவரிகளை மட்டுமே கொண்டிருக்கும் ஒரு கல்வெட்டு,

இத்திருக்கற்றளியை மயிபாலந் சாத்தன் என்பவன் செய்தான் என்ற செய்தியைக் கூறுகிறது. இக்கல்வெட்டு கி.பி. 11-ம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ளது.

பழனையூர் அருகிலுள்ள புலிப்பரக்கோயில் திருமடைவளாகத்தில் அதாவது கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களில் கைக்கோளர், சாலியர், வாணியர், கோயிலங்காடி, சேனையங்காடி போன்றோர் குடியிருந்தனர். இவர்களது குடியேற்றங்கள் பற்றி இவ்வூர்க் கல்வெட்டுகள் விவரமாகப் பேசுகின்றன. இவர்கள் புறக்கலனையர் என்றழைக்கப் பட்டனர். இவர்களுக்குப் பல வரிகள் விதிக்கப்பட்டிருந்தன. சில மன்னர்கள் இவ் வரிகளைக் குறைத்திருக்கின்றனர்.

இக்கல்வெட்டுத் தொகுதியில் அவ்வக் காலத்தில் வழக்கத்திலிருந்த பலவிதமான காசுகள் பற்றிக் காணப்படுகின்றன. கண்ட கோபாலன் புதுமாடை, வராகன் நற்பணம், பழங்குளிகைப்பணம், பழங்காசு, கண்ட கோபாலன் பழம்புள்ளிமாடை போன்ற காசுகள் முறையே நென்மேலி, வயலக்காவூர், காஞ்சிபுரம், செரப்பனஞ்சேரி ஆகிய ஊர்க் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றன.

திருவிடைச்சுரமுடையார் கோயிலில் தேவரடியார் பெண் ஒருத்தி இறைவன் இறைவி சிலைகளை பீடத்தில் பிரதிஷ்டை செய்து நிறஞ்செய்திருக்கிறார். இவர் பிரதிஷ்டை செய்த அச்சிலைகள் ஆடுகின்ற நிலையில் செய்ததாகவும், திருநிறஞ் செய்ததாகவும் கூறப்படுள்ளதால் திருநிறம் என்பது செப்பு சிலையின் மேல் தங்க முலாம் பூசப்பட்டிருந்ததைக் குறித்தல் வேண்டும். ஆடுகின்ற அச்சிலைகள் நடராஜர், மற்றும் காளியாக இருந்திருத்தல் வேண்டும்.

தெருக்களில் கூத்தும் நாடகமும் நடத்தி மக்களை மகிழ்வித்த கலைஞர்கள் பற்றிய கல்வெட்டொன்று காஞ்சிபுரத்திலுள்ளது. தொண்டைமண்டலம் முழுவதும் உள்ள தெருக்களில் ஆடுகின்ற உரிமையைப் பெற்றிருந்த கலைஞர்கள் காஞ்சிபுரத் தெருக்களிலும் ஆடுகின்ற உரிமையைக் கேட்டுப் பெற்றுக் கொண்டு தாங்கள் தெருக்களில் ஆடுகின்ற போது வாயிலார்கள் வந்து காண வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். மன்னனும் அவ்வாறே ஆணையிட்டுள்ளான். இந்த கலைஞர்கள் கூத்தையும் நாடகத்தையும் நடத்தியிருக்கின்றனர்.

கழைக் கூத்துக் கலைஞர்களே தெருக்களில் கூத்தாடினர். அவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த வரிகள் தளர்த்தப்பட்ட செய்திகளை விஜயநகர மன்னர்கள் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. ஆனால் தெருக்களில் கூத்தும் நாடகமும் நடத்திய இக்கலைஞர்கள் யார் என்ற குறிப்பு கல்வெட்டில் காணப்படவில்லை.

இத்தொகுப்பில் ஏராளமாக புதிய தரவுகளைப் பெறத்தக்க வகையில் பல கல்வெட்டுகள் உள்ளன. ஆராய்ச்சியாளர்களும், அறிஞர்களும் படித்து பயன்பெற வேண்டும் என்பதே எம் துறையின் உள்ளார்ந்த நோக்கமாகும்.

அரசியல் சமூகம், பொருளாதாரம், கலைகள் போன்ற அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கும் இத்தொகுப்பைத் தமிழகம் வரவேற்றுப் படித்துப் பயன்பெற வேண்டும். இத்தொகுப்பினை வெளியிட நிதியுதவியளித்த தமிழக அரசுக்கும், தமிழக வரலாற்றை உள்ளடக்கியிருக்கும் கல்வெட்டுகளை வெளியிட வேண்டும் என்ற ஆர்வத்தில் முனைப்புடன் வழிநடத்தி 163 கல்வெட்டுகளுடன் கூடிய இத்தொகுப்பு வெளிவரப் பல்லாற்றானும் உதவிபுரிந்த சிறப்பு ஆணையர் திரு. தி.ஸ்ரீ. ஸ்ரீதர் அவர்களுக்கும் எம் உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

ஆ. பத்மாவதி
அர. வசந்தகல்யாணி

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| பதிப்புரை | | v |
| முன்னுரை | | vii |
| ஆங்கில குறிப்புரை | | xiii |
| 1. | குளத்தூர் | 1 |
| 2. | பொழிச்சலூர் | 3 |
| 3. | சிறுதாவூர் | 4 |
| 4. | பொன்மார் | 17 |
| 5. | விட்டலாபுரம் | 20 |
| 6. | குளப்பாக்கம் | 26 |
| 7. | செரப்பனஞ்சேரி | 38 |
| 8. | சிவன்கூடல் | 47 |
| 9. | மாகறல் | 81 |
| 10. | நெரும்பூர் | 111 |
| 11. | புலிப்பரக்கோயில் | 119 |
| 12. | காஞ்சிபுரம் | 134 |
| 13. | திருவடிசூலம் | 167 |
| 14. | கிளாம்பாக்கம் | 190 |
| 15. | மண்ணிவாக்கம் | 196 |
| 16. | களத்தூர் | 198 |
| 17. | தாமல் | 201 |
| 18. | நென்மேலி | 206 |
| 19. | வயலக்காவூர் | 211 |
| 20. | பழனையூர் | 221 |
| 21. | மாடம்பாக்கம் | 235 |
| 22. | மாம்பாக்கம் | 245 |

# SUMMARY OF INSCRIPTIONS

## Kulattur

On a separate stone near the well of this village Kulattur - 13th Century A.D.

No: 1 Registers the adai olai given to Kasaya vargam pala pattadáiyar of kulattur, fixing the rate of taxes to be levied on Kaikkolas in lieu of the several kinds of assessment hither to collected by certain Ariyappagal.

## Polichchalur

on a small rock near the funerary ground

No: 1 This Single word inscription belongs to the Mercantile guild called Ayyap-polil Ainnurruvar. They have rendered services not only to religions but also to the welfare of the society. i.e. digging wells, tanks, fixing sluices and channels for irrigation etc. The inscription reveals that it was established by Traders of Ainnurrurar and so it has been called as

## Ainnurruvan Kulam

The insignia of that guild of lamp, plough, sword and bags are engraved on both sides of the inscription.

## Sirudavur

Dilapidated Vishnu temple in Sirudavar, Chinglepur taluk, Kanchipuram District.

No:1 Rajaraja Chola I : 10th Year : 996 AD

Middle portion is lost. Records the gift of 90 sheep for burning a perpetual lamp in the temple Pudhisvaramudaiyar at Sirudavur in Amur-kottam by Karimangalamudaiyan of Kiliyur-nadu in the southern bank of chola-nadu. The Mahasabha of this village accepted to look after the sheep and burn the lamp.

No:2 Kulottungachola II : Year 4 : 1137 AD

Records the gift of land for the early morning services to the deity of Sri Pudisvaramudaiyar temple at Sirudavur alias Narasinga chaturvedi-mangalam of Amur-nadu and Amur-kottam in Jayankondachola mandalam. The boundaries of the gifted land are in detail given. The end portion of the inscription is lost.

No: 3 Kulottungachola III : Year 38 : 1216 AD

Records the gift of 90 sheep for burning a perpetual lamp in the temple of Pudisvaramudaiya Mahadeva at Sirudavur alias Narasingachaturvedi mangalam of Amur- nadu and Amurk -kottam by a brahmana of this village called Poriyandan bhattan of Porpuram.

No: 4 VijayagandaGopala : Year 3 : 1253 AD

Registers an aggreement given by the Adichandesvara devakanmins of the temple to the tax Kadamai on the land gifted to the temple as devadana, by cholaman Piramman Orri alias Telungarayan and his brothers who were the Parigraha mudalis of this village after purchasing it from Dakshinamurtti-bhatta of this village. It is told that the land was exampted from taxes according to the order of the King.

No: 5 Maravarman Virapandyadeva : Year 7 : 13th, 14th Century A.D.

Registers the gift of 485 Kuli of land as Thirunamattukkani to deity Vadugap-pillaiyar in Sirudavur by Alagiya Chokkanar alias Kannanum Ovvada Pandya devar, one of the Kaikkolas of Madurai east of Madakkulam in Pandy mandalam after purchasing it from Piramman alias Telungarayan one among the Parigrahattar of Sirudavur of Amur-nadu and Amur-kottam in Jayankonda chola mandalam. (See the above record)

No: 6 Sakalaloka Chakravartin Rajanarayana Sambuvaraiyan : Year 12: 1350 AD

Records the remission of some taxes on two veli of devadana lands belonging to the god and goddess of the temple for meeting the expenditure of renovation, worships making flower garden and for the other requirements of the temple. It is stated that the village Sirudavur was situated in the Ayiravelipparru.

No: 7 Sadaiyavaraman Sundara pandian : Year 7 : 1310 AD

Damaged. Records the gift of lands as devadana with exemption of tax for the requirements of the goddess Aranavalli - Nachchiyar of the temple by purchase of several pieces of lands in many places by the temple authorities and the King.

No: 8 Kulottungachola I : Year 47 : 1117 AD

Registers the gift of twilight lamp to the temple of Pudisvaramudaiyar at Sirudavur alias Narasinga chaturvedi mangalam, a brahmadaya in Amur-nadu of Amurk-Kottam, by an accquntant of this village, the Sivabrahmanas of the temple had accepted to burn this lamp.

## Ponmar

Sakthi purisvara temple in Ponmar : Chingleput Taluk and Kanchipuram District.

No: 1 Sadasivaraya : Saka Year : 1442 : 1520 AD

Records the gift of certain taxes cellected from Poyilicheri for the worship and renovations to the deities of Virabhadra nayanar and Poyilisvaramudaiya

nayanar at the village of Ponmaru alias Thyagavinodha nallur of Kalvay -ñadu in Puliyurk-kottam, a subdivision of Jayankonda chola mandalam, by Srirangarayan and the Nattars of chengalunirpattu for the merit of Sadasivarayar and Ramarayar.

No: 2 On a stone lying on the same place : Modern Characters

States that the tank called Amaneri was cleared of its silt by Vedagiri son of Chinna Setti of Mambakkam and imprecates people against using its water for purpose of irrigation.

## Vittalapuram

| | | |
|---|---|---|
| Vittalesvarar temple | : | Tirukkalukunram Taluk, Kanchipuram District: |
| Krishnadevarayar | : | Saka 1440 : 1518 AD |

No: 1 Damaged at the end. Records the gift of land for the worship, renovation and other requirements to the temple of Vittalesvara in the village of Vittalapuram by Kondayadeva maharaja alias kulasekaraiyyan who newly formed the village Vittalapuram in the 'Nayakkattanam Sirmai'.

No: 2 On the same place
Sadasivaraja Saka 1492 : 1570 AD

Records the gift of villages called vengampakkam, Kunrattur, Kuli navalágatti and Melai Punnappattu for the celebration of car festival, and renovation to the temple of Vittalesvara by same officers for the welfare of their parents with the permission of Ramarajayya.

No: 3 On the same place.

SriRangadeva Maharaja - Saka 1552 : 1630 AD

Records the grant of villages called Gangeya nallur and Karkattucheri to the temple of Vittalesvarapperumal at Vittalapuram by Bochchuraju - Rangapati-deva-Maharaja with the permission of the king.

No: 4 In the same place. On a doorjamb of the Ramanujamandapa in the prakara of the temple.

States that this mutt which functioned at the Ramanuja mandapam was allowed to be used further by the followers (sishyas) of Pillai Lokachchariyar a Pandit (Jiyar) of this mutt.

No : 5 In the same place : On the base of the flag stake in the same temple.

States that a lady called Mutti, daughter of Selvan was doing her service regularly (to the temple).

## Kulappakkam

**Agasttisvara temple : Sriperumpudur Taluk : Kanchipuram District**

No: 1 Vijayakandagopalan : Year 4 : 1354 AD

Records the gift of 24 cows and a calf for burning a Twilight lamp in the early morning service to the temple of Thiruvagattisvara temple at Kulappakkam by Tholuvarkku Alanar, an Andar i.e. a saiva saint. The Devakanmis of the temple who received the gift, accepted to burn this lamp.

No: 2 Rajarajachola II : Year : 6 : 1150 AD

States that the temple of Aludaiyar Arthamandapa, Thiruvidaikkattu, Nrittamandapa, and Shopanam (Steps) were built from bottom to top by stone at Kulappakkam by certain senkon Tillaivanan Kakkunayakan of this village.

No: 3 Virarajendra (Kulotunga III) Year 10 : 1188 AD

Records the gift of three cows for burning a twilight lamp in the temple of Aludaiyar Thiruvagattisvaramudaiya Nayanar, by certain Vijaya Nallulan Panditan Kakku-Nayakan of Kulattur. The gift received by the Sivabrahmanas who had the Kani right in the temple accepted to burn this lamp.

No: 4 Vijayakandagopala : Year 29 : 1379 AD

Records the gift of three cows and a calf for burning a twilight lamp in the temple of Thiru Agattisuramudaiya Nayanar by Andar Tholuvarkkiranginan, a saiva saint who was residing at kulappakkam alias Siva pata sekara nallur. Alwan bhattan, one of the Devakanmis of the temple had accepted to burn this lamp.

No: 5 On a seperate stone lying in the prakara of the temple.
Vijayamaharajar (Parthivendra varman) : Year 6 : 965 AD

Records the gift of 50 Kuli of land for the mid-day offerings to the temple of Agastisvaramudaiyar temple at kulappakkam by a resident of the village.

The king Vijayamaharaja is identified with Parthivendradhivarman. Another inscription refers him as Virapandyan talaikonda ko maharajar and also called Kovi Raja Marayar (223/1915). The palaeography too is confirms this view.

No: 6 On a seperate stone lying in the prakara of the temple.
Kulottunga Chola I : Year 49 : 1118 AD

Damaged. Registers the gift of land by purchase from the Urar of Manappakkam of Perurnadu by certain Udaiyan Umai Bhankan of Kiliyur in Cholamandalam for the offerings called Thirumandira bhonagam to the deity Mahadeva of Thiruvagattisvaramudaiyar temple at Kulappakkam in Perur-nadu of Puliyurk-kottam a sub division of Jayankonda chola mandalam. The land was named after him as Umaibhankan Vilagam.

No: 7 On a separate stone lying in the Prakara of the same temple.

This record is in poetic form which states that the bank of big tank was raised like a hill, when it was damaged during the accumulation of flood, by virachola Vilupparaiyan.

No: 8 Sundarapandian : Year 10 : 1261 AD.

Beginning of the record is alone preserved which states that the name of the King was Emmandalamum Kondarulia Sundara Pandya deva and his regnal year was 10. It precedes the order of the King.

No: 9 On a separate stone lying in the prakara of the temple

Rajakesarivarman : Year 20 : 10th century AD

Records the gift of ninety sheep to burn a perpetual lamp in the temple of Thiruvagattisvaram udaiya Mahadeva at Kulappakkam in Perur-nadu of Puliyur kottam by an individual called kaliyan kalladi. The King Rajakesari may be Adityachola I.

## Serappanancheri

**Vimisvarar Temple** : Sriperumpudur Taluk: Kanchipuram District

Kulottungachola III : Year 2 : 1180 AD.

**No: 1** Records the gift of two cows for burning a twilight lamp in the temple of Aludaiyar Vimisuramudaiyanayanar at Peruvanjur alias Rajakesari nallur by one of the shepherds called Danmakkon of this village. This gift was received by the Sivabrahmas called uyyakonda Pillai alias Narpattennayira bhattan and his son udaiyan Panmahesvarabhattan who have had ten days Kani right out of the circle of thirty days and accepted to burn this lamp. Originally this gift was made in earlier days but it was engraved on the stone in the period of Kulottunga III.

The original name of the Serappanancheri was Peruvanjur. It was called Perevanjur alias Rajakesari nallur when the donation was made During the engravement on stone at 1180 AD it had been named Rajendra Cholanallur (see. No:2)

Stated that this village was situated in Velima nallur-nadu of Urrukkaduk-kottam, a sub-division of Jayankonda Chola mandalam.

**No: 2** Kulottungachola III: Year 4 : 1182 AD.

Records the gift of four palankasu for burning a twilight lamp in the temple of Vimisvara at Peruvanjur alias Rajendra cholanallur by Kannan Alwar wife of Amanpakkilan Senthamaraikannan of urattur alias kalinga kula kalanallur, in Konadi-nadu of Senkattu-Kottam. It was received by vellanthanki alias Gangadhara bhattan who accepted to burn this lamp.

**No:3** Kulottunga III: Year 8 : 1186 AD

Registers the gift of Palankasu to burn a twilight lamp in the temple of Aludaiyar Vimisuramudaiyar at Peruvanjur alias Rajendra kesari nallur by Padampakka nayakan vayiranathan. It was received and accepted by the Sivabrahmanas the sons of Triambaka bhattan who had the five days kani right out of 30 days circle in the temple.

**No:4** Rajaraja Chola III : Year 6 : 1222 AD

Records the gift of six palankasu for burning two twilight lamp in the temple of Vimsura mudaiyar by the village assembly and it was received and accepted by the Sivabrahmanas who had the kani right in the temple. Two division of Sivabrahmanas are mentioned in the inscription, who existed in this village and had the Kani of Munrath thonru and Nalaththonru.

**No: 5** Rajarajachola III : Year 7 : 1223 AD.

Registers the gift of four Palankasu to burn a twilight lamp in the temple of Aludaiyar Vimisuramudaiyar at Peruvanjur, in Velima nallur of Urruk kattuk-kottam, a sub division of Jayankonda cholamandalam by Sivalokamudaiyal daughter of umaiyalvi, one among the Agampadi womens (Personal servants) of Prince Nilagangaraiyar. This gift was received and accepted to burn this lamp by udaiyan alias Panmahesvarabhattan one of the sons of Bharadvasi Kampabhattar, who had the ten days Kani right out of thirty days circle of Kani right of the temple.

**No: 6** Rajarajachola III : Year 11 : 1227 AD.

Records the gift of three Palankasu to burn a twilight in the temple of Vimisuramudaiyar at Peruvanjur by Valavadaraiyan who had the Virparru in Kulankarcheri, a northern hamlet of Peruvanjur. It was received and accepted to burn this lamp by three Sivabrahmanas of the temple who had the right of Munraththorukani.

**No: 7** Vijayakandagopalan : Year 25 : 1275 AD.

Registers an endowment of a coin called **'Kandagopalan Palampulli madai'** to burn a twilight lamp in the temple of Aludaiyar Vimisuramudaiyar by an individual called Alatturudaiyan Andakuttan Vanduvaraip perumal of this village. It was received and accepted to burn this lamp by a Sivabrahmana Vimabhattan son of Bharadvasi Alwan Bhattan who had the 3¼ Kani among the 30 cirlce. The document also has been engraved by him in the wall of the temple.

## Sivan Kudal

## Sivakkolunthudaiyar Temple

No: 1 Vikramachola Deva - 12th c AD

Damaged. Records the sale of land to the temple for the celebration in the asterism of Uttirattadhi in the month of Ani by the Bhattars of Brahmadeyam

No:2 Damaged and mutilated. Begins with the eulogy of the chola king Kulottunga Chola I Registers the sale of land as tax free to the temple of Sivakudal in the name of Adichandesvara deva by the assembly of that village, situated in the urrukkattukottam in Jayankondachola mandalam. The assembly also accepted to burn this lamp in the temple.

No:3 Saka 1420 : 1498 AD

Records the gift of hundred kuli of land to goddess Durga Mahadevi of Devakoshta in the temple of Sivakudal by Nalappillai an accountant of the village.

No: 4 Kulottungachola I : 1075 AD.

Mutilated. Registers the sale of three hundred kuli of land as Peruvilai (big-sale) to the temple of Sivakudal with exemption of tax by the assembly of that village.

Another record of the same King is also engraved below this, which refers about the gift of land for the food offerings to the deity of the temple.

No: 5 Damaged : 12th Century AD

Registers the sale of land to the temple to celebrate the festival on the day of uttirattadhi in the month of Ani, which was a birth star of the King by the assembly and the Vellalar of the village. The same festival is referred in the record No: 1. As the record belonged to the King Vikramachola, this also must have made by him

No: 6 Kulottungachola I : Year 7 : 1077 AD

Records the gift of land to recite the sacred hymns of the Devaram Trio in the temple of Sivakkolunthandar at Sivakudal of Nirvelur-nadu, a sub-division of Urrukkattuk-kottam.

No: 7 Vikramacholadeva : Year 10 : 1128 AD

Records the gift of 400 kuli of land as tax free to burn two perpetual lamps in the temple of Sivakkolunthandar by the assembly and Vellalas of the village after purchasing it from the temple.

No: 8 Kulottungacholadeva I : 11th century AD.

Records the gift of 500 kuli of land to burn a perpetual lamp to the deity Mahadeva in the temple of Sivakkolunthandar in Siva kudal by an individual of vilathur after purchasing it from the assembly of Milalai mangalam.

No: 9 Kulottungacholadeva I : Year 5 : 1075 AD

As the inscriptional stones are replaced, its continuation is lost States that the gift of land for food offerings to the deity Nurrenmappillaiyar in the temple of Sivakkolunthandar.

No: 10 Kulottunga Choladeva I : Year 28 : 1098 AD

Inscriptional stones are misplaced, and its continuity lost. Registers the gift of land to the temple for the food offerings sacred bath during the celebration of Thiruvadirai in the month of Markali, burning a perpetual lamp and flower garden to the deity of the Sivakkolunthandar temple at Siva Kudal by certain Panchanadhivanan Cholendra Muventhavelan of Manimangalam after purchasing it from the assembly of Sivakudal.

Another record of the same King, which refers to 46th year is also engraved but stops abruptly.

No: 11 Kulottunga choladeva I : Year 25 : 1195 AD

Stones are replaced. Records the sale of land to the temple for the food offerings to the deity of Siva kudal by the village sabha of this village.

No: 12 Vijayakandagopalan : Year 25: 1275 AD

Records the gift of 2400 kuli of land to the goddess Maragathavalli Nachchiyar of Tirukkamakkottam in the temple of Sivakkolunthudaiya Nayanar at Sivakudal of Nirvelur-nadu, in Uttukkattuk-kottam a sub-division of Jayankonda-cholamandalam by Talaikkudaiyan alias Puliyuran who belongs to the chola-nadu

No:13 Modern characters

Records the services done by the individuals to this temple.

No:14 Achchuta devaraya : Saka 1455 : 1533 AD

Records the gift of Opulasanallur, a hamlet of Sivakudal to the food offerings, worships, and burning of lamps to the temple by the Vijayanagara King Achchuta devaraya while he stayed on the bank of the river Tungabadra at Virupakshi.

No: 15 Vira Rajendrachola : Year 4 : 1067 AD.

Records the gift of land to the temple of Sivakkolunthudaiyar by the Sabha of Sivakudal after purchasing it from the temple.

No: 16 17th century AD Characters.
States that this floor was paved by Nayinan son of Sivakolunthan.

No: 17 13th century AD Characters
Bit Inscription.

No. 18 10th century characters
Bit inscription. Registers the sale of 135 kuli of land to the temple which was irrigated by a channel in the way of a sluice called Kamala narayasnat-thumbu.

## Magaral

Tirumagaral Isvarar Temple : Kanchipuram Taluk : Kanchipuram District.
Kulottunga Chola III: Year 32 : 1210 A.D.

No:1 Records the reallotment of tax free devadana lands to the temple of Tiru. Vagattisvaramudaiyar and the right of cultivation given to Kalingarayar by an officer called Nandhipanmar.

No:2 13th Century AD Characters
Bit inscriptions. Refers the gift of money (panam) as parivattakkanikkai and the food offerings to the temple. Another bit says about the sale of land by the village assembly for burning a lamp in the temple.

No:3 Vijaya kanda gopalan: year 40: 1290 A.D.
Records the gift of land as devadana by Kalingarayan. Beginning and end are lost.

No: 4 12, 13th Century AD Characters
Damaged and beginning portion is lost. Records the sale of their land by the assembly of Kayvan Tandalam for 400 standard money (to the temple?) No. 5 also refers to the sale of land.

No: 6 Rajaraja Chola II: Year 5: 1151 A.D.
Records the sale of a village called Sri Krishnacheri, which was a hamlet of Vikramabharana Chaturvedimangalam by the assembly to a merchant of Selai named Padampakka nayagan Alagiya Perumal for 80 standard coins.

No:7 & 8: 11th Century A.D. Characters
Beginning is lost. Refers the donation of land and gold to the temple of this village by a merchant, and the No: 8 refers to the gift of land.

No:9 Vijaya Kanda Gopalan: Year 22: 1277 A.D.

Records the gift of gold for burning a twilight lamp in the temple by Urankilan Nayagan Samundi Tennavan and the assembly of Tiruvunnaligai (central shrine) received and accepted to burn this lamp.

No:14: Kampana udaiyar: 16th Century A.D.

Registers the gift of land and house site to certain Alagia Tiruchchirrambala-mudaiyar son of Buvanehabagu devar by the administrative body (Tanattar) of the temple. Also refers a mutt and a temple of Sampantha nayanar one of the devaram Trio, is mentioned when the location of house site is described. So Alagia Tiruchchirrambalamudaiyar might have been the Pontiff of a mutt in this village.

No:15 Vitriruntha Perumal temple at Magaral

Rajaraja Chola II: Year 20: 1166 A.D.

Registers a gift of gold for burning a twilight lamp in the temple of Tirumer-koyil at Magaral in Magaral-nadu of Eyir-kottam, a sub-division of Jayakonda Chola Mandalam by Urangilan Tiruvagattisvaramudaiyam Arulalan. The gold was received and accepted to burn this lamp by Nayamisai Varadarasabhattan who was light bearer to the deity of this temple.

No: 16 Rajaraja chola II : year 23 : 1149 A.D.

States that the Sri Vimana, Ardhamandapa, adjoining Tirumandapa, sopanam (stircase) and Sri Pidam of the Tirumer koyil alias Vitrirundaperumal koyil were erected by Pattiyar Bosan of this village. While the first two lines, are in prose the next three lines reveals the same matter in poetic form of 'Asiriya Viruttam'.

No: 17 Rajaraja chola II : year 24 : 1150 A.D.

Registers the gift of 2 kalanju of gold for burning two Twi light lamps in the temple of Thirumer koyil by Pattiyar Bosan Alwar Mathiyan. A lamp bearer of this temple called Nayamisai Varadaraja Bhattan received the gold and accepted to burn the lamps in this temple.

## Nerumbur

Thiruvalisvara temple : Thirukkalukunram Taluk : Kanchipuram District

No: 1 Devarayar : Saka year 1358 : 1436 AD

Records the fixation of two panam per year to be paid as pattadai Nulayam on each loom of the Kaikkolas living in the Thirumadai vilagam of the temple of Tiruvani suramudaiya - Nayanar at Nerumbur in Kalattur Parru.

No: 2 13th century AD Characters.

States that the gift of the pillar was donated by Kannaramudaṅ Pallavaraiyan of Ilattur.

No:3 Sakalaloka chakravartin Rajanarayanan : Year 9 : 1365 AD

Records the gift land for the offerings and other required services to the temple of Tiruvanmisura mudaiya nayanar and for a bhattavritti by the order of the King.

No: 4 Kulottungachola I : Year 49 : 1119 AD

This inscription seems to be three bits. Records the gift of land for the celebration of festivals in the temple of Tiruvanmisuramudaiya mahadeva at Nerumur alias Madurantakanallur in Nerumur-nadu of Sembur-Kottam, a subdivision of Jayankonda chola mandalam.

No: 5 Rajaraja Chola I - 10th century AD.
Damaged with out beginning and end. Seems to record the gift of twilight lamp in this temple.

No:6 13th century AD Characters

Bit inscription. Seems to record the gift of land with exemption of tax as devadana to the temple.

No: 7 14th century AD Characters

Bit inscription. Refers to the name of the Vijayanagara King Kampana udaiyar and mentions Tirumerrali a Vishnu temple in this village.

## Pulipparakkoyil

No: 1 Sri Vyakrapurisvara temple : Madurantakam Taluk, Kanchipuram District
Prabhuda deva Maharayar : Saka 1374 : 1452 AD

States that the gift of land to the temple of Thiruppada nayanar at Mattur, a northern hamlet of Sri Madurantaka-chaturvedimangalam in Kalattur-kottam, a subdivision of Jayankonda chola mandalam was for the welfare of Annadada Tannayakkar Kumara devappa Tanmarayar, a high level officer of that area. This record is left unfinished.

No:2 Sakalaloka chakravarthi Rajanarayanan : Year 6 : 1256 AD

Registers the gift of many taxes and other assessments which were collected from the Kaikkolas residing in the four directions arround the streets (Tirumadai Valagam) of Tiruppuli pagaranayanar temple at Mattur, a northern hamlet of

Sri Madurantaka chaturvedimangalam in Kalattur-kottam a sub-division of Jayangonda chola mandalam. The taxes collected from the residents belonged to Kaikkolars, Saliyar, Vaniyar, Koyilankadi Senaiyankadi and including other (Purakkalanais) guilds and also who would later emigrate to the Madaivalagam. These taxes were given to be utilised for the worship, other services and welfare of the name (of the King) as Sarvamanya.

No:3 14, 15th century characters

Records the gift of taxes Taniyavargam, Palavari, Puduvari etc as devadana which were collected from the village chedirayanallur, belonging to the temple as Tirunamattukkani, for conducting some celebrations in the temple.

No:4 14th century characters.

This inscription records the name of a measuring rod called - Sambhuvarayan Tiruvadi Nilaikkol.

No: 5 Sakalaloka chakravartin Rajanarayana Sambuvaraiyan : Year 5 : 1255 AD

This inscription mentions the renovation of the temple which had been carried out by somebody else (name lost)

No: 6 18th century characters

This record refers about the services done by Deiva raja gurukkal.

No: 7 18th century characters:

This refers to the service made by Adipuri gurukkal son of Devarajagurukkal

No: 8 18th century characters

State that Kachchalaiyappan son of Magaral kodabhattar had done services to the temple.

No: 9 same characters

These inscriptions also refer about the services of same individuals.

No:10 Vijayabhupadirayar : 14th century AD.

Records the reduction of some taxes on Kaikkolas who were residing in the Tirumadai Valagam of the temple of Tiruppulipagavar by the temple administrative body called Tanattar.

No:11 Bukkanaudaiyar : Subanu Year : 15the century AD

Refers about the taxes collected from every loom of the kaikkolas who were residing in Tirumadaivilagam of the Tiruppulipagava nayanar temple.

No: 12 Records the donation of a village Puvanam alias Vadavinallur as devadana to the temples of Tiruvenkadudaiyar and Tiruppulipagavar in Sri Madurantaka chaturvedi mangalam except Kalaraiye Naluma out of Arupattu Araiye Naluma of land, which belonged to the Tirukkuntivara temple and the devadana given earler to the temple of Tiruppulipagavar.

No:13 ViruppannaUdaiyar : Saka 1396 : 1474 AD

Beginning is alone visible the rest are built in.

## Kanchipuram

Ulagalanthaperumal Koyil : Kanchipuram Taluk : Kanchipuram Distict
Kulottungachola I : Year 40 : 1110 AD.

Registers an endowment of a village kampa devinallur named after one of the Queens as well as a devotee of uragapperuman at Kanchipuram, by the King while he was seated in Pallikkattil of the Rajadhirajan mandapa situated on the northern side of Jayankondacholan Thirumaligai in the palace of Kanchipuram at the request of the Queen Kampadevi alias Tribuvanamudaiayal. Out of the yield of that village 300 kalam of paddy harvested land separated in the name of her and utilised for the celebrations of (asterism) ekadasi day in the month of Margali, sadayam days, and svati which was the birth star of the Queen, to perform abhiseka on those days etc.

No: 2 Rajadhirajachola II : Year 9 : 1175 AD.

Records the gift of land for the food offerings to the deity who was pleased to stand in the Big Nagaram of Kanchipuram by certain saligan chandhiravan Malaiginiyaninran of Iravikula manikkap perunteru of this city.

No: 3 12, 13th century AD.

Records an agreement made by the nagrattar families of 48,000, to provide different kind of offerings, worship and special festivals to their family deity of Thiruuragattu Emperuman according to the procedure followed by the old custom.

No: 4 Rajaraja III : Year 25 : 1241 AD.

Refers the gift of two madai of gold to burn a twilight lamp to the deity Paramasvami who was pleased to stand in the temple of Tiruvuragam by the head man of Mappudam in Siruvanpedu. The gift was received and accepted to burn this lamp by Singapiram bhattan of Kundur, who was doing worship in the temple.

No: 5 Same King : Year 20 : 1236 AD

Records the gift of 2½ madai of gold to burn a twilight lamp in the same temple by Marutulan udaiyan of Tiruvanmiyur and it was accepted to burn this lamp by the same person mention above (No: 4)

No: 6 Sambuvaraya : 13, 14th Century AD.

Records the Grant of permission to a person to act the street plays and dramas in the streets of Tondai mandalam and Kanchipuram.

No: 7 Sri Sundarapandyadeva : Year 12: 13, 14th Century AD.

Records the remission of certain taxes made newly on the shepherds of the temple and it would proceed according to the old procedure by the order of the King.

No: 8 Pallava Nandhivarman III : Year 18 : 864 AD

Registers the remission of taxes by the King to the residents of Videl vidugu Kudiraicheri, who were doing the sales from camphor to suppals at the request made by an officer Anuttara Pallvarayan.

No: 9 VijayaKandagopalan : Year 15 : 1265 AD.

Records the gift of 15 palaiya Kulaigai Panam to burn a twilight lamp in the temple by Kaman Perunkadappillai of Rajarajapperunteru in Kanchipuram. It was received and accepted to burn this lamp by Singabiran bhattan who was doing worship in the temple.

No: 10 Kulottungachola I : Year 40 : 1110 AD.

Begins with the introduction 'Pugal madu vilanga' etc. Records the gift of land called Tundunukkacheri for food offerings, worships conducted during the mid night etc to the temple by the king at the request made by the Queen Kampadevi alias Tiribuvanamudaiyal and Anukki. Chola kulavalli. Previously the saliya nagarattar of this city accepted to cultivate this land but left uncultivated, so it was resumed back and gifted to the temple again.

No: 11 Vijayakandagopalan : Year 13 : 1263 AD

Registers the gift of 300 Kuli of land called Ilaiyan cheru for the worship of the temple by same assembly members of Alagiya chaturvedi mangalam, which was their share.

No: 12 KoRajakesarivarman : Year 7 : 864 AD

This record is engraved on the sandstone. So it is not clear. Seems to the gift of gold to burn a lamp out of the interest yield from it.

No: 13 11th century AD characters . Damaged

Bit inscription. Seems to be the gift of land with the remission of certain taxes etc.

No: 14 Modern characters

States that the installation of the images of Visvakshenar, Andal, Manavalamamuni and the shrines in which they were installed, a room, a front mandapa attached to the shrine were built by Amirtha valliammal wife of Kuppanaiyankar in Sannadhi street of Ulagalanta Perumal temple. It is engraved on the wall of this temple by Srinivasadasan, son of the donor.

No: 15 Modern 1899 AD.

Records the gift of land to celebrate the festival of Vaikunta ekadasi in the month of Margali by Venkatachala chettiyar son of Narayanachettiyar of this nagaram. But the land was gifted later to a sanyasi, so the court ordered the descentants of the donor to contribute the income to the temple; accordingly it was made as by earlier. If they would not do it, the land should be conficated by the government to perform the festival in the temple. When the circumstances arose at the dissapearance of the descendants the temple authority would take the land paying all the taxes on it and fulfill the dharma made as earlier.

No: 16 Modern 1900 AD

Registers the gift of land for the celebration of Chittirai festivals in every month and the celebration of incarnation of the god in the month of Ani in the temple by utkadai-chettiyar of Enattur.

No: 17 10th century AD characters

Bit inscription. Seems to be the gift of 1500 kadi of paddy for the renovation of temple by the assembly of that village.

No: 18 Modern 1914 AD

States that the tank called Srivamana Pushkarani was established by Munusamy Naidu, a plywood merchant of Rayapuram

No: 19 Modern 1914

States that the donation of six houses built at the southern bank of the tank called vamana pushkarani and gifted to the temple, for the celebration of 'yanai vahana mandahappadi' during the festival days, by the rent collected from the six houses and for the distribution of curd rice prasadam (sacred food) by Srinivasa ragavachariyar, dharmakarta of the temple.

No:20 14th century characters

The measurement called "Kandar Kandan kol' was registered in the temple wall and the length of that kol is shown with the symbol of + at both end of the rod.

No:21 11th century AD.

Damaged bit inscriptions.

## Thiruvadisulam

Gnanapurisvarar alias Thiruvidaisuranathar temple.

No:1 Built in at the biginning. States that three cows were donated to burn a sandhi lamp in the temple by Certain Nandhipanmar. Prince Nilagangaraiyar is also referred.

No:2 Bit inscription. Built in at the beginning and end.

No:3 Bit inscription. Refers about the gift of Shepherd families for maintaining lamps.

No: 4 & 5 Bit inscriptions.

No: 6 Built in at the biggining. Records the gift of tax free lands in various places to the temple of Thiruvidaisuramudaiyar.

No:7 Achchutadevaraya: Saka 1455 : 1533 A.D.

Registers the gift of some taxes to the deity Naduvariyum Tambiranar in the temple of Gnanapurisvarar by the king for the welfare of himself.

No:8 Vikramacholadeva : Year 10 : 1128 A.D.

Records the gift of land, after making it cultivable for burning two perpetual campus in the temple of Tiruvidaisuramudaiyar temple at Tiruvidaisuram of Vallanadu in Kalattur kottam, a sub-division of Jayankondachola mandalam.

No: 9 Vikramacholan : Year 10 : 1128 A.D.

Records the donation of twelve sheep for burning a twilight lamp in the temple of Tiruvidaisuramudaiyar temple at Tiruvidaisuram of Vallanadu in Kalatturkkottam, a sub-division of Jayankonda chola mandalam, by Palli Pulippakkanadalvan of this village; it was received and accepted to give twelve nali (measurement) of ghee 'per year' by a shepherd Nakkan Sirankan of Pallavapuram in Puliyurk-kottam.

No: 10 Kulottunga Chola I : Year 47 : 1117 A.D.

Registers the gift of land, which was the three shares out of four of Tamiladaraiyar Pewman Nittamattadigal, got with the right of 'Marumakkal Tayam' (Property owned by mother's line) to the temple of Tiruvidaisuramudaiyar as 'Supradhi-

graham', following the tradition of pouring water. The boundaries of the land are eloberated and the many persons of Tamiladaraiyar also seem to put their signatures.

No:11 Kulottungachola I : Year 47 : 1117 A.D.

This record registers the gift of land, which was a one share out of four of Danabalan. Mathaiyan and Tayabalan Kaliyan, to the temple as 'Supradigraham' by pouring water in the hands of Adichandesvara of this temple by the above two persons, followed like Tamiladaraiyan Peruman Uttamattadigal, who gifted his three shares out of four the temple earlier. (See No: 10)

No:12 Built in at the beginning : 13, 14th Century A.D.

Refers the installation of god and goddesses in dancing pose in both the decorative and Padma pidams (pedestals) with gilding of the images by a woman Nambiyalvi alias Gnana Sambantha manikkam daughter of Selvappillai, a dancing woman in the temple of Tiruvidaisuram.

No:13 15, 16th Century characters

First three lines are badly damaged. Refers to gift of house-site and fertile lands as Tirunamattukkani to the temple of Tiruvidaisuramudaiyar at Tiruvidaisuram.

No: 14 Satyavarman Virapandian : Year 7 :

From 6th to the end all the lines are damaged. Records that the thirty cows and one OX belonging to the temple which were donated by many person till then were given to the shepherd Varantharum konar alias Valtharuvan Piruvidaisurakkon for the maintenance of a lamp by them.

No: 15 Bukkana Udaiyar : 16th Century A.D.

Damaged. Records the gift of land after being reformed in the name of Kovi Nattam to the temple of Tiruvidaisuramudaiyar at Tiruvidaisuram of Vallanadu in Kalatturk-kottam a sub-division of Jayankonda Chola mandalam.

No:16 Brammadevara shrine at the sample temple.
Vikramachola: year 10: 1128 A.D.

Last few lines are not visible because of the floor around the shrine had been raised.

Seems to the gift of land in the village Tamdurai of Urodaka-nadu in Kalatturk-kottam for the daily expenditure of offerings etc. to the temple of Vikramacholisvaramudaiyar, which was erected during the reign of Vikramachola at the complex of Tiruvidaisuramudraiyar in Tiruvidaisuram of Vallanadu in Kalatturk-kottam, a sub-division of Jayankonda chola mandalam.

## Kilampakkam

No:1, 2, Stones lying near the Selliyamman temple

3 All the three inscriptions of this village refer about the donation of sheep for burning perpetual lamps.

## Mannivakkam

1. Mannisvara temple

Immadi Narasimharaya : Saka 1422 : 1500 A.D.

Refers to gift of lands for offering the Sacred food, twilight lamps and offerings during the Karttigai months by local officer of the Vijayanagara kings.

## Kalattur

On a slab standing in a house near the school.

King name not mentioned: Year 27: 10th Century A.D.

If records the construction of a sluice in the tank of Kalattur by a lady named Kongachchiyar wife of Kongaraiyar Kallapperumanar.

It is an important inscription for the study of Tondaimandalam. This Kallapperumar must have been the ruling Chief of that area, because there is no mention of the name of any dynastical kings.

## Tamal

Vakisvara Temple

No: 1, 2, Krishnadevaraja and Achchutadevaraja : Saka 1446 & 1459 : 1524 & 1537 A.D.

3 All the three records refers about the gift of villages called Purakar, Venpakkam for the worhsip of the temple at Tamal.

No: 4 Saka 1798: 1871 A.D.

Records the gift of door-jamp for the temple of Tamal Mariyamman by Arimuthir son of virasamy while the stage of finishing the construction of this temple.

## Nenmeli

Avimuktisvara temple: Chingleput Taluk: **Kanchipuram Dist.**

No:1 Maravarman Vikrama pandyan: Year 8: 1126 A.D.

Registers the gift of 2912 Kuli of land for the expenditure of conducting worship to the deity Pundarika Nayagar, installed in this temple by a Saiva saint of this temple called Kakkunayaga bhattan alias Avudaidevar, by

the Tamiladaraiyas of Kalattur in Kalattu-kottam, a sub-division of Jayankonda-cholamandalam. Also told that the donated land was their Kani of Nenmeli alias Pundarikanallur in Valla-nadu.

No: 2 Vikramachola: 12th Century A.D.
Stops with the eulogy of the King Vikramachola.

No:3 Records the gift of 1600 kuli of land, garden, and lands in other places in Pundarikanallur for the expenditure to the temple of Avimuktisvara by Tamiladaraiyan of Kalattur.

## Vayalakkavur

No. 1 Sri Vagisvarar temple : Uttaramerur Taluk: Kanchipuram District.

Sadaiyavarman Sundara Pandya I : Year 15: 1265 A.D.

Records the gift of ten kasu for burning a twilight lamp in the temple of Sri Varanadisvaramudaiya nayanar in Vayalakkavur by an individual of Sembur; it was received by the Sivabrahmanas of the temple who accepted to burn this lamp.

No.2 Rajarajachola II : Year 22 : 1168 A.D.

Registers the gift a madai (gold coin) for burning a twilight lamp in the temple of Sri Varanadisvaramudaiya nayanar by Arumbakkilan Kuttadumdevan of this village and the Sivabrahmanas of the temple received and accepted to burn this lamp. Another gift was made by Sipada nadalvan for burning a lamp in this temple.

## Palanaiyur

**Mahakalesvarar Temple**
**Rajadhiraja II : Year 11 : 1177 AD**

Records the gift of 4 1/2 old coins (Palankasu) for burning a Twilght lamp in the temple of ThiruMahakalamudaiyar at Palanaiyur a northern hamlet of Madurantaka chaturvedi mangalam which was a independant village in Kalattur-kottam a subdivision of Jayankonda cholamandalam by a lady called Valavantal Sani wife of Chandramouli bhattan. It was received by some of the Sivabrahmanas of the temple who accepted to burn the lamp .

No:2 Kulottungachola I : Year 24 : 1094 AD.

Begins with the eulogy of 'Pugalmadu Vilanga' etc of the King.

Registers the gift of twilight lamp to the temple by Narayana bhatta of this village and it was accepted to burn this lamp by the Sivabrahmanas of this temple.

No:3 Rajaraja : Year 4 : 989 AD.

Records an endowment of land to the temple as tax free for the Sribali celebration and for the flower garden by the assembly of this village.

No: 4 Rajarajan III : Year : 19 : 1235 AD

Registers the gift of land by purchase of gold for burning two perpetual lamps in the temple of Tirumakalamudaiyar by Alagiya Siyar alias Alagiyachola Sambhuvarayan son of Pallavandar.

No: 5 10th century Characters

King name is not mentioned. States that this temple was built with stone by certain Balan Mayibalan Sattan.

No: 6 Rajaraja I : Year 17 : 1002 AD.

Registers the gift of 45 sheep for burning two and a half perpetual lamps in the temple of Mahala Isar at Palanaiyur by Muladasan alias Sri Mahalapichchan of this village.

No: 7 Rajaraja I : Year 17 : 1002 AD

Records the gift of 45 sheep for burning a half lamp in the temple of Tirumahala-devar at Palanaiyur by a shepherd named Kuttan son of Mangayan Venkatavan of Venpakkam in Tamanur-nadu of Urrukkattuk- kottam.

No: 8 17th century characters

Records the gift of currency and fertile lands for the renovation of the temple of Tirumahalamudaiya nayanar at Palanaiyur by Kalattinatha mudaliyar who was the secretary of Tottappa nayaka in the month of Ani of the year soumiya.

No: 9 10th century characters

Beginning alone is preseved. Refers a gift to the temple of Thirumahaladevar at Palanaiyur, a northern hamlet of Madurantaka Chaturvedimangalam

No: 10 12,13th century characters.

Bit inscription. Seems to be the gift of sheep, land and paving of the floor to the temple of this village.

## Madampakkam

Denupurisvara temple : Chingleput Taluk: Kanchipuram District.

No: 1 Kulottungachola III: Year 10: 1185 A.D.

Records the gift of land as devadana with the addition of 20 veli of land given earlier to the temple of Chitreri Aludaiya nayanar at Madampakkam alias Ulaguyya Vantha Chola Chaturvedimangalam of Nedunkunra-nadu, in

Puliyurk-kottam alias kulottunga chola-valanadu, a sub division of Jayankonda chola mandalam for the festivals, renovations of the temple, by the assembly and it was attested by an officer of that area called Panchanadivana Nilagangaraiyan.

No: 2 Sadayavarman Sundara pandyadeva: Year 10 : 13th Century A.D.

Records an additional endowment of 3000 kuli of land for Tirunamattukkani to the temple while the earlier donated lands were not enough to meet out the expenditure of lamps, festivals, food offerings etc. for the temple, at the 12th regnal year of the king Kopperunsingadeva. The assembly members accepted to pay the taxes on the lands, and also gave the assurance if any circumstance may arise to necessitate the sale of this land, it would be to the treasury of the temple itself.

No: 3 Kulottungachola III: Year 36: 1214 A.D.

Records the donation of some lands as devadana to the temple of Chitreri Udaiya nayanar at Madampakkam, in addition to the taxes collected from this village it was also ordered to be paid in the temple treasury. The local officer named Arunagiri Perumal - Nilagangaraiyar ordered for this arrangements.

No: 4 Virasri Kumara Devaraja (II) : Year 1348 : 1426 AD

Records that eight house sites of the Tanattar being lost, for want of house sites to the seven families, fresh sites were provided for in the south street which was a Kani of Kaikkolas. The exchange of houst-sites was made between the Kaikkolas and the Tanattar of the temple Chitreri Udaiyanayanar at Madampakkam alias Ulaguyyavanda sola - Chaturvedimangalam in Nedunkunra-nadu, of Ayiravelipparru, a Sub-division of Puliyurk-kottam alias Kulottunga Chola - Chaturvedimangalam, in Jayangonda Cholamandalam.

No: 5 Rajarajan III : Year 2 : 1218 AD

Registers the gift of two cows to provide curd to the temple of Chitreri Udayanayanar at Madampakkam alias ulaguyyavantha Chola chaturvedi mangalam the gift was received and accepted to provide by a Sivabrahmana of the temple

## Mampakkam

No :1 Murugesar temple : Chingleput Taluk : Kanchipuram District

Rajaraja Chola I : Year : 26 : 1011 AD

Stones lost and misplaced. Rest of the portions also severely damaged. Commences with the introduction of Rajaraja I seems to be gift of sheep for a perpetual lamp in the temple of Murugesvarattalvar by a certain Murugan Kaliyan of Mampakkam in Kalvay-nadu, a subdivision of Puliyurk-kottam.

* * *

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண்:** **42/ 1990**

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | (பிரபவ ஆடி) |
| **வட்டம்:** | செங்கற்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 16- ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | குளத்தூர் (28) | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை** | 16/1934-35 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | | |
| **அரசன்:** | — | **ஊர்க் கல்வெட்டு எண் :** | 1 |

**இடம் :** ஊர்க் கிணற்றருகே உள்ள தனிக்கல்

**குறிப்புரை:** அரியப்பகள் என்பவர் குளத்தூர், (வெளிச்சை) ஆகிய ஊர்களிலுள்ள கைக்கோளர்களின் பல பணிகள் மீது காசாயம் பலபட்டடை போன்ற வரிகளை நிர்ணயம் செய்த அடையோலையைக் குறிப்பதாகத் தோன்றுகின்றது. கல்வெட்டு இடையிடையே சிதைந்துள்ளமையால் முழுமையான செய்தி கிடைக்கவில்லை.

**கல்வெட்டு:**

1 ஸ்ரீஸ்வஸ்தி

2 ஹாத்திப வருஷ॰ ஆ[டி ]

3 மாதம் ய உ ஸ்ரீமத் அரியப்பகள்......

4 க் குளத்தூர் கா சாவற்கம் பலபட்டடை

5 ஆற்கும் வ.........நின்றையம் யி

6 டப்பிகை ய...... ளர் பேற்கு தறிக்கட

7 மை காணிப்பேறு வூர்க் காணிக்கை

8 .... சம்படம் ரேகைக் காணிக்கை அ

9 கிரர் சோடிமுதமயார்வை நல்லெருது

10 நற்பசு வெண்ணை நெய் கட்டாயக் கொள்ளு

11 ..... வாசலில் பிறக்கும் பழவரி புதுவரி

12 மற்றும் எப்பேற்பட்ட ஸகல உபாதியும்

13 உட்பட மனை ஆங் கட்டுக் குத்தகை ஆக தறி

14 ஒன்றுக்கு வருஷம் ஒன்றுக்கு கடமை கா

15 ணி ...ரு பற்றுக்கு வரும் பல காணிக்கை குள
16 ம் பாய்த்து .....ம் ளாக ....யஉ ம் எற்
17 சோறு பன்னிரண்டும் கொள்ளக் கடவோ
18 மாகவும் [ஒ]ரு விட்டி... அகலத்து இருக் ....
19 இதில் ஒன்று பாதி கொள.... ஆகா ... கவும்
20 ......கு பரியாளமி .....பள் பேறுந் த
21 வற்றும் .... காசியிலணை .... முத்தால் கொ
22 ன்று.... டக் கடவதாகவும் சந்திராதித்தவ
23 ரையும் இந்த நின்றையம் தப்பாமல் நடத்தக்
24 கடவதாகவும் இந்த ..... த்துக்கு யாெ
25 .....ருவர் அகிதம் பண்ணினவர்கள் .......
26 பசுவை கொன்ற தோஷத்திலே போகக் [கடவர்]
27 களாகவும் உ

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **1 /1998** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | செங்கற்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | பொழிச்சலூர் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன்பதிப்பு:** | — |
| **அரசு:** | — | | |
| **அரசன்:** | — | **ஊர்க் கல்வெட்டு எண் :** | 1 |

**இடம்:** பொழிச்சலூர் சாலையில் சுடுகாட்டின் எதிரில் உள்ள பாறைக்கல்.

**குறிப்புரை:** வணிகக்குழுக் கல்வெட்டு தென்னிந்திய வணிகக் குழுக்களுள் ஒன்றான ''ஐயபொழில்'' குழுவினரின் கல்வெட்டு இது. ஐயபொழில் குழு ''ஐயபொழில் ஐநூற்றுவர்'' என்றும் கூறப்படுவது உண்டு. இவ்வணிகக் குழுவினர் அறக்கொடைகளில் ஒன்று நீர்நிலைகளை அமைத்தல். இக் குழுவைச் சேர்ந்த 'ஐநூற்றுவன்' என்பவன் பொழிச்சலூரில் ஒரு குளம் தோண்டுவித்து ''ஐநூற்றுவன் குளம்'' எனப் பெயரும் பொறித்துள் ளான். இவன் அவ்வணிகக் குழுவைச் சேர்ந்தவன் என்பதற்கு அடையாள மாக நான்கடி உயரமுள்ள இப்பாறையில் வணிகக் குழுவின் சின்னங் களான குத்துவிளக்குகள், கலப்பை, குறுவாள், பசும்பை ஆகியன கல்வெட்டின் இருபுறமும் பொறிக்கப்பட்டுள்ளன. எழுத்தமைதியை நோக்க இக்கல்வெட்டு கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருத இடமுள்ளது.

**கல்வெட்டு:**

1 ஐநூற்றுவன் குளம்

த.நா.ஆ. தொல்லியல்துறை | தொடர் எண்: 43/1990

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 10 |
| வட்டம்: | செங்கற்பட்டு | வரலாற்று ஆண்டு: | கி.பி. 996 |
| ஊர்: | சிறுதாவூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 81/33-34 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | கிரந்தங் கலந்த தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | முதலாம் இராஜராஜன் | ஊர்க் கல்வெட்டு எண்: | 1 |

இடம் : பூதீசுவரர் கோயில் மகாமண்டபக் கிழக்குச்சுவரில் இருந்து விழுந்து கிடக்கும் கல் மற்றும் மகாமண்டபக் கிழக்குப் பட்டிகை.

குறிப்புரை: இக்கல்வெட்டின் நடுப்பகுதி கிடைக்கவில்லை. சோழ அரசன் முதலாம் இராஜராஜனுடைய பதினோராவது ஆட்சியாண்டில் (கி.பி.991) சிறுதவூர் பூதீசுவர முடையார் கோயிலில் ஒரு நுந்தாவிளக்கு எரிக்க சோழ மண்டலத்துக் கிளியூர் நாட்டுக் காரிமங்கலமுடையான் தொண்ணூறு ஆடுகள் அளித்ததைக் குறிக்கிறது. கல்வெட்டின் இடைப்பகுதி பொறிக்கப்பட்ட கல் கிடைக்காமையால் பிற செய்திகளை அறிய இயலவில்லை.

## கல்வெட்டு:

1 சாலை கலமறுத்து வேங்கை நாடுங் கங்கபாடியுங் கொண்ட கோ

2 *ராஜராஜராஜ*கேஸரி *வ*ற்கு யாண்டு *யக* ஆவதாமூர்க் கொட்டத்து.... ஒத்து *ஸ்ரீ* பூதீ*ஸ்வ*ரமுடைய

3. *உஹா*தேவற்கு சோழநாட்டுத் தென்கரை கிளியூர்நாட்டுக் காரிமங்கலமு ... ... ...க்கொன்றினுக்கு *வநு*ா*ஶி*தவத் எரி....

4 வைத்த சாவாமூவா பேராடு தொண்ணூறு இவ்வாடு தொண்ணூறு நெய்யாக சுட்டி இவ்விளக்கு

5 *வநு*ா*ஶி*தவத் எரிப்போமானோம் இவ்வூர் *ஸஹை*யோம் ... ...

6 *ரக்ஷி*ப்பார் ஸ்ரீபா*தஂ* என் தலைமேலின ... ... மா இக்கல்வெட்டுப்படி திருநுந்தா

### I

1. விளக்குக்கு இநிலைக்கு .......... க்கற் காணி ... ... ... விட்ட நிலம் ஆவது
2. இவ்வூரார் .........

## II

1 ............ன்று........

2 ண்டு பொ[லியூ]ட்டாகச் சந்த்ராதி

3 த்தவத் எரிப்பதாநோம் இக்கோ

4 யிலில் சிவப்ராஹ்மணரோம்

## III

1 இவ்வூரால் கைகோ(ள)ளரில் திருமுத்தன்னாந சோழ கேரள சோழியன்

2 பெரியன் பட்டன் பக்கல் கொண்டுடைய விளைனில காளி மேட்டுக்

3 .......யும் குடிநீங்கா தேவதானம்

## IV

1 ல் திருவத்தசாமப்பட்டிக்கு மேலில் தட்டிகருக்கறு செறுவும் யிதன் மேலை பள்ளை செறுவும் தடி யிருநாலிநால்

2 குழிக்கு ஆயிரமும் இறை இழிச்சி திருநுந்தாவிளக்குக்கு விட்டோம் மஹா ஸபையோம் இது பந்மாயேசுர ரக்ஷை

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண்: 44/1990**

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 4 |
| **வட்டம்:** | செங்கற்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1137 |
| **ஊர்:** | சிறுதாவூர் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 89/1933-34 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | | |
| **அரசன்:** | இரண்டாம் குலோத்துங்கன் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 2 |

**இடம்:** பூதீசுவரர் கோயில் மகாமண்டபக் கிழக்குச் சுவர்

**குறிப்புரை:** குலோத்துங்க சோழனுடைய நான்காவது ஆட்சியாண்டில் (கி.பி. 1137 - இரண்டாம் குலோத்துங்கனாக இருக்கலாம்) ஜயங்கொண்டசோழ மண்டலத்து ஆமூர்க் கோட்டத்து ஆமூர் நாட்டுச் சிறுதவூரான நரசிங்க சதுர்வேதிமங்கலத்துப் பூதீசுவரமுடையார்க்குச் சிறுகாலைச்சந்தி போனகத்துக்குக் குலோத்துங்கச்சோழ தகடூர் நாடாழ்வான் நிலம் கொடை அளித்ததைக் குறிக்கிறது. இறுதிப் பகுதி கிடைக்கவில்லை.

**கல்வெட்டு:**

1 *ஸ்வஸ்திஸ்ரீ* கோவிராஜகேசரி *பந்ராந* *திரிபுவ*னச் சக்கரவத்திகள் *ஸ்ரீ* குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு நாலாவது ஜயங்கொண்டசோழ மண்டலத்து ஆமூர்க் கோட்ட

2 த்து ஆமூர் நாட்டுச் சிறுதவூராந நரசிங்கச் சருப்பேதி மங்கலத்து ஆளுடையார் ஸ்ரீபூதீ*ஸ்வ*ரமுடையார்க்குச் சிறுகாலை *ஸந்தி* திருமந்திரபோநகப் படிக்கு இவ்வூர் யா....

3 ந குலோத்துங்க சோழத் தகடூர் நாட்டாழ்வாரேன் விட்ட நிலமாவது இவ்வூர்க் கீழ்க் கழநியில் திருவிநான் சோலைவழியில் வட கைவழியில் எங்காணியாந சாடி ....

4 பொற்புறத்துச் சேரி மாடகௌ கிரமவித்தன் பூமிக்கு மேற்கும் தெந்பாற்கெல்லை திருவிநான்சோலை வதிக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை இத்தேவர் தேவ தானமா.....

5. குண்டிலுக்கும் முறிச்செட்டுச் சக்கரபாணிப் பட்டந் பூமியாந *தக்ஷி*ணா மூர்த்தி பட்டந் தோட்டப்பாழ்க் குண்டிலுக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை மறிச்செட்டுச் சூரியதேவ பட்ட...

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண்: 45/1990**

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 38 |
| வட்டம்: | செங்கற்பட்டு | வரலாற்று ஆண்டு: | கி.பி. 1216 |
| ஊர்: | சிறுதாவூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | 90/1933-34 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | கிரந்தங்கலந்த தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | மூன்றாம் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் : | 3 |

**இடம்:** பூதீசுவரர் கோயில் மகாமண்டபக் கிழக்குச் சுவர்

**குறிப்புரை:** மூன்றாம் குலோத்துங்கனுடைய இருபத்தெட்டாவது ஆட்சியாண்டில் ஆமூர்க் கோட்டத்து ஆமூர் நாட்டுச் சிறுதவூரான நரசிங்கச் சதுர்வேதிமங்கலத்து பூதீசுவரமுடைய மகாதேவர்க்கு ஒரு நந்தாவிளக்கு எரிப்பதற்காக இவ்வூர் பிராமணன் பொற்புரத்துப் பெரியாண்டான் பட்டன் தொண்ணூறு ஆடுகள் விட்டதைக் குறிக்கிறது.

**கல்வெட்டு:**

1 ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு ௨௰அ ஆவது

2 ஆமூர்க் கோட்டத்து ஆமூர்நாட்டுச் சிறுதவூரான நரசிங்கச் ச

3 து ர்வ்வேதிமங்கலத்து ஸ்ரீ பூதீஸ்வரமுடைய மஹாதெவர்க்கு மே

4 ற்படியூர் ப்ராஹ்மணன் பொற்புரத்துப் பெரியாண்டான் பட்டந் வைத்

5 த திரு நுந்தாவிளக்கு ஒன்றுக்கும் சாவாமூவாப் பேராடு தொண்ணூறு

6 ங் கைக்கொண்டு சந்த்ராதித்தவரை இ விளக்கு எரிக்கக்கடவோம் இ

7 கோயில் சிவப்ராஹ்மணரோம் இது ஸ்ரீ மாஹேஸ்வர ரக்ஷை ॥–

த.நா.அ. தொல்லியல்துறை | தொடர் எண்: 46/1990

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 3 |
| வட்டம்: | செங்கற்பட்டு | வரலாற்று ஆண்டு: | கி.பி. 1253 |
| ஊர்: | சிறுதாவூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 91/193334 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | கிரந்தங்கலந்த தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | தெலுங்குச் சோழர் | | |
| அரசன்: | விஜய கண்ட கோபாலன் | ஊர்க் கல்வெட்டு எண் : | 4 |

**இடம்:** பூதீசுவரர் கோயில் மகாமண்டப வடக்குச் சுவர்

**குறிப்புரை:** சிறுதவூர் பரிக்கிரக முதலிகளான சோழமான் பிரம்பன் ஒற்றியான தெலுங்கராயனும் அவனது இரு உடன்பிறந்தாரும் சிறுதவூரையும் ஆமூரையும் தேவதானமாக அளித்தனர். இந்நிலத்தைக் குடிநீங்கா தேவதானமாகக் கொண்டு அதன் விளைச்சலில் ஒரு பங்கைக் கடமையாகக் கொள்ள இக்கோயில் ஆதி சண்டேசுவரர் தேவகன்மிகள் ஏற்றுக்கொண்டனர் என்பதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

**கல்வெட்டு:**

1 *ஸ்வஸ்திஸ்ரீ* திரிபுவனச் சக்கரவத்திகள் *ஸ்ரீ*விசையகண்டகோபால தேவர்க்கு யாண்டு

2 ௩ வது சிறுதவூர் ஆளுடையார் *ஸ்ரீபூதீஸ்வர*முடைய ம*ஹா*தேவர்க்கு இவூர்

3 பரிக்கிர[க*] முதலிகளில் சோழமன் பிரம்மன் ஒற்றியான தெலுங்கராய்னு இவன் த

4 ம்பி உடையானான சோழமா[நு]மிவன் தம்பி சிவனாதனான இ .... ரிச பல்லவரையனுமிவ்

5 வூர் முறிச்செட்டு *தக்ஷிணாமூத்தி* பட்டன் பக்கல் தாங்கள் கொண்டு விட்ட சிறுத்தோட்டம் ரு....

6 ஆமூரில் முழுச்செறு வெண்ணைக்கூத்த பட்டனுமிவன் தம்பி திருவேங்கட பட்டனும்

7 பக்கல் தாங்கள் கொண்டுவிட்ட ஓடைக்காலால் நீர்பாயும் நிலத்தில் ரு^௨ வேலியும் நாயநா[ர்]

8 கண்டகோபாலர் திருமுகப்படி இறையிழிச்சித் தாங்களை குடிநீங்கா தேவ தானமாக விட்ட நில

9 த்துக்கு ஸ்ரீ பண்டாரக்கடமை கொள்ளுமிடத்து தீட்டின் பயிருக்கு அரையே மாக்காணியால் வந்

10 த வரிசைக்கடமை இறுக்கக் கடவதாகச் சொன்னோம் இப்படிச் செய்த பயிருக்கு இறுப்பதா

11 கச் சொன்னோம் இக்கோயி[ல்*] ஆதி *சண்டேஸ்வர* தேவர்கன்மிகளோம் பணியால் கோயில் கண

12 க்கு போற்றிக்குறி எறிஞ்சேரியாழ்வான் உத்தமப்பிரியன் எழுத்து

## த.நா.அ. தொல்லியல்துறை

**தொடர் எண்:** 47/1990

**மாவட்டம்:** காஞ்சிபுரம்

**ஆட்சி ஆண்டு:** 7

**வட்டம்:** செங்கற்பட்டு

**வரலாற்று ஆண்டு:** கி.பி. 14ஆம் நூற்றாண்டு

**ஊர்:** சிறுதாவூர்

**இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** 93/1933-34

**மொழி:** தமிழ்

**எழுத்து:** கிரந்தங்கலந்த தமிழ்

**முன் பதிப்பு:** —

**அரசு:** பாண்டியர்

**அரசன்:** வீரபாண்டியன்

**ஊர்க் கல்வெட்டு எண் :** 5

**இடம்:** பூதிசுவரர் கோயில் மகாமண்டபக் கிழக்குச் சுவர்

**குறிப்புரை:** இக்கல்வெட்டு கோமாறபன்மரான திரிபுவனசக்ரவத்திகள் வீரபாண்டிய தேவரது பத்தாவது ஆட்சியாண்டில் இவ்வூர் பரிக்கிரகத்தாரில் பிரம்பன் ஆன தெலுங்கராயன் உள்ளிட்டார் பக்கலில் மதுரை மாடக்குளக்கீழ் மதுரையில் கைக்கோளரில் அழகிய சொக்கனாரான கன்னனும், ஒவாத பாண்டியனும் காணியாகக் கொண்ட நிலத்தைச் சிறுதவூர் வடுகப்பிள்ளையார்க்குத் திருநாமத்துக்காணியாகக் கொடுத்ததைக் குறிக்கிறது.

### கல்வெட்டு:

1 *ஸ்வஸ்திஸ்ரீ* கோமாறபன்மர் திரிபுவநச்சக்கரவத்திகள் ஸ்ரீவீரபாண்டிய தேவற்கு ய

2 ாண்டு ஏழாவது கும்பநாயற்று அபரப*க்ஷ*த்து *ஸஷ்டி*யும் புதந்கிழமையும் பெற்ற

3 ம*ஹ*த்தில் நாள் செயங்கொண்டசோழ மண்டலத்து ஆமூர்க்கோட்டத்து ஆமூர்நாட்டு சிறுதவூர்

4 ப் பரிக்கிரகத்தாரில் [பிரம்ப]ன் ஆன தெலுங்கராயன் உள்ளிட்டாரும் அடன் ஆன முல்லை

5. யூராயனும் இவர்கள் பக்கல் பாண்டிமண்டலத்து மாடக்குளக்கீழ் மதுரையில் கைக்கோ

6. ளரில் அழகியசொக்கனார் ஆன க [ன்] னனும் ஒவ்வாத பாண்டியதேவர் காணியாக

7. கொண்ட வேப்பங்கா தடி இரண்டுநால் *ரு* *சாஅயரு* இக்குழி நானூற்று எண்பத்து

8. ஐஞ்சும் சிறுதவூர் வடுகப்பிள்ளையார்க்கு திருநாமத்துக்காணியாக குடுத்

9. தேன் அழகியசொக்கனான கன்னனும் ஒவ்வாத பாண்டியதேவநேன் இ

10. து *ஸ்ரீஊஹேஸ்வுர ஙகைக்ஷ*

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண்:** **48/1990**

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 12 |
| **வட்டம்:** | செங்கற்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1362 |
| **ஊர்:** | சிறுதாவூர் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 93/1933-34 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங்கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சம்புவராயர் | | |
| **அரசன்:** | இராசநாராயணன் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 6 |

**இடம்:** பூதீசுவரர் கோயில் மகாமண்டபக் கிழக்குச்சுவர்

**குறிப்புரை:** சகலலோகச் சக்கரவத்திகள் இராசநாராயணன் சிறுதவூர் பூதீசுவர முடையார் கோயிற் திருப்பணிக்கும் நந்தவனத்துக்கும் பலபணி நிவந்தமாக சர்வமானிய இறையிலி நிலம் அளித்த செய்தியை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

## கல்வெட்டு:

1 சகலலோகச் சக்கரவத்தி இராசநாராயணன் ஆயிரவேலிப்பற்று சிறுதவூர்....

2 நாயனார் பூதேரீசுரமுடைய நாயனாற்கு *யஉ* சித்திரை மாதம் *உயசு* *உ* முதல் இத்தளி பூசை .....

3 யும் காடெழு கரம்பும் நீரெறா மேடும் நீக்கி கடமையாயம் பொன்வரி பல வினியோகம் பல வரிகள் பல உபாதி

4 களுமுட்பட இந்நாயனார் தேவதானத்திலும் நாச்சியார் தேவதானத்திலும் திருநாமத்துக்காணியாக நாட்டள

5. வு கோலால் இரண்டுவேலி நிலமும் இந்நாயனார் திருமடவிளாகமும் திருநந்தவனமும் உட்பட தென்னமரமு

6. ம் பூசைக்கும் திருப்பணிக்கும் பலபணி நிமந்தத்துக்கு *ஸவ_ுமாநிய* இறையிலியா

7 க நடக்கும்படி சொல்லி விட்டோம் இன்னாள் முதல் இப்படி செய்வதே [ இது ]

8 சேதிராயன் எழுத்து.

## த.நா.அ. தொல்லியல்துறை　　　　　　　　　　தொடர் எண்: 49/1990

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 7 |
| **வட்டம்:** | செங்கற்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1237 |
| **ஊர்:** | சிறுதாவூர் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 94/1933 |
| **எழுத்து:** | கிரந்தங் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | பாண்டியர் | | |
| **அரசன்:** | சடையவர்மன் சுந்தரபாண்டியன் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 7 |

**இடம்:** பூதீசுவரர் கோயில்

**குறிப்புரை:** கல்வெட்டு இடையிடையே சிதைந்துள்ளது. கோச்சடையபன்மரான சுந்தர பாண்டியன் காலத்தில் சிறுதவூரான நரசிங்கச் சதுர்வேதிமங்கலத்து பூதீசுவர முடையார்க்குப் பலர்பக்கல் நிலம் விலைக்குப் பெற்று மன்னனை குடிநீங்காத் தேவதானமாக விடப்பட்டதைக் குறிக்கிறது. கல்வெட்டின் பகுதிகள் கிடைக்காமை யால் முழுச் செய்தி கிடைக்கவில்லை.

### கல்வெட்டு:

1 ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடபன்மரான திரிபுவனச்சக்கரவத்திகள் சீசுந்தரபாண்டிய தேவற்கு

2 [யாண்டு] ஏழாவது மேஷநாயற்று பூவ௱வக்ஷத்து பௌ[ர்ணை]யும் நாயற்றுக்கிழமையும் பெற்ற சோதி நாள் செய...........

3 ஆமூர்க் கோட்டத்து ஆமூர் நாட்டுச் சிறுதவூரான நரசிங்க சதுவே௱தி ம... ..

4 .......பட்டன் பக்கலிலும் தெக்ஷிணாமூத்தி பட்டன் பக்கலிலும் இக்குடி.. ..

5 கலிலும் இக்குடி அருளாள பட்டன் பக்கலிலும்....

6 க்கலிலும் இவூர் ஆளுடையார்ப் பூதீஸ்வரமுடைய நாயனார் கோயில் தேவரடியாரில் பொன் மற்..... ரைசன் ஆலாலசுந்தர

7. ....... கிய நாச்சியும் இவன் தம்பி பொன்னனும் புலியூரான....

8 பாண்டியாழ்வியும் திருஞானசம்பந்த மா ....

9 ம் இவூர் பரிக்கிரகத்துக் கலங்காமொழிப் பல்லவரையன் ....

10 [ா]னும் வடுகப்பிள்ளை சீராளதேவனும் உடையபிள்ளையும் கந்தப்பிள்ளை...

11 னார் கோயில் கோயிற்கணக்குப் போற்றிக்குறி புலிப்பாக்கமுடையான்

12 லவனமுடையானும் இவூரில் இருக்கும் கரும்புளன் கொ ...பா

13 இவர்கள் பக்கல் நாங்கள் கொண்டுடைய[ஊர் ] நிலமான [ஊர்]க்கந்...ரிக்க

14 சோலைகளில் ........ந்த கண்ணிக் காலால் நீர் பாயப்பட்ட

15 லிந்........ப்பட்ட திருவினான் சோலையிற் தெற்கடைய தரிசாய்..... யணை

16 ச்சிற் கால்வழியில் பெருமூலைக் குண்டில்...

17 .. .. .. கேய் மலை .. .. .. மும்பல

18 .. .. .. ... .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ட்டமுத

19 ஆக .. .. .. .. .. .. .. .. .. .. இக்குழி இவர்கள் பக்கல் விலைகொண்டு

20 ....... குடிநீங்காத் தேவதானமாகப் பெருமாள் சுந்தரபாண்டியர்.....

21 கொண்டானும் இவ்வனைவோம்

22 ங்குண......... இவ் ....... குனான்

23 [கரா]வியும் திருவினாள் சோலைக் கால்

24 க்கு... .னாள் சோலைக்காலு....க்கு நேர்

25 லா....நா..... பட்ட மேலை மாங்குண்டில்

26 .....க்கத்து..... கூறு

27 .....ருப்படி யிதை இவி.... வரும். . .

28 முடைய ஆரணவல்லி நாச்சியார்க்கு

29 ம் இது *ஸ்ரீமாகேஸ்வர ரக்ஷை* ॥

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண்: 50/1990**

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 47 |
| **வட்டம்:** | செங்கற்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.1117 |
| **ஊர்:** | சிறுதாவூர் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 96 /1933-34 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | | |
| **அரசன்:** | முதற் குலோத்துங்கன் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 8 |

**இடம்:** பூதீசுவரர் கோயிலுக்குத் தென்புறம் அரச மரத்தடியில் கிடக்கும் கற்களில் ஒன்று.

**குறிப்புரை:** குலோத்துங்க சோழனது நாற்பத்தேழாவது ஆட்சியாண்டில் (கி.பி.1117) ஆமூர்க்கோட்டத்து ஆமூர் நாட்டுப் பிரமதேயம் சிறுதவூரான நரசிங்கச் சதுர்வேதி மங்கலத்து பூதீசுவரடையார் கோயிலில் இவ்வூர்க் கணக்கன் திருவடிகள் பூதேரிச் செல்வன் ஒரு சந்திவிளக்கு வைத்ததையும், அதனை எரிய வைக்க இக்கோயில் சிவப் பிராமணர் ஒப்புக் கொண்டதையும் இக்கல்வெட்டு குறிக்கிறது.

**கல்வெட்டு:**

1 ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு நாற்பத்தேழாவது ச

2 யங்கொண்டசோழ மண்டலத்து ஆமூர்க்கோட்டத்து ஆமூர் நாட்

3 டு ப்ரஹ்மதேயம் சிறுதவூரான நரசிங்கச் சதுர்வேதிமங்கலத்து

4 ஸ்ரீ பூதீஸ்வர முடைய மஹாதேவர்க்கு இவ்வூர் ஊர்க் கணக்கன்

5 திருவடிகள் பூதேரிச் செல்வன் வைத்த ஸந்தி விளக்கு ஒன்றுக்கு

6 ம் இவன் கொண்டு பொலியூட்டாக சந்த்ராதித்தவரை எரிப்பதாநோம்

7 இக்கோயில் சிவப்ராஹ்மணரோம் இது ஸ்ரீமாஹேஸ்வர ரக்ஷை

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ. தொல்லியல்துறை** | | **தொடர் எண்:** | **51/1990** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 11 |
| **வட்டம்:** | செங்கற்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1144 |
| **ஊர்:** | சிறுதாவூர் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 95 /33-34 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங்கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | | |
| **அரசன்:** | [ இரண்டாம் குலோத்துங்கன் ] | **ஊர்க் கல்வெட்டு எண் :** | 9 |

இடம்: பூதீசுவரர் கோயில் அர்த்தமண்டபத் தென்சுவர் (வாயிலின் இடப்புறம்)

குறிப்புரை: இது இரண்டாம் குலோத்துங்க சோழனுடைய கல்வெட்டாக இருத்தல் வேண்டும். இக்கல்வெட்டின் பகுதிகள் பல கிடைக்கவில்லை. சிறுதவூர் பூதீசுவர முடையார்க்கு நித்த வினோத வளநாட்டுக் கிழார்க் கூற்றத்து அரியலூரரான் ஒருவன் விட்ட நிலத்துக்குச் சிறுதவூர் மகாசபையார் இறையிலி செய்ததைக் குறிக்கிறது.

## கல்வெட்டு:

1 *ஸ்வஸ்திஸ்ரீ* கோவி*ராஜ*கேசரி *வந்மரான த்ரிபுவன சக்ர*வத்திகள் . . . .

2 கோட்டத்துச் சிறுதவூர் *மஹாஸ*பையோம் நாங்கள் *ஸ்ரீ* பூதி*ஸ்வ*ரமுடையாற்கு திரு. ..

3 லத்து நித்த விநோத வளநாட்டு கிழார்க் கூற்றத்து அரியலூர்....

4 யான எங்கள் பக்கல் வஸ்து[ ம்*] [ விட்டுக்] கொண்டு இறையிழிச்சி
விட்ட நிலமாவ.....

5 கெல்லை ஆலத்தூரெல்லைக்கு மேற்கு தென்பாற்கெல்லை வெண்[கா]...

6 ல்லை ஆலத்தூரேறிப் போன பெருவரம்புக்குக் கிழக்கும் வடபாற்கெல்...

7 [ திரு] .......... ந்நிலமுங் கிணறும் கிணறு சூழ் தி........

8 குதிக்குறைவுகளி[ ற்] விற்றுக் குடுத்து இ

9 ........ இறைகளுமிழிச்சி செல்வதாக இந்நிலம் விற்றுக்குடு

10 ........ இப்படியே திருவர்த்தசாமப்பூஜைக்கு உடலாக....

11 ........ ட்டுக் கொண்டு இறைஇழிச்சி விட்டேன் அரிய.....

12 ........ பாதம் என்தலைமேலன இது பந்மயீ*ஸ்வர ரக்ஷை*

| த.நா.அ. தொல்லியல்துறை | | தொடர் எண்: | 2/1998 |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | சகம் 1442 |
| **வட்டம்:** | செங்கற்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1570 |
| **ஊர்:** | பொன்மார் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 17/1934-35 |
| **எழுத்து:** | கிரந்தங்கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | விஜய நகரர் | | |
| **அரசன்:** | சதாசிவராயர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 1 |

**இடம்:** சக்திபுரீசுவரர் கோயில் கருவறைத் தெற்கு ஜகதிப்படை.

**குறிப்புரை:** விஜயநகர அரசன் சதாசிவராயர் ஆட்சிக்காலத்தில் (சகம் 1442, கி.பி. 1520) ஜயங்கொண்ட சோழமண்டலத்துப் புலியூர்க் கோட்டத்துக் கால்வாய் நாட்டு தியாகவினோத நல்லூரான பொன்மாறு என்ற ஊரில் பொயிலீசுரமுடைய நாயனாற்கும் வீரபத்திர நாயனாற்கும் பூசை, திருப்பணிகளுக்கு சதாசிவராயர் மற்றும் இராமராயர் பெயரில் சீரங்கராயர் என்பவரும், செங்கழுநிர்ப்பட்டு நாட்டவரும் பொயிலிச்சேரியைத் தன்மமாக விட்டதை இக்கல்வெட்டு குறிக்கிறது.

## கல்வெட்டு:

1 ஸ்வஸ்தி ஸ்ரீ ஸ்ரீ மகாமண்டலெசுர[ன] ராசாதிராசபர மேசுர[ன] பாஷைக் குத் தப்புவராய கண்ட[ன] கண்டனாடு கொண்டு கொண்டனாடு கொடாதான் பூறுவ தெக்ஷிண பச்சிம உத்திர சதுசமுத்திராதிபதி சிறீ வீரபிறுதாப சதாசிவ ராயற்கு செல்லா

2 நின்ற சகாற்தம் ௲௪௱௪௰௨ ன் மேல் செல்லா நின்ற சவுமிய சங்வத்ஸரத்து சிங்கநாயற்று பூறுவ பக்ஷத்து தெசமியும் திரு வோணமும் சோமவாரமும் பெற்ற இற்றைநாள் செயம்கொண்ட சோழமண்டலத்து புலி ஊர் கொட்டத்து

3 கால்வாய் நாட்டு தியாகவினோத நல்லூரான பொன்மாறு நாயனார் பொயிலீசுரமுடைய நயினார்க்கும் முன்னால் நடந்துவந்த பொயிலிச்சேரி சதாசிவராயற்கும் இராமிராசர் அவர்களுக்கும் தன்மமாக சீரங்கனாயக்கரும் செங்கழுநீர்ப்பட்டு நாட்டவரும் பொயிலீசுர

4. முடைய நயினாற்கும் வீரபத்திர நயினாற்கும் பூசைக்கும் திருப்பணிக்கும் செங்கழுநீர்பட்டு சீர்மையில் பொயிலிச்சேரி தேவதானம் விடுகையில் யிந்த தம்மம் சந்திராதித்த வரைக்கும் பூசை திருப்பணிக்கு நடத்த கடவதாக வும் அரமனை [வாசல் வெச்ச] விலாடமும் காணி மானியகாணி சுவந்திரமும் காவல் சுவந்திரமும்....

5 பெரும்பாடி காவல் உள்ளாய கா[வல்]மானியமாக சாத்தனார்.....க்கற்கு தம்[ம]மாக சஜூாதித்த வரைக்கும் நடக்க கடவதாவும் இந்த தம்மத்தில் வந்த ஆதாயத்திலே [யிந்த]

6 நயினாற்கும் இரண்டு பங்கும் பொய்யிலா மெய்யனாற்கு ஒரு பங்கும் ஆக செலுத்தக் கடவதாகவும் இந்த கிறாம தன்மத்துக்கு அகுதம் பண்ணாமல் நடக்கும் கடவதாகவு[மி]

7 த் தன்மத்துக்கு ஆரொருவர் அகுதம் பண்ணினால் அவர்கள் குருவையும் மாதாபிதாவையும் காராம் பசுவையும் கெங்கைகரையிலே கொந்ற தோஷத்திலே போக கடவராகவும்...

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ. தொல்லியல்துறை** | | **தொடர் எண்:** | **3/1998** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | செங்கற்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | 16-17ம் நூற்றாண்டு |
| **ஊர்:** | பொன்மார் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை :** | 18 /1934-35 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | | |
| **அரசன்:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 2 |

இடம்: சக்திபுரீசுவரர் கோயில் தென்திருச்சுற்றுத் தரையில் கிடக்கும் தனிக்கல்

குறிப்புரை: ஸ்ரீமத்ரங்கராயர் ரட்டியன் மற்றும் பயிர்க்குடிகள் பலபட்டடைகள் ஆகியோர் கூறப்படுகின்றனர். சிந்னாசெட்டி மகன் வேதகிரி என்பவர் அமணே(ரி) குளம் என்ற குளத்தில் வண்டல் வெட்டித் தூர் எடுத்ததை இக்கல்வெட்டு குறிப்பிடுகிது. இக்குளம் கோயிலின் அருகிலேயே அமைந்துள்ளது. கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

## கல்வெட்டு:

1 பொன்மாறு ஸ்ரீமது றங்கராச [ர்]

2 முதலியான் ரட்டியன் மற்றும் முள்ளிப்

3 [யி] ற்குடியள் பலபட்டடையும் யிநிமே

4 வருகிற ராசகரம் முதலாக அமணே[ ரி]

5 குளம் மாம்பாக்கம் சிந்னா செட்டி

6 புத்திரன் வேதகிரி வண்டல் வெட்டி எ. . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | சகம் 1440 |
| வட்டம்: | திருக்கழுக்குன்றம் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 1518 |
| ஊர்: | விட்டலாபுரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 117/1933 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | கிரந்த கலந்த தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | விஜயநகரர் | | |
| அரசன்: | கிருஷ்ணதேவராயன் | ஊர்க் கல்வெட்டு எண்: | 1 |

**இடம்:** விட்டலேசுவரர் கோயில் மண்டப வடக்கு ஜகதி.

**குறிப்புரை:** கிருஷ்ணதேவராயர் ஆட்சியின் போது ஜெயங்கொண்டசோழ மண்டலத்து முகந்தனூர் நாட்டுத் திருக்கழுக்குன்ற பற்று பேரம்பாக்கத்துச் சீமையான ஜனநாத நல்லூரான வைப்பாக்கம் விட்டலாபுரத்திலிருக்கும் சுரகொண்டயதேவ சோழ மகாராசனான குலசேகரய்யன் விட்டலாபுரம் என்ற ஊரை உருவாக்கி விட்டலேஸ்வரன் கோயிலுக்குத் திருவாராதனை, திருப்பணி, அங்கரங்க வைபோகத்திற்காக நிலம் அளித்துள்ளான். நிலத்தின் நாற்புற எல்லைகளைக் குறிப்பிடும்போது புதுப்பட்டினம், ஆலங்குப்பம், நாரணப்பையன் குப்பம், வைப்பாக்கம் ஆகியவை கூறப்படுகின்றன

**கல்வெட்டு:**

1 *ஸுஹஉஸ்ரீ ஸுஹ ஸ்ரீஉநு உஹாஉணுமேஸ்வுர* ரே திநிமீசுர கணு கட்டாரி *ஸாஜுவ* அரிராய விபாடன் *ஹாஷை*க்குத் தப்புவராயர் கண்டன் கண்டனாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் ராஜா*தி*

2 *ராஜநு ராஜவுரமேஸ்வுரநு* துலுக்க தள விபாடன் துலுக்கர் மொகரந் தவுத்தோன் எம்மண்டலமுங் கொண்ட *ராஜராஜவுரமேஸ்வுரநு* .... ஞ *உஹாஉணுமேஸ்வுரநு* *ஸ்ரீ*வீர*வுஉாவ*[*ரா*யர்] *ஸ்ரீ* நரசிங்கதேவர் மகன் *ஸ்ரீ கூரஷ்ணு*தேவ *உஹாரா*யர்

3 *வுருதி ராஜஜூ* பண்ணியருளா நின்ற சகாத்தம் சத*ாசயந* மேல்செல்லா நின்ற *வுஉாதி* வருஷத்து *ஸிஹ* நாயற்று *வுறுவ* *வக்ஷ*த்து *ஸமாஉஸி*யும் *பகூ*வாரமும் புணர்பூச *நக்ஷ*த்திறமும்...........புண*ு* யோகமும்.......... மும் பெற்ற இற்றை நாள் செயங்கொ

4 ண்ட சோழமண்டலத்து முகந்தனூர் நாட்டு திருக்கழுக்குன்ற பற்று பேரம்பாக்கத்து சீர்மையா[கிய] ஜனநாத நல்லூரான வைப்பாக்கம் விட்டலா புரமான விட்டலாபுரத்திலிருக்கும் *ஸ்ரீ*கொ

5 ண்டைய தேவ சோழ மகாராசனான குலசேகரய்யன் என்னிட நாயக்கத் தனமான சீர்மையில் ஊரநமாக விட்டலேசுரன் திருநாமத்தாலே விட்டலாபுரம் என்று கிராமங்கட்டி விட்டலேசுரன் திருவாராதனை திருப்பணி அங்கரங்க வை போ

6 கத்துக்கு விட்ட எல்லை கீழ்பாற்கெல்லை புதுப்பட்டணத்துக்கு ஆலங் குப்பத்து எல்லைக்கு மேற்கும் தென்பாற்கெல்லை மடுவுக்கு வடக்கும் மேற்கெல்லை மேற்காண்டை எல்லைக்கு கிழக்கும் நாரணப்பையன்

7 குப்பம் உள்பட வடபாற்கெல்லை அண்ணாப்பிள்ளை நாயக்கரையன் மேட்டுக்குடி கழனிக்கும் வைப்பாக்கம் ஆக கட்டின வீட்டுக்கு னாரணப் பரைய்யன் வீடு உள்ளாக இதற்கு னாற்பாற்கெல்லையில் உண்டா

8 ன கொல்லை கழனியான பானாவரி தாங்கல்.....

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **2/2002** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | திருக்கழுக்குன்றம் | **வரலாற்று ஆண்டு:** | சகம் 1492, கி.பி. 1570 |
| **ஊர்:** | விட்டலாபுரம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை :** | 119/1932-33 |
| **எழுத்து:** | கிரந்தங்கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | விஜயநகரர் | | |
| **அரசன்:** | சதாசிவராயர் | **ஊர்க் கல்வெட்டு எண் :** | 2 |

**இடம்:** விட்டலேசுவரர் கோயில் மகாமண்டபத் தெற்குக் குமுதப்படை

**குறிப்புரை:** விஜயநகர மன்னன் சதாசிவராயன் காலத்தில்இராமராசய்யன் ஆணைக் கிணங்க உய்யால நல்லதிம்மநாயகன்,வாலுநாயகன், அண்ணாப்பிள்ளை நாயகன் ஆகியோர் தங்களுடைய தாய் தந்தையரின் நலனுக்காகவிட்டலாபுரம் விட்ட லேசுவரருக்கு திருத்தேர், திருநாள் வழிபாடு மற்றும் திருப்பணிகளுக்காக வெங்கம் பாக்கம், குன்றத்தூர், குழிநாவலகத்தி, மேலைப் புன்னப்பட்டு ஆகிய ஊர்களைக் கொடையாக அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு:

1 ஸுஹஸ்ர ஸ்ரீமதோ ராமாநுஜாய நம: ஸ்வஸ்திஸ்ரீ மநு மஹா மண்டலேஸ்வர ஹரிராய விபாடந ஹாஷைக்கு தப்புவராயர் கணூ கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதோன் துலுக்க தள விபாடந துலுக்க மோஹரழ தவுத்தான் வூவ பூ மக்ஷிண வஸ்லி மோ

2 உத்தர சதுஸமுத்ராதிபதி ஸதாஸிவ ராயற்க்கு செல்லா நின்ற ஸகாப்தம் ருசாஸ்வமு மேல் செல்லாநின்ற நள வருஷம் வர ஸூக நாயற்று வ வ பக்ஷத்து சதுமஸியும் ஆதித்தவாரமும் மூலமும் பெற்ற னாள் ஸூய புணூ புண்ய கால

3. த்திலே ஸ்வஸ்திஸ்ரீ ஸகல குணராய யமே வூஜா பரிபாலரான ராமராஜயூ உத்தராப்படிக்கு உய்யால நல்ல திம்மநாயக்கர் வாலுநாயக்கர் அண்ணப் பிள்ளை நாயக்கர் யிவர்கள் தங்களிட மாதாபிதாக்களுக்கு புண்ணி

4. யமாக விட்டலாபுரம் விட்டலேஸ்வ ரனுக்கு திருத்தேர் திருனாளுக்கும் திருப்பணி கை... கல்லியதுக்கும் வெங்கம்பாக்கம் குன்றத்தூர் குழினாவலகத்தி மேலைப் புன்னப்பட்டு ஸுஹஸ்ர

**த.நா.அ. தொல்லியல்துறை** | **தொடர் எண்: 3/2002**

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | சகம் 1552 |
| வட்டம்: | திருக்கழுக்குன்றம் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 1630 |
| ஊர்: | விட்டலாபுரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 118/32 33 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | கிரந்தங் கலந்த தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | விஜய நகரர் | | |
| அரசன்: | சீரங்கதேவன் | ஊர்க் கல்வெட்டு எண்: | 3 |

**இடம்:** விட்டலேசுவரர் கோயில் மகாமண்டபத் தெற்கு ஜகதி

**குறிப்புரை:** விஜயநகரப் பேரரசன் கிருஷ்ணதேவராயர் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட விட்டலாபுரத்தில் விட்டலேஸ்வரர் கோயிலுக்கு அம்மரபில் வந்த சீரங்கதேவன் ஆட்சியின்போது காங்கேயநல்லூரும் கற்காட்டுச்சேரியும் போச்சுரங்கபதி தேவ மகாராசய்யன் புண்யமாக அவரால் அளிக்கப்பட்டுள்ளது. இக்கொடை மன்னன் சீரங்க தேவனின் அனுமதியுடன் வழங்கப்பட்டது.

## கல்வெட்டு:

1 ஸ்வஸ்தி ஸ்ரீமந் ஸ்ரீமஹா அரியராயர் விபாடன் பாஷைக்குத் தப்புவராயர் கண்டந மூவராயர் கண்டந கண்டனாடு கொண்டு கொண்ட னாடு குடாதான் துலுக்கதள விபாடந துலுக்கர் மோகரும் தவுத்தோந் ஸம்புவராய ஸ்ரீவநாச்சாரிய மண்டலத்தறணி ..... ....... ....... ......... நாகத்திறி

2 [விருதக்கநா] பரசுராம சத்தி [ய*] அரிச்சந்திர உத்தண்ட கண்ட கட்டாரி சாளுவ யிம்மண்டலமு [மீழ]முரி திறைகொண்ட ராசாதிராச ராசபரமேஸ்வர ராசமாற்தாண்ட ராசகெம்பீர ஸ்ரீரங்கராயதேவ மஹாராயர் பிறுதுவி ராச்சியம் பண்ணியருளா நின்ற சகாத்தம் ஆயிரத்து

3 அஞ்ஞூற்று அன்பத்து இரண்டுக்கு மேல் செல்லா நின்ற தாரண ஸம்வச்சரத்துத் துலாநாயற்று பூறுவ பக்ஷத்து அத்த நக்ஷத்திரமும் திறியோதெசியும் சுக்கிற வாரமும் பெற்ற இற்[றை]ற னாள் சீரங்கதேவ மஹாராயர் உத்தாரமாக போச்சுரங்கபதி தேவ் மகா ராசரய்யன்

4 அவர்கள் புண்யமாக விட்டலாபுரம் விட்டலேசப் பெருமாளுக்குக் கட்டளை யிட்ட கிறாமம் காங்கயநல்லூறும் கற்காட்டுச்சேரியும் சந்திராதித்தவரைக்கும் நடத்தக் கடவதாகவும் இவை வானவன்மாதேவி உடையான் வாழ்விச்சான் எழுத்து ஸ்வஸ்தி

| த.நா.அ. தொல்லியல்துறை | | தொடர் எண்: | 4/ 2002 |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | — |
| வட்டம்: | திருக்கழுக்குன்றம் | வரலாற்று ஆண்டு: | 16-ம் நூற்றாண்டு |
| ஊர்: | விட்டலாபுரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 118/32-33 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | கிரந்தங் கலந்த தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | — | | |
| அரசன்: | — | ஊர்க் கல்வெட்டு எண் : | 4 |

**இடம்:** விட்டலேசுவரர் கோயில் திருச்சுற்றில் வடமேற்கு மூலையில் உள்ள இராமானுஜ மண்டபம் நிலைப்படி.

**குறிப்புரை:** வைணவ குரு பரம்பரையில் இடம் பெறும் பிள்ளைலோகாச்சாரியர் ஜீயருடைய சிஷ்யர்கள் தங்கள் பணிக்காக பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்கிய செய்தி காணப்படுகிறது.

## கல்வெட்டு:

1. இந்த · ராமாநுஜ ௨ஂஊ௨ழ
   [ யழ ] பிள்ளை லோகாச்சாரியார்
2. ஜீயர் பணியிலே நடத்தக் கடவதாகவும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | — |
| வட்டம்: | திருக்கழுக்குன்றம் | வரலாற்று ஆண்டு: | 16-17 ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | விட்டலாபுரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | — |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | — | | |
| அரசன்: | — | ஊர்க் கல்வெட்டு எண்: | 5 |

**இடம்:** விட்டலேசுவரர் கோயில் கொடிக்கம்ப அடிநிலை கிழக்குப்புறக் கம்பை.

**குறிப்புரை:** விட்டலேசுவரர் கோயில் கொடிக்கம்பத்தை எப்போதும் பேணும் பணியை மேற்கொண்டவர் முத்தி என்பவராவார். இவர் செல்வன் என்பானுடைய மகள். இக்கொடிக்கம்பத்தை நிறுவியவரும் இவராகவே இருக்க வேண்டும்.

**கல்வெட்டு:**

1. செவ்வன் மகள் முத்தி சதாசேவை.

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **1/ 2000** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 4 |
| **வட்டம்:** | திருப்பெரும்புதூர் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1254 |
| **ஊர்:** | குளப்பாக்கம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தம் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | தெலுங்குச் சோழர் | | |
| **அரசன்:** | விசைய கண்ட கோபாலன் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 1 |

**இடம்:** அகத்தீசுவரர் கோயில் மகாமண்டபக் கிழக்கு அதிட்டானக் குமுதப்படை.

**குறிப்புரை:** தெலுங்குச்சோழ அரசன் விசையகண்ட கோபாலனின் காலத்தில் குளப்பாக்கத்து உடையார் திருவகத்தீசுவரமுடைய நாயனார்க்குச் சிறுகாலைச் சந்தி விளக்கு ஒன்று எரிக்க ஆண்டார் தொழுவார்க்கு ஆளானார் என்பவர் 24 பசுக்களும் ஒரு கன்றும் அளித்ததையும், இதனைக் கைக்கொண்டு விளக்கெரிக்க இக்கோயில் தேவகன்மிகள் காக்குநாயகப்பட்டனும் ஆழ்வான் பட்டனும் ஒப்புக் கொண்டதையும் இக்கல்வெட்டு குறிக்கிறது.

**கல்வெட்டு:**

1 *ஸ்வஸ்திஸ்ரீ* திரிபுவனச்சக்கரவத்திகள் *ஸ்ரீ* விசையகண்டகோபால தேவற்கு யாண்டு நாலாவது குளப்பாக்கத்து உடையார் திருவ[கத்]தீ[சுர]முடைய நாயனார்க்கு ஆண்டார் தொ

2 ழுவார்க்கா[ளா]னேன் இன்னாயனார்க்கு சிறுகாலைச் சந்திவிளக்குக்கு நான் விட்ட பசு *உயச* கன்றும் உரு யிரண்[டும் கைக்கொ]ண்டு சிறுகாலைச் சந்தி விளக்[கு எரிக்கக்]கடவோம் இக்கோயில்த்

3 தேவகன்மி காக்கு நாயகப் பட்டனும் ஆழ்வான் பட்டனும் இவ்விருவோம்.... *சந்ராதித்த* வரையி[ல் எரிக்க க]டவோம் இது *ஸ்ரீ* மா*ஹேஶ்வர ர*

4 *க்ஷை*

## த.நா.அ. தொல்லியல்துறை — தொடர் எண்: 2/ 2000

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 6 |
| **வட்டம்:** | திருப்பெரும்புதூர் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1152 |
| **ஊர்:** | குளப்பாக்கம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தம் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | | |
| **அரசன்:** | இரண்டாம் இராஜராஜன் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 2 |

**இடம்:** திருவகத்தீசுவரர் கோயில் அர்த்தமண்டபத் தெற்கு அதிட்டானக் குமுதப்படை

**குறிப்புரை:** சோழ அரசன் இரண்டாம் இராஜசராஜன் காலத்தில் குளப்பாக்கத்து ஆளுடையார் கோயில், அர்த்த மண்டபம், திருவிடைக்கட்டு, நாட்டிய [நிருத்த] மண்டபம், திருப்படி [ஸோபானம்] மண்டபம் முதலானவற்றை இவ்வூர் செங்கோன் தில்லைவாணன் காக்குநாயகன் அடிமுதல் முடிவரை கருங்கல்லால் கட்டினான் என்பதை இக்கல்வெட்டு கூறுகிறது.

**கல்வெட்டு:**

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜதேவற்கு யாண்டு ஆறாவது குளப்பாக்கத்து ஆளுடையார் திருஅகத்தீஸ்வரமுடைய நாயனார்

2 கோயிலும் திருஅர்த்தமண்டபமும் திருவிடைக்கட்டும் ந்ருத்த மண்டபமும் ஸோபானமும் உபாநாதி ஸ்தூபி பரியந்தமாகத் திருக்கற்றளி செய்வி

3 த்தான் இவ்வூர்ச் செங்கோன் தில்லைவாணன் காக்குநாயகன் உ இ தந்மம் ஸ்ரீமாஹேஸ்வர ரக்ஷை

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **3/ 2000** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 10 |
| **வட்டம்:** | திருப்பெரும்புதூர் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1188 |
| **ஊர்:** | குளப்பாக்கம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | | |
| **அரசன்:** | வீரராஜேந்திரன் ( மூன்றாம் குலோத்துங்கன்) | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 3 |

**இடம்:** திருஅகத்தீசுவரமுடையார் கோயில் மகாமண்டபத் தெற்கு அதிட்டானக் குமுதப்படை

**குறிப்புரை:** இவ்வூர் ஆளுடையார் திருவகத்தீசுவரமுடைய நாயனார் கோயிலில் சந்தி விளக்கு ஒன்று எரிப்பதற்குக் குளப்பாக்கத்துக் விசையநல்லுழான் பண்டிதன் காக்குநாயகன் என்பவரால் கொடையாக அளிக்கப்பட்ட மூன்று பசுக்களையும், இக்கோயிலில் காணியுடைய சிவபிராமணர்கள் இருவர் பெற்றுக் கொண்டு விளக்கெரிக்கச் சம்மதித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

**கல்வெட்டு:**

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவீரராசேந்த்ர சோ[ழ]தே வற்கு யாண்டு [பத்தா]வது

2 குளப்பாக்கத்து விசைய நல்லுழான் பண்டிதன் காக்கு நாயகநேன் இவ்வூர் ஆளுடையார் திரு அகத்தீ

3 ச்சுரமுடைய னாயநாற்கு சந்திவிளக்கு ஒன்றுக்கு விட்ட பசு மூன்றும் கைக்கொண்டு சந்தி விளக்கு ஒன்றும் சந்த்ராதித்த வரை எரிக்

4 க கடவோம் இக்கோயிற் காணிஉடைய திருச்சிற்றம்பல பட்டன் வாழ்வித்த பட்டனும் காக்குநாயகப் பட்டனும் இவ்விருவோம் இது ஸ்ரீ மா

5 ஹேஸ்வர ரக்ஷை

# த.நா.அ. தொல்லியல்துறை — தொடர் எண்: 4/ 2000

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 29 |
| **வட்டம்:** | திருப்பெரும்புதூர் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1279 |
| **ஊர்:** | குளப்பாக்கம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | தெலுங்குச் சோழர் | | |
| **அரசன்:** | விசைய கண்ட கோபாலன் | ஊர்க் கல்வெட்டு எண் : | 4 |

**இடம்:** திருவகத்தீசுவரமுடையார் கோயில் மகாமண்டபத் தெற்கு, கிழக்கு அதிட்டான குமுதப்படை.

**குறிப்புரை:** குளப்பாக்கமான சிவபாதசேகரநல்லூரில் இருக்கும் ஆண்டார் தொழுவார்க் கிரங்கினான் என்பவர் திருஅகத்தீசுவரமுடைய நாயனார்க்கு சந்தி விளக்கு ஒன்று எரிக்க பசு மூன்றும் கன்று ஒன்றும் தானமாக அளித்துள்ளார். இதனை கைக்கொண்டு இக்கோயில் தேவன்மிகளில் ஒருவர் இவ்விளக்கை எரிக்க பொறுப்பேற்றுக் கொண்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு:

1 *ஸ்வஸ்திஸ்ரீ* திரிபுவனச் சக்கரவத்திகள் *ஸ்ரீ* விசையகண்டகோபால தேவர்க்கு யா

2 ண்டு இருபத்தொன்பதாவது குளப்பாக்கமான சிவபாதசேகர நல்லூரில் இருக்கும்

3 ஆண்டார் தொழுவார்க் கிரங்கினானேன்உடை[யார்] திருவகத்தீசுரமுடைய நாயனார்க்கு சந்தி விளக்கு ஒன்றுக்கு வி

4 ட்ட பசு [மூ]ன்று கன்று கைக்கொண்டு சந்திராதித்தவரை எரிக்க கடவேன் இக் கோயில் தேவகன்

5 மிகளில் [உடன்பற்]றான் ஆழ்வான்பட்டனேன் இத்தன்மம் மாகேசுர *ரெக்ஷ*

TAMIL NADU STATE DEPT. OF ARCHAEOLOGY MADRAS
11775
LIBRARY
Co No
Date

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ. தொல்லியல்துறை** | | **தொடர் எண்:** | **5/ 2000** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 6 |
| **வட்டம்:** | திருப்பெரும்புதூர் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 965 |
| **ஊர்:** | குளப்பாக்கம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங்கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | பல்லவர் | | |
| **அரசன்:** | விஜய மகாராயர் [பார்த்திவேந்திரவர்மன்] | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 5 |

**இடம்:** குளப்பாக்கம் அகத்தீசுவரர் கோயில் திருச்சுற்றில் கிடக்கும் தனிக்கல்.

**குறிப்புரை:** விஜயமகாராஜரின் ஆறாவது ஆட்சியாண்டில் குளப்பாக்கத்து ஊரினன் ஒருவன் (பெயர் சிதைந்துள்ளது) குளப்பாக்கம் அகத்தீசுவரமுடையார் கோயிலில் நண்பகல் ஒரு திருவமிர்து படைக்க இருநூற்று ஐம்பது குழி நிலம் கொடையளித்ததைத் தெரிவிக்கிறது.

இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் விஜய மகாராஜர் பார்த்திவேந்திரவர்மனாக (கி.பி. 959) இருக்க வேண்டும். இவன் வீரபாண்டியன் தலைகொண்ட கோமகாராஜர் (223/1915) என்றும், வீரபாண்டியன் தலை கொண்ட கோவி ராஜமாராயர் (3:186) என்றும் பல இடங்களில் அழைக்கப்பட்டுள்ளான். எழுத்தமைதியும் இக்காலத்தை உறுதி செய்கிறது.

இக்கல்வெட்டில் ''பேறூர்'' என வரும் இடத்தில் உள்ள றுகாரம் ஐயத்திற்கிடனாக உள்ளது. கல்வெட்டைக் காண்பார்க்கு பேரூரா, பேறூரா என ஐயம் தோன்றும். இக்கல்வெட்டில் வரும் ''ற'' கரங்கள் எல்லாம் சற்று மாறுபாடாகவே எழுதப் பட்டுள்ளது. பேறூர் என வரும் பேறூர் (போரூர்), வள்ளிசேர்பாக்கங் கல்வெட்டு களில் பேறூர் நாடு என்றே வந்திருப்பதால் இக்கல்வெட்டில் வரும் பேறூர் நாடும் பேறூர் என்பதேயாகும்.

## கல்வெட்டு:

1 ஸ்வஸ்திஸ்ரீ விஜயமஹாராஜற்கு யாண்டு

2. சூ ஆவது புலியூர்க் கோட்டத்துப் பேரூர்நாட்டுக் கு

3. ளப்பாக்கத்துக் குளப்பாக்கிழான் நாத நேன்

4 இவ்வூர்த் திருவகத்தீ ஸ்வரத்து மஹாதேவற்கு சூ

5 சந்த்ரா காலமும் நிசதம் ஸ்நா ணத்தொரு திருவமிர்துக்

6 கு வைத்த பூமி தூமவேள்ப்பட்டிக்கு மேற்கி

7 ல் காட்டுக்கரைக் கொல்லை இருநூற்றைம்பது கு

8 ழி இதந்ம் ரக்ஷிக்கக் கடவோம் ஊரோமிது பந்மா

9 ஹேஸ்வர ரக்ஷை இத்தந்ம் ரக்ஷிப்பார் பாத

10 தூளி என் தலைமேலன உ

**த.நா.அ. தொல்லியல்துறை** | **தொடர் எண்:** 6/ 2000

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 49 |
| வட்டம்: | திருப்பெரும்புதூர் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1118 |
| ஊர்: | குளப்பாக்கம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | கிரந்தங் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | முதற் குலோத்துங்கன் | **ஊர்க் கல்வெட்டு எண் :** | 6 |

இடம்: திருவகத்தீசுவரர் கோயில் திருச்சுற்று வளாகத்தில் கிடக்கும் பலகைக் கற்களில் ஒன்று.

குறிப்புரை: கல்வெட்டு பொறிந்துள்ளது. முதலாம் குலோத்துங்கனின் நாற்பத் தொன்பதாவது ஆட்சியாண்டில் செயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்துப் பேறூர் நாட்டுக் குளப்பாக்கத்துத் திருவகத்தீசுவரமுடைய மாதேவர்க்கு திருமந்திரப்போனகத்திற்காகச் சோழமண்டலத்து ....... நாராயண வளநாட்டு ஆ...டு நாட்டுக் கிளியூர் உடையான் உமைபங்கன், மேலூர் நாட்டு மணபாக்கத்து ஊரவரிடம் நிலம் விலைக்குப் பெற்று உமைபங்க விளாகம் என்று பெயரிட்டுக் கொடையளித் துள்ள செய்தி கூறப்பட்டுள்ளது. ஆட்சியாண்டு வெட்டப்பட்டுள்ள இடத்தில் தெளிவின்மையால் 41 - எனவும் 49 எனவும் படிக்க வாய்ப்புள்ளது. எனினும் எழுத்துக்கு உரிய இடம் நோக்கி நாற்பத்தொன்பது எனப் படிக்க மிகுதியான வாய்ப்புள்ளது.

**கல்வெட்டு:**

1 ஸ்வஸ்தி [ஸ்ரீ] குலோத்துங்கசோழ
2 தேவற்கு யாண்டு நாற்பத்தொந் [ப
3 தாவது] சயங்கொண்டசோழ மண்ட
4 லத்து [ப் ] புலியூர் கோட்டத்து பேறூர் நா
5 ட்டுக் குளப்பாக்கத்து [ஆளுடையார்] திருவகத்தீ [ஸ்வ]
6 ரம்முடைய மஹாதேவற்கு திரும
7 ந்த்ர போநக அமுது செய்தருளுகைக்
8 இந்நாட்டு மணற்பாக்கத்து ஊரவர் பக்
9. கல் விலைகொண்டு உடைய நில

10 ம் தெ[ன் ] கழநியில் எல்லை [சத் ]

11 தியிற் கொட்டாடிபூமி சிவபாத சே

12 சகரநல்லூர்க்கு கிழக்கும் தென்

13 [பாற்]கெல்லை கலி[ஞ்சி ]யாற்றுக்கு

14 [வடக்கும்] கீழ்பாற்கெல்லை [கலியா ]

15 .......ய் மேற்கும் வடபாற்கெல்லை

16 ...பட்டிகைகு தெற்க்கும் இந்நா[ந் ]

17 [கு ]ல்லைக்கு உட்பட்ட நிலம் கோயில்

18 .....லமாந உமைபங்க விளாகம் கு

19 .....இந்நும் இவ்வூரவர் பக்கல்....

20 ......விட்டேந் சோழமண்டல [த் ]

21 [து ].... நாராயண வளநாட்டு அ

22 .....ட்டு கிளியூர்க் கிளியூர் உடை

23 .....ந உமைபங்க கு.....

24 .....மல்லமுடைய...

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **7/ 2000** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 2 |
| **வட்டம்:** | திருப்பெரும்புதூர் | **வரலாற்று ஆண்டு:** | |
| **ஊர்:** | குளப்பாக்கம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | கி.பி. 961 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | பல்லவர் | | |
| **அரசன்:** | பார்த்திவேந்திரவர்மன் | **ஊர்க் கல்வெட்டு எண் :** | 7 |

**இடம்:** குளப்பாக்கம் திருவகத்தீசுவரர் கோயில் திருச்சுற்றில் கிடக்கும் தனிக்கற்களில் ஒன்று.

**குறிப்புரை:** பாடல் கல்வெட்டு, அரசனது ஆட்சியாண்டு வரை உரைநடையிலும், கல்வெட்டுச் செய்தி பாடல் வடிவிலும் உள்ளன. பார்த்திவேந்திராதிவர்மனுடைய இரண்டாவது ஆட்சியாண்டில், பெருநீர்ப் பெருக்கத்தால் உடைப்புண்டு போன (குளத்தூர்) பெருங்குளத்தின் கரையை என்றென்றும் உடையாதவாறு மலைபோல் பெருங்கரையாக வீரசோழ விருப்பரையன் என்பவன் கட்டினான் என்ற செய்தி கூறப்படுகிறது.

**கல்வெட்டு:**

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பா
2 ர்த்தி வேந்த்ர வருக்கு யாண்டு
3 இரண்டாவது உரையா
4 ர் குளன் முன்பு கண்ட பெ
5 ருங் குள மோங்கொ
6 லி நீர்த் திரையாலு
7 டைப்புண்டடைப்ப
8 ரிதாக திரையை மங்
9 கை விரையாருந்தார் வீ
10 ரசோழ விழுப்பரை
11 யன் மன்னக் கரையா
12 யது வரை போல்க் கண்
13. டான்னிக் கடலிடத்தே

பாடல் வடிவில்

உரையார் குளன்முன்பு கண்டபெருங் குளமோங் கொலிநீர்த்
திரையா லுடைப்புண் டடைப்பரிதா திரையை மங்கை
விரையா ருந்தார்வீர சோழவிழுப் பரையன் மன்னக்
கரையா யதுவரை போல்க்கண் டானிக்கட லிடத்தே.

## த.நா.அ. தொல்லியல்துறை

**தொடர் எண்:** 8/ 2000

**மாவட்டம்:** காஞ்சிபுரம்

**வட்டம்:** திருப்பெரும்புதூர்

**ஊர்:** குளப்பாக்கம்

**மொழி:** தமிழ்

**எழுத்து:** கிரந்தங் கலந்த தமிழ்

**அரசு:** பாண்டியர்

**அரசன்:** முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன்

**ஆட்சி ஆண்டு:** 10

**வரலாற்று ஆண்டு:** கி.பி. 1261

**இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** —

**முன் பதிப்பு:** —

**ஊர்க் கல்வெட்டு எண்:** 8

**இடம்:** திருவகத்தீசுரமுடையார் கோயில் மாமண்டபம் வடசுவர் குமுதப்படை (வடகிழக்கு)

**குறிப்புரை:** முற்றுப்பெறாத கல்வெட்டு. பாண்டிய அரசன் எம்மண்டலமும் கொண்ட சுந்தர பாண்டியனுடைய பத்தாவது ஆட்சிக் கல்வெட்டு. எம்மண்டலமுங் கொண்ட என்ற பட்டங் கொண்ட சுந்தரபாண்டியன் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனே ஆவான். பாண்டியர் கல்வெட்டுக்கு அடையாளமாக முதல் இரண்டு வரிகளுக்கு நேராக மீன் பொறிக்கப்பட்டுள்ளது. இது வழக்கமல்லா வழக்கம். எனினும் யாது காரணத்தாலோ கல்வெட்டு முற்றுப் பெறவில்லை. அதோடு இறுதிவரி சிதைந்துள்ளது.

**கல்வெட்டு:**

1 ஸ்வஸ்திஸ்ரீ எம்ம
2 ண்டலமும் கொண்ட
3 சுந்தரபாண்டிய தேவற்கு
4 யாண்டு யக்கு ....
5 திருவாய் மலர்ந்தருளி.... மத்த நாராய
ணன்.....

**த.நா.அ. தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **9/ 2000**

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 20 |
| **வட்டம்:** | திருப்பெரும்புதூர் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | குளப்பாக்கம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | | |
| **அரசன்:** | இராஜகேசரி | **ஊர்க் கல்வெட்டு எண் :** | 9 |

**இடம்:** குளப்பாக்கம் திருவகத்தீசுவரர் கோயில் திருச்சுற்று வளாகத்தில் கிடக்கும் தனிக்கல்.

**குறிப்புரை:** புலியூர்க் கோட்டத்துப் பேறூர் நாட்டுக் குளப்பாக்கத்திலுள்ள திரு அகத்தீசுவரம் உடைய மஹாதேவர் கோயிலில் நொந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்குக் கலியன் கல்லடி என்பான் தொண்ணூறு ஆடுகள் பரிசாக அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

**கல்வெட்டு:**

1 ஸ்வஸ்திஸ்ரீ கோவிராஜ கேசரி வந்ம ற்க்கு யாண்டு இருவது புலியூர் கோ

2 ட்டத்து பேறூர் நாட்டு குளப்பாக்கத்து திருவகத்தீசுரம் உடைய மஹாதே

3 வர்க்கு கலியன் கல்லடி வைத்த நுந்தா விளக்கொன்று ஒன்றுக்கும் [கு]

4 டுத்த ஆடு சாவாமூவா பேராடு தொண்ணூறு இ [ய]ம்ம ரக்ஷிப்பார் ஊரும் பந்மா

5 ஹேஸ்வர சந்த்ராதித்த வரை ரக்ஷிப்பார்.

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **4/ 1998** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 2 |
| **வட்டம்:** | திருப்பெரும்புதூர் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1180 |
| **ஊர்:** | செரப்பனஞ்சேரி | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: -** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங் கலந்த தமிழ் | **முன் பதிப்பு :** | |
| **அரசு:** | சோழர் | | |
| **அரசன்:** | மூன்றாம் குலோத்துங்கன் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 1 |

**இடம்:** வீமீசுவரர் கோயில் உண்ணாழிகை வடசுவர் ஜகதிப்படை

**குறிப்புரை:** பெருவஞ்சூர் என்ற இராசகேசரி நல்லூரில் உள்ள ஆளுடையார் வீமீசுரமுடைய நாயனார் கோயிலுக்கு இதே ஊரிலுள்ள மன்றடிகளில் ஒருவரான தன்மக்கோன் என்பவர் ஒரு சந்தி விளக்கு எரிக்க முன்னாளில் கொடையளித்த இரண்டு பசுக்களையும் பெற்றுக் கொண்டு விளக்கெரிக்க சம்மதித்தவர்கள், இக்கோயிலில் உள்ள முப்பதுவட்டக் காணிகளில் பத்துநாள் காணியைப் பெற்றிருந்த சிவபிராமணர் பாரத்வாசி உய்யக் கொண்ட பிள்ளையான நாற்பத்தெண்ணாயிர பட்டனும் இவர் மகன் உடையானான பன்மாகேசுரபட்டனும் ஆவர். முன்னரே கொடையளிக்கப்பட்டு பொறுப்பேற்றுக் கொண்ட இவர்கள் பின்னர் கல்லில் வெட்டுவித்தனர். மேலும் இச்சந்தி விளக்கு எரியக் குத்துவிளக்கு பயன்படுத்தப் பட்டதையும் தெரிவித்துள்ளனர்.

செரப்பனஞ்சேரி என்று இன்று அழைக்கப்படும் இவ்வூர் அன்று பெருவஞ்சூர் என்றழைக்கப்பட்டது. மன்னர்கள் ஆட்சியின் போது பெயர் மாற்றங்களைக் கொண்டிருந்தது. மேற்கூறிய கொடையளிக்கப்பட்ட காலத்தில் இவ்வூர் 'பெருவஞ் சூரான இராசகேசரி நல்லூர்' என அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. இக்கல்வெட்டு பொறிக்கப்பட்ட மூன்றாம் குலோத்துங்கன் காலகட்டத்தில் அப்பெயர் மாற்றம் செய்து விட்டதை க.வெ.எண் 2 கூறுகிறது. அதாவது 'பெருவஞ்சூரான ராஜேந்திர சோழநல்லூர்' என்று அழைக்கப்பட்டது என்பது தெரியவருகிறது.

இவ்வூர் செயங்கொண்ட சோழமண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்து வெளிமா நல்லூர் நாட்டில் அமைந்திருந்தது என்றும் இக்கல்வெட்டு தெரிவிக்கின்றது.

## கல்வெட்டு:

1 *ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ* திரிபுவனச் சக்கரவத்திகள் *ஸ்ரீ* வீரராசேந்திர சோழதேவர்க்கு யாண்டு உ வது சயங்கொண்டசோழ மண்டலத்து ஊற்றுக்காட்டு

2 க்கோட்டத்து வெளிமாநல்லூர் நாட்டு பெருவஞ்சூரான இராசகேசரி நல்லூர் ஆளுடையார்வீமீசுரமுடைய நாயனாற்கு இவ்வூரி

3 லிருக்கும் மன்றாடிகளில் தன்மக்கோனும் சந்திராதித்தவரை செல்வதாக வைத்த சந்திவிளக்கு க இவ்விளக்கு ஒன்

4. றுக்கும் இக்கோயில் முப்பதுவட்டத்து பத்துநாள் காணி உடைய பாரத்வாசி உய்யக்கொண்ட பிள்ளையான நாற்பத்தெண்ணாயிர பட்டனும் இவன் மக்களி

5. ல் உடையானான பன்மாகேசுர பட்டனும் இவ்விருவரோம் முன்னாளில் உபயமாகக் கைய்க் கொண்ட பசு உ இப்பசு இரண்டும் உபையமாகக் கைக்கொண்டு

6. குத்தி விளக்கு ஒன்று சந்திராதித்தவரை எரிக்கக் கடவோமாக சிலாலேகை பண்ணிக் குடுத்தோம் உய்யக்கொண்ட பிள்ளையான நாற்பத்தெண்ணாயிர பட்டனு [1]

---

1. கல்வெட்டு இத்துடன் நின்றுவிட்டது.

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண்: 5/ 1998**

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 4 |
| **வட்டம்:** | திருப்பெரும்புதூர் | **வரலாற்று ஆண்டு :** | கி.பி. 1182 |
| **ஊர்:** | செரப்பனஞ்சேரி | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | | |
| **அரசன்:** | மூன்றாம் குலோத்துங்கன் | **ஊர்க் கல்வெட்டு எண் :** | 2 |

**இடம்:** வீமீசுவரர் கோயில் உண்ணாழிகை மேற்கு அதிட்டான ஜகதிப்படை

**குறிப்புரை:** செங்காட்டுக் கோட்டத்துக் கோனாதி நாட்டு உறத்தூரான கலிங்க குலகால நல்லூர் அமண்பாக்கிழான் செந்தாமரைக்கண்ணன் அகமுடையாள் கண்ணனாழ்வார் என்பவர் பெருவஞ்சூரான ராஜேந்திரசோழ நல்லூர் பீமீசுவரர் கோயிலில் சந்தி விளக்கு வைக்க நான்கு பழங்காசுகளை அளித்துள்ளார். வெள்ளந்தாங்கினானான கங்காதர பட்டன் காசினைப் பெற்றுக்கொண்டு விளக்கெரிக்கச் சம்மதித்து சிலாலேகை செய்துள்ள செய்தி கூறப்பட்டுள்ளது.

**கல்வெட்டு:**

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவீரராஜேந்திரசோழ தேவற்கு யாண்டு ச ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து ஊற்

2 றுக்காட்டுக் கோட்டத்து வெளிமா நல்லூர் நாட்டுப் பெருவஞ்சூரான ராஜேந்த்ர சோழநல்லூர் ஆளுடையார் வீ மீஸ்வரமுடைய நாயனாற்குச்

3 செங்காட்டுக் கோட்டத்து கோனாதி நாட்டு உறத்தூரான கலிங்ககுலகால நல்லூர் அமண்பாக்கிழான் செந்தாமரைக்கண்ணன் அகமுடையாள் கண்ணனா

4 ழ்வாரேன் ஸந்த்ராதித்தவரை செல்வதாக வைத்த சந்தி விளக்கு க ம் இக் கோயில் முப்பது வட்டத்தில் ய நாள் காணி உடைய ஹார

5 த்வாஜி வெள்ளந்தாங்கினானான கெங்காதரபட்டன் நால்லொத்த நாள் காணி உடைய திரு வேகம்பமுடையானேன் உஹ யமாக கைகொ

6 ண்ட சந்திவிளக்கு ஒன்றுக்கு கைகொண்ட பழங்காசு நாலு இப்பழங்காசு ச ம் கைக் கொண்டு ஸி லாலேகை பண்ணிக் குடுத்தேன் திருவேகம்ப முடையான்னேன்.

**த.நா.அ. தொல்லியல்துறை** | **தொடர் எண்: 6/ 1998**

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 8 |
| **வட்டம்:** | திருப்பெரும்புதூர் | **வரலாற்று ஆண்டு :** | கி.பி 1186 |
| **ஊர்:** | செரப்பனஞ்சேரி | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை :** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து :** | கிரந்தங் க லந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | | |
| **அரசன்:** | மூன்றாம் குலோத்துங்கன் | **ஊர்க் கல்வெட்டு எண் :** | 3 |

**இடம்:** வீமீசுவரர் கோயில் உண்ணாழிகை மேற்கு அதிட்டான ஜகதிப்படை

**குறிப்புரை:** பெருவஞ்சூரான ராஜேந்திரகேசரி நல்லூர் ஆளுடையார் வீமீசுரமுடையார் கோயிலில் விளக்கு வைக்க படம்பக்க நாயகன் வயிரநாதன் என்பவன் வழங்கிய பழங்காசுகளைப் பெற்றுக் கொண்டு முப்பது வட்டத்து ஐஞ்சு நாள் காணியுடைய திரியம்பகபட்டன் பிள்ளைகள் விளக்கெரிக்க சம்மதித்த செய்தி கூறப்பட்டுள்ளது. வயிரநாதன் என்பது வஇரநாதன் என்று உடம்படு மெய்யின்றி எழுதப்பட்டுள்ளது. கல்வெட்டு சிதைந்துள்ளதால் காசின் எண்ணிக்கை தெரியவில்லை.

**கல்வெட்டு:**

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீவீரராஜேந்திர சோழ தேவற்கு யாண்டு அ வது ஐயங்கொண்ட சோழ மண்டலத்து ஊற்று

2. க் காட்டுக் கோட்டத்து வெளிமா நல்லூர் நாட்டு பெருவஞ்சூரான ரா ஜேந்_ கேசரி நல்லூர் ஆள்வுடையார் வீமீஸ்வ

3. ரமுடைய நாயனாற்கு இவ்வூர் க....கிழவன் படம்பக்க நாயகன் வஇரநாதனேன் சந்திராதித்தவரை செல்வதாக வைத்த சந்

4. தி விளக்கு க இ விளக்கு ஒன்றும் இக்கோயிலில் முப்பது வட்டத்து ஐஞ்சு நாள் காணி உடைய திருவரங்க கோயிலுடையான் தி_யம்பக

5. பட்டன் மகன்.....பட்டனும் இவன் தம்பி தேவகுமார பட்டனும் இவ...... ..... உபயமாகக் கைக்கொண்ட பழங்காசு.......

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **7/ 1998** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 6 |
| **வட்டம்:** | திருப்பெரும்புதூர் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1222 |
| **ஊர்:** | செரப்பனஞ்சேரி | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை :** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | | |
| **அரசன்:** | மூன்றாம் இராஜராஜன் | **ஊர்க் கல்வெட்டு எண் :** | 4 |

**இடம்:** வீமீசுவரர் கோயில் இடைக்கட்டு வடக்கு ஜகதிப்படை

**குறிப்புரை:** பெருவஞ்சூரான இராசேந்திரசோழநல்லூர் ஆளுடையார் வீமிசுவரர் கோயிலில் இரண்டு சந்தி விளக்குகள் எரிப்பதற்கு இவ்வூர் ஊரார் கொடையளித்த ஆறு பழங்காசுகளைப் பெற்றுக் கொண்டு கோயிலில் காணியுடைய சிவபிராமணர்களில் சிலர் விளக்கெரிக்கச் சம்மதித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

இவ்வூர்க்கோயில் காணியுடைய சிவபிராமணரில் (1) முன்னத்தொன்று காணியுடைய சிவபிராமணர்கள் (2) நாலத்தொன்று காணியுடைய சிவபிராமணர்கள் என்ற இரு பிரிவினர் இருந்துள்ளனர் என்பது தெரிகிறது.

**கல்வெட்டு:**

1 *ஸ்வஸ்திஸ்ரீ* *தி*புவனச் சக்கரவத்திகள் *ஸ்ரீராஜராஜ*தேவ[ர்*] க்கு யாண்டு .... வது ஜெயங்கொண்ட சோழமண்டலத்து ஊற்றுக்காட்டுக்கோட்டத்து வெளிமாநல்லூர் நாட்டுப் பெருவஞ்

2 சூரான இராசேந்திரசோழ நல்லூர் ஆளுடையார் வீமீசுரமுடைய நாயனாற்கு இவ்வூர் ஊரவரோம் சந்திராதித்தவரை செல்வதாக வைத்த சந்தி விளக்கு உ இவ்விளக்கு இரண்டும் இக்கோ

3 யில் காணி உடைய சிவபிராமணன் ஹாரத்வாசி........ இக்கோயில் மூன்றத்தொன்று காணி உடைய உமையொடுங் கூட இருந்தான் உய்யக் கொண்டானான நாற்பத்தெண்ணாயிர பட்டனும்

4 ...... இக்கோயில் நாலத்தொன்று காணி உடைய கம்பபட்டன் ஆழ்வான் பட்டனும் இவன் தம்பி உடையானான பன்மாகேசுர பட்டனும் இவன் தமையன் திருச்சிற்றம்பல பட்டன் திட்டபட்ட [னும்]

5. இவன்தம்பி [ வீம ] பட்டனும் இக்குடியில் மூன்றத்தொன்று காணி உடைய வெள்ளந் தாங்கினான் ஶங்காதர பட்டனும் இவ்வனைவோம் உபையமாகக் கைக்கொண்ட பழங்காசு இப்பழங்காசு ஆறும் உபைய

6. மாகக் கைக்கொண்டு இச்சந்திவிளக்கு இரண்டும் சந்திராதித்தவரை எரிக்க கடவோ[ம்] முப்பது வட்டத்து காணி உடைய இவ்வனைவோம். இது பந்ூாஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை | தொடர் எண்: 8/ 1998

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 7 |
| வட்டம்: | திருப்பெரும்புதூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 1223 |
| ஊர்: | செரப்பனஞ்சேரி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | — |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | கிரந்தங் கலந்த தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | மூன்றாம் இராஜராஜன் | ஊர்க் கல்வெட்டு எண் : | 5 |

இடம்: வீமீசுவரர் கோயில் இடைக்கட்டு தெற்கு ஜகதிப்படை

குறிப்புரை: பெருவஞ்சூரிலுள்ள ஆளுடையார் வீமீசுரமுடைய நாயனார் கோயிலில் ஒரு சந்தி விளக்கு எரிப்பதற்கு, பிள்ளையார் நீலகங்கரையர் அகம்படிப் பெண்டுகளில் உமையாழ்வி மகள் சிவலோகமுடையாள் என்பவர் கொடையளித்த நாலு பழங்காசுகளை இக்கோயில் சிவபிராமணக்காணியாகிய முப்பது வட்டத்தில் பத்துநாள் காணி உடைய பாரத்துவாஸி கம்பபட்டன் மகன்களில் ஒருவரான உடையானான பன்மாகேஸ்வரபட்டன் என்பவர் பெற்றுக்கொண்டு விளக்கெரிக்க சம்மதித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு

1 *ஸ்வஸ்திஸ்ரீ* திரிபுவனச் சக்கரவத்திகள் *ஸ்ரீ இராஜராஜ*தேவர்க்கு யாண்டு ஏழாவது ஜெயங்கொண்டசோழமண்டலத்து ஊ

2. ற்றுக்காட்டுக் கோட்டத்து வெளிமாநல்லூர் நாட்டுப் பெருவஞ்சூர் ஆளு டையார் வீமீசுரமுடைய நாயனாற்குப் பிள்ளையார் நீலகங்கரையர் அகம்ப டிப் பெண்டுகளில் செ ......... சே

3. சரியில் இருக்கும் உடையாழ்வி மகள் சிவலோகமுடையாள் சந்திராதித்த வரை செல்வதாக வைத்த சந்திவிளக்கு *க* இவ்விளக்கு ஒன்றும் இக்கோ யில் சிவபிராமணக் காணி முப்பது வட்டத்துப் பத்துநாள் காணி உடை

4. ய ஹாரத்வாஸி கம்பபட்டன் மக்களில் உடையானான பன்*மாஹேஸ்வ*ர பட் டனேன் உபையமாக கைக்கொண்ட பழங்காசு *ச* இப்பழங்காசு நாலும் உபையமாகக் கைக்கொண்டுச் சந்தி விள

5. க்கு ஒன்றும் சந்திராதித்தவரை எரிக்க கடவேனாக உபயமாக கைக்கொண் டேன் முப்பது வட்டத்துப் பத்துநாள் மூன்றத்தொன்று காணி உடைய பன்மா*ஹேஸ்வ*ர பட்டனேன்

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண்: 9/ 1998**

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 11 |
| **வட்டம்:** | திருப்பெரும்புதூர் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1227 |
| **ஊர்:** | செரப்பனஞ்சேரி | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங்கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு :** | சோழர் | | |
| **அரசன்:** | மூன்றாம் இராஜராஜன் | **ஊர்க் கல்வெட்டு எண் :** | 6 |

**இடம்:** வீமீசுரமுடையார் கோயில் கருவறை தெற்கு ஜகதிப்படை

**குறிப்புரை:** பெருவஞ்சூர் ஆளுடையார் வீமீசுரமுடைய நாயனார் கோயிலில் சந்தி விளக்கு ஒன்று எரிப்பதற்கு இவ்வூர்ப்பிடாகை (hamlet) கூழாங்கற்சேரி விற்பற்றுடைய வளவதரையப் பேரரையன் என்பவர் கொடையளித்துள்ள மூன்று பழங்காசுகளைப் பெற்றுக் கொண்ட இக்கோயில் காணியுடைய சிவபிராமணர் சிலர் விளக்கெரிக்க சம்மதித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

**கல்வெட்டு:**

1 *ஸ்வஸ்திஸ்ரீ* திரிபுவனச் சக்கரவத்திகள் *ஸ்ரீ*ராஜராஜ தேவர்க்கு யாண்டு *யக* வது ஜெயங்கொண்டசோழ மண்டலத்து

2 ஊற்றுக்காட்டுக் கோட்டத்து வெளிமாநல்லூர் நாட்டுப் பெருவஞ்சூர் ஆளுடையார் வீமீசுரமுடைய நாயனாற்கு இவ்வூர் வட

3 பிடாகை கூழாங்கற்சேரி விற்பற்றுடைய வளவதரையப் பேரரையன்... ககப் பேரரையன் சந்திராதித்தவரை செல்வதாக

4 வைத்த சந்தி விளக்கு *க* இவ்விளக்கு ஒன்றுக்கு இக்கோயில் மூன்றத்தொரு காணி உடைய சிவபிராமணன் ஹாரத்வாஸி உமையொடுங் கூ

5 ட இருந்தான் பட்டன் உய்யக்கொண்டான் பட்டனான நாற்பத்தெண்ணாயிர பட்டன் உடையபிள்ளை கைக்கொண்ட பழங்காசு *ங* இப்ப

6 ழங்காசு மூன்றுங் கைக்கொண்டு இ சந்தி விளக்கு ஒன்றும் சந்திராதித்த வரை எரிக்கக் கடவேனாக கைக்

7 கொண்டேன்........

த.நா.அ. தொல்லியல்துறை — தொடர் எண்: 10/1998

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 25 |
| வட்டம்: | திருப்பெரும்புதூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 1275 |
| ஊர்: | செரப்பனஞ்சேரி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | — |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | கிரந்தங் கலந்த தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | தெலுங்கு சோழர் | | |
| அரசன்: | விசைய கண்ட கோபாலன் | ஊர்க் கல்வெட்டு எண்: | 7 |

இடம்: வீமீசுவரமுடையார் கோயில் தெற்கு ஜகதிப்படை

குறிப்புரை: பெருவஞ்சூரான இராஜகேசரி நல்லூர் ஆளுடையார் வீமீசுரமுடைய நாயனாற்கு இவ்வூர் ஆலத்தூருடையான் ஆண்ட கூத்தன் வண்டுவரைப் பெருமாள் என்பவர் சந்தி விளக்கு ஒன்று எரிப்பதற்கு அளித்த ஒரு கண்ட கோபாலன் பழம்புள்ளி மாடை என்ற காசினை இக்கோயிலில் முப்பது வட்டத்து மூன்றேகால் காணியுடைய சிவப்பிராமணர் பாரத்துவாசி ஆழ்வான் பட்டன் மகன் வீமபட்டன் என்பவர் பெற்றுக்கொண்டு விளக்கெரிக்கச் சம்மதித்துக் கல்வெட்டிக் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு:

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ விசையகண்டகோபால தேவற்கு யாண்டு உயரு வது ஜெயங்கொண்டசோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்து வெளிமான

2 ல்லூர் நாட்டு பெருவஞ்சூரான இராசகேசரி நல்லூர் ஆளுடையார் வீமீசுர முடைய நாயனாற்கு இவ்வூர் ஆலத்தூருடையான் ஆண்டகூத்தன் வண்டுவரைப் பெருமாளேன் சந்திராதித்த

3 வரை செல்வதாக வைத்த சந்திவிளக்கு க இவ்விளக்கு ஒன்றும் இக்கோயில் முப்பது வட்டத்து மூன்றேகால் நாள் காணி உடைய சிவப்பிராமணன் பாரத்வாசி ஆழ்வான் பட்டன்

4 மகன் [வீம] பட்டனேன் இவ்ஆலத்தூருடையான் வண்டுவரைப் பெருமாள் பக்கல் உபயைமாகக் கைக்கொண்ட கண்டகோபாலன் பழம்புள்ளி மாடை க இம்மாடை ஒன்

5. றும் கைக்கொண்டு சிலாலேகை பண்ணிக் குடுத்தேன் ஆழ்வான் பட்டன் மகன் வீமபட்டனேன் பன்மாசுர *ரக்ஷை*

**த.நா.அ. தொல்லியல்துறை** | **தொடர் எண்: 1/2004**

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | — |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12 ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | சிவன்கூடல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | 286/1912 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | விக்கிரமசோழன் | ஊர்க் கல்வெட்டு எண் : | 1 |

**இடம்:** சிவக்கொழுந்துடையார் கோயில் அர்த்த மண்டப வடபுற எழுதகப்படை.

**குறிப்புரை:** விக்கிரமசோழன் கல்வெட்டு. மிகவும் சிதைந்துள்ளது. இதில் சிவக் கொழுந்துடையார் கோயிலில் ஆனி உத்திரட்டாதியில் திருவிழா நடத்துவதற்காக நிலம் விற்ற செய்தி கூறப்பட்டுள்ளது. நிலத்தின் எல்லைகளும் நிலத்தினை விற்கும் பிராமணக் குடிகளின் பெயர்களும் சொல்லப்பட்டுள்ளன.

## கல்வெட்டு:

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச் சக்ரவத்திகள் ஸ்ரீ [விற்கிறம சோழ தேவற்கு] .... ஸ்ஹஷேயம் . . .

2 மலை குநிய நின்றாந் பட்டநேநும் இக்குடி அருளாள பட்டநேநும் இக்குடி திருவரங்க பட்டநேநும் கானூர் இராம பிராந் பட்டநேநும் அக்கி திருவரங்க பட்டநேநும் இக்குடி நாராயண. . . . .

3 நேநும் இக்குடிக்கேசவபட்டநேனும் இக்குடி இகை நாராயணபட்டநேனும் காராம்பிச்செட்டு அருளாளபட்டநேனும் இவ்வனைவோம் பூமிவிலை யாவணக் கையெழுத்து . . . . . .

4 ஞார்த் தென்கழநியில் காட்டுப் பாடகத்தில் எல்லைக்காலுக்கு வடக்கு கீழ்பாற்க்கெல்லை ம...நம் மூலைக்காலுக்கு மேற்க்கும் தென்பாற்க்கெல்லை வடகரை அகப்பட்ட நீர்போகிக். . . . .

5 வடக்கும் மேற்பாற்கெல்லை முகட்டு காலுக்கு கிழக்கும் கா...கண்நோ[க்] கின தடி இரண்டுக்கும் வடவரம்புக்குத் தெற்கும் இன்னான்கெல்லைக்கு உட்பட்ட தடிபலவிநால் பதி. . . .

6 இந் . . . . கோலா . . விற்றுத்தர . . . . . லக் கொண்ட கீழ் . . . . .

7 கூறிநேன் ஊற்றுக் காட்டுக் கோட்டத்து நீர்வேளூர் நாட்டு சிவ[ன்கூ]டல் பள்ளி கொங்கதரை

8 [ டையா]ரர் சிவக்கொழுந்தாண்டார்க்கு திருவாநி உத்திரட்டாதி திருநாள் எழுந்த[ ரு ]*ளுகைக்கு

9 . . . . . . . டநும் இக் . . . . .

10 ம் எங்[கள்] இராம பிராந்பட்டனும் ஐயக்கி திருவரங்கபட்டனும் . . . . .

11 நேனும் இக்குடி விசையநாராய காராம்பிச்செட்டு . . . . .

12 திரைய கலியந் சேரியாந சிவக் கொழுந்து கண்ணபனுக்கு நாங்கள் . . . .

13 கைக்கு அமுது படிக்கும் நாங்கள் ஆதி . . . . .

14 தி விலைப்பொருள் முற்றும் ஆவணக் களிகை கிழிகை . . . . .

15 . . . . . . முக்காலாவது விலையறவிற்று பொருளற . . . . .

16 செ[ய்து] குடுத்தோம் இந்னிலஞ் சுட்டி வந்த அந்தரா . . . . .

17 யில். . . . . வாசலால் போந்தநவும் என்று சொல்லப் பெ . . . .

18 கச் . . . . . [ ஸ்ரீ காய ௶ ] மஞ்சி செயாதாகளாகவும்

19 *அந்திரமு . . . . ஊஹாஷேவர் சிவக்கொழுந்தாண்டார்

20 ஆதிஶாஸந் ஸஷோஸ்ஷரஷேவர் ஸ்ரீ ஹஸ்த

21 து உஶகம் பண்ணிக்குடுத்த நிலமாவ

22 து கீழ்பாற்கெல்லை நடைவாய் செறு

23 மேலைக்கால் வரம்புக்கு மேற்கு மேற்குந் தெந்பாற்

24 . . . . . . இ ஷேவர் தெ . . . நம் சொட்டையப்பந் வடவ . . . . . . . . . . . . . . . .

25 . . . . . . கொள்விருளரோ வென்று முற்கூற இம்மொழி கேட்டு

26 கலியஞ் சேரியாந சிவக்கொழுந்துக் கண்ணப்பநேந் யாநிறோ ஆ . . . .

27 படிக்கும் குறைவறுப்புக்கும் இறையிலியாக விற்றுத் தரக் கொள்

28 . . . . . . நேநும் இக்குடி திருவரங்கபட்ட

29 இக்குடி நாராயணபட்டநேநும் இக்குடி கொ . . . .

30 அருளாள பட்டநேநும் பிறக்கூறிய் கொள் . . . . .

31 திருவாநி உத்திரட்டாதி திருநாள் எழு . . . . .

32 ஸ்ர ஷெவர்க்கு எம்மில்லிசை . . . . .

33 செலக் கொண்டு ஓருகாலாவது

| த.நா.அ. தொல்லியல்துறை | | தொடர் எண்: | 2/2004 |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 5 |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1075 |
| ஊர்: | சிவன்கூடல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை : | — |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன்பதிப்பு: | — |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | முதற்குலோத்துங்கன் | ஊர்க்கல்வெட்டு எண் : | 2 |

இடம்: சிவக்கொழுந்துடையார் கோயில் வடக்குச் சுவர்.

குறிப்புரை: கல்வெட்டு தொடர்ச்சியாக இல்லாமல் கற்கள் மாறி மாறி உள்ளன. முதற் குலோத்துங்கனுடைய மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இக்கல்வெட்டு நிலவிலை ஆவணம் பற்றிக் குறிப்பிடுகிறது. நிலத்திற்கு எல்லையும் அளவும் கொடுக்கப் பட்டுள்ளது.

## கல்வெட்டு:

1 . . . . . . . . ல்லை திரநொடிற்றலைது

2 ங் கூறிய விரமுங்கிடப் ப[ ற்] றிய மலைகளு . . . .

3 றுடைந் தோட விழுந்த கடல்களுந் தலைவிரி . . . .

4 ம்பன் நாளிட்ட பல . . து . . .

5 . . . . . செல்வியும் வாளரவிட்ட மடந்தய் . . . .

6 . . . .ந் திருப்புயத் தலங்கலும் . . . .

7 . . . . மறுவர் வணங்க வீற்றிந்த . . . .

8 . . . . .ஶ்ரீ குலோத்துங்க சோழ தேவற்குயா . . . .

9 . . . . சோழ மண்டலத்து ஊற்றுக் காட்டுக் கோட்டத்து . . .

10 ஹையோம் நிலவிலையாவணக் கைய் எழுத்து இவ . . .

11 ஆதிஶாஸந் பக்கல் விலை

### துண்டு - II

1 . . . . க் கெல்லை ஆழியார்ஶெவ

2 தாநத்து மேல் வரம்புக்கு மேற்க்கும் தெற்பாற்

3 கெ(க)ல்லை தண்டேசுரதேவ வரம்புக்கு வடக்

க்கும் மேல்பாற்கெல்லை . . . . கரைக்கு கிழக்கு
ம் வடபாற்க்கெல்லை பழந்தேவதாநம் குட்டை
ச் செறுவுக்குத் தெக்கும் இந்னாந்கெல்லை உள்
கைப்பட்ட நிலம் . . . . . . பதிநறு சாண்கோ
ல் குழி நூற்று . . . . . பல நாராயண . . . . . தோ
. . . . . குண்டில்
. . . . . . வரம்புக்கு வட . . . . . வளாகத்துக்கு
க்கும் மேற்பாற்கெல்லை மேற்படி புலத்தில் கீழ் வரம்புக்குகி[ழ]
க்கும் வடபாற் கெல்லை தென்குண்டிலுக்குத் தெற்க்கும் இந்ன[ா]
ந்கெல்லைக்குட்பட்ட தடி ஞல்க் குழி எழுபதும் ஆக குழி நானுறு
ம் . . . . . (பதிநறு) சாண்கோலால் இந்த விளக்கு சந்திராதித்தவற் செலு
த்த கடவோமாகவும் இந்நிலம் . . . . வந்த இறைகளு[ம்* ]எப்பே[ர்]
பட்டனவும் இவூரில் முந்பு நின்ற இறை உருவான . . . லத்து
. . . . . இது முட்டாமே செலுத்தகடவோம் இந்நில . . .
. . . . . . . . . . . . .

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ. தொல்லியல்துறை** | | **தொடர் எண்:** | **3/2004** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | சகம் 1420<br>கி.பி.1498 |
| **ஊர்:** | சிவன்கூடல் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | | |
| **அரசன்:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 3 |

**இடம் :** சிவக்கொழுந்துடையார் கோயில் அர்த்த மண்டப வடசுவர் துர்க்கை சிற்பம் அருகில்

**குறிப்புரை:** தேவகோஷ்டத்தில் உள்ள துர்க்கை தெய்வத்தின் வழிபாட்டுச் செலவிற்காக சிவன்கூடல் கணக்கர் நாளப்பிள்ளை 100 குழி நிலம் கொடுத்த செய்தி சொல்லப்படுகிறது.

**கல்வெட்டு:**

1 சாலி வாகன சகாஸ்த ம் சதசஎஉய

2 மேல் செல்லாநின்ற இல சித்திரை உ

3 யஉ சிவகூடல் கணக்கு நாளப்பிள்

4. ளை குமாரன் மூற்தியப்பன் தேவ

5 தாந சாசனம் பன்னி குடுத்த [படி துறக்]

6 கி மகாதேவிதாயாரவர்களுக்குப்பூசை நவே

7 த்தியத்துக்கு ஆக எங்கள் மானியமானதுக் கடுவ

8 டியில் முள்ளங்காலுக்கு கிழக்கு பதினறு சாண்கோ

9 லால் குழி உள க்கு எந் பங்கான பாதிக்கு குழி ள போ

10 க நின்றபாதியில் என் சொந்த பங்கு காலுக்கு உ

11 ண்டான குழி ருய என் உள் பங்காளி பிள்ளை

12 நாயக பிள்ளை கையில் னான்கிறயம் கொண்ட

13 பங்குகாலுக்கு உண்டான குழி ருய ஆக என் சொந்த

14 ம் பாதி குழி ஊ ம் துற்க்கி மாதேவிதாயார் அவர்களுக்

15 கு சந்திராதித்தவரைக்கும் தேவதான சாசனம் பன்னி கு

16 டுத்தேன் யிந்த தந்மத்துக்கு யாதொருத்தர் விகாதம்

17 பண்ணினாலும் கெங்கை யிடை செய்தார் செய்

18 த பாவ[த்*]திலே போ[வதாக]யிக்க . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 5 |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு: | கி.பி 1075 |
| ஊர்: | சிவன்கூடல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 284/1912 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | முதற் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் : | 4 |

**இடம்:** சிவக் கொழுந்துடையார் கோயில் கருவறை வடசுவர்

**குறிப்புரை:** கற்கள் தொடர்ச்சியில்லாமலும் மாற்றிவைத்தும் கட்டப்பட்டுள்ளன. சிவன்கூடல் மகா சபையார் 16 சாண் கோல் அளவுடைய 300 குழி நிலத்தை பெருவிலையாக விற்றுக்கொடுத்தமை சொல்லப்படுகிறது. நிலத்திற்குரிய வரிகள் சபையாரே செலுத்த ஒப்புக் கொண்டமையும் குறிக்கப்படுகிறது.

**கல்வெட்டு:**

1 புகழ் சூழ்ந்த பு[ ணரியகழ்]
2 சூழ்ந்த புவியுள் பொந்னேமி [யளவும் தன்னேமி ]
3 நடப்ப விளங்க சய மகளை இளங்கோப்பரு [வத்துச் ச]
4 க்கரகோட்டத்து விக்கிரமத் தொழிலால் புது [மணம]
5 ர்ந்து மதவரையீட்டம் வயிராகரத்து வாரிஅயி [ர்முனை]
6 க்குந்தள வரசர் தந்தள மிரிய வாளுரைய்கழி [த்துதே]
7 ாள் வலிகாட்டிப் போர்ப்பரி நடாத்திக் கீர்த்தி [யை நி]
8 [றுத்தி ] வடதிசை வாகைசூடித் தென்திசைத் தேமருகமலப்
9 பூமகள் பொதுமையும் பொன்நியாடைநன் நிலப்பாவை தநிமை
10 யுந் தீர வந்து புநிதத் திருமணி மகுட முறைமையிற் சூடி தந்நடி யிரண்டு[ந்த]
11 டமுடியாகத் தொந்நில வேந்தர் . . . . *
12 றும்பச் செங் கோல் திசை. . . . .
13 மதி வெண்ணிலாத் திகழ் ஒ . . . .
14 பாலர் திறையிடுந்தந் தகடா. . . .
15 த் திடத்தந் பொந்நகர்ப் புறத்தி . . . .

---

* கல் மாற்றி வைத்துக் கட்டப்பட்டுள்ளது.

16 மும் விளங்கப்பார்மிசை......

17 டயார் ஸ்ரீ குலோத்துங்க சோ....

18 லத்து ஊற்றுக் காட்டுக் ....

19 [ம] நர்கோ*ஶப*மிந்றி இ நிலஞ்சுட்டி வந்த குடிமை....

20 கள் எப்பேர்பட்டநவும் நாங்களே இறுத்து...

21 சந்திராதித்தவற் செலுத்தக்கடவோமாக.....

22 படி விற்றுக் குடுத்தோம் சிவன் .....

23 கூடல் மஹா ஸஹை யோம் இப்படி இ

24 ட்டநிலம் பதிநறுசாண் கோலால் குழிமுந்நூற்றறுபது மிகுதிக் குறைவு உள்ள

25 டங்க விற்று இந்நிலத்தால் வந்த விலை*த்ரவ்ய*மும் இறை*த்ரவ்ய*மும் அந*ந்ய*மாநர் கோ*ஶப*மிந்

26 றிப் பெறுவிலைக் காணங் கிழி கைச் செலப்பொருளறக் கொண்டு இறை இழிச்சி இ

27 ந் நிலத்தால் வஜ இறைய் எப்பேர்பட்டதும் நாங்களே இறுக்க கட வோமாக விற்றுக்கு

28 டுத்தோம் *ஊஹாஸஸை*யோம் இப்படி இவர்கள் பணியால் எழுதிநேந் இவ்வூர்

29 *உயஸ்த*ந் சிவகூடலுடையாந் அய்யாற்றுப் பள்ளி கொண்டாநேந் இவை எந் எழுத்து

30 இந்நாளால் இ[ஷேவற்கு] யாண்டு அஞ்சாவது மனைவிற் கோட்டத்துக் கந்நூர் நாட்டுக் கரந்து . . . .

31 .......சிவகூடல்......கோயிலுள்ளால் . . . . .

32 பண்ணி திருவமுதுக்கு குடுத்த நிலமாவது எங்களூர் பேரேரி கீழ் பள்ளி தாம *ஸ்ரீ*

33 தேவி வாய் கால் வழி மேற்கு நோக்கி எல்லையா சறுதியாக [போ] ஜ ஆதித்த பெருஞ்செறுவுக்கு

34 . . . . . . டத்திந் மேல்வரம்புக்கு மேற்கு

**ஆ (தனியாகச் சேர்க்கப்பட்ட கல்)**

1 லத்து ஊற்றுக்காட்டு கோட்ட

2 ந - *ஸ்ரீ* சிவகூடல் *ஸபை*யோமும்

3 வெள்ளாளரோமும் எங்களூர் ஷேவர் சிவ

4 கூடல் [ஆளுடையார்]க்கு ஒரு நந்தா விளக்குக்கு

5 ச் செல கொண்டு விற்றுக்குடுத்த

6 வது தெற்க்கில் பெரியேரி கிழக்கும். . . .

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ. தொல்லியல்துறை** | | **தொடர் எண்:** | **5/2004** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 17 ஆவது |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 12 ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | சிவன்கூடல் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 5 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** சிவக்கொழுந்துடையார் கோயில் கருவறை வடசுவர்

**குறிப்புரை:** தேய்ந்த ஆழமில்லாத எழுத்துகளில் உள்ளது. சிவன்கூடல் மகாசவையார் மற்றும் வெள்ளாளர் ஆனி மாதம் உத்திரட்டாதி நட்சத்திரத்தை மையமாகக் கொண்ட 7 நாள் விழா நிகழக் கோயிலுக்கு ஆதி சண்டேசுவரர் பேரில் நிலம் விற்றுக் கொடுத்தமை சொல்லப்படுகிறது.

## கல்வெட்டு:

**அ**

1 ஷ்வஷ்திஸ்ரீ த்ரிஹீவந சக்ர . . . . . .
2 ஷேவற்க்கு யாண்டு பதி[னே]ழாவது ஜயங்கொண்ட
3 சோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்து . . . . .
4 ட்டுச் சிவந்கூடல் உஹாஸஸையோமும் இவ்வூர் [ வெள்
5 ளாள ] ரோமும் எங்களூர் உஹாஷேவர் கொழுந்து கொழுத்தாண்டா
6 ர்க்கு திருவாநி உத்திரட்டாதி பெரு[மாள்] திருநக்ஷ[த்தி]
7 ரம் ஏழு நாளும் எழுந்தருளி ஸ்ரீ வ ஸாதிதருளு [வதற்]
8 கு நாங்கள் ஆதிதாஸந் ஸண்ஜேஸ்வர ஷேவர் பக்கல்
9 [விலை]கொண்டு விற்றுக்குடுத்த நிலமா[வது] எங்களூர் கம்[ப] நாராய
10 ணப் புத்தேரி கீழ் பள்ளத்தும் மீன்கால் வழி நீர் பாயு நிலத்துக்கு கீழ்
11 பாற் கெல்லை விளாத்துக்காலுக்கு மேற்கும் தெந்பாற்கெல்லை திருவேங்
12 கடத் ...க்கு வடக்கும் மேல்பாற்க்கெல்லை தெற்கு நோக்கிப் போ
13 .....க்கு கிழக்கும் வடபாற்கெல்லை கிழக்கு பட்டேறிப்போந வழிக்கு கி . . . .

(முற்றுப் பெறவில்லை)

## ஆ

1 ழிக்குத் தெற்கும் இன்னான்கெல்லைக்குள் நடுவுபட்ட நிலம் இடைமண்டைச் செ

2 று தடி ஒந்றிறால் குழி ஐநூறும் இதந் கீழைப் பிள்ளையாண்டிதடி ஒந்றிநாற்

3 க் குழி உளஉயது இதன் வடக்கில் எருகம் போகிதடி ஒந்றிநாற்க் குழி ளஅயது ஆக குழி அளருயது

4 மிகுதி குறைவு உள்ளடங்க . . . . விற்றுக் குடுத்த பரிசாவது ஏரிக்கா

5 டி அஜராயம் எச்சோறு கூற்றிலக்கை . . . . . . சொல்ல

## இ

1 ல்லப்பெறா தோமாகவும் இந்நிலத்தால் . . . .

2 னில நே போக்கறுக கடவ நாகவும் கல்லிலுஞ் செம்பிலு . . . .

3 ளப் பெறுவதாகவும் இந்த திருநாளைக்கு திருக்காவணமும்மெடுத். . . .

4 டிக்சு ஸ்ரீ பாத தாங்கி சேவிக் [க*]கடவோமாகவும் இந்நிலத்துக்கு.....

5 னைத்தார் திருவாணை மறுத்தார்பட்ட ஷெண்ட படக்கடவராகவும் இதுக்கு

6 அழிவு நினைத்தார் கெங்கைஇடை குமரி இடைச் செய்தார் செய்த பா

7 வத்தைப் படுவார் அந்றாடு கோவுக்குச் சொல்லி இத் . . . . . கழைஞ்சு

8 பொன் மன்றப் பெறுவதாகவும் இப்படிக்கு சம்மதித்து

9 விற்றுக்குடுத்தோம் இவ்வூர் ஊஹாஸஹையோமும் வெள்

10 ளாளரோமும் இவர்கள் பணிக்கபணியால் எழுதிநே[ந்*] உயாவஷு

11 வேளாந் திருவிண்ணகர் நின்றாநேந் இவை எந்நெழுத்து இத்தன்

12 மஞ் செய்தாற் கலிகம்ப சேரி பள்ளி கொங்கரையந் சிவக்கொழு

13 ஜுக் கண்ணப்பன்

த.நா.அ. தொல்லியல்துறை | தொடர் எண்: 7/2004

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 1077 |
| ஊர்: | சிவன்கூடல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | — |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 6 |
| அரசன்: | முதற்குலோத்துங்கன் | | |

இடம்: சிவக்கொழுத்துடையார் கோயில் கருவறை வடசுவர்

குறிப்புரை: மெய்க்கீர்த்திப் பகுதி மட்டும் உள்ளது. அதுவும் முற்றுப் பெறாமல் உள்ளது. ஊற்றுக்காட்டுக் கோட்டத்து நீர்வேலூர் நாட்டு சிவன் கூடல் சிவக்கொழுந் தாண்டார் கோயிலில் திருப்பதியம் பாடுவதற்கு அவவூர் சபையார் நிலக்கொடை யளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு:

1 ஸ்வஸ்திஸ்ரீ புகழ்சூழ்ந புணரிஅகழ் சூழ்ந புவியிற் பொன்நேமியள

2 ஜளநேமி நடப்ப விளகு சயமகளை இளங்கோப் பருவத்து விக்கிரம

3 தொழிலால் புதுமணம் புணர்ந்து மதுவரையீட்டம் வயிராகரத்து வாரிஆ

4 யில் முளை கோதள மிரிய வாளுறை கழித்துத் தொழ வலிகாட்டி பொற்பரிசூட

5 த்திக்கீத்தியை நிறுத்தி வட[தி]சை வாகை சூடி தெந்றிசைத் தேமருகடல் பூ மகள் புணர

6 பொன்னியாடை நன்னில பாவை தள தநிமை யுந்திரவாது புளித்த திருமணி மகுடம்*

ஆ

1 றைமையிற் சூடித் தந்நடி யிரண்டுஜட முடியாகத் தொந்றல் வேஜர் சூட முன்னை மநு

2 வாறு பெருக கலியாறு வறுப்பச் செங்கோல் திசைதொறுஞ்செல்ல வெண்குடை இ

3 ரு நில விளாகமெங்கனுஜனது இருநில வெண்ணிலாத் திகழ தநி மேரு விற்ப் புலிவி

---

* முற்றுப் பெறவில்லை

4 ளையாட வார்கடற்றீவாஜரத்து பூபாலர் திறை விடுதஜக செஞ்சொரி களுறு முறை நிற்ப வில

5 ங்கிய தென்னவனரு பருஜலை பருஜலை தூதிடத் தன் பொன்னகர்ப் புறத்திடைக்கிடப்ப இன்னாள்

6 புவிற்குலப் பிறைபோல் முற் பிறையென்னுஞ் சொல் லெதிர் கொடிற்றல்லதுதன்

7 டக வில்லெதிர் கொடா விக்கல் நங்கி ...கடஜு மணலூர் நடுவே துங்கபத்திரை அளவு

8 மேங்கணும்டத்தமர் மாநமுங் க . . . . . .

9 . . . . மெஜ நதிகள் . . . . ஜாட விழுதுக . . . . . .

10 ஜக . . . சதொறமும் பன்னாளிட்ட பலமும் பயதெதிர் மாறிய சயம் பெருஜிருவும் பழ . . . . துகு

11 த்த புகழிளஞ்செல்வியும் வாளரவிட்டம் உதையரிட்ட மு மீளாது குடுத்த வெங்கரி நிரைகளும்

12 கங்க மண்டலமும் சி[றுக] ணவென்னும் பாணி யிரண்டும் ஒரு விசைப் பொறாது கொண் மாவழு . . . .

13 ருப்புயத் தலங்கலும் பேர் வீரமு தியாகமும் விளங்கப் பார்மிசை மேவலர் வணங்க வீற்றிருஜ

14 ருளிய கோவிராஜகேஸரி வஜரான உடையார் ஸ்ரீகுலோத்துங்க சோழ ஷேவற்கு யாண்டு ஏ[ழா]

15 வது ஊற்றுக்காட்டுக் கோட்டத்து நீர்வேளூர் நாட்டுச் சிவகூடல் ஸஹையோம் எங்களூர்

16 மஹாஷேவர் சிவக்கொழுஜண்டார்க்குத் திருப்பதியம் பாடவைத்த ஹீமி ஆவது முன்பு [இ]

17 ஷேவர் தேவதாநம் நிவஜஞ் செல்லாதே கிடஜ கமல நாராயணப் புத்தேரி

18 . . . . . . . .

19 . . . . தூம்பின் விழிநீர் பாயும் உ . . . . . . .

20 ரேறிக் கீழ் சிறு தூர பின் கால்

21 ..டி நாலிநால்க் குழி அள[ உய]ம்

22 ..ண்ப்பஞ்செய் ஒருவற்க்கு நிமஜம்

23 ...வற்கத்தாக்கும் காணி

24 ... ஸஹயோம் பணியால் எழுதி

25 ....வைஎந் எழுத்து உ

**த.நா.அ. தொல்லியல்துறை** | **தொடர் எண்:** 9/2004

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 10 ஆவது |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி 1128 |
| **ஊர்:** | சிவன்கூடல் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 283/1912 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 7 |
| **அரசன்:** | விக்கிரமசோழன் | | |

**இடம்:** சிவக்கொழுந்துடையார் கோயில் கருவறை மேற்புறச் சுவர்

**குறிப்புரை:** சிவன் கூடல் மகாசபையார் மற்றும் வெள்ளாளர்கள் சிவக்கொழுந் தாண்டார் கோயிலில் இரு விளக்குகள் எரிப்பதற்காக 400 குழி நிலம் கொடுத்தமை சொல்லப்படுகிறது. இந்நிலம் கோயிலிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டு அதற்கு உரிய வரிகள் செலுத்துவதாகவும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

**கல்வெட்டு:**

1 ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவன சக்கரவத்தி ஸ்ரீ விக்ரம சோழ
2 தேவற்கு யாண்டு பத்தாவது ஜயங்கொண்ட சோழ
3 [மண்ட] லத்து ஊற்றுக் காட்டுக் கோட்டத்து . . . . .
4 [சி]வந் கூடல் மஹாஸபையோமும் இவ்வூர் வெள் . . . .
5 எங்களூர் மஹாதேவர் சிவக்கொழுஞண்டாற்க்கு ஆதி தா . . . .
6 பக்கல் விலை கொண்டு வி . . . . .
7 டுத்தநிலம் கமலநாராயண புத்தேரி பண்டார
8 . . . . . . . நீர் பாயும் ஊர்க் காலால் நீர் பாயும்
9 . . . . . . . கீழ்பாற்கெல்லை விளாகத்துக் காலுக் . . . . . .
10 தென்பாற்க்கெல்லை இள்ளை . . . . கண்டி . . . . மண்டை
11 . . . . . வடக்கு மேல் பாற்க் கெல்லை தெற்கு நோக்கிப்
12 போந காலுக்கு கிழக்கும் வடபாற் கெல்லை கிழக்கு நோக்கிப் போந
13 வதிக்குத் தெற்கும் இந்நான்கெல்லைக்குள் நடுபட்ட நிலம்மாவது

14 காரைக்கால் குழி எஅயதும் இதன் கீழை எருகம்போதி தடி ஒன்
15 றினாற்க் குழி உளஉய பதும் ஆக குழி னானூறும் திரு . . . . . விளக்கு இரண்டு
16 எரிப்ப . . . . . இந்நிலம் சுட்டி வஞ அஞராயமும் எச்சோறு கூற்றிலக்கை
17 . . . . . . இறுத்தும் இத் தந்மம் வழுவாமற் செலுத்தக்கட வோ மாநோம் சிவந்
18 கூடல் ஊறாலஸைையோமும் இவ்வூர் வெள்ளாளரோமும் இத்தந்மத்துக்கு
19 விரோதம் பண்ணுவார் கெங்கை இடைக்குமரி இடைச் செய்தார் செய்
20 த பாவத்தைப் படுவார் இவர்கள் பணியாலெழுதிநேன் ஊஜ்ஞூந் வேளா
21 ந் திரு விண்ணகர் நின்றாநேன் இவை எந்நெழுத்து இத் தந்மம் . . . . .
22 ய தரையந் கலிநம்பிசேரி சிவகொழுந்து [க] ண்ணப்பன்
23 ஸ்வஸ்திஸ்ரீ –

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ. தொல்லியல்துறை** | | **தொடர் எண்:** | **10/2004** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 11ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | சிவன்கூடல் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 282/1912 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 8 |
| **அரசன்:** | முதற் குலோத்துங்கன் | | |

**இடம்:** சிவக்கொழுந்துடையார் கோயில் கருவறை மேற்புறச்சுவர்.

**குறிப்புரை:** கல்வெட்டின் மேல் இடது பகுதியில் 2 துண்டுக் கல்வெட்டுகள் உள்ளன. கல்வெட்டு முற்றுப் பெறாமல் விடப்பட்டுள்ளது. [மிழ]லை மங்கலச் சபையாரிடம் விளத்தூரை சேர்ந்த ஒருவர் 500 குழி நிலம் விலைக்கு வாங்கிச் சிவன் கூடல் இறைவனுக்கு ஒரு திருநந்தா விளக்கு எரியச் செய்த செய்தி கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு:

1 ஸ்வஸ்திஸ்ரீ புகழ்மாது . . . . . .

2 வ மலர் மகள் புணர உரிமையிற் சிறஞமணிமுடி . . . . .

3 மீநவர் யிரியலுற்றுலமரத் திக்கனைத்தும் தநி சக்கர . . . . .

4 நி முழுதுடையாளொடும் வீற்றி[ரு*]ஞருளிய . . . . .

5 ரவத்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழ தேவ . . . . .

6 ஜயங்கொண்டசோழ மண்டலத்து மனையி . . . . . . .

7 தேயம் . . . . . . கை எழுத்து

8 சிவ கூடல் மஹாதெவர் சிவக்கொழுஞாண்டார் ஆதிசாஸந் ஸண்ணுஸ்வர தேவ

9 ற் பக்கல் நாங்கள் விலைகொண்டு விற்றுக்குடுத்த நிலமாவது எம்மூர் கீழைய் பு

10 த்தேரி கீழ் மாறித் தேரித் தூம்பிக்கால் வழி நீர் பாயுஞடி இரண்டிநால் குழி

11 அஞ்ஞூறும் விற்பதற்கு கீழ்பாற்கெல்லைய் வாய்காலுக்கு மேற்குஞெந் பாற்கெல்

12 லை எல்லை வாக்காலிந் வடகரைக்கு வடக்கும் மேற்பாற் கெல்லை எல்லைக் கல்

13 லுக்குக் கிழக்கும் வடபாற் கெல்லை கருங்கலிச் செறுவிந் தெந் வரம்புக்குத் தெற்கும் [மே]

14 [மற்பாற்] கெல்லைக் குலிநடுவுபட்ட நிலம் பதிநறு சாண் கோலால் குழி . . . .

15 ம் இதேவர்க்கு ஒரு தி[ரு*] நந்தா விளக்குச் சஜராதித்வற் எரிப்பதாக குடுத்தோம்

16 [மிழ]லை மங்கலத்து ஸஹையோம் இப்படி பணிக்கப் பணியால் எழுதிநேந் பநூா

17 ஹேஸ்லூர ஹடூநேந் இத்திரு நஜா விளக்கு வைத்தாந் விளத்தூர் . . . . .

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண்: 11/2004**

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 5 |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.1075 |
| **ஊர்:** | சிவன்கூடல் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 279/1912 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 9 |
| **அரசன்:** | முதற் குலோத்துங்கன் | | |

**இடம்:** சிவக்கொழுந்துடையார் கோயில் கருவறை தென் சுவர்

**குறிப்புரை:** கல்வெட்டுள்ள சுவரில் கற்கள் மாற்றி வைத்துக் கட்டப்பட்டுள்ளன. மெய்க்கீர்த்திப் பகுதி முதற் குலோத்துங்கனுடையது. கோயிலில் இருந்த நூற்றெண்மப் பிள்ளையாருக்கு திருவமுது படைத்தல் பொருட்டு நிலம் கொடையாகக் கொடுத்த செய்தி சொல்லப்படுகிறது.

**கல்வெட்டு:**

**அ**

1 ஸ்வஸ்திஸ்ரீ புகழ்சூழ்ந

2 புணரி அகழ் சூழ்ந புவி அளவாள் நேமி யளவு

3 . . . . . . விளங்கு சம மகளை . . . .

4 பருவத்து விக்கிரமத் தொழிலா

5 வழி[யூ]ர்ந மதவரையீட்டம் வயிராகரத்

6 றை முனை கி . . . ளவரை . . . த்தெனமிள

7 . . . . .ழித்துத் தோள் வலிகாட்டிப் பே . . . .

8 . . . . . தியை . . . . றுத்தி வடதிசைய் சூடித் தென்றிசை . . . .

9 லப் பூமகள் புணர்ந பொந்நியாடை இந்நிலப்பாவைய் தநிமையுஙீர வ...

10 நித்த திரு மணிமகுட முறைமயிற்சூடித் தந்நடி யிரண்டும் தடயாகத் தோந்றி

11 . . . . . . . . பெருகக் கலியால் வறுபடச் செங்கோல் ✿

---

✿ ழ்ஆ, முப் என 3 வரிகளில் 5 எழுத்துக்கள் உள்ள 3/4 அடி அளவு கல் ஒன்று மாறுதலாக இங்கு செருகப்பட்டுள்ளது.

## ஆ

1 . . . . . . . கடாறு சொரிகளிறு முறை
2 . . . . . புறத்திடைக்கிய இந்நாள் பிறகுலப் பிறை
3 ந்கை வீர . . கலிகடந் . . . .
4 வழிபடத் தெந் மருநமுவிட்ட வெங்க . . . . .
5 து குநெளிப்ப விழிந்த நதிகளுஞ்சூழ . . .
6 தல் மாகுட திசைத்தந் நாள் ந . . .

## இ

1 தொறுஞ் செல்ல இருநிலம் விளங்க இவை கணு மதி . . . .
2 ருதறி மேருவில் புலி விளையாட வார் கடற்றிளை தா . . . .
3 சார் களிறு முறை நிற்ப தெற்றவந் ஒரு தலைப் [பி] . . . .
4 டரியில் பருமணியாரமு திருப்புயத்தலங்கலும் வீரமு . . .
5 மே வரை வணங்க வீற்றிருந்தருளிய கோராஜகேசரி வஜரா .....
6 ழ தேவற்கு யாண்டு அஞ்சாவது ஜயங்கொண்ட சோழம
7 நீர்வேளூர் நாட்டு சிவன்கூடல் ஸஹையோம் நிலவிலை

## ஈ

1 ண்டார் கோயிலுள்ளால் ஸு . . . .
2 க்குடுத்த நிலமாவது புத்தேரி கீ . . . .
3 கு திவாகரப் பெருஞ்செறுவுக்கு கி . . . .
4 மேற்கும் தென்பாற்கெல்லை . . . .
5 லூர் கலியடக்கிப் பெருஞ்செறுவி . . . . .
6 இந்நாற்பாற்கெல்லைக்குள் நடுவு . . . . .

## உ

1 பேர் பக்கல் அறஇடு .. சொல்லி நித்தங்க
2 ழைஞ்சு பொந் மன்றப் பெறுவதாகவும் மன்றுபாடி
3 றுத்தும் எங்களூர் முந் நின்றாரே இத்தந்மம் செலுத்[தி]
4 க் குடுக்க கடவோ[மாநோம்] இவ்வூர் உஹாஸஸை யோ[ம்]

5 இது அந்றெந்வார் கெங்கை இடை குமரி இடைசெய்

6 தார் செய்த பாவத்தை படுவார்.

**ஊ**

1 . . . . ஷேவதாநம் . . . . . . . . .

2 தொடுப் . . . . . ஒருவநுக்கு நிசதம் அருமொழி தேவநால்க் குறுணி நெல்லுக்குநி

3 திநுக்கு விற்றுக்குடுத்த நிலமாவது எம்மூர் கமலநாராயணப் புத்தேரி கீழ் ஆடவலாந்

4 வழி நீர்பாயும் நிலம் ஏரிய்ப்பட்டியும் இதந்தெற்கில் கிளரங்கிரய பட்டியும்

5 லை கண்ணிக்காலு நடைத்திண்ட மாணிகுண்டிலுக்கு மேற்கும் தெந்பாற் கெல் . . . . . .

6 றபுக்கு வடக்கும் மேல் பாற்கெல்லை இஷெவர் ஷெவதாநங் கண்ட பட்டி கீழ் வரம்புக்குக் கா....

7 கில கண்ணிக் காலுக்குக் கிழக்கும் வடபாற் கெல்லை கிழக்கு நோக்கிப் போநகண்ணிக் காலுக்குத் தெற்கும் . . .

8 உள் நடுவுபட்ட நிலம் பதிநறுசாண்கோலால் ஏரிப்பட்டி குழி முந்நூற்றைம்பத் தொந்றும் கிளா . . .

9 படிகோலால் குழி இருநூற்றொருபதும் ஆகக் குழி அஞூற்றறுபத்தொந்றும் இ ஷெவர்கோயி . . .

10 ஸ்ரீ . . . . . நூற்றெண்மப்பிள்ளையார்க்குத் திருவமுதுக்கு நாங்கள் இஷேவர் பக்கல் விற்.

## த.நா.அ. தொல்லியல்துறை — தொடர் எண்: 13/2004

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 28 |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி 1098 |
| **ஊர்:** | சிவன்கூடல் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண் :** | 10 |
| **அரசன்:** | முதலாம் குலோத்துங்கன் | | |

**இடம்:** சிவக்கொழுந்துடையார் கோயில் அர்த்த மண்டபத் தென்சுவர்

**குறிப்புரை:** கல்வெட்டின் நடுப்பகுதியில் வேறொருகல்வெட்டு வைத்துக் கட்டப்பட்டு தொடர்பு விடுபட்டுள்ளது. இரு கல்வெட்டுகளும் குலோத்துங்கனுடையவை 28 மற்றும் 44 ஆம் ஆண்டைச் சேர்ந்தவை. சிவன் கூடல் இறைவனுக்கு நந்தவனம் அமைக்கவும் நந்தாவிளக்கெரிக்கவும், மார்கழித் திருவாதிரை நெய்யாடல் அமுது படிக்காகவும் சிவன்கூடல் மகாசபையார், மணிமங்கலத்தைச் சேர்ந்த பஞ்சநதிவாணன் சோழந்திர மூவேந்த வேளானுக்கு நிலம் விற்று ஆவணம் எழுதிய செய்தி சொல்லப் படுகிறது.

### அ

1 ஸ்ரீ குலோத்துங்க சோ . . . .
2 வற்குயாண்டு உஅய சிவன் . . . .
3 ஊஹாஸஸையோம் நிலவி . . . .
4 வணக் கையெழுத்து எங் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .*
5 ம்புக்கு வடக்கும் மேற்பாற் கெல்லை குடிதாங் . . . . .
6 கிழக்கும் வடபாற் கெல்லைய் பண்டாரத் தெ . . . . .
7 த்துத் தெந் வரபுக்கு ஒருகோல் விட்டுத் தெற்கும் . . . .
8 இந்நான் கெல்லைக்குள் நடுவுபட்ட நிலம் . . . .
9 ஷேஉவற்குத் திருநஜவநமாக இஷ[லஞ்]
10 சுட்டி வஜ இறைகள் எப்பேர்ப்பட்ட நவும் நாங்[க]
11 ள் இறுத்து இயஉும் ச ஜராதித்தவற் செலுத்துக் க[ட]

---

* இடையில் 4 வரிகள் உள்ள மற்றொரு கல்வெட்டின் கல் வைத்துக் கட்டப்பட்டுள்ளது 'ஆ'.

12 வோமாநோம் சிவ கூடல் *ஊஹாஸஹை*யோம் இ[ப்]
13 படி பணிக்கப் பணியால் எழுதிநேந் ஹரிதந் சங்கப்
14 ஹட்டநேன் இ*ஙி*ல*ஙி*ரு நஙாவிளக்கு எரிப்ப [தா]
15 கக் கொண்டு வைத்தாந் மணிமங்கலமுடையான் [ப]
16 ஞ்சநெதி வாந [ஹூ] ரிசநாந சோளேஙி*ர* சிவ
17 மூவேஙு வேளான் . . . .
18 *ஸ்ரீ* குலோத்துங்க சோழ தே வற்குயாண்டு *௩௰௨* [மேற்]
19 படியாந் இஃ ஜெவர் சிவக் கொழுஙாண்டார்க்கு மார்கழித் திருவாதி
20 ரை நாள் நெய்யாடி அருளவும் திருவமிர்து உள்ளிட்ட வழக்கங்களுக்கு
21 சிவந்கூடல் மஹாஸஹை விலை கொண்டு விற்றுக் குடுத்
22 த நிலமாவது கமலநாராயணப்புத்தேரி . . . . . .

## ஆ 281/1912

1 *ஸ்வஸ்திஸ்ரீ* கோவிராச கேசரி பன்மராந[திபு]
2 வநச்சக்கரவத்திகள் *ஸ்ரீ* குலோத்துங்க
3 சோழ ஷேவற்கு யாண்டு *௪௰௯*[தாவது]
4 ஜயங்கொண்டசோழ மண்

## த.நா.அ. தொல்லியல்துறை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | தொடர் எண்: | 14/2004 |
| வட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 25 |
| ஊர்: | சிவன்கூடல் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 1098 |
| மொழி: | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 278/1912 |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் : | 11 |
| அரசன்: | குலோத்துங்கன் | | |

**இடம்:** சிவக்கொழுந்தாண்டார் கோயில் அர்த்தமண்டபத் தென் சுவர்.

**குறிப்புரை:** கற்கள் மாற்றி வைத்துக் கட்டப்பட்டுள்ளதால் கல்வெட்டு அங்கங்கு தொடர்பில்லாதுள்ளது.சிவன்கூடல் இறைவனுக்கு வழிபாட்டிற்றகாகவும் அமுது படையலுக்காகவும்கோயிலுக்கு ஊர்ச்சபையார் நிலம் விற்றுக் கொடுத்த செய்தி சொல்லப் படுகிறது. குலோத்துங்கனுடைய 25 ஆவது ஆட்சியாண்டு மற்றும் 23 ஆவது ஆட்சி யாண்டு இதில் சுட்டப்படுகின்றன. இதில் இடம் பெறும் கமலநாராயணப் புத்தேரி வேறொரு சாசனத்திலும் இடம் பெறுகிறது.

**கல்வெட்டு:**

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன[சக்கரவத்திகள்] ஸ்ரீ குலோத்துங்

2 க சோழ ஐேவற்கு யாண்டு உயரு சிவன்கூடல் ஊறாஸஸை

3 யோம் எங்களூர் ஊறா ஐேவர் சிவக்கொழுனாண்டார்க்கு மஞர

4 போநகம் அமுது செய்கையிற்கு இஐேவர் ஆதிஷா

5 ஸந் வணோஸ்ர ஐேவர் பக்கல் விலை கொண்

6 டு விற்றுக் குடுத்த நிலமாவது எம்மூர் கமலநாரா

7 யணப் புத்தேரி எதிர் வரவ வடகூறுக்கும் . . . .

8 நேரி கீழ் கீழ்பாற்கெல்லை மாதே . . .

9 . . . வடக்கு மேற்கும் தெற்பாற்கெல்லைச் . . .

10 . . . . காவிநிந்றும் மேற்கு நோக்கிப் பாப்பா . . . .

11 . . . . குந்றகரைக்கு வடக்கும் மேல்பாற்கெல் . . .

12 . . . . . ருதய மங்கலத்தெல்லைக்கு கிழக்கு . . .

13 க்கு தெற்கும் இந்னான்கெல்லைக்குட்

14 பட்ட நிலம் உண்ணிலம் ஒழிவின்றி எம்மி
15 லிசைந்து விலைப்பொருள் முன்றும் ஆவணக்க
16 ளியே பெறுவிலைக் காணங் கிழிகைச் செல
17 . . . . . கொண்டு விலையற விற்று . . . .
18 சிவக்கொழுஞொண்டார் ஆதிசைவஸந் வண்ணுஸ்ய ஷேவர் பக்கல்
19 கொண்டு நாங்கள் விற்றுக்குடுத்த நிலமாவது கீழ் நி . . .
20 . . . ப்பறைச் சேரி கீழிது துரஜரப் பெருஞ்செறு . . . .
21 இதின் மேற்கில் கோயிலான் குழியின் தெற். . . .
22 ஒரு வேலியும் விற்றுக் குடுப்பதற்கு கீழ்பாற்கெ . . . .
23 ந் குழி மடைபாஜவாய்க் காலுக்குமேற்கும் தென்பா . . . .
24 க்கு வடக்கும் மேல்பாற் கெல்லை சுற்றுக் குழிக்குக் கிழக்கும் .
25 ல எல்லையாந காலுக்குத் தெற்கும் இஜாந்கெல்லைக்குள் . . .
26 வர்கள் பணிக்கப் பணி . . . . . .
27 இவ்வூர் சிவப்ராஹ்மணன்
28 ஹட்ட நேந் இயூமம் . . . . .
29 ம் பாக்க முடையாநாந ஏழி . . . . .
30 ந ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவந சக் . . . . .
31 சோழ தேவற்கு யாண்டு உயந . . . .
32 யோம் நிலவிலையாவணக் கை *
33 *யால் எழுதிநேந் . . . . .
34 ஹாரிதந் பட்டாஹேஸ்ய . . . . . .
35 செய்வித்தாந் கிளா....
36 நாட்டு மூவேஜவேளா....
37 ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோ . . . .
38 த்து சிவன் கூடல் ஸபை
39 எழுத்து . . . . .

---

☼ சிறு துண்டுக் கல்வெட்டு செருகப்பட்டுள்ளது

1. வர்சிவக்
2. தும்
3. க் குழிநா
4. கில் நில
5. ல் லை
6. ற கொண்டு

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ. தொல்லியல்துறை** | | **தொடர் எண்:** | **15/2004** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 25 |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1275 |
| **ஊர்:** | சிவன்கூடல் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 287/1912 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | தெலுங்குச்சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 12 |
| **அரசன்:** | விஜயகண்டகோபாலன் | | |

**இடம்:** சிவக்கொழுந்துடையார் கோயில் மகாமண்டபத் தென் சுவர்.

**குறிப்புரை:** சிவன்கூடல் கோயிலில் இருந்த அம்மன் கோயில் இறைவி மரதகவல்லி நாச்சியார்க்கு சோழநாட்டைச் சேர்ந்த 'தாழைக்குடையானான புலியூரன் என்பவன் 2400 குழி அளவுள்ள நிலத்தைக் கோயில் நிலமாக இறைவி பெயரில் கொடுத்த செய்தி சொல்லப்படுகிறது. காஞ்சிபுரத்து திருவேகம்பமுடைய நாயனார் கோயிலில் கும்பிட்டிருக்கும் தொண்டர்களில் இரவிய தேவர் நல்ல கம்பருக்கு மடப்புறமாக நிலக்கொடை தரப்பட்டுள்ளது.

**கல்வெட்டு:**

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ விசைய கண்டகோபால தேவற்கு யாண்டு உயரு வது ஜயங்கொண்ட

2 சோழமண்டலத்து ஊத்துக்காட்டுக் கோட்டத்து நீர்வேளுர் நாட்டு சிவன் கூடல்லுடையார் சிவக்

3 கொழுந்துடைய நாயனார் கோயில் திருக்காமக்கோட்டமுடைய மரதக வல்லி நாச்சியாற்கு சோழ ம

4 ண்டலத்து விருதராய பயங்கர வளனாட்டு பூந்தாழைக் குடியில் தாழைக் குடையான் ஆளவந்தான்

5 புலியூர் இன்னகர[கா*]ஞ்சிபுரத்து திருவேகம்ப முடையனாயனார் கோயிலில் கும்பிட்டிருக்கும் ஆண்டார்களில் இரவியதேவர்

6 நல்லகம்பர் மடப்புறமாய் இவர் பக்கல் நான் கொண்டுடையேனான வதிக்கு தெற்கும் வேளைக்காறன் காலுக்கு கிழக்கு தெ

7 ன் பாற்கெல்லை திருச்சூல தேவர் ஏழுந்தருளி இருக்கிற இ[டத்*]துக்கு வடக்கு கீழ்பாற்கெல்லை தரிசுக்கு மேற்கு நாற்பாற்கெல்லைக்கு உட்

8 பட்ட குழி இரண்டாயிரத்து நானூறும் ...ம்படும் இறையிலி தேவதான ....பக்கலே விலைக்குறக்கொண் . . . .

9 இன்னாயனார் கோயில் திருக்காமக் கோட்டமுடைய மரதகவல்லி நாச்சியார்க்கு திருநாமத்துக்காணி ஆக

10 கொண்டு விட்டேன் தாழைக் குடையான் ஆளவந்தான் புலியூரனேன் ஸ்ரீமாஹேஸ்வர ரக்ஷை

| த.நா.அ. தொல்லியல்துறை | | தொடர் எண்: | 16, 17/2004 |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | — |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு: | கி.பி.19 ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | சிவன்கூடல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | — |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | — | ஊர்க் கல்வெட்டு எண்: | 13 |
| அரசன்: | — | | |

இடம்: சிவக்கொழுந்துடையார் கோயில் மகாமண்டப வாயிலின் அருகில்

குறிப்புரை: தனிநபர்கள் இக்கோயிலுக்கு செய்த சேவையை இக்கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

## கல்வெட்டு:

15
1. பெரிய ணயினான்
2. சதாசேர்வை

16
1. பச்சை ணாயநன்
2. சதா சேவை.

| த.நா.அ. தொல்லியல்துறை | | தொடர் எண்: | 18/2004 |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | சகம் 1455 |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 1533 |
| ஊர்: | சிவன்கூடல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 288/1912 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | விஜயநகரர் | | |
| அரசன்: | அச்சுத தேவராயர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 14 |

**இடம்:** சிவக்கொழுந்துடையார் கோயில் மகாமண்டபக் கிழக்கு முப்பட்டைக் குமுதம் மற்றும் ஜகதி.

**குறிப்புரை:** விஜயநகர மன்னன் அச்சுததேவராயர் விருபாக்ஷியில் துங்கபத்திரை ஆற்றங்கரையில் இருந்தபோது சிவன்கூடலைச் சார்ந்த [பிடாகை] ஓபுளாச நல்லூரினைச் சிவன்கூடல் இறைவனுக்கு படையல், பூசை, தீபவழிபாடு ஆகிய வற்றிற்குத் தானமாகக் கொடுத்த செய்தியும், இவ்வூர் நிலத்திற்குரிய பாசன வசதிகளும் சொல்லப்படுகின்றன.

**கல்வெட்டு:**

1 சுவஸ்திஸ்ரீ உன்உஹா மண்டலேசுர இராசாதி இராச ராச பரமேசுற ........ அச்சுதை யைதேவ உஹாராயர் ப்ரு திவிராச்சியம் பண்ணி அருளாநின்ற சகாற்தம் சத சஎ ருயரு ன் மேல் செல்லாநின்ற ஜெய வருஷம் மேஷ நாயிற்று பூற்வபக்ஷத்து துவாதெசியும் உத்திர நக்ஷத்திரமும் பெற்ற சோமவாரத்து நாள் ஸ்வாமி அச்சுதை தேவ மகாராயர் ஊழியம் செட்டியப்பர் நா

2 யக்கர் புத்திரன் எல்லயபநாயக்கர்........ யக்கத்தனமாகப் பாலித்தருளின செயங்கொண்ட சோழமண்டலத்து சந்திறகிரி ராச்சியத்து ஊற்றுக்காட்டு கோட்டத்தில் நீர்வானூர் நாட்டில் மப்பேட்டு சீன்மையுக்குள் சிவன் கூடல்ப் பிடாகையான ஓபுளாச நல்லூர் கிறாமம் ஒன்றுக்கு சதுர் சீர்மை கூத்தபாக்கத்தில் எல்லைக்கு கீழ்க்கு மந்தமங்கலத்தில்

3 எல்லைக்கு கிழக்கு பெரிஏரிய்க்குள் வ........கூடல் அரசங்குழிக்கு மேற்கு மல்லையபுரத்தில் எல்லைக்கு வடக்கு இந்த நாற்பாக்கு எல்லையும் சிவன் கூடல் சிவகொழுந்து நயிநார் தம்பிரானாற்கு பூசை நைவேத்திய[ம்]த் திருப்பணி தீபாறதிநைக்கும் உரித்தாக வீரசந்திர விருபாக்ஷதேவி சன்னதியில் துங்கபத்திற தீரத்திலே

4 நம்மிடக் கப்பரை செட்டியப்ப நாயக்க . . . . . . . . . புண்ணியமாக சிவன்கூடல் சிவக்கொழுந்து தம்பிரானாற்கு தாரைவார்த்து குடுத்தோம் இந்த தன்மம் சந்திறாதித்தவரைக்கும் நடக்க கடவதாகவும் சிவன்கூடல் பெரிய ஏரி சிற்றேரி தண்ணீர் பூறு . . . . . மாக எந்த ஏத்தக் காலிலே பாஞ்சு வந்துது

5 அப்படியே பாயக் கடவதாகவும் அறின்ற முறை நிற்கு . . . . . . . பக்கடவதாகவும் இந்த தன்மத்துக்கு யாதொருவர் அகிதம் பண்ணக்கடவர் அல்லவாகவும் யாதொருவர் அகிதம் பண்ணிநவன் உண்டானால் கெங்கைக் கரையிலே காராம்பசுவை கொன்ற பாபத்திலே போக கடவன் ஆகவும் தாய் தகப்பநையும்

6 வ ாஉணைநையும் கொன்ற பாபத்திலே போகக் கடவனாகவும் யிந்த சாசநம் எழுதிநமைக்கு ஊர்கணக்கு தானப்பிள்ளை குமாரன் மூறத்தியப்பன் எழுத்து[1]

1. இவ்விடத்தில் ஐந்து எழுத்துக்கள் தெலுங்கில் உள்ளன.

| த.நா.அ. | தொல்லியல்துறை | தொடர் எண்: | 19/2004 |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 4 ஆவது |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 1067 |
| ஊர்: | சிவன்கூடல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | — |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | வீர ராசேந்திரன் | ஊர்க் கல்வெட்டு எண்: | 15 |

இடம்: சிவக்கொழுந்துடையார் கோயில் கருவறை மேற்கு, தெற்கு முப்பட்டைக் குமுதம்.

குறிப்புரை: சிவன்கூடல் சபையார் சிவக்கொழுந்தாண்டாருக்குப் பூசை செய்வார்க்காக ஒரு குறிப்பிட்ட நிலத்தினைக் கோயிலாரிடம் விலைக்குப்பெற்றுக் கொடுத்த செய்தி சொல்லப்படுகிறது. விலைக்குப் பெற்ற ஆவணமாக இக்கல்வெட்டு பதியப்பட்டுள்ளது.

அ

1 *ஸ்வஸ்திஸ்ரீ* திருவளர் திரள்புயத்திரு நிலவலயம் தன் மணிப்பூணெநத் தாங்கி பன்மணிக் கொற்ற வெண்குடை நிழலக்குவலயத்துயிர்களைப் பெற்றதாயிநும் பேணி மற்றுள அறைகழ லரையர்தனடிஞ்நிழலொதுங்க முறைமயில் அரும் பெறல்த்த

2 மையன் ஆளவந்தானை இரும்புவிநிகழ் ராஜாயிராஜனென்றொளிர் மணி முடி சூட்டித் திண்டிறல் மைந்தநாகிய கங்கைகொண்ட சோழனை எழியலி யானைச் சோழ பாண்டியநென. ண்டுயமணிமுடி இனிதி[ன்] சூட்டிப் பாண்டி மண்டலம் குடுத்தருளி ஆண்டகை வடி கொ

3 ண்ட கதிர்வேல் முடிகொண்ட சோழனைச் சுந்தரபாண்டியநெநச் சுடர்முடி சூட்டி அந்தமிழ் பெருஞ்சிறப்பருளித் தன்கிளை அவரவர்குரிய [அ]கலிடம் வேறு வேறருளி இகழ் முனையிரு தொடர்மலைக்கும் விக்கலனற[ன்]னோடு வரிசிலைத் தடக்கை மாசாமஞ்ரைக் கங்

4 க பாடிக் களத்திடை நின்றும் துங்கபத்திரை புகத்துரத்தி ஆங்கவர் வேங்கை நந்நாட்டிடை மீட்டுமவர்விட்ட தாங்கரும்பெருவலித் தண்டு கெடத்தாக்கி மாதண்டநாயகன் சாமுண்டராசனைச் செற்றவன் சீர்த்தி[யறு]த்து மற்றவன் ஒரு மகளாகிய இருகையன்றேவி நாகலை என்னும் தோகையஞ்

5 சாயலை முகத்தொடு மூக்குவேறாக்கிப் பகைத்தெதிர் மூன்றாவிசையிலும் என்றெதிர் பொருது பரிபவஞ்ரவனெனக் கருதி பொருபுநல் கூடல் சங்கத்தாகவமல்லன் மக்களாகிய விக்கலன் சிங்கணநென்றிவர் தம்மொடு எண்ணிட[ல்சா]மஞரை வேறொடு தூசி முன்விட்டுத் தன்றுணை மன்னரும் தாநும் பின் நடுத்திருந்து வடகடலென வகுத்த வ[த்த]

6 னையைக் கடகளிறொன்றால் கலக்கி அடல்புரி கோசலை சிங்கனைக் கொடிப் படைத்தூசி முந்களிற்றொடு துணித்து கேசவற் தண்டநாயகன் கேத்தயரை இண்டல அமராபன இரேச்சயன் இகல்செயப் பொற்றொகை மூவேஞன் என்றாடுத் துரப்பில் அநேக சாமஞரைச் சின்ன பின்னம் செய்து முதலியா நமது வசனோட வரித்தலையொடு விக்

7 கலகொட செருத்தொழிலிழ[ந்]து சிங்கணனோட அண்ணலர் முதலிநர் அணைவருமாப் போர்ப் பண்ணின பகடிழிஞோட நண்ணின ஆஹவமல்ல னும் அவர்க்கு முன்னோட தன்வேக வெங்களிற்றினை விலக்கி வாகை கொண்டாங்கவர் தாரம் சேவகந் தொங்க லும் தாமரைப் பேரியுமே கடம்பகமும் வெண் சாமரையுஞ் சுகரக்

8 கொடியுமகர தோரணமும் ஒட்டக நிரையும் ஓலோகாசனமும் புஷ்கப்பிடியும் பொருகளிறீட்டமும் பாய்பரித்துகை யொடும் பறித்து சேயொளி வீர ஸிம்ஹாஸ நம் பார்தொழ ஏறி எழில் தரும் உலக முழுதுடையாளொடும் விசைய மணி மகுடம் எய்து இசை கௌதத்துமா புரவிப்பொத்தபி வேஞனை வார

9 . . . . ல் கேரளன் றன்னைத் தார்ச் சனநாதன் றம்பியைப் போர்களத்தலங்கல் சூழ பசுந்தலை அரிஞதென்னவன் ஸ்ரீவல்லபன் மகன் ......வில் மணிமுடி வீரகேசரி....மதுபண் பொன்றால் வுதைப்பித்துதையில் சோலர் தம்மொடு செங்கீரையர் குலம் வேரொடும் பறிஞ மேல்கடல் வீழ் வாரணம்மருகி நில் செல்

10 ல எண்ணருங் களிற்றிரட்டரைக் கவர்ஞகண்ணியர் களிற்றொடு ங்கட்டிய பண்ணுப்பிடியொடு மங்கவர் ரிடுதிறை நண்வெள்நிரை கொண்டு மீண்டும் சூழம் நல் கொட்டில்த் தொறுவில் குறித்த வெம் போர் தண்ட நாயகர் தம்மில் திண்டிறல் பல்லி யணனையுமஞ்சிப்பயனையும் பில்குமதக் களிற்றுப் பிரம்

11 வெண்டாரு தோகயன்றனையும் திண்டிறல் சத்தி அணனையும் சத்து விக்ர ஹப்பத்தி அணனையும் அத்தகு தேமரு ஜெரியல் வீமயன்னனையும் மாநாமதி வங்காரனையும் நாமவேள் கங்கனை நுளம்பரைக் காடவர் கோனை மங்கும் மதயானை வைதும்ப ராசனை இருஞலை அரிஞ பெரும் புநல்த் தங்கு கங்கை மானகர்த . . . .

12 யமஞ்சேது வரம்பாகச் செங்கோல் செலுத்தி வேத ரிதியை விளக்கி மீதோள் வீரத் தனிக்கொடித் தியாகக்(கொ) கொடியொடு ஏர்ப்ப வருகவென்று போர்த் தொழிலுரிமையில் எய்தி அரசு வீற்றிருஞு மேவரும்நு நெறி விளக்கிய கோவி ராஜ கேசரிபஔரான உடையார் ஸ்ரீவீரராஜேஞு தேவற்கு யாண்டு நாலாவது

13 . . . கோட்டத்து நீர்வேளூர் நாட்டு (சி)சிவகூடல் ஸபையோம் நிலவிலை ஆவணக் கையெழுத்து எங்களூர் சிவக்கொழுஞாண்டார்க்குத் திரு வாராதனை செய்வார்க்கு நிமந்தமாக இத்தேவர் *ஸ்ரீகாலன்வணேஸ்வ*தேவர் பக்கல் நாங்கள் விலை கொண்டு விற்றுக் குடுத்த நிலமாவது எங்களூர்ப் புத்தேரி கீழ் கமலா

14 .....ம் தூம்பின் கால்வழி நீர்பாயும் வேட்டுவன் செறுக்குழி முன்னூற்று முப்பத்து அஞ்சேகாலும் இதன் தெற்கில் *ஸிஸ்ஹூணன்* ஒத்தி மேடுகுழி இரு நூற்றொருபத்து அஞ்சும்......கடைப்பட்டி குழி முன்னூற்றெண்பதே காலும் அரவணையான் செய்யில் முன்பு இத்தேவர்க்கு விட்ட நிலம் தெற்கடைய குழி எழுபது நி

15 ....குழி அறுபத்தொன்பதும் வரம்பு நீக்கி மிகிதி குறைவுள் ...... கப்படி ..... குழி தெற்கில் வாய்க்கால்

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **20/2004** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி 17 ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | சிவன்கூடல் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | | |
| **அரசன்:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 16 |

**இடம்:** சிவக்கொழுந்துடையார் கோயில் அம்மன் கோயில் கருவறை நிலை தரைப்படியாக உள்ள கல்.

**குறிப்புரை:** சிவக்கொழுந்தன் என்பவரது மகன் தளவரிசை அமைத்ததைக் குறிப்பிடுகிறது. 6-8 வரிகள் மீண்டும் இடது புறம் உள்ள ஒரு சிறு இடைவெளியில் மடித்து எழுதப்பட்டுள்ளன.

**கல்வெட்டு:**

1 உ யுவ ஸ்ரீ மாசி மீ
2 ௲ உ சிவகொழுந்
3 தென் மகன்
4 நயி நன் தளவ[ரி*]
5 சை
6 புண்
7 ணிய
8 ம்

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **21, 22, 23, 24 / 2004** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி 13 ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | சிவன்கூடல் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | | |
| **அரசன்:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 17 |

**இடம்:** சிவக்கொழுந்துடையார் கோயில் அம்மன் கோயில் வாயிலில் உள்ள துண்டுக் கல்வெட்டு

**குறிப்புரை:** துண்டுக்கல்வெட்டு (மணற்கல்)

**துண்டு கல்வெட்டுகள்:**

25 1 டபாற்கெல்

26 1 [கொ]ண்டசோழ மண்.....
2 ....விழுப்பரையன் ஊ.....
3 .... த்ரிபு஽வன......
4 ......கண்டு இவ்வூர்.....
5 .....ணர்களை அமுர்து செ......
6 கரையும் ஊராரையுங்
7 ம் விடுகிறோமெந்று....

27 1 களூர் மகா ......
2 ம் கால்வட.....
3 பி ஷேவற்கு....
4 தாம் சிவகூட்.....

28 1 [ஸ்வஸ்தி]ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள்
2 .....கொ......டா அ......
3. .....கு நிய யெரியி......கும்

| த.நா.அ. | தொல்லியல்துறை | தொடர் எண்: | 25/2004 |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | — |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 10 ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | சிவன்கூடல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | — |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | — | | |
| அரசன்: | — | ஊர்க் கல்வெட்டு எண்: | 18 |

இடம்: சிவக்கொழுந்துடையார் கோயில் வளாகம் வடபுறவேலி ஓரத்தில் கிடக்கும் கல்

குறிப்புரை: துண்டுக் கல்வெட்டு. கமலநாராயணத் தூம்பு என்ற மடைவழியாகச் செல்லும் வாய்க்கால் பாசனத்தில் 135 குழிபரப்பளவுடைய நிலம் கோயிலுக்கு விற்று ஆவணம் எழுதப்பட்ட செய்தி சொல்லப்படுகிறது. ஊர்க் கழஞ்சு, குமரக்கச்சாணம், எச்சோறு, கூற்றுநெல், குடிமை முதலிய வரிகளையும், தீர்வைகளையும் சபையாரே செலுத்த ஒப்புக்கொண்டுள்ளனர்.

**கல்வெட்டு:**

1 . . . .ம்மு......ரிகீழ் கமலநாராயணப்பெருந்தூம்பிந் கால் வழி நீர்பாயும் நிலம் விளா . . . . .

2 ற்கு கீழ்பாற்கெல்லை ஷேவதாநம் அ[ந]ா ர் குண்டிலுக்கு மேற்கும் தெந்பாற் கெல்லை இவ்வூ . . . .

3 மாதவ கூ மவித்தந் எருகம்போகிக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை பெருவாக்கா லுக்குத் தெற்கும் இ . . . . . .

4 க்குள் நடுவுபட்ட நிலம் பழம்* படிகோலால் குழி நூற்று முப்பத்தைஞ்சும் எம்மி லிசைஞ விலை ஆவ . . . . .

5 ற்று விலைக்காணங் கிழிகைச் செலப் பொருளறக் கொண்டு இந்நிலத்தால் வஞ நீர் . . . . .

6 வேலிக்காசு ஊர் கழஞ்சு குமரக் கச்சாணம் எச்சோற்றுக் கூற்று நெல் கோயில்....

7 ஞ குடிமை எப்பேறபட்டதும் நாங்களே இறுத்து

8 *ஸ்ரீஹஸ்தத்து*. . . . பண்ணிக் குடுத்தோம் இவ்வூர் *ஸபை* *வ்யவஸ்தை*ப்படி பணி

---

* 'ழம்' வரிப் பிளப்பு

| த.நா.அ. | தொல்லியல்துறை | தொடர் எண்: | 1/2005 |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 32 நாள் 356 |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 1211 |
| ஊர்: | மாகறல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 220/1901 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | S.I.I.Vol. VII No. 433 |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | மூன்றாம் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண்: | 1 |

இடம்: திருமாகறல் ஈசுவரமுடையார் கோயில் மகாமண்டப வடக்குச்சுவர் மற்றும் பட்டி.

குறிப்புரை: ஐயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற்கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல் என்ற இந்த ஊரிலுள்ள சிவன்கோயில் திருவகத்தீசுரமுடையார் கோயில் என்று அழைக்கப்பட்டது. இக்கோயிலுக்கு எயிற்கோட்டத்திலுள்ள இருமரம் என்ற குலோத்துங்க சோழ நல்லூரில் விளைநிலம் ஏரி நிலம் போன்ற 40 வேலி நிலமும் காலியூர்க் கோட்டத்திலுள்ள வெண்கற்சேரியில் 30¾ நிலமும் நத்தங்கொல்லை 11 வேலியும் முன்னர் தேவதானமாக இருந்தன. பழந்தேவதானமாகிய இந்நிலங்கள் மீண்டும் இக்கோயிலுக்கு இறையிலி தேவதானமாக வேண்டுமென்றும், இத் தேவதான நிலங்கள் காலிங்கராயர் என்பவருக்குப் பற்றாய் ஆக வேண்டும் எனவும் நந்திவன்மர் என்ற அதிகாரி ஆணையிட்டார். அந்த ஆணையைத் திருமந்திரஓலை இராசநாராயண மூவேந்த வேளான் எழுதப் பல அதிகாரிகள் கையெழுத்திட்டுள் ளனர். இந்நிலங்களைப் பயிர் செய்யும் பொறுப்பு காலிங்கராயர் என்பவருக்கு அளிக்கப்பட்டதை 'பற்றாய் நிற்கவும்' எனக் கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு:

1 *ஸ்வஸ்திஸ்ரீ* திருவாய்க்கேழ்வி முன் [பாக *திரி*பு*வ*வன]ச்ச *க்ர*வத்திகள் வீரா *ஸஹிஷெ* [மும்*] விஜையா *ஸ*

2 *ஹி*ஷேகமும் பண்ணி *ய*ருளிய ஸ்ரீ *திரி*பு*வ*வன வீர தேவற்கு யாண்டு *௩௰௨* நாள்

3 (ள்) *௩௱௫௰௬* நத்திபன்மன் செய்ய திருவாய் மொழிந்தருளினபடி ஐ

4 யங் கொண்ட சோழ மண்டலத்து [எ] யிற் கோட்டத்து மாகறல்(திருவக) தி

5 ருவகத்தீ*ஸ்வர* முடையாற்க்கு இக்கோட்டத்து இருமரமான குலோத்துங்க

6 சோழ நல்லூர் விளை நிலம் *௪*[*௰*] வேலியும் ஏரியும் ஏரி கோ உள்பட்ட ரு ல

7 கொல்லை ரு பத்து வேலியும் காலியூ[ ர் ]க் கோட்டத்து வெண்கற்சேரி தரப்படி

8 ஈய ஞ ஊ [ர்] நத்தமுங் கொல்லை யக வேலியும் பழந்தேவதான இ

9 றையிலியென்றும் இன் ரு ப[ழ]ம்படி இத்தேவற்குத் தேவதான இறையிலி

10 யாய் நிற்கவும் இக்கோயிலு[ந்*] தேவதானமுங் காலிங்கராயனுக்குப் பற்றாய் நிற்கவும்

11 கடவதாய் பெறவேணுமென்று இவ[ர்*] நம

12 க்குச் சொந்நமையில் இப்படி செய்யக் க

13 டவதாகச் சொ[ல்*]லிக் கணக்கிலும் இட்டுக்கெ[ா]

14 ள்ளக் கடவர் களா(ா)க வரிக்கூறு செய்வ

15 ார்க்குஞ் சொன்னோம் இன்னில பழம்ப

16 டியே இத்தேவற்குத் தேவதான இறையிலி

17 யாக நிற்கவும் இக்கோயிலுந் தே வத

18 [ான]ங்களும் உள்பட இவனுக்கு[ப்] பற்றாகக் குடுக்க

19 [ப்]பண்ணுவது எழுதினான் திருமந்திரஓலை இரா

20 ச [ நாராயண] மூவேந்த[வேளான் இப்படி திருவாய்மொ]

21 ழிஞ(ா)ரு[ளி*] னார் இவை வில்லவராயந் எழுத்து இவை வாணாதிராஜந் எழுத்து இவை தொண்டைமானெழுத்து இவை விழி[ஞ*]த்த(இ)ரயந் எழுத்து இவை சிங்களராயன் எழுத்து இவை சித்தராயன் எழுத்து காடவராய[ந்] எழுத்து அங்கராயந் எழுத்து இலாடத்தர

22 யந் எழுத்து

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **2/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.13 ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | மாகறல் | | |
| **மொழி:** | தமிழ் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 2 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** திருமாகறல் ஈசுவரமுடையார் கோயில் மகாமண்டப வடக்கு உபானம்.

**குறிப்புரை:** இத்துண்டுக் கல்வெட்டுகள் தினந்தோறும் தப்பாமல் குறுணி அமுதுபடியும் கறியமுதும் படைக்க வேண்டும் என்பதற்காகத் தன்மங்கள் வழங்கப்பட்ட செய்தியையும், இக்கோயிலுக்கு திருநந்தாவிளக்கு ஒன்று எரிப்பதற்கு ஊரார் நிலம் விற்பனை செய்து கொடுத்த செய்தியும் அதன் எல்லைகளும் குறிப்பிடுகின்றன.

**கல்வெட்டு:**

**அ**

1 குறைவறுப்பும் நடத்த நாள் ஒன்றுக்கு குறுணி அமுதுபடியும் கறியமுதும் முட்டாமல் நடத்தி இந்த தன்மங்கள் தப்பாமல் *சந்த்ராதித்த*வரையும் நடத்தக் கடவர்கள்

2 பரிவட்டக் காணிக்கை இருபது பணம் [கொ]டுத்து வரக்கடவர்களாகவும் இம்மரியாதி . . . *மமிஷ்ஹாதி* ஆக நடத்த கடவது ஆகவும் இந்த தருமத்துக்கு அஹிதம் பண்.....

**ஆ**

1 . . . . . . முத்தியன் பிச்சன் வைத்த திருநுந்தா விளக்கு ஒன்றினுக்குக் குடுத்த

2 விரையாந் சூன்றி வேங்கடமும் உள்ளிட்ட ஊரவரோம் இப்பொன் ஒன்பதின் கழஞ்சே நாலுமாவுங் கொண்டு நாங்கள் விற்றுக் குடுத்த நிலத்துக்குக் கீழ்பாற்கெல்லை மருத்த கீர நெழுவ நாகனுடையாநுக்கு மட்டத்துக்கும் . . . பிராட் டிக்கும் குட்டி நங்கை . . .

3 ன்மாதேவன் முத்திசெறு. வுக்கு தாமடிநங்கைக்குங் கிழக்கு வடபாற்கெல்லை ஊர் வாய்க்காலுக்குத் தெற்கும் இன்னான் கெல்லையுள்ளகப்பட்ட நிலம் சக் . . . தேவப்பெருஞ் சோறும் பட்டமும் . . . நங்கைப் பெருஞ் சோறும் குட்டி நங்கையுமாக மாகறல் நி[ ல*]வளவு கோலால் பதினா[ லு ]ம் . . .

4 வராக குடியிருக்கும் நக்கநான எழுவன் நாகனுடையநு . . . தாவான் கடைமனையு ...... [கு]டைய்யாகியாற் குழி கூ இம்மனை குழி ஒன்பதுமுட்பட விற்றுக் குடுத்தோம் இந்நிலத்திற் போகத்துக்கு வந் . . . கோக சுற்றுக் கூறு சுற்றந்திரங்கக் குடுக்கக் கடவோமாகவும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 40 |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 1290 |
| ஊர்: | மாகறல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | — |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | தெலுங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 3 |
| அரசன்: | விஜயகண்ட கோபாலன் | | |

இடம்: திருமாகறல் ஈசுவரமுடையார் கோயில் மகாமண்டப வடபுறபட்டி

குறிப்புரை: தெலுங்குச் சோழமன்னன் விஜயகண்ட கோபாலனின் 40ஆவது ஆட்சி யாண்டைச் சேர்ந்தது இக்கல்வெட்டு. காலிங்கராயன் என்பவர் தேவதானமாக நிலம் வழங்கிய செய்தியைக் கூறுகின்றது. ஆரம்பமும் முடிவும் இன்றி மிகவும் சிதைந்த நிலையில் உள்ளது.

## கல்வெட்டு:

1 [க]ண்டகோபால தேவர்க்கு [ய]ாண்டு ௪௰ ஜயங்கொண்டசோழ மண்டலத்து எயிற்கோட்டத்து மாகறல்நாட்டு மாகறல் உடையார் திருவகத்தி[ஸ்வர] முடைய நாயனார்க்கு அய[ண]பிராந் கிழவன் . . . காங்கேயராயனேன் . . . சடையார் பக்கல் நான் காணிகொ . . . தேவதானம் . . . செய்வான் . . . தண்டலத்து ண்ட . . .

2 ட்டுவித்துத் தருகையில் இதுக்கு இரக்ஷையாக இந்தக் காய்வான் கரை [கீ] லழத்துத் தென்பார் . . . கீழ்வாயில் . . . காலுக்கு வடக்கு . . . டவம் இந்த காலில் விட்ட . . . னமாக விட்டேன் இதுக்கு . . . கிழக்கடைய [நிலத்துக்கு] . . . க்காணி இறையிலி தேவதான . . . ரும் கடமை . . .

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **4/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 12, 13-ம் நூற்றாண்டு |
| **ஊர்:** | மாகறல் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | | |
| **அரசன்:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 4 |

**இடம்:** திருமாகறல் ஈசுவரமுடையார் கோயில் மகாமண்டபத்தின் வடபுற ஜகதி.

**குறிப்புரை:** காய்வான் தண்டலத்து சபையோர் தங்களது நிலங்கள் சிலவற்றை நாலாயிரத்து நானூறு நற்பணத்திற்கு கோயிலுக்கு விற்றுக் கொடுத்த செய்தியும் அதன் எல்லைகளும் வரிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆரம்பம் காணப்படாத இக் கல்வெட்டு மிகவும் சிதைந்த நிலையிலுள்ளது.

**கல்வெட்டு:**

1 [நாய]ற்றுக் கிழமையும் பெற்ற உத்தராடத்து . . . மண்டலத்து . . . த்து . . . காங்கே யராய . . . தலை படாகைகள் நீக்கி நாங்கள் . . . த்த . . .ட்டுவித்து

2 [ ல ]த்துச் சபையோம் காணி விலைப்ராமண. . . தண்டலத்துக்தென்பாதி . . . . மூங்கி. . . . பட்டுப் பொதுபடனோ .. . . கின்றினி பெருமாள் கோயிலுக்கு மேலை குளத்தில் வடகீழை [சுற்று] இக்குளக்கை[ ரஉ]ட்பட மேற்கும் நத்ததில் தெற்கு வடக்கான மேல் . . . நீக்கி இத்தே .. . . க்கும் இத்தெருத்தென் கிழக்கு நோக்கின் ஒழுங்கை வர ஆற்றுப்பாதியாக தெற்கும் இவ்வாறு .. . . மேற்கும் தென்[பா] ற்கெல்லை இவ்வாற்றுப் பாதியாக மே

3 ற்றவேலிக் கல்லுக்குக் கிழக்கும் இன்னும். . .மற்கு. . .டும் மாகறல் எல்லைக்கு வடக்கு . . . லும்குழி. . . வாக இக்காய்வான்தண்டலத்துப் பெரிய . . . ற்கெல்லை இ[ம்]மூங்கிற் பட்டுடல் [வே]வலிக்கும் வயலூர் எல்லைக்கு[ம்] இன்னும் இக்காய்வான் தண்டலத்துச் சிற்றே. . . கரைத் தாங்கல் வடகரைக் . . .ரை உட்பட்டது இங்கும் இவ்வேரிகரை [அ]டங்க வானவன்மாதேவி வாய்க்கால் கிழக்கு நோக்கி. . .பாயச் செய்ய செப்ப. . . செறுக்கீழ் கூற்று . . . கீழை மூலை

4 [ங்]கலும் இவ்வேரிகளிலே திரவாய் நிலங். . .ங்குழிகளும். . .க்கலும் ஆக நத்தத்தெல்லை . . .யிந் நாற்பாற்கெல்லைக்கும் வரும் உடைமை உரிமை . . . . கானாயங்க. ல் உள்ப்பட இத்தென்பாதி பேரிநத்து நில[மும்] [நி]லங்கள்... [ரு]பற்று இக்கடுவை. . . தான எம்மிலிசைந்த விலைப் பொருளன்றாடு வ[ர]ாகன் நற்பணம் நாலாயிரத்து நானூற்றுக்கு இவ்வ......த்து நான். . .பக்கல் நாங்கள் கைக் கொண். . . .

5 [ப]க்கல் தாங்கள் கைக்கொண்ட நற்பண[ம்] இ[ரு]பத்தாறும்ஆக பண[ம்] நாலாயிரத்து நானூ(ற்)று இப்படி. . . .ம் காய்வான் தண்டலத்து ஸபையோம் நாங்க[ள் இ]வர்க்கு விற்று[க்கு]டுத்த இன்னாற்ப[ாற்] கெல்லைக்கும் உட்பட்ட நிலத்து க்கு எப்[பேர்ப்]பட்ட கலனும் இல்[லை]. . . னுள் வாய்த்தெரிற்றல் நாங்களே கா[த்துக்]குடுக்கக் கடவோமாகவும் இதுக்கு இதுவே விலை[ப்பொருள்] ஆவதாகவும் இன்னிலம் இவர்க்குற்று ஒற்றி ஆக

6 திருச்சூலக்கல்லுக்கு வடக்கு எங்களுதான பாதிக்குநிலம் அறுபத். . பதே காலும் . . . . பாதியில் வேறு பிரித்து இறுக்கும் . . . போந்தது நிலம் மூன்றுக்கும் இவ்வூர் நிறுத்தி இறுக்கும் தச்ச விழுக்காடு இறுக்[க க]டவதாகவும் ஏரி[யில்] முன்பிலாண்டுகள் பாயும் முறைமையி. . . [நில]த்துக்கு நீர்பாயக் கடவ தாக[ வு ] ம் இன்னாற்பாற்கெல்லை களில் வேண்டும் இடங்களிலே கல்லும் மரமும் நட்டு இன்னிலம் வேறு பிரித்து. . .ம் இடுவித்து தாங்கள் சுந்தர நல்[ லூர்] என்று நாமமும்

7 காய்வான் தண்டலத்து ஸபையோம் ஸபையார். . .இந்த. . .முதி இப்படிக்கு கல்லு வெட்டிக்குடுத்தமை. . .இப்படிக்கு இவை கந்தாடை நாராயண ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை கந்தாடை ஆண்டபிரான் அருளாள பட்டன் எழுத்து இப்படி[க்கு*]ய [மூ*]ர்த்திபட்டன் எழுத்து இப்படிக்கு இவை கந்தாடை வரதராசபட்டன் எழுத்து இப்படிக்கு இவை [ (உ]லாசன பட்டன் எழுத்து இப்படிக்கு இவை பவிலகன் ய. . .ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை கந்தாடை அனஞ . . .

8 ந்தாடை இளையஎ ஜூ மூர்த்தி பட்டன் எழுத்து . . . ராஜபட்டன் எழுத்து இப்படிக்கு இவை. . .எழுத்து இப்படிக்கு இவை கா. . .எழுத்து வேகம்ப பட்டன் *ஸயிஜூ* யானமைக்கு இது... *ஸஷி*[நெ]ய் நின்றான் [பட்]டன் எழுத்து [இப்படிக்கு இவை] . . . . யண ஹட்ட [ன் எழுத்து] .. . . ஹட்டன் [எழுத்து] . . . .

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண்: 5/2005**

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.12-ம் நூற்றாண்டு |
| **ஊர்:** | மாகறல் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 5 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** திருமாகறல் ஈசுவரமுடையார் கோயில் மகாமண்டப வடபுற ஜகதி

**குறிப்புரை:** நில விற்பனை பற்றிக் கூறும் சிதைந்த துண்டுக் கல்வெட்டு

**கல்வெட்டு:**

அ

1 . . . .ண்டல . . . . . . . . . . . . . . . . . . .

2 . . கச்சே. . .க்க....ல கீழை வரம்புக்கு மேற்கும் . . .செவ்வை இராஜேந்திர சோழ விண்ண.. . . .

3 .. . . இவ்வேரி கரை உட்பட ஆழ்வான் பட்டுடல். . . . மூங்கிற் பட்டுடல் வ[ட]க்கும் கிழக்கும். . . . .

4 றைக்கும் ஏத்த[த]லைகளும் ஆற்றுப்பரிசியமும் . . . . வழி போக்குடமனும் பொதுவும் போதாதி . . .

5 த்து அய[ல்வீர] கிழவன் தேவர்கள் சுந்தர[ன்] நின்றநம்பி ஆன காங்கேய ராயர்க்கு . . .

6 வரு[பட]மனையும் மனைப்படப்பும் உட்பட இத்தென்பாதி ஐம்பத்து[க்] கோல் வேலி[க்கு ] . . .

7 . . .இவை கந்[தாை]டக் கோவிந்த பட்டன் எழுத்து இப்படிக்கு இவை கந்தாடை திருவ[ ரங்]க பட்டன்

8 . . . .இப்படிக்கு இவை கந்தாடை நாராயண பட்டன் எழுத்து இப்படிக்கு இவை கந்தாடை. . .

ஆ

1 றுக்குலையாவ[ து] கீழ்பாற் கெல்லை . .

2 கரை மாகறல் எல்லைக்குக் கிழக்கும் . . . .

3 . .கோ. .களும் நீரோடு கால்களும் இவ்வாற்று . . .

4 விலைப்பிரமாணம் பண்ணிக் குடுத்தோம் அரை .

5 . . . வரக . . . ற்ற எல்லைக்குக கிழககு [illegible] . . .

6 ..பெ.. கன் வளையமழகியான் எழுத்து

7 . . . இப்படிக்கு இவை . . . . . .

த.நா.அ. தொல்லியல்துறை | தொடர் எண்: 6/2005

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 5 |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு: | — |
| ஊர்: | மாகறல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 217/1901 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | S.I.I. Vol. VII No. 430 |
| அரசு: | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 6 |
| அரசன்: | | | |

**இடம்:** திருமாகறல் ஈவரமுடையார் கோயில் மகாமண்டப வடபுற ஜகதி

**குறிப்புரை:** ஜெயங்கொண்டசோழ மண்டலத்துக் காலியூர்க் கோட்டத்து பாகூர் நாட்டு உக்கல் என்ற விக்கிரமாபரணச் சதுர்வேதிமங்கலத்து மகாசபையார் ஓர் ஊரையும் அவ்வூரிலுள்ள குளங்களையும் எல்லை சுட்டி விற்பனை செய்தனர். அதே மண்டலத்தைச் சேர்ந்த ஈக்காட்டுக் கோட்டத்து காக்கலூர் நாட்டு செலை என்ற ஊரைச் சேர்ந்த வாணிகன் படம்பக்கநாயகன் அழகியபெருமாள் என்பவர் அவ்வூரை விலைக்கு வாங்கினார். அவ்வூர் விக்கிரமாபரணச் சதுர்வேதிமங்கலத்தின் பிடாகை ஸ்ரீ கிருஷ்ணச்சேரி என்பது. இவ்வூருக்கு எல்லைகள் விரிவாகச் சொல்லப் பட்டிருக்கின்றன. இவ்வூருக்கு விலையாக அன்றாடு நற்பழங்காசு 80 வாங்கிக் கொண்டு விலைப் பிரமாணம் செய்து கொடுத்தனர்.

இந்நிலத்திற்கு எந்தவொரு கலனுமில்லை (வில்லங்கம்) அவ்வாறு உள்ளதாகத் தோன்றினால் அதை நாங்களே தீர்த்துக்கொடுப்போம். இந்த ஊரை இவரே விற்று ஒற்றி வைத்துக் கொள்ளலாம்.

இவ்வூர்க் கண்காணி, ஆகவி, போன்ற பணிகளையும் விலைக்கு வாங்கி அவ்வூரைக்காணி உடையவராகிய படம்பக்கநாயகரே செய்துகொள்ளலாம் என்றும் சம்மதித்து மேற்கூறிய சதுர்வேதிமங்கலத்துச் சபையார் விலைப்பிரமாணம் செய்து கொடுத்தனர்.

இக்கல்வெட்டை சபையார் பணிக்க எழுதியது ஊர் மத்யஸ்தன் ஆவான். அவனது கையெழுத்தினைத் தொடர்ந்து 80 பேர் கையெழுத்திட்டுள்ளனர். முதலில் கையெ ழுத்திட்டுள்ள மத்யஸ்தனே இறுதியிலும் கையெழுத்திட்டுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

## கல்வெட்டு:

1 *ஸ்வஸ்திஸ்ரீ* திரு[வாய்க்கே]ழ்வி முன்னாகத் திரிபுவனச் சக்கர[வ]த்திகள் *ஸ்ரீ* ராசராச தேவற்கு யாண்டு ரு வது *ஸிംஹ* நாய[ற்று] அபரபக்ஷத்து பஞ்சமியும் புதன்கிழமையும் [பெற்ற அ]*ஸ்வ*தி நாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்துக்

காலியூர்க் கோட்டத்து பாகூர் நாட்டு உக்கலான விக்கிரமாபரண சதுவே௱திமங்கலத்து மஹாஸபையோம் இம்மண்டலத்து ஈக்காட்டுக்கோட்டத்துக் காக்கலூர் நாட்டு செலையில் வாணிகன் படம்பக்க நாயகன் அழகிய பெருமாளுக்கு நாங்கள் எங்கள் பிடாகையில் விற்றுக்குடுத்த [கூ௱ஷ்ண]ச்சேரிக் குளங்கள் எழுத்திட்டுக் குடுத்த வ௱மாணப்படியே கல்வெட்டுவித்துக் குடுத்த பரிசாவது இத்தேவர்க்கு யாண்டு நாலாவது [மிதுன]நாயற்று அபரபக்ஷத்துப் பஞ்சமியும் திங்கட்கிழமையும் பெற்ற சதையத்துநாள் ஜயங்கொண்ட சோழ மண்டலத்துக் காலியூர்க் கோட்டத்துப் பாகூர் நாட்டு உக்கலான விக்கிரமாபரணச் சதுவேதி மங்கலத்து[1] ஊஹாஸ[பை]யோம்

2 பூமி விலை[ப்வ௱மாணக் கையெ]ழுத்து இம்மண்டலத்து ஈக்காட்டுக் கோட்டத்துக் காக்கலூர் நாட்டுச் செலையில் வாணிகன் படம்பக்க நாயகன் [அழ]கியபெருமாளுக்கு நாங்கள் விற்கின்ற ஊராவது எங்களூர்க் கீழ்பிடாகை ஸ்ரீகூ௱ஷ்ணசேரிக்குக் கீழ்பாற்கெல்லை வயலையாற்றூர் எல்லைக்[கு] மேற்குந் தென்பாற்கெல்லை செய்யாற்றிலாறுபாதி உட்பட வடக்கு மேல் பாற்கெல்லை மாகற[ே]லரிக்குப் பாய்ந்த ஆற்றுக்காலுக்குக் கிழக்கும் வடபாற் கெல்லையிவ்வாற்றுக் காலுக்குத் தெற்குந் நாற்பாற்கெல்லைக்கு நடுவுபட்ட நீர் நிலமும் கொல்லை நிலமும் நத்தமனையும் மனைப்படப்பையு மேனோக்கின மரமுங் கீணோக்கின கிணறும் நீரும் நீர்பாய்ச்சலும் வழியும் வழிப்போக்கும் யாங்களுடைய படியே யுரித்தாவதாகவும் [நா]ங்களிவனுக்கு எம்மிலிசைந்த விலைப்பொருள் அன்றாடு நற்பழங்காசு அய இப்பழங்காசு எண்பதும் ஆவணக்களியே காட்டேற்றிக் கிழிகைச் செலவறக் கைக்கொ[ண்டு விற்று விலைப்பிரமாணம் பண்ணிக்குடுத்தோம் செலையில் வாணிகன் படம் ப[2]]க்க நாயகன்

3 அழகிய பெருமாளுக்கு [உக்க]லான விக்கிரமாபரணச் சதுவே௱தி மங்கலத்து மஹாஸபையோம் இப்படி இவனுக்கு விற்றுக் குடுத்த [இவ்]வூர்க்கு எப்பேர்ப்பட்ட கலனுமில்லை கலனுள்வாய்த் தோன்றில் நாங்களே தீர்த்துக் குடுக்கக் கடவோமாகவும் இதுக்கு இதுவே விலையாவதாகவும் இவ்வூரிவனுக்கு விற்றொற்றி வ௱திகூ௱ய தானங்களுக்குரித்தாவதாகவும் இவ் வூர்க்கு ஊர்க்கணக்காணியுடையனும் ஆசுவிகளும் பண்டோடு பழநடை காணி யுடையவனே செய்யக் கடவதாகவும் இப்படி சம்மதித்து வ௱மாணம் பண்ணிக் குடுத்தோம் செலையில் வாணிகன் படம்பக்க நாயகன் அழகிய பெருமாளுக்கு உ[ க்க]லான விக்கிரமாபரணச் சதுவெ௱தி மங்கலத்து மஹாஸபையோம் இப்படிக்கு ஸபை பணிக்கவெழுதினேன் இவ்வூர் மத்யஸ்தன் பெருங்குறி உக்கலுடையான் திருவத்தியூராழ்வான் சூரிய தேவனெழுத்து இப்படிக்கு இவை வ௱யாகைக் கேசவபட்டனெழுத்து இப்படிக்கு இவை வ௱யாகைக் கேசவபட்டனெழுத்து இப்படிக்கு இவை வ௱யாகைச் சிங்கபி[ ரான் பட்டனெழுத்து இப்படிக்கு இவை வ௱யாகை வெண்ணைக் கூத்த பட்டனெ[3] ]ழுத்து

4 இப்படிக்கு இவை வ்யாகை அரு[ள]ாள பட்டனெழுத்து இப்படிக்கு இவை காராம்பிச்செட்டு அருளாளபட்டனெழுத்து இப்படிக்கு இவை வ்யாகை இளை[ய சீ]ராமபட்டனெழுத்து இப்படிக்குகிவை வ்யாகை [இ*]ளைய திருவாக்குலப் பட்டனெழுத்து இப்படிக்கு இவை வ்யாகை வரதராசப் பட்ட னெழுத்து இப்படிக்கு இவை மொட்டைப்புறத்து அத்தாம பட்[ட]னெழுத்து இப்படிக்கு இவை வ்யாகைச் சீராம பட்டனெழுத்து இப்படிக்கு இவை கோட்டூர்ப் பின்போன வில்லிபட்டனெழுத்து இப்படிக்கு இவை கோட்டூர் வாமன பட்டனெழுத்து இப்படிக்கு இவை கெங்காதர பட்டனெழுத்து இப்படிக்கு இவை முடும்பை மதுரைப்பிரான் பட்டனெழுத்து இப்படிக்கு இவை முடும்பை இராமபிரான் பட்டனெழுத்து இப்படிக்கு இவை கோட்டூர் ஆட்கொண்டவில்லி பட்டனெழுத்து இப்படிக்கு இவை மங்கலூர் திருவேங்கடப[ட்*]டனெழுத்து இப்படிக்கு இவை மங்கலூர் *ஸ்ரீ க்ருஷ்ண* பட்[டனெழுத்து இப்படிக்கு இவை மங்கலூர் *எஜ்ஞ*மூர்த்தி பட்டனெழுத்து இப்படிக்கு இவை[4]] முடும்பை

5 நாராயண பட்டனெழுத்து இப்படிக்கு இவை ஓதிமுக்கில் நாராயண பட்டனெழுத்து இப்படிக்கு இவை வ்யாகை நத்தகோபால பட்டனெழுத்து இப்படிக்கு இவை வ்யாகை *எஜ்ஞ* நம்பி பட்டனெழுத்து இப்படிக்கு இவை வ்யாகைத் திருவாக்குல பட்டனெழுத்து இப்படிக்கு இவை அட்டாம புறத்துத் தேவராச பட்டனெழுத்து இப்படிக்கு இவை ஐயக்கிச்சிய்யம்தா[த]னெழுத்து இப்படிக்கு இவை அரணைப்புறத்து *ஸ்ரீ க்ருஷ்ண* பட்டனெழுத்து இப்படிக்கு இவை அரணைப்புற[த்து] வெண்ணைக்கூத்த பட்டனெழுத்து இப்படிக்கு இவை கண்டேற்று இளைய பள்ளிகொண்டான் பட்டனெழுத்து இப்படிக்கு இவை கண்டேற்று வீரநாராயண பட்டனெழுத்து இப்படிக்கு இவை கொட்டி ஆட்கொண்டவில்லி பட்டனெழுத்து இப்படிக்கு இவை கண்டேற்று *ஸ்ரீ க்ருஷ்ண* பட்டனெழுத்து இப்படிக்கு இவை கண்டேற்று கேசவ பட்டனெழுத்து இப்படிக்கு இவை கண்டேற்றுப் பொருளாள பட்டனெழுத்து இப்படிக்கு இவை வெண்ணைக் கூத்தபட்டனெழுத்து இப்படிக்கு இவை கண்டே[ற்று இளைய *ஸ்ரீ க்ருஷ்ண* பட்டனெழுத்து இப்படிக்கு இவை கண்டேற்றுக் கோலவராக பட்ட]னெழுத்து

6 இப்படிக்கு இவை பாடகத்து உலோக *ஸாக்ஷி*பட்டனெழுத்து இப்படிக்கு இவை கண்டேற்று சூரியதேவ பட்டனெழுத்து இப்படிக்கு இவை கண்டேற்று ஆளவன்தான் ப[ட்*]டனெழுத்து இப்படிக்கு இவைவ்யாகை கோவிந்த பட்டனெழுத்து இப்படிக்கு இவை மொட்டைப்புறத்து இளைய வாமன* பட்டனெழுத்து இப்படிக்கு இவை மொட்டைப்புறத்து *ஸ்ரீ க்ருஷ்ண* பட்டனெழுத்து இப்படிக்கு இவை மொட்டைப்புறத்து இளைய அத்தாம பட்டனெழுத்து இப்படிக்கு இவை கண்டேற்றுப் பள்ளிகொண்டான் பட்டனெழுத்து இப்படிக்கு இவை வ்யாகை இராமபிரான் பட்டனெழுத்து இப்படிக்கு இவை வ்யாகைத் திருவேங்கட பட்டனெழுத்து இப்படிக்கு இவைவ்யாகை

நின்ற நாராயண பட்டனெழுத்து இப்படிக்கு இவை ஐயக்கிக் கேசவ பட்டனெழுத்து இப்படிக்கு இவை வ௲யாகை நாராயண பட்டனெழுத்து இப்படிக்கு இவை செருப்பள்ளி மாதேவபட்டனெழுத்து இப்படிக்கு இவை மொட்டைப்புறத்துத் திருவேங்[கட] பட்டனெழுத்து இப்படிக்கு இவை மொட்டைப்புறத்து வாமன பட்டனுக்கு இக்குடி திருவேங்க[ட] பட்ட னெழுத்து இப்படிக்கு இவை பாடகத்து நந்த கோபால பட்டனெழுத்து இப்ப][6]டிக்கு இவை

7 பிறாந்தூர் அருளாளபட்டனெழுத்து இப்படிக்கு இவை வங்கிப்புறத்து ஐயப்பிள்ளையெழுத்து இப்படிக்கு இவை செருப்பள்ளி பற்[ப]நா[ப*] பட்டனெழுத்து இப்படிக்கு இவை உக்கலுடையான் [அரு]ம பிரானெழுத்து இப்படி அறிவேன் [உக்]கல் சிவப்பிராமணன் குனிக்கும் பிரான் பட்ட னெழுத்து [இப்படி அறிவேன்] சிவப்பிராமணன் ஆண்டான் பட்டனேன் உக்கல் திருவடிப் பிடிக்கும் பிரான் புறத்து ஸ்ரீகூரஷ்ண பட்டனேன் இப்படி அறி வேன் நாபிதந் கைத்தா[னே]ன் இப்படி அறிவேன் தட்டாந் சீருடை கழலா [ சாரியனேன்] இப்படி அறிவேன் இவ்வூர் தச்ச(ச) நாராயணன் திருவகத்தி [யான] ஆயிரத்திருநூற்றுவ ஆ[சா]ரியனேன் இப்படி அறிவேன் கருமான் [அத்த[ா*]ணி] செல்வனேன் இப்படி அறிவேன் மாகறல் நெற்[குன்றங் கி]ழான் புலி யன் திருவிருந்தபெருமாளேன் இப்படிஅறிவேன் மாகறலில்ஊரங்கி ழா[ன்]திருப்பேர் திருவகத்திசுரமடையானேன் இப்படி அறிவேன் வானவன் விழுப்பரயனே[ன் இ]ப்படி அறிவேன் ஊரங்கிழான் வளவ மூவேந்[த வேளானேன் இப்படி அறிவேன் ஏனாதி கிழவனேன் இப்படி அறிவேன் பட்டியர் போச][7]ன் அருளாளனேன்.

8 [இப்படி அறிவேன் சிவப்பிராமணன் நாற்பத்தெண்ணாயிர பட்டனேன் இப்படி அறிவேன் கோயிலான் தேவப்பெருமாளேன் இப்படியறிவேன் இவ்வூர் ஊர்க்கணக்கு மாகறல் உடையான் அரசனேன் இப்படியறியேன் வயலையாற்றூர்ச் சிங்[களத்தர]யனேன் இப்படியறிவேன் நிலமங்கல முடையா[ன்*] அண்டி......ப்படியறிவேன்.....மங்கல முடையான் செந்தாமரைக் கண்ணன் உய்ய வந்தானேன் இப்படியறிவேன் இ[வ்*]வூர்ப்பள்ளி உடையான் இலுப்பை மரக்கிழான் உபையா[தி]த்தனேன் இப்படியறிவேன் இவ்வூர் வெண்ணை நல்லூழான் திருவையாறுடையான் மதுரவாசகனேன் இப்படிக்குச் சிலாலேகை பண்ணிக் குடுத்தமைக்கு ஸபையார் பணியால் இவ்வூர் மத்யஸ்த[ன்] உக்கலுடையான் திருவத்தியூராழ்வான் தா......... னெழுத்து.[8]]

---

(1)(2)(3)(4)(5)(6)(7)(8) - அடைப்புக்குறியுள் உள்ள பகுதிகள் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி VII No: 430ல் இருந்து தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **7/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.11-ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | மாகறல் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 7 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** திருமாகறல் ஈசுவரமுடையார் கோயில் திருச்சுற்றுமாளிகையின் தூண்.

**குறிப்புரை:** இவ்வூர்ச் சிவன் கோயிலுக்கு வாணியன் ஒருவன் நிலமும் பொன்னும் வழங்கிய செய்தியைக் கடறும் கல்வெட்டு இது. தொடக்கமின்றி காணப்படுகிறது.

**கல்வெட்டு:**

1 உலக்கு கொண்ட நி
2 லம் *வ க ஸ* இ ஊ
3 ர் நிலமான இதன் கீழை
4 ழக்க. வாணியன் [விட்]
5 ட நிலம் *ஸ உ வ* வு
6 *ஸ*ம் ஆக நிலம் .....
7 .. இப்பொன்னுக்
8 கு பலிசை செகுத்து
9 *ப* [ே]*ஷ்ஷ்ர* தேவரே[ய்]
10 கண்[டு இ]வர்க் கொள்
11 ளக் குடுத்தோம் செலு
12 . . . இவைய் . . .
13 டுக்கொண்டு கழ ... துகின்
14 ஊர் கன்மி [ செ]ய்யன் எ
15 முத்து.

| த.நா.அ. | தொல்லியல்துறை | தொடர் எண்: | 8/2005 |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | — |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு: | கி.பி.13-14-ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | மாகறல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | — |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | — | ஊர்க் கல்வெட்டு எண்: | 8 |
| அரசன்: | — | | |

**இடம்:** திருமாகறல் ஈசுவரமுடையார் கோயில் மகாமண்டபம் தென்புற ஜகதி.

**குறிப்புரை:** சிதைந்த துண்டுக் கல்வெட்டு. மாநியமாக நிலக்கொடையளித்த செய்தியைக் கூறுகிறது.

## கல்வெட்டு

### அ

1 . . . கொண்டுடை

2 . . . யார்க்கும் மே

3 ப்பதுக்கு . . .

4 [நிலம்] மாநியமாகவா

5 . . . குடுத்தேன் கட

6 [ ளொ ] தியன் பாக்கம் இவ

7 . . . பாக்கம் விலை . . .

### ஆ

1 . . . பாகூர் நாட்டு உ[க்கலா]ன விக்கிரமாபரணச் சதுர்வேதிமங்கலத்து மஹா ஸ . . .

2 ண்டு விற்று விலைப்பிரமாணம் ப[ண்]ணிக் குடுத்தோம் செலையில் வாணிகன் பட்டிப . . .

3 ரான் பட்டனெழுத்து இப்படிக்கு இவை ஸ்ரீயாகை வெண்ணைக் கூத்[ த ] பட்டனெ. . .

4 ட்னெழுத்து இப்படிக்கு இவை[வ] மங்[க]லூர் எஜ்ஜமூர்த்தி பட்டனெழுத்து இப்படிக்கு இவை . . . . .

5 மற்று இளைய ப[ட்]டனெ[னெ]ழு[த்]து இப்படிக்கு இவை கண்டேற்றுக் கோ[ல]வராக பட்ட ........

6 ட பட்டனெழுத்து இப்படிக்கு பாடகத்து நந்தகோபாலனெழுத்து இப்ப.......

7 த வேளானேன்[ன்] இப்படி அறி[வேன்] ...னா....ழ்வனேன் இப்படி அறிவே[ன்] பட்டிப்போசன் பெ.....

## இ

1 . . . வ௺ஊணஓ [ திருமாக]றலீசுரமுடையார் . . .

2 . . . டைபுறத்து . . .   . . .

3 புலியூர்கோட்ட . . . பாக்கத்து பெ . . .

4 இசைந்த விலைப்பொருள் அன்றாடு . . .

5 [எ]ல்லை இந்த எழா . . . எல்லைக்கும் அகரம் பாகூ[ர்].

6 [ எ ]ல்லைக்கும் தெற்கும் இந்நான்கு எல்லை உட்பட நத்தமு

7 முன்னூற்று அறுபதும் இந்த மத்தயன் பாக்க . . .

8 . . . கொல்லை பெற . . . வும் இருகாலாவது . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 22 |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு: | 1272 |
| ஊர்: | மாகறல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 150/1923 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | தெலுங்கு சோழர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 9 |
| அரசன்: | விசையகண்டகோபாலன் | | |

**இடம்:** திருமாகறல் ஈசுவரமுடையார்கோயில் மகாமண்டபத் தென்புற ஜகதி.

**குறிப்புரை:** ஜெயங்கொண்ட சோழமண்டலத்து எயிற்கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல் என்ற இந்த ஊரிலுள்ள திருவகத்தீசுரமுடைய நாயனார் கோயிலுக்குச் சந்திவிளக்கு ஒன்று எரிப்பதற்கு இவ்வூர் ஊரங்கிழான் நாயகன் சாமுண்டி தென்னவன் என்பவன் கழஞ்சே காலே அரைக்கால் பொன் தானமளித்தார். இப்பொன்னை, இக்கோயில் காணியுடைய திருவுண்ணாழிகைச் சபையார் பெற்று விளக்கெரிக்கச் சம்மதித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு:

1 *ஸ்வஸ்திஸ்ரீ* திரிபுவன சக்கரவத்திகள் *ஸ்ரீ* விசையகண்ட கோபால தேவற்கு யாண்டு [ *உயஉ* இரு]பத்தி [யிர

2 ண்டா]வது செயங்கொண்டசோழ மண்டலத்து எயிற்கோட்[ட]த்து மாகறல் நாட்டு மாகறல் உடையார் திருவகத்தீசுரமுடைய

3 நாயனார்க்கு இவ்வூர் ஊரங்கிழான் நாயகன் சாமுண்டி தென்ன வ[ன்] திரு சந்தி விளக்கு இவ்விளக்கு ஒன்றுக்கும் இ[ந்]

4 நாயனார் கோயில் காணி உடைய திருவு[ண்*]ணாழிகைச் சபையோம் இ[துக்கு] கைக்கொண்ட பொன் *கயஎகூ* இப்பொ

5 ன் கழஞ்சே காலே அரைக்காலும் கைக்கொண்டு இச்[ச]ந்தி விளக்கு ஒன்றும் உபையமாகச் சந்திராதித்தவரை

6 எரிக்கக் கடவோமாகச் சம்மதித்தோம் திருவுணாழிகைச்சபை யோம் இது *ஸ்ரீமாஹேஸ்வர* ரக்ஷை

---

(1) இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை 150/1923 ன்படி தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **10/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 10 |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | 1156 |
| **ஊர்:** | மாகறல் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 219/1901 |
| **மொழி:** | தமிழ் | **முன் பதிப்பு:** | S.I.I. Vol. VII No. 432 |
| **எழுத்து:** | தமிழ் | | |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 10 |
| **அரசன்:** | இரண்டாம் இராஜராஜன் | | |

**இடம்:** மாகறல் ஈசுவரமுடையார் கோயில் கருவறை தென்புற ஜகதி.

**குறிப்புரை:** இரண்டாம் இராஜராஜ தேவனுடைய ஆட்சியின்போது ஆற்றுத்தண்டலத்து ஊர் சபையாருடன் மங்கலங்கிழான் திருவன் செல்வன் நீர் வழக்காட்டு காரணமாக சண்டையிட்டுக் கொண்டபோது பிரமாதி என்பவன் இறந்தமையால் இதற்கு பிராயச்சித்தமாக அவ்வூர் சபையோரால் அகத்தீஸ்வரமுடையார் கோயிலில் விளக்கு வைக்க 1000 குழி நிலம் வழங்கப்பட்டது. நிலத்தின் எல்லைகள் குறிப்பிடும்போது சுருட்டில் எல்லை, கூத்தன் பட்டி, குளகுந்தன்பட்டி, முக்காற்பட்டி போன்றவை சுட்டப்பட்டுள்ளன.

## கல்வெட்டு:

1 *ஸ்வஸ்தி ஸ்ரீ* [||*] கடல் சூழ்ந்த பார் மாதரும் சீர்மாதரும் அ[ட]ல் சூழ்ந்த போர் மாதரும் அமர்ந்[து] வாழ னாற்கடல் சூழ்ந்[த*] புவி ஏழும் கடல் போ[ல்] புகழ் பரப்ப ஆதி உலகமாமெனச் சோதி முடி அணிந்தருளி அறுசமையமும் அ[ஞ்] .. மும் நெறியில் நின்[று*] பா[வி]க்கத் தெந்னவருஞ் சேரலரும் சிங்களரும் முதலாய மன்னவர்கள் திறை சுமந்து வந்தீண்டிச் சேவிப்ப ஊழி ஊழி ஒரு செங்கோலா[ழி] பாரு மினி தளிப்பச் செம்பொன் வீர ஸிங்காசனத்து உலகுடை முக்கோக்கிழாநடிகளோடும் வீற்றிருந்[த*] ருளிய கோப்பர (கொப்பர) கேசரி பற்மரான திரிபுவநச்சக்க

2 ரவத்திகள் ஸ்ரீராஜராஜதேவற்கு யாண்டு *ய* ஆவது ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் காலியூர்க் கோட்டத்து ஏரிகீழ்னாட்டுக் குண்டி ஆற்றுத் தண்டலத்து ஊர்க்குச் சமைந்து மழவந் கூத்தந் களியநும் வெண் கிழவன் நம்பி உதையஞ் செய்தாநும் மதிதி செல்வன் கூத்தனும் சோபுரவனா வலியநும் கல்லை கிழவன் திருவன் உடையாநும் இக்குடி திருவையாறன் நாவஸியநும் [இ]க்குடி அத்தியூரன் பிச்சநும் வண்ணக்கன் ஆதித்த தேவன் ஒற்றி கொண்டானும் மத்தி பெற்றா[ன்*] உ

3 தையஞ்செய்தானும் இ[வ்*]வனைவோம் சுரு[ட்டில் எல்லை]யில் மங்கலங்கிழாந் திருவன் செல்வனு[ம்] எங்களுடன் நீர் வழக்காட்டுச் சுட்டி பிணக்கின இட[த்*]து இம்மங்[க*]ங்கிழாந் ப்ரமாதிப் பட்டமையில் இதுக்கு ப்ராயச்சித்தம் வி[தி*]த்த படிக்கு நாங்களிம்மண்டலத்து எயிற்கோட்டத்து மாகற[ல்*] நாட்டுத் திருமாகறல் ஆளுடையார் திருவகத்திஶ்வரமுடையார்க்குச் சந்திராதித்த வரை செல்வதாக வைத்த திரு[நு]ந்தா விளக்குக்கு எங்களூர் கீழ்கழநியில் விட்ட நிலமுந் திருவுலகளவின்படி பந்நீரடிக்கோலால் குழி ஆயிரத்துக்கும்கீழ்.

4 பாற்கெல்லை மேழி முடொங்குக்கும் புறக்கிணற்றுக்கு மேற்கும் (ந்) தெந்பாற் கெல்லை சுருட்டில் எல்லைக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை வெண்டியந் கிழவந் கூத்தன் பட்டிக்கும் ஊர் னிலம் குளகுந்தன் பட்டிக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை கல்லை கிழான் மாதை[ய*]ன்வலை முக்காற்பட்டிக்குத் தெற்க்கும் இன்னான் கெல்லை[யுள்]ளும் அகப்பட்ட னிலம் முக்காற்பட்டி கீழ் மூன்றும் கூத்தந்பட்டிக் கிழககடைய்க்கு இறும்புறக் கிணறு குழி ஐஞ்னூறும் ஆகத்தடி ஆயிரமு[ம்] சந்திராதித்தவற் செல்வதாக ॥—

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **11/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு :** | — |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி 13-ம் நூற்றாண்டு |
| **ஊர்:** | மாகறல் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | | |
| **அரசன்:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 11 |

**இடம்:** திருமாகறல் ஈசுவரமுடையார் கோயில் கருவறை தென்புற ஜகதி

**குறிப்புரை:** துண்டுக் கல்வெட்டு. நிலவருவாய்த் துறையைச் சேர்ந்த அதிகாரிகளின் கையொப்பங்கள் காணப்படுகின்றன.

**கல்வெட்டு:**

1 . . . டு லாடத்தரயன் கரு . . . இவை புரவரி சீகரணத்து முக[ெ]வட்டி தண்டலங் கிழா

2 வயனாட்டு எயந் எழுத்து இவைபுரவரி சிக[ர*]ண த்து முக[ெ*]வட்டி வடு[க]க்குடையார் எழுத்து

3 . . . புரவரி சிகரணத்து முக[ெ]வட்டி நெற்குப்பை உடையான் எழுத்து இவை புரவரி

4 சிகரணத்து முக[ெ*] வட்டி . . .

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **12/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 7 வருஷம்<br>194 நாள் |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | 1257 |
| **ஊர்:** | மாகறல் | | |
| **மொழி:** | தமிழும் சமஸ்கிருதமும் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 216/1901 |
| **எழுத்து:** | கிரந்தமும் தமிழும் | **முன் பதிப்பு:** | S.I.I.Vol. VII NO. 429 |
| **அரசு:** | பாண்டியர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 12 |
| **அரசன்:** | முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் | | |

**இடம்:** திருமாகறல் ஈசுவரமுடையார் கோயில் மகாமண்டப மேற்குப் புறபட்டி.

**குறிப்புரை:** சுந்தரபாண்டியன் திருநாளுக்கும் பூஜைக்கும் அமுது படிசாத்துப்படி உள்ளிட்டு சாசனமும் வழங்கப்பட்டது. தானம் அளித்த சிறுகம்பூர்வண்டு வராபதி வீற்றிருந்தானான பழந்தியரயான் ஒப்பமிட்டுள்ளான் சுந்தரபாண்டிய நல்லூரில் திருவருளாளீஸ்வரமுடைய நாயனார், விநாயகப்பிள்ளையார், அழிசியூர் உடையார், வரதராஜ விண்ணகர் எம்பெருமான், பிடாரி ஆகிய கடவுளர்களுக்கு நிலக்கொடைகள் அளிக்கப்பட்டன.

**கல்வெட்டு:**

1 *ஸ்வஸ்திஸ்ரீ ஸ்வஸ்தி ஸமஸ்த ஜமதாயார ஸொ[ம]கீஃ திஃக மயீராவீர மாயவ கெரமஊ வமஶ நிமூஃந ஶமகா ஷீவஃரண நஷீயராம சொஊ கஃஸெஶஃ கூ3ஃ கணாடக ராஜ விதா காமக கரி கீடவாகஃ விவியரி ஷஶமஶ[ூ*] மஷந வீர மணு மொவாஃ விவந தாவத ஹந காஃஷிஷரவராயீஸ்வர மணவதி ஹரிண*

2 *ஶாதூஃ நெஃர3ர வர வீரவித வீராஹிஷெக வணதராஜ வதிஷா வக மஹாராஜயிராஜ வரஜெஸ்வர திஹீவநவகவத்திகள்ஸ்ரீ ஸீஃரவாணுஜெவர் ஒெ சூ வெதி* மங்கலத்து பற்றான வங்காரத்து ஊரார்க்கு எயில் கோட்டத்து திருமாகறல் திருத்தீரமுடைய நாயனார்க்கு நம் பேரால் கட்டின சுந்தர

3 பாண்டியன் திருநாளுக்கும் பூஜைக்கும் அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்ட வேண்டுவனவுக்குடலாக தங்களூரில் நால்பாற்கெல்லைக்குட்பட்ட நன்செய் புன்செய் எப்பெயற் பட்டனவுக்கும் தாங்கள் இறுக்கும் கடமை பொன்[னா]க வினியோகம் ஆயவற்கம் உபாதிகள் உட்பட ஸவமாநங்களும் ஏழாவது நாள் நூற்றுத் தொண்ணூற்று[நாலு மு]தல் தேவதான இறை

4. இலியாகக் குடுத்து வரியிலும் கழிப்பதாகச் சொன்னோம் இவை இந்நாள் முதல் இக்கோயில் தானத்தார் வசமே குடுத்துப்போதவும் இப்படி . . . நான்கெல்லையும் திருச்சூலஸ்தாபனமும் பண்ணிக் கல்லிலும் செம்பிலும் பார்க்க வெட்டவும் இவை பாண்டிமண்டலத்து முத்தூற்றுக்கூற்று நாட்டு அந்தணூர்ச் சிறுகம்பூர் வண்டு

5. வராபதி வீற்றிருந்தானான பழந்தியராயன் எழுத்து இக்கல்வெட்டின் வங்காரமான சுந்தரபாண்டிய நல்லூரில் உடையார் திருவருளா[ளீஸ்வ ர முடைய நாயனார்க்கும்] விநாயகப் பிள்ளையார்க்கும் தேவதானம் குழி இரண்டாயிரத்து முன்னூற்றுநாலும் அழிசவூர் உடையார் அருளாளீஸ்வ ர முடைய நாயனார் தேவதானம் குழி தொளாயிரத்து அய்ம்பது

6. ம் மடப்புறம் குழி இருநூறும் வரதராஜ விண்ணகர் எம்பெருமான் திருவிடையாட்டம் குழி நானூறும் பிடாரி[ ப்*]பட்டி குழி நூற்று நாற்பத்து ஆறும் ஆக குழி *சஙு* இக்குழி நாலாயிரமும் இத்தேவர்களுக்கு *சந்த்ராதித்த*வரை செல்லக் கடவது ||

| த.நா.அ. | தொல்லியல்துறை | தொடர் எண்: | 13/2005 |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 11 |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 1144 |
| ஊர்: | மாகறல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 215/1901 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | S.I.I. Vol VII No. 428 |
| அரசு: | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 13 |
| அரசன்: | இரண்டாம் குலோத்துங்கன் | | |

இடம்: மாகறல் ஈசுவரமுடையார் கோயில் கருவறை கிழக்குச்சுவர்

குறிப்புரை: திருவகதீஸ்வரமுடையார் திருமடை வளாகமான பெரும்பற்றப்புலியூரில் இறைவன் எழுந்தருளியிருக்கும்போது வழிபட்டு மன்னன் இரண்டாம் குலோத்துங்கன் பல இடங்களில் உள்ள நஞ்சை புஞ்சை நிலங்களை இறையிலி தேவதானமாக வழங்கிய செய்தி கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு:

1 *ஸ்வஸ்திஸ்ரீ* பூமேவி வளர் திருப்பொ
2 [ன்]மாது புணர தாமேவு கலைமகள் நலம் பெரிது
3 சிறப்ப விசைய மாமகள் வெல்புயத்திரு
4 ப்ப விசையும் செல்வியு[ம்]மெண்டிசை வளர்ப்பநருபர்
5 வந்து இறைஞ்ச நீணில மடந்தையைத் திருமணம்
6 புணர்ந்து சீர்வளர்ந்த மணிமுடி கவித்தென மணிமுடி சூ
7 [டி] மல்[லை*] ஞாலத்துப் ப[ ல்*]லுயிர்ற்* கெல்லாமே . . .
8 [ ன்] [ம்] பமியல்புட நெய்[ய்*]த வெண்குடை நிழற்றச் செ[ ம்]
9 கொலோச்சி வாழிப[ ல்*] லூழியாழி நடப்ப செ[ ம்*]
10 [ பொன்] வீர*ஸிம்ஹாஸ*நத்துப் புவனமுழுது[ டையா ].
11 ளோடு வீற்றிருந்[ந்த*]ருளிய கோப்பரகே[ச]ரி பந்ம[*ரா*]
12 ன *த்ரிபு*வனச் சக்கரவத்திகள் *ஸ்ரீ* குலோ[த்]
13 துங்கசோழ தேவற்க்கு யாண்[டு] ௰[க] வ
14 து ஜயங்கொண்டசோழ மண்டலத்து

15 எயிற்கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல்
16 ஆளுடையார் திருவகத்தீஸ்வர முடையா[ர்]
17 திருவிளாகம் பெரும்பற்றப் புலியூரில் எழு
18 ஞருளி இருக்கப் பெரிய உடையார் தே
19 வாரத்தே கேட்டருளி இத்தேவற்கு
20 தேவதானம் இறையிலியாக வி
21 டுகவென்று திருவாய் மொழிந்தருள
22 இக்கோட்டத்து இன்னாட்டு இருமரமா
23 ன குலோத்துங்க சோழநல்லூர் இரு
24 பூ விளை நீ கப ரும் ஒரு பூவிளை நீ
25 உயக வ ரும் ஆக நயக வ
26 னால் வேலிக்கு ஐசநஎ அஉகதெக
27 ாநயகஎ வம்புஞ்சை நீ சருநஉ ரு
28 வேலி க க்கு ஐ ச
29 ள ஆக ஐ யஅாஉத
30 நம் ஆக புஞ்சை
31 [உ]ள்பட நீ சயநச
32 னால் ஊ கத கூகா நீ ய ா
33 காலியூர்க் கோட்டத்து புலிவலநாட்டு வேணா
34 ற்சேரியான சிவபாதசேகர நல்ஓூர் இருபூவிளை
35 நிலம் ரு இரு பூவிளை யச ஜ ஆ[க*] ருல நய
36 க்கு வேலி கக்கு ஊந ஆ[க*] ஊ கஜவார்ருயக
37 புஞ்சை கூக்கு வேலி சள ஆ ஐ உயசா...
38 [நு]ஞ்சை உள்பட நீ கூவக்கு விசைப்ப[ழ] ...
39 நாஎா நீ ஆக நீ எயகூவஉசனால் உகூகூா
40 உயரு ளங் நீ நெ[ல்*] லு இ[ரா]யிரத்துத் தொளாயிரத்து
41 [இ]ருபத்தைங்கலனே [முக்]குறுணிக்கும் யாண்டு
42 முதல் தேவதான இறை[யி]லியாக இட்டமைக்கு இ
43 ன [வ] புர[வு*]வரி சிக[ர]ண நாய[கம்] [இ]ரையூருடையாந் எழுத்து இ
44 வை புரவரி சிகரண [நாயகம்] இறையாந்குடி கிழவ[ந்]
45 எழுத்து ||

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **14/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | கீலக வருஷம் ஆடி மாதம் |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 16-ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | மாகறல் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | விஜய நகரர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 14 |
| **அரசன்:** | கம்பண உடையார் | | |

**இடம்:** மாகறல் ஈசுவரமுடையார் கோயில் திருச்சுற்றுச்சுவர் படி

**குறிப்புரை:** புவனேக பாகுதேவர் மகனார் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் என்பவருக்குத் திருமாகறல் உடைய நாயனார் கோயில் தானத்தார்கள் நிலமும் மனையும் கொடையளித்த செய்தி கூறப்பட்டுள்ளது. மடமும் அதன்கீழ் சிறையில் சம்பந்தநாயனார் கோயிலும் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளதால் இந்த அழகிய திருச்சிற்றம்பலமுடையார் மடாதிபதியாக இருத்தல் வேண்டும்.

## கல்வெட்டு:

1 ஸ்வஸ்திஸ்ரீ கம்பண உடைய[ர*]ர்க்கு நின்ற கீலக வருஷத்து ஆடிமாதம் உடையார் திருமாகறல் உடைய நாயனார் கோயில் தானத்தாரோம் புவனேகபாகுதேவர் மகனார் அழகிய திருச்சிற்றம்பலமுடையா[ர்*]க்கு நி[ல]ங்கள் இக்கோயில் வடக்கண் கண்காணி ஆட்சியாக சந்திராதித்தவரையும் செல்ல குடுத்தோம்

2 தமக்கு இலக்கைக்கு நாள் ஒன்றுக்கு குறுணி நானாழி நெல்லும் ஆண்டு ஒன்றுக்கு நாலு அரை பணமும் பெற்று இருக்க மடத்துக்கு கீழ்சிறகில் சம்பந்த நாயனார் கோயிலுக்கு தெற்கும் மனைகோல் இரண்டும் மனையும் மனைபடப்பையும் சந்திராதித்த வரையும் செல்லக் காணி குடுத்தோ[ம்*] இப்படிக்கு கல்[ லி* ]லும் செம்பிலும் வெட்டிக்[ கொ ] .....

3 குடுத்தோம் அழகிய திருச்சிற்றம்பலமுடையா[ ர்*]க்கு திருமாகறல் உடைய நாயனார் கோயில் தானத்தாரோம் இவை ந[ர*]கப்ப[ன் க]ண்ண[பிரப்] பட்டன் எழுத்து இவை பன்மாஹேஸ்வர ஸ்டின் எழுத்து இவை கச்சி ஏகம்ப பட்டன் எழுத்து உ இது ஸ்ரீ மாஹேஸ்வர ரக்ஷை ||

த.நா.அ. தொல்லியல்துறை | தொடர் எண்: 15/2005

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 20 |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 1236 |
| ஊர்: | மாகறல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 223/1901 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | S.I.I. Vol. VII No. 436 |
| அரசு: | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 15 |
| அரசன்: | மூன்றாம் இராஜராஜன் | | |

**இடம்:** மாகறல் வீற்றிருந்த பெருமாள் கோயில் கருவறை தென்புறக் குமுதம்

**குறிப்புரை:** மாகறல் என்ற ஊர், மாகறல் நாட்டு, எயிற் கோட்டத்து ஜயங்கொண்ட சோழ மண்டலத்தில் அமைந்திருந்தது. இவ்வூரிலுள்ள திருமேற்கோயில் என்றழைக்கப் பட்ட வீற்றிருந்த பெருமாள் கோயிலுக்கு ஒரு சந்திவிளக்கு எரிப்பதற்கு ஊரங் கிழான் திருவகத்தீசுரமுடையான் அருளாளன் என்பவர் ஒரு கழஞ்சு பொன் தான மளித்தார். அப்பொன்னைப் பெற்றுக் கொண்டு இக்கோயில் பெருமாளைத் திருவடி பிடிக்கும் நயமிசை வரதராசபட்டன் என்பவர் விளக்கெரிக்கச் சம்மதித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு:

1 *ஸ்வஸ்திஸ்ரீ* திரிபுவனச் சக்கரவ[ர்த்திகள் *ஸ்ரீ* ராஜராஜ[1]]தேவர்க்கு யாண்டு *உய* ஆது ஜயங்கொண்ட சோழமண்டலத்து எயி[ற் கோ] ட்ட[த்து மாகறல்] நாட்டு மாகறல்த் திருமேற்கோயில்

2 வீற்றிருந்த பெருமாளைத் தி[ருவடிப் பிடிக்கும்][2]நயிமிசை வரதராச பட்டனேன் இப்பெருமாளுக்கு இவ்வூர் [ஊரங்கிழான்][3][திருவ]கத்தீசுர முடையான் அருளாளன் சந்தி

3 விளக்குக்கு இட்டபொன் *கய* இ[ப்பொன் கழஞ்சும்][4] நான் கைக்கொண்டு நாள் ஒன்றுக்கு ஒரு [சந்தி]விளக்குச் சந்திராதித்த[வரை இடக்கடவேன்] இப்படிக்கிவை நயிமிசை வரத[ரா].

4 ச[பட்டனேன்][5]

---

(1) (2) (3) (4) (5) - அடைப்புக்குறியிட்ட இப்பகுதிகள் மிகவும் சிதைந்துள்ளன. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி எண் VII No. 436 ல் இருந்து எடுத்துத் தரப்பட்டுள்ளது.

| த.நா.அ. | தொல்லியல்துறை | தொடர் எண்: | 16/2005 |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | — |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு: | |
| ஊர்: | மாகறல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 224/1901 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | S.I.I. Vol. VII No. 437 |
| அரசு: | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 16 |
| அரசன்: | — | | |

**இடம்:** மாகறல் வீற்றிருந்த பெருமாள் கோயில் தென்புற ஜகதி

**குறிப்புரை:** மாகறல் என்ற இந்த ஊரிலுள்ள திருமேற்கோயில் என்ற வீற்றிருந்த பெருமாள் கோயிலைக் கட்டியவர் இவ்வூரைச் சேர்ந்த பட்டியர் போசன் மணியன் பெருங்கன் என்பவர் ஆவார். இவர் இக்கோயில் ஸ்ரீவிமானம் அர்த்தமண்டபம் அதையொட்டிய திருமண்டபம், சோபானம் மற்றும் ஸ்ரீபீடம் ஆகியவற்றை கட்டுவித்தார் என்ற செய்தி முதல் இருவரிகளில் உரை நடையிலும், அடுத்த மூன்று வரிகளும் கவிதை நடையிலும் அமைந்துள்ளது.

இவ்வூர் ஜயங்கொண்ட சோழமண்டலத்து எயிற் கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல் என்று கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

## கல்வெட்டு:

1 *ஸ்வஸ்திஸ்ரீ திரி*புவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு *உயரு* வது ஜயங்கொண்ட சோழமண்டலத்து எயி[ற்]கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல் திருமேற் கோயில் வீற்றிருந்த எம்பெ

2 ருமான் கோயில் *ஸ்ரீ*விமானமும் திருவ*ஹூ* மண்டபமும் திருமண்டபமும் ஸோபான மும் *ஸ்ரீ பீ*ഠமும் இவ்வூர்ப் பட்டியர் போசன் மணியன் பெருங்கன் செய்வித்தான் *உ ஹரி*:

3 உ திருமன்னு *ஸ்ரீ*ராசராசற்கி யாண்டு சென்ற விருபத்து மூன்றாவதிற் செந்தளிர் சூழ் மருமன்னும் பொழிற் திருமாகறற் திருமேற்கோயில் மன்னி வீற்றிருந்த பெருமாளுக்கு

4 மண்மேற் கருமன்னு சீ விமானமத்த மண்டபமேர் கலந்த மண்டபத்தொடு சோபானஞ் சிபீடந் தருமன்னுங் கொடைப் பட்டியர் போயன் பணியன் தரும் பெருங்கன் செய்வித்தா

5. ன் தரும நிலைபெறவே :-

## ஆசிரிய விருத்தம்

திருமன்னு ஸ்ரீராசராசற்கி யாண்டு சென்ற விருபத்திமூன்றாவதிற் செந்தளிர் சூழ்
மருமன்னும் பொழிற் திருமாகறற் திருமேற் கோயில் மன்னி விற்றிருந்த பெருமாளுக்கு
\- மண்மேற்
கருமன்னு ஸ்ரீவிமான மத்த மண்டபமேர்கலந்த மண்டபத் தொடுசோபானஞ் சீபீடந்
திருமன்னுங் கொடைப்பட்டியர் போயன் பணியன்தரும் பெருங்கனன் தருமநிலை பெறவே.

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **17/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 20 |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1036 |
| **ஊர்:** | மாகறல் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 221/1901 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | S.I.I. Vol. VII No. 434 |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 17 |
| **அரசன்:** | மூன்றாம் இராஜராஜன் | | |

**இடம்:** வீற்றிருந்த பெருமாள் கோயில் கருவறை தென்புறக் குமுதம்.

**குறிப்புரை:** மாகறல் என்ற இந்த ஊரிலுள்ள வீற்றிருந்த பெருமாள் கோயிலுக்கு இரண்டு சந்திவிளக்குகள் எரிப்பதற்கு ஒரு கழஞ்சு பொன்னை, இவ்வூர் ஊரங்கிழான் சாமுண்டி தேவன் திருவேகம்பமுடையான் என்பவர் தான மளித்தார். இப்பொன்னைப் பெற்றுக் கொண்டு, இப்பெருமாளைத் திருவடி பிடிக்கும் நயமிசை வரதராஜ பட்டன் என்பவர் சம்மதித்த செய்தி கூறப்பட் டுள்ளது. இவ்வூர் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து எயிற் கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல் என அழைக்கப்பட்டது.

**கல்வெட்டு:**

1 *ஸ்வஸ்திஸ்ரீ* திரிபுவனச் சக்கர[வத்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு *உய* அவது] ஜயங்கொண்டசோழ மண்டலத்து எயிற் கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல் திருமேற்

2 கோயில் வீற்றிருந்தபெரு[மாள் திருவடி பிடிக்கும் நயமிசை வரதராசப்] பட்டனேன் இப்பெருமாளுக்கு இவ்வூர் ஊரங்கிழான் சாமுண்டி தேவன் திருவேகம்பமுடை

3 யான் சந்திவிளக்குக்கு இட்[டபொன் க இப்பொன் கழஞ்சும் நான் கைக் கொ]ண்டு நாள் ஒன்றுக்கு இரண்டு சந்தி விளக்கு சந்திராதித்த வரை இடக்கடவேன் இப்படிக்கிவை ந

4 யமிசை வரதராச பட்டன்.

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **18/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 28 |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1174 |
| **ஊர்:** | மாகறல் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 222/1901 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | S.I.I. Vol. VII No. 435 |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 18 |
| **அரசன்:** | இரண்டாம் இராஜராஜன் | | |

**இடம்:** வீற்றிருந்த பெருமாள் கோயில் கருவறை தென்புற ஜகதி.

குறிப்புரை: மாகறல் என்ற இந்த ஊரிலுள்ள திருமேற்கோயில் ஆகிய வீற்றிருந்த பெருமாள் கோயிலுக்கு இவ்வூரைச் சேர்ந்த பட்டியர் போயன் ஆழ்வான் மதியன் என்பவர் இரண்டு சந்தி விளக்குகள் எரிப்பதற்கு இரண்டு கழஞ்சு பொன்னை தானமளித்தார். இப்பொன்னைப் பெற்றுக் கொண்டு சந்தி விளக்கெரிக்க நயிமிசை வரதராசபட்டன் என்பவர் சம்மதித்த செய்தி கூறப் பட்டுள்ளது. இவர் பெருமாளைத் திருவடிப் பிடிப்பவர் என இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

இவ்வூர் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற்கோட்டத்து மாகறல் நாட்டில் அமைந்திருந்தது.

**கல்வெட்டு:**

1. *ஸ்வஸ்திஸ்ரீ* திரிபுவனச் [ச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்குயாண்டு உ௱அ ஆவது][1] ஜயங்கொண்டசோழ மண்டலத்து எயிற்கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல் திருமேற்கோயில்
2. வீற்றிருந்த பெருமாளைத் திரு[வடிப் பிடிக்கும் நயிமிசை வரதராச பட்டனேன்][2] இப்பெருமாளுக்கு இவ்வூர்ப்பட்டியர் போயன் ஆழ்வான் மதியன் சந்தி விளக்குக்கு இட்ட
3. பொன் உ கழஞ்சு இப்பொன் இரு [கழஞ்சும் நான் கைக்கொண்டு நாள் ஒன்று][3] க்கு [இரண்டு சந்திவிள][4]க்கு சந்திராதித்த வரை இடக்கடவேன் இப்படிக் கிவை நயிமி
4. சை வரதராச பட்டன் [எழுத்து]

(1) (2) (3) (4) - அடைப்புக்குறியிட்ட பகுதிகள் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி எண் VII க.எண். 435ல் இருந்து எடுத்துத் தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **19/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | சகம் 1358 (நள, தை, சங்கர்மண) |
| **வட்டம்:** | திருக்கழுக்குன்றம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.1436 |
| **ஊர்:** | நெரும்பூர் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 272/1912 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | |
| **அரசு:** | விஜயநகரர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 1 |
| **அரசன்:** | இரண்டாம் தேவராயர் | | |

**இடம்:** திருவாலீசுவரர் கோயில் கருவறை மேற்கு, தெற்கு ஜகதி

**குறிப்புரை:** இரண்டாம் தேவராயர் ஆட்சியின்போது சங்கரமபுண்ய காலத்தில் களத்தூர் பற்று நெடுமூரில் உடையார் திருவானீசுரமுடைய நாயனார் கோயில் திருமடை விளாகத்தில் கைக்கோளர்க்கு வருஷம் ஒன்றுக்குத் தறி ஒன்றுக்கு நிச்சயித்த நூலாயம் இரண்டு பொன் ஆகும். ஒன்றுக்கும் அஞ்சாமல் குத்தகை கொள்ளவும் ஏறும் குடிகளுக்கும் இவ்வாறே வரி தண்டுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

## கல்வெட்டு:

1 ஸ்வஸ்திஸ்ரீ மஹா மண்டலேஸ்வரன் மூவராயர் கண்டன் பாஷைக்குத் தப்புவராயர் கண்ட... .ராய பரமேஸ்வர வீரப்ரதாப ஶ்ரீ கஜவேட்டைகாற தேவராயர்க்குச் செல்லாநின்ற ஸ[க]ாப்தம் ௲௩௱௫௰௮ க்கு மேற்செல்லா

2. நின்ற நள வருஷ௳ தை மாதம் சங்கரம புண்ணிய காலத்தில் களத்தூர் பற்று நெருமூரில் உடையார் திருவானீசுரமுடைய நாயனார் கோயில் திருமடை வளாகத்தில் கைக்கோளர்க்குப் பட்டடை நூலாயத்துக்கு தறி ஒன்றுக்கு வருஷ[ம்*] ஒன்றுக்கு கொள்ளுவதாக நிற்செயித்த பணம்[1] உ இப்படிக்கு ஒன்றுக்கும் அஞ்சாமல் எந்த எந்த வருஷம் மலையாங்குடிக்கு குத்தகையாக கொள்ளும் இப்ப

3. டிக்கு ஒன்[று]க்கும் அஞ்சாமல் ஏறும் குடியும் ஏற்றிக் கொண்டு இம்மதிகாரிக்கு சந்திராதித்த வரை நடத்த கடைவதாகவும் இம்மதிகாரிக்கு கல்வெட்டுக்கு அயிதம் பண்ணினவருண்டானால் கெங்கைக் கரையில்..........

4. காராம்பசுவை கொன்ற பாவத்திலே போக கடைவாரா

5. கவும்.

---

1. பணம் - என்பது குறியீட்டால் காட்டப்பட்டுள்ளது.

| த.நா.அ. | தொல்லியல்துறை | தொடர் எண்: | 20/2005 |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | — |
| வட்டம்: | திருக்கழுக்குன்றம் | வரலாற்று ஆண்டு: | கி.பி.13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி |
| ஊர்: | நெரும்பூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 274/1912 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | — | ஊர்க் கல்வெட்டு எண்: | 2 |
| அரசன்: | — | | |

இடம்: திருவாலீசுவரர் கோயில் தூண்.

குறிப்புரை: கண்ணாரமுதன் பல்லவராயன் தூண் அமைத்துத் தந்ததை இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

## கல்வெட்டு:

1. இலட்டூர் மதூர்ருடையான்
2. ஆளுடைய நாயன்
3. கண்ணாரமுதன் பல்லவராயன்
4. தன்மம்

| த.நா.அ. | தொல்லியல்துறை | தொடர் எண்: | 21/2005 |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 9 |
| வட்டம்: | திருக்கழுக்குன்றம் | வரலாற்று ஆண்டு: | கி.பி.1365 |
| ஊர்: | நெரும்பூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 273/1912 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | சம்புவராயர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 3 |
| அரசன்: | இராஜநாராயணன் | | |

**இடம்:** திருவாலீசுவரர் கோயில் கருவறை மேற்குப்புறப் பட்டிகை.

**குறிப்புரை:** இராஜநாராயணன் விடுத்த திருமுகப்படி நெருமூர்சபை, பட்டவிருத்தியாக நிலம் விட்டதுடன் திருவான்மீசுரமுடைய நாயனார் அமுதுபடி, திருப்பணி ஆகியவற்றுக்காக வேலி நிலம் ஒதுக்கி, சருவமான்யமாக அளிக்கப்பட்டது.

## கல்வெட்டு:

1. *ஸ்வஸ்திஸ்ரீ* சகலலோகச் சக்கரவத்திகள் இராஜநாராயணன் சம்புவராயர்க்கு [யாண்டு] கூ திருமுகப்படி களத்தூர் பற்று நெ[ரு*] மூர் பட்டவிருத்தியும்...... இவ்வூர் உடையார் திருவான் மீசுரமுடைய னாய
2. னார்க்கு அமுது படிக்கும் கறி அமுது வெஞ்சனத்துக்கும் திருப்பணிக்கும் பலபணி நிமந்தத்துக்கும் ஒன்பதாவது தை மாத முதலுக்கு இன்னாயனார் தேவதானமான நிலத்திலே முன்பு தாங்கள் விட்ட நிலமே [பல] உபாதிகளும் உள்பட நாட்டு...கோலா
3. லே நாம் விட்ட ஒரு வேலி நிலமும் திருமடை விளாகமும் சறுவ மானியமாக குடுத்தோம் இன்னாள்முதல் இப்படி செய்வதே.

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **22/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 49 |
| **வட்டம்:** | திருக்கழுக்குன்றம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.1119 |
| **ஊர்:** | நெரும்பூர் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 4 |
| **அரசன்:** | முதலாம் குலோத்துங்கன் | | |

**இடம்:** திருவாலீசுவரர் கோயில் கிழக்குக் குமுதம்

**குறிப்புரை:** முதலாம் குலோத்துங்கனுடைய மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இக் கல்வெட்டு முழுமையும் இல்லை. துண்டுக் கல்வெட்டு.

**கல்வெட்டு:**

**அ**

1. நிலமகள் நிலவ மலர் மகள் புணர உரிமை....
2. குலைதர ஏனைமன்நவர் இரியலுற்றிழிதர......
3. வனிமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய......
4. கண்ட......வாய்க்காலுக்கு மேற்கும் தென்பா......
5. மேல் பாற்கெல்லை........கீழ்வரம்பு......

**ஆ**

1. ருளிய கோ இராஜகேசரி சக்கரவத்திகள்
2. ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு நாற்
3. பத்தொன் பதாவது
4. ........... .........
5. .......... கிழக்கில் நிலத்திலும் ...........

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **23/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | திருக்கழுக்குன்றம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.12ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | நெரும்பூர் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 5 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** திருவாலீசுவரர் கோயில் கிழக்குக் குமுதம்

**குறிப்புரை:** நெருமூரான மதுராந்தக நல்லூர் திருவான்மீசுவரமுடைய மகாதேவர்க்கு வேட்டக்குடியான் புலியதேவன் என்பவர் இவ்வூரிலும் சூளாமணி மங்கலத்திலும் இறையிழிச்சு விழாப்புறமாகி நிலம் வழங்கியுள்ளார். நிலத்தின் பெயர் திருவாய்ப்பாடி செறு என்று அறிகிறோம். நெருமூர் நாட்டு மூவேந்த வேளான் உள்படப் பலர் கையொப்பமிட்டுள்ளனர்.

## கல்வெட்டு:

1. ஜயங்கொண்டசோழ மண்டலத்து செம்பூர்க் கோட்டத்து [நெருமூர்] நாட்டு நெருமூரான மதுராந்தகநல்லூர் திருவான்மீஸ்வரமுடைய தேவர்க்கு ..... நாட்டு [திருவிழா] எழுத்தருளுகைக்கு வேண்டும் நிமந்தஞ் செலுத்துகைக்குச் சோழ மண்டலத்து தியாக
2. [வல்லி வள] நாட்டுப் பொய்கைநாட்டு வெட்டக்குடி வெட்டக்குடியான் ஆதித்தந் புளியதேவன் இவ்வூரிலும் பிரமதேயம் சூளாமணி மங்கலத்திலும் [ விலையாகக் கொண்டபடி] நிலமாய் இறை இழிச்சி இத்தேவர்க்குத் திருவிழாப் புறமாக விட்ட நிலமாவது நெருமூரா.
3. ன மதுராந்தக நல்லூரில் ஊர்க்குச் சமைந்த ஊற்பாக்கிழான் அரயன் சிங்கநான ராஜேந்த்ரசோழ நெருமூர் நாட்டு மூவேந்த வேளானும் நெருமுழானான ........ நந்தஞ் சாத்தனும் எம்மூர்க்காட்டு...... க்கிழான் அரயன் பேராயிதனு ...... [இண்டவில்லி] கோ
4. மங்கலத்திலு[ம்*] இவ்வூர் ஸபைக்குச் சமைந்த நம்மூர்க் காட்டு ........... நாரா யண ஸஹஸ்ரனும் உள்ளிட்டார் பக்கல் நெருமூரான மதுராந்தக
5. த்துக்கு கீழ்பாக்கெல்லை நெருமூரான மதுராந்தக நல்லூர் நங்கை ...... மேல்பாற்கெல்லை......நிலத்தில் திருவாய்ப்பாடி என்றுபேர் கடவப்பட்ட செறுவின்
6. .......முக்கண்..... [வாக்]காலுக்கு தெற்கு இவ்விசைத்த...........

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **24/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | திருக்கழுக்குன்றம் | **வரலாற்று ஆண்டு:** | 10 ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | நெரும்பூர் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 275/1912 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 6 |
| **அரசன்:** | முதலாம் இராஜராஜன் | | |

**இடம்:** திருவாலீசுவரர் கோயில் வாசற்படியில் பதிக்கப்பட்டுள்ள கல்.

**குறிப்புரை:** முதலாம் இராஜராஜனுடைய மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இக்கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது. சந்திவிளக்கெரிக்கவும், வழிபாட்டிற்கும் நிலம் அளித்த செய்தியை அறிகிறோம்.

**கல்வெட்டு:**

1 க்காந்தளூ....
2 பகைநா.....
3 ய் கெப்ப......
4 குடம் நல.......
5 கமுந் திண்......
6 ண்டதனி......
7 யாண்டு நா......
8 மி செழிய.......
9 இராஜராஜ......
10 ..........
11 ..........
12 ....டருளியா
13 ம் பொ......
14 ணங் கொண்..
15 ..வும் மூன்று..
16 ..கும் ஒர கை..
17 ..ம் ஒரு சந்தி வி..
18 ...யமைப்ப..
19 ..கும் ஸந்திவி..
20 .........

| த.நா.அ. | தொல்லியல்துறை | தொடர் எண்: | 25/2005 |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | — |
| வட்டம்: | திருக்கழுக்குன்றம் | வரலாற்று ஆண்டு: | கி.பி.13 ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | நெரும்பூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | — |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 7 |
| அரசன்: | — | | |

இடம்: திருவாலீசுவரர் கோயில் அர்த்தமண்டப மேற்குப் பட்டி

குறிப்புரை: துண்டுக் கல்வெட்டு. மதுராந்தக நல்லூர் என்ற ஊர்ப்பெயரும் பன்னிரண்டாவது ஆட்சியாண்டில் தேவதான இறையிலி நிலம் வழங்கப்பட்ட விவரமும் அறிகிறோம்.

**கல்வெட்டு:**

1 மூரான மதுராந்தக நல்லூற் கோயிலுக்கு.....

2 ரையே இரண்டு மாவும் ஆக நிலம் பத்தரையினால் வரிசை

3 இன்னிலம் பன்னிரண்டாவது முதல் தேவதான இறையிலியாக ...

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **26/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | திருக்கழுக்குன்றம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.14 ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | நெரும்பூர் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 271/912 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | விஜயநகரர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 8 |
| **அரசன்:** | கம்பண உடையார். | | |

**இடம்:** திருவாலீசுவரர் கோயில் கருவறை மேற்குக் குமுதம்

**குறிப்புரை:** துண்டுக் கல்வெட்டு.

**கல்வெட்டு:**

1 விபாடன் கம்பண உடையார்க்கு ...
2 த்து திருமேற்தளியில் பொன்னின் ...

| த.நா.அ. | தொல்லியல்துறை | தொடர் எண்: | 27/2005 |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | சகம் 1374 |
| வட்டம்: | மதுராந்தகம் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 1452 |
| ஊர்: | புலிப்பரக் கோயில் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 295/1910 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | கிரந்தங் கலந்த தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | விஜய நகர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 1 |
| அரசன்: | பிரவுடதேவமகாராயர். | | |

இடம்: ஸ்ரீ வியாக்ரபுரீஸ்வரர் கோயில் மகாமண்டப வடபுற முப்பட்டைக் குமுதம்.

குறிப்புரை: ஜயங்கொண்ட சோழ மண்டலத்து களத்தூர்க் கோட்டத்து ஸ்ரீமதுராந்தக சதுர்வேதி மங்கலத்தின் வடபிடாகை மாத்தூர் என்ற ஊரில் உடையார் திருப்பாத நாயனாற் கோயிலுக்கு, ஸ்ரீமன் மகாபிரதானி அன்னதாத தண்ணாயக்கர் குமார தேவப்பதன்மராயர் என்பவரது நலனை முன்னிட்டு நிலதானம் வழங்கப்பட்ட செய்தியைக் குறிப்பிடும் இக்கல்வெட்டு முற்றுப் பெறாமல் காணப்படுகிறது.

## கல்வெட்டு:

1 ஸ்வஸ்திஸ்ரீ மன்மஹாராஜாதிராஜ ராஜபரமேஸ்வர ஸ்ரீ வீரப்ரதாப ப்ரௌடதேவ ராய மஹாராயர் ப்ரதிவி ராஜ்யம்

2 பண்ணி அருளாநின்ற ஸகாப்தம் ருகஎய ச ன் மேல் செல்லா நின்ற ஆங்கீர வருஷம்

3 ப்ரஸ்ரீக நாயற்று பூர்வபக்ஷத்து பஞ்சமியும் பெற்ற திருவோணத்து நாள் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து களத்தூற்

4 கோட்டத்து ஸ்ரீ மதுராந்தகச் சதுவேதிமங்கலத்து வடபிடாகை மாத்தூர் உடையார் திருப்புலிப் ப*த நாயிநாற்கு ஸ்ரீமன்

5 மஹா ப்ரதாநி அன்னதாத தண்ணாயக்கர் குமாரதேவப்ப தன்மராயர் திருமேனிக்கு நன்றாக குளத்தூர்ப் பற்று கணக்கின் பட்டு ஆன[1]

---

1. Left Unfinished.

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **28/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 6 |
| **வட்டம்:** | மதுராந்தகம் | **வரலாற்று ஆண்டு:** | — |
| **ஊர்:** | புலிப்பரக்கோயில் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சம்புவராயர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 2 |
| **அரசன்:** | இராசநாராயணன் | | |

**இடம்:** ஸ்ரீ வியாக்ரபுரீஸ்வரர் கோயில் மகாமண்டப கிழக்குப்புறப் பட்டி.

**குறிப்புரை:** ஜயங் கொண்ட சோழமண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து ஸ்ரீமதுராந்தக சதுர்வேதி மங்கலத்து வடபிடாகையான மாத்தூரில் உள்ள உடையார் திருப்புலி பகவ நாயனார் கோயில் திருமடை வளாகத்தின் நான் கெல்லையிலுமுள்ள கைக்கோளர், சாலியர், வாணிகர், கோயிலங்காடி, சேனையங்காடி மற்றும் அனைத்து புறக் கலனைகள் உட்பட முன்பு உள்ள குடிகளும் பின்னர் குடியேறும் குடிகளையும் ஏற்றிக் கொண்டு அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் பல வரிகளும் பல உபாதிகளும் இக்கோயில் பூசைக்கும் திருப்பணிக்கும் திருநாமச் சிறப்புக்கும் சர்வமானியமாக இறையிலி செய்து கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு:

1 ஸ்வஸ்திஸ்ரீ சகலலோகச் சக்கரவத்தி இராசநாராயண சம்புவராயற்கு யாண்டு ௬ ஆறாவது

2 க்ருஷஹநாயற்று வ௵வ௶பக்ஷத்து ஹ்ஹாதஸியும் திங்கட்கிழமையும் பெற்ற சோதி நாள் ஜயங்

3 கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து ஸ்ரீ மதுராந்தகச் சதுவேதி மங் கலத்து

4 வடபிடாகை மாத்தூர் உடையார் திருப்புலிப்பதவ நாயநாற்கு திருமடை வளாகம் புலிப்பதவர் கோயில்

5 நான்கெல்லைக்கு உட்பட்ட கைக்கோளர் சாலியர் வாணிகர் சேனையங்காடி கோயி லங்காடி மற்றும் எப்பேற்பட்ட

6 புறக்கலனையும் உட்பட முன்பு உள்ள குடியும் பின்பு ஏறும் குடியும் ஏற்றிக் கொண்டு தறிக்கடமைபெறக் கடமை மற்

7 றும் இப்பற்றில் கொள்ளும் பலவரிகளும் பல உபாதிகளும் உட்பட இன்னாய னாற்கு பூசைக்கும் திருப்பணிக்கும்

8 திருநாமச் சிறப்புக்கும் இன்னாள் முதல் சந்திறாதித்த வரையும் ஸவ௶மான்னிய மாக முதலடங்க இறையிலி ஆக குடு

9 த்தோம்

| த.நா.அ. | தொல்லியல்துறை | தொடர் எண்: | 29/2005 |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | — |
| வட்டம்: | மதுராந்தகம் | வரலாற்று ஆண்டு: | கி.பி.14, 15 ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | புலிப்பரக்கோயில் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | — |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | — | ஊர்க் கல்வெட்டு எண்: | 3 |
| அரசன்: | — | | |

இடம்: ஸ்ரீ வியாக்ரபுரீஸ்வரர் கோயில் ஜகதி கிழக்கு

குறிப்புரை: இவ்வூர் புலிப்பகவ நாயனார் கோயிலின் திருநாமத்துக் காணி ஊரான சேதிராய நல்லூரில் வசூலிக்கப்படும் வரிகளான தானிய வர்க்கம், பழவரி, புதுவரி போன்ற சமுதாய பிராப்திகள் அனைத்தையும் இக்கோயில் திருப்பள்ளி எழுச்சி, குறை வறுப்பு, அடுமாத்து பூசை திருப்பணி போன்றவற்றிற்கு தேவதான இறையிலியாக அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு:

1 சேதிராயநல்லூர் திருநாமத்துக்காணி ஆன இந்தக் கிறாமம் தேவதான இறையிலியாகக் குடுத்தோம் இந்த ஊரால் உண்டு ஆனபோனவற்கும்

2 தானிய வற்கம் மற்றும் அந்தப் பற்றில் நடக்கும் பழவரி புதுவரிகளும் சகல சமுதாயப்பிறாத்தியும் இன்னாயினார்கு திருப்பள்ளி எழிச்சி குறைவறுப்புக்கும்.

3 ஆங்காங்கடு மாத்துக்கும் பூசை திருப்பணிக்கும் இன்னாள் முதலாக சந்திராதித்த வரைக்கும் நடக்கும் படிக்கு ஸர்வமாந்ய முதல்டங்க இறைஇலி

4 ஆகக் குடுத்தோம் இந்தத் தன்மத்துக்கு [அகிதம்] பண்ணினவர்கள் கெங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்திலே போகக்

5 கடவார்கள் ஆகவும் ஸ்ரீமாஹேஸ்வர ரக்ஷை ||—

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **30/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | மதுராந்தகம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 14-ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | புலிப்பரக் கோயில் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சம்புவராயர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 4 |
| **அரசன்:** | (மல்லி)நாதன் சம்புவராயன் | | |

**இடம்:** ஸ்ரீவியாக்ரபுரீஸ்வரர் கோயில்

**குறிப்புரை:** . . . . . . .நாதன் சம்புவராயன் பெயரில் அமைந்த நிலைக்கோல் அளவு பற்றி கூறப்பட்டுள்ளது.

**கல்வெட்டு:**

1 . . . . . . நாதன் சம்புவராயன் திருவடி நிலைக்கோல் வடக்கில் கோடி - அளவு ॥-

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **31/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 5 |
| **வட்டம்:** | மதுராந்தகம் | **வரலாற்று ஆண்டு:** | — |
| **ஊர்:** | புலிப்பரக் கோயில் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சம்புவரையர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 5 |
| **அரசன்:** | இராஜநாராயணன் | | |

**இடம்:** ஸ்ரீ வியாக்ரபுரீஸ்வரர் கோயில் மகாமண்டபத் தரையில் உள்ளது.

**குறிப்புரை:** இவ்வூர்த் திருப்புலி பகவர் கோயிலுக்கு திருப்பணி செய்வித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

**கல்வெட்டு:**

1. *ஸ்வஸ்திஸ்ரீ ஸ*கலலோகச் சக்கரவ[ர்*]த்தி இராசநாராயண சம்புவராயற்க்கு யாண்டு அஞ்சாவது மாத்தூர்
2. உடையார் திருப்புலிப்பகவர் நாயினார் கோயில் . . . . .பான். தெற்கில் . . . . திருப் பணி செய்வித்தார் ॥–

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **32/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | மதுராந்தகம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.18ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | புலிப்பரக்கோயில் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | — | ஊர்க் கல்வெட்டு எண்: | 6 |
| அரசன்: | — | | |

**இடம்:** ஸ்ரீ வியாக்ரபுரீஸ்வரர் கோயில் மகாமண்டபம் தரையில் உள்ளது.

**குறிப்புரை:** இவ்வூர் ஸ்ரீ திருப்புலி பகவர் கோயிலில் தெய்வராய குருக்கள் என்பவர் செய்த சேவையை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

## கல்வெட்டு

1 தெய்வரா
2 ய குருக்க
3 ள் சதா
4 சேர்வை

| | | | |
|---|---|---|---|
| த.நா.அ. | தொல்லியல்துறை | தொடர் எண்: | 33/2005 |
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | — |
| வட்டம்: | மதுராந்தகம் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 18ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | புலிப்பரக் கோயில் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | — |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | — | ஊர்க் கல்வெட்டு எண்: | 7 |
| அரசன்: | — | | |

இடம்: ஸ்ரீவியாக்ரபுரீஸ்வரர் கோயில் மகாமண்டபம் தரையில்.

குறிப்புரை: இக்கோயிலில் தேவராய குருக்களின் குமாரன் ஆதிபுரி நாத குருக்கள் செய்த சேவையைக் குறிப்பிடுகின்றது.

## கல்வெட்டு

1 தேவராய கு[ருக்]
2 கள் குமாரன் ஆதி
3 புரி நாத குருக்கள்
4 சதா சேவை.

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **34/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | மதுராந்தகம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.18-ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | புலிப்பரக் கோயில் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 8 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** ஸ்ரீவியாக்ரபுரீஸ்வரர் கோயில் மகாமண்டபம் தரையில்

**குறிப்புரை:** மாகறல் என்ற ஊரைச் சேர்ந்த கொடபட்டர் குமாரன் கச்சாலையப்பன் என்பவர் இக்கோயிலில் செய்த சேவையைக் குறிப்பிடுகிறது இக்கல்வெட்டு.

**கல்வெட்டு:**

1 மாகறல் கொடபட்டர்
2 குமாரன் கச்சாலையப்பன்
3 தேவை சேர்வை.

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **35/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | |
| **வட்டம்:** | மதுராந்தகம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.18 ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | புலிப்பரக் கோயில் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 9 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** ஸ்ரீ வியாக்ரபுரீஸ்வரர் கோயில் மகாமண்டபத் தரையில்

**குறிப்புரை:** காஞ்சசன், குருராயன், தண்டை போன்றோர் இக்கோயிலுக்கு செய்த சேவையை இக்கல்வெட்டுகள் குறிப்பிடுகிறன.

**அ**

1 ஊர்க்கன
2 மெரக்கா
3 ஞ்சன் சதா
4 சேர்வை.

**ஆ**

1 குருராயன் சதா சேர்
2 வை

**இ**

1 தண்டை
2 சதா சேர்வை.

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ. தொல்லியல்துறை** | | **தொடர் எண்:** | **36/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | விளம்பி வருஷம் தை மாதம் 5-ம் தியதி (சகம் - 1340) |
| **வட்டம்:** | மதுராந்தகம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1418 |
| **ஊர்:** | புலிப்பரக்கோயில் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 294 / 1910 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | விஜயநகர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 10 |
| **அரசன்:** | விஜயபூபதிராயர். | | |

**இடம்:** வியாக்ரபுரீஸ்வரர் கோயில் கருவறை வடபுற ஜகதி

**குறிப்புரை:** இவ்வூர் திருப்புலிபகவர் கோயில் வளாகத்திலிருக்கும் கைக்கோளர் களுக்கு, இக்கோயில் தானத்தார் கல்வெட்டிக் கொடுத்தனர். இவர்கள் வைத்துள்ள தறிகளுக்கு வசூலிக்கப்பட்டு வந்த தறிக்கடமை, வாசலுக்கு வாசல், சேனைக் கடைவாசல், மற்றும் கச்சடவாணியருக்கும் வன்படாவருக்கும் விதிக்கப்பட்ட வரிகளும், புடவை முதல் போன்ற வரிகள் குறைக்கப்பட்ட செய்தியைக் கூறுகிறது இக்கல்வெட்டு

**கல்வெட்டு:**

1 ஸ்வஸ்திஸ்ரீ உந மஹா மண்டலீசரன் விஜய பூபதிராய உடைய[ர்*]ற்க்குச் செல்லா நின்ற விளம்பி வருஷஉ தை மாஸ௴ ரு ந்தியதி உடையார் திருப்புலி[ப]

2 கவ நாயினார் திருமடை விளாகம் புலிப்ப[க]வர் கோயில் தானத்தார் இவ்வூர் கைக்கோளர்க்குக் கல்வெட்டிக் குடுத்தபடி நாட்டில் கோயில் பற்ற அற்ற.....

3 ஆதிவாசல்ப் பணிய கழிக்க வேணும[ன்]. புறநாட்டிலே சந்திரகரிச்சாவம் இலெ போயிருக்கை இல் பூவ௨த்தில் கடமை பணம்[1] கூரு க்கு தறிக் கண்ட வாசலு...

4 குவாசல் பணம் மூன்றும் கழித்துக் கெ[ாண்ட] தறிக்கு தறி ஒன்றுக்குக் கொள்ளும் கூரு சேனைக்கடைக்கும் வாசல் பணம்[2] ந ம் கழித்துக் கொள்ளு....

5 கூரு கச்சவட வாணியர் பேர் ஒன்[று]க்குக் கொள்ளும் வன்படவர் பேர் ஒன்றுக்குக் கொள்ளும் உ௱[இ]ன்னாள் தானத்தார்க்கு நட....

6 வரும் புடவை முதலு பணம்[3] சயம் காத்த.... காணிக்கைகு பணம்[4] சம் இறுக்க கடவர்கள் ஆகவும் [உபாதி]..... நாட்டில் கோயில்ப்பற்....

7 பற்ற மா ஆகி இறுக்கக் கடவர்கள் ஆ[கவு]ம் இம்மா ஆதி வந்ராத்தவரையும் நடக்கும் படிக்குக் கல் வெட்டிக் குடுத்தோம் இவ்வூர் ஊரவற்கு

8 [உ]டையார் திருப்புலிபகவ நாயி[னார்] கோயில் தானத்தா.....

---

1, 2, 3, 4 - பணம் என்பது குறியீட்டால் காட்டப்பட்டுள்ளது.

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண்: 37/2005**

| | |
|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் |
| **ஆட்சி ஆண்டு:** | சுபானு வருஷம் வைகாசி மாதம் 18ம் தேதி |
| **வட்டம்:** | மதுராந்தகம் |
| **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 15-ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | புலிப்பரக் கோயில் |
| **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 293 / 1910 |
| **மொழி:** | தமிழ் |
| **எழுத்து:** | தமிழ் |
| **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | விஜயநகர் |
| **ஊர்க் கல்வெட்டு எண்:** | 11 |
| **அரசன்:** | புக்கண உடையார் |

**இடம்:** வியாக்ரபுரீஸ்வரர் கோயில் கருவறை மேற்கு ஜகதி

**குறிப்புரை:** திருப்புலிபகவ நாயனார் கோயில் திருமடை வளாகத்திலிருக்கும் கைக்கோளர்களிடம் தறி ஒன்றுக்கு வசூலிக்கப்படும் பணம் பற்றிய விவரத்தைக் கூறுகிறது இக்கல்வெட்டு

## கல்வெட்டு:

1 *ஸ்ரீமஹாமண்டலேஸ்வர* புக்கண உடையா[ர்*]க்குச் செல்லா நின்ற *ஸுபா*நு வருஷ

2 வைகாசியு *௰௮*கு திருப்புலிப்பகவ நாயினார் திருமடை வளாகம் புலிப்[பகவர்] கோயில்

3 சடமயன் கைக் கோளர் வாணியர் பேர்க்கும் பட்டடை நூலாயம்... சம் *ஸா* தம்

4 பாய்ச்சம் மாதம் கையேறவு[ம்*] அதிகை மாதமாத விரட்டி தண்ணா.... காமகமை

5 ம் உவம் ஆயக்கை நோக்கிக் கொள்ளும் பல உபாதியும் உட்பட ஆண்டு..... றுக்கு போ

6 ஒன்றுக்கு கொள்ளும் பணம்[1] உ*ம்* தறி ஒன்றுக்கு கொள்ளும் பணம்[2] உ*ம்* கொள்..... கடவது ஆகவும்

7 இதுக்கு அகிதம் சொன்னார் உண்டுஆகில் கெங்கைக் கரையில் காராம் பசு[வை]க் கொன்றான்

8 .........................

.........................

---

1, 2 - பணம் என்பது குறியீட்டால் காட்டப்பட்டுள்ளது.

| த.நா.அ. தொல்லியல்துறை | | தொடர் எண்: | 38/2005 |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | — |
| வட்டம்: | மதுராந்தகம் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 11-ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | புலிப்பரக்கோயில் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 301/1910 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | — | ஊர்க் கல்வெட்டு எண்: | 12 |
| அரசன்: | — | | |

**இடம்:** வியாக்ரபுரீஸ்வரக் கோயிலின் வெளிப்புறத்திலுள்ள தூண் கல்வெட்டு

**குறிப்புரை:** மன்னன் பெயர் கூறப்படாத இக்கல்வெட்டின் இறுதியில் சில வரிகள் சில சிதைந்துள்ளன. மதுராந்தக சதுர்வேதி மங்கலத்தில் உள்ள உடையார் திருவெண் காடுடைய நாயனார் கோயிலுக்கும் மாத்தூர் உடையார் திருப்புலிபகவர் கோயிலுக்கும் பூவனமான வாதாவிநல்லூர் என்ற ஊர் தேவதானமாக அளிக்கப்பட்டபோது, அவ்வூர் நிலம் அறுபத்து ஆறரையே நாலுமாவில், திருக்குந்திசுரமுடைய நாயனார் கோயில் தேவதானமும் மற்றும் திருப்புலிபகவர் கோயிலின் பழந்தேவதான நிலமும் ஆகிய காலரையே நாலு மா நிலமும் நீக்கியபின் மீதமுள்ள நிலமான அறுபத்திரண்டு மாவும் மேற்குறிப்பிட்ட இரண்டு கோயில்களாகிய திருவெண்காடுடையார் கோயிலுக்கும், திருப்புலிபகவர்க்கும் தனித்தனியே பிரித்தளித்து எல்லைகளும் சுட்டபட்ட செய்தியைக் கூறுகிறது இக்கல்வெட்டு.

## கல்வெட்டு

1 *ஸ்வஸ்திஸ்ரீ* சிம
2 துராந்தக சதுப்பேதி
3 மங்கலத்து உடையார்
4 திருவெண்காடுடைய நாய
5 னார்க்கும் பரத்தூர்[1] உடைய
6 ார் திருப்புலிப்பகவற்கு
7 ம் சிபண்டாரத்தில் பொன்
8 சுட்டுக் கொண்டு தேவதா
9 னமாய் செல்கிற பூவ[ன]
10 மான வாதாவி நல்லூர் தர
11 ப்பிட்டநிலம் அறுபத்தாறரை

(1) மாத்தூர் - என்றிருத்தல் வேண்டும்

12 யே நாலுமாவில் உடையார்
13 திருக்குந்திசுரமுடைய நாயந
14 ார் தேவதானமும் உடை[யார்*] திருப்பு
15 ப்பகவர் பழந்தேவதானமு
16 டையார் இறையிலியும் ஆக நி
17 லம் காலரையே நாலுமாவும் நீ
18 க்கி நீக்கிநின்ற நிலம் அறுபத்திரண்
19 டு இதில் உடையார் திருவெண்கா
20 டுடைய நாயநார்க்குத் தரப்படி[க்]
21 கு கிழக்கு முதற்சதிரமு
22 ம் இரண்டாஞ்சதிரத்து
23 இரண்டாங்கண்ணாற்
24 று முதற் சதிரமும் இர
25 ண்டாஞ் சதிரமும் [முதற்]பா
26 டகம் இருபதாறா[ங்]
27 கண்ணாற்றுக் கிழக்குப்ப
28 ட்டி கொல்லைகுடி இருப்
29 பும் இன்னாயனாற்கு சோறி
30 ட்டு இன்நிலத்துக்
31 கு தலைவாய் உடையாற்
32 திருவெண்காடு உடையாற்
33 கு சிதேவி வாய்க்காலுக்கு
34 மூன்றாங் கண்ணாற்றும் ந[ா ]
35 லாங் கண்ணாற்றிலும் பர
36 த்தூர் ஆற்றுக்காலுக்கு
37 கிழக்குப்பட்ட நிலத்திலே இ
38 ருபத்தாறு பாடகம் விட்டு
39 இந்நிலத்தில் கிணறும் ம
40 ரமும் விட்டு இக்கண்ணா
41 ற்று கிழக்குப்பட்ட கொ
42 [ல்லை]
43 நிலம்முப்
44 பத்தொன்
45 பதுக்கு[ம்]
46 கல்குடி....
47 ழியும் உடை
48 யார் திருப்புலி
49 ப்பகவற்க்கு
50 தேவதானம் த

51 ரப்படி நிலம்
52 முப்பத்தொ
53 ன்றும் கொல்
54 லைகுழி இருபத்
55 தேழாகவும் இ
56 ப்படி கொண்ட
57 படி உடையார் தி
58 ருப்புலிப் பகவ
59 ற்குச் சிதேவி வா
60 ய்க்காலுக்கு வ
61 டக்கு முதற் கண்
62 ணாற்று சிவ
63 [ர]ாத வதி..
64 ............
65 ............
66 ல்லை கு
67 டி இருப்
68 பும் சேர
69 விடு வெ..
70 ... த கொ
71 ல்லை நில
72 ம் புறம்
73 ப வி
74 டு [வெ].
75 கீழ்பாற்க்...
76 ல்லு கு
77 ஏரி கல்லி
78 விட்ட நில
79 த்துக்குத் த[லை]
80 மாறு ஒத்த
81 னிலத்தில்
82 உடையார் தி
83 ருப்புலிப்
84 ..........

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண்: 39/2005**

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | சகம் 1396 |
| **வட்டம்:** | மதுராந்தகம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1474 |
| **ஊர்:** | புலிப்பரக் கோயில் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 299/1910 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | விஜயநகர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 13 |
| **அரசன்:** | விருப்பண்ண உடையார் | | |

**இடம்:** வியாக்ரபுரீஸ்வரர் கோயில் மகாமண்டப கிழக்கு ஜகதி

**குறிப்புரை:** கல்வெட்டின் தொடக்கம் மட்டுமே உள்ளது

**கல்வெட்டு:**

1 ஸ்வஸ்திஸ்ரீ உந் உா உண்டலீ[ஸ்வரன்]..... ஹாடன்[1] பாஷைக்கு தப்புவ இராய கண்டன் மூவ இராயர் கண்டன் ......

2 பூர்வ உக்ஷ பச்சிம ஸ ஸமுத்ராதிபதி . . . .[2]ண உடையா[ர்*] வீர குமார விருப்பா ** உடையா[ர்*] ப்ருதிவிராஜ்யம் . . . . .

3 ஞுனின்ற சகாப்தம் நளகூயசு மேல் செ . . . . . . . [3] ஸம்வத்ஸரத்து பூர்வபக்ஷத்து ஏகாதசியும் வியாழக்கி . . . .

4 ம் பெற்ற ரேவதி நாள் ஜயங்கொண்டசோழ[4] . . . . . . . ....க் கோட்டத்து ஸ்ரீ உயராந்தக சதுர்வேதிமங்கலத்து உா

(1) (2) (3) (4) இப்பகுதிகள் கட்டத்திற்குள் மறைந்துள்ளன.

✿✿ விருப்பண்ண உடையார் - என்றிருத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ. தொல்லியல்துறை** | | **தொடர் எண்:** | **40/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 40 |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.1110 |
| **ஊர்:** | காஞ்சிபுரம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 45/1921 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 1 |
| **அரசன்:** | முதலாம் குலோத்துங்கன் | | |

**இடம்:** உலகளந்த பெருமாள் கோயில் அர்த்த மண்டப தென்சுவர்.

**குறிப்புரை:** திங்கள் தோறும் பூசநட்சத்திரத்தில் வழிபாடும், வளர்பிறை துவாதசியில் வழிபாடும், மார்கழி ஏகாதசியில் விழாவும் நிகழ்த்தும் பொருட்டு ஊரகப் பெருமானின் பக்தையும் அரசனின் மனைவியுமான கம்பதேவி 80 வேலி அளவுள்ள ஓர் ஊரினை தன் பெயரால் கம்பதேவி நல்லூர் எனப் பெயரிட்டு அரசனின் ஆணை பெற்று வரி நீக்கிக் கொடுத்த செய்தி சொல்லப்படுகிறது. வரியாக வரும் 1850 கலத்தில் நீக்குவது நீக்கி 300 கலம் கொடுக்கப்பட்டது. கல்வெட்டின் இறுதியில் ஓம்படைக்கிளவியாகப் பாடல் ஒன்று சங்கு முத்திரையுடன் முடிகிறது. அப் பாடலின் பொருள்,

'தருமத்தின் மூலம் செல்வத்தைச் சம்பாதித்து வைத்துள்ளேன். அச்செல்வத்தை உயிர்களுக்கெல்லாம் பொதுவாக்கி அறுதியிட்டு வைத்தேன். இவ்வறச் செயலைப் பாதுகாக்கும் கடமையில் ஈடுபட்டவர் திருவடியை என் தலைமேல் வைத்தேன். அவ்வவ் காலத்தில் வாழ்பவர்களே இதனை மனதில் கொள்வீர்களாக'.

**கல்வெட்டு:**

1 *ஸ்வஸ்திஸ்ரீ* புகழ்மாது விளங்க ஜெயமாது விரும்ப நிலமகள் நிலவ மலர்மகள் புணர உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி மீனவர் நிலை கெட வில்லவர் குலைதர ஏனை மன்நவரிரியலுற்றுழிதர திக்கனைத்துந்

2 தன் சக்கரநடாத்தி விசைய *அபிஷே*கம் பண்ணி வீரஸிம்*ஹா*ஸனத்து அவனிமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோராஜகேசரி பற்மரான திரிபுவனசக்கரவத்திகள் *ஸ்ரீ*கொலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு *சய* ஆவது [நா]ள் உள னால் ஜயங்கொண்டசோழ

3 மண்டலத்து எயிற்கோட்டத்து நகரம் காஞ்சிபுரத்துக் கோயிலுள்ளால் ஜயங்கொண்ட சோழன் திருமாளிகையில் வடபக்கத்து ராஜாதிராஜன் மண்டபத்து பள்ளிக்கட்டிலில் எழுந்தருளியிருக்க காஞ்சிபுரத்து திருஊரகத்

தாழ்வார் அடியாள் ஆதித்தன் கம்பதேவியாரான நம்பிராட்டியார் திரிபுவன முடையா

4 [ளு]ம் பெருமான் திருஊரகத்தாழ்வார் எம்பெருமான் திரு நக்ஷத்ரமு திருப்பூசத் திருநாள் மாஸந்தோறும் எழுந்தருள வேண்டும் நிமந்தங்களுக்கும் ஆவணி *மாஸத்து* முற்பக்கத்து திருத்*வாதசி* பவித்ராரோஹணம் பண்ணுகைக்கு வேண்டும் நிமந்தங்களுக்கும் மார்கழி

5 த் திருவேகா*தசி* நாள் திரு*அத்யய*நங் கேட்டருளுகைக்கு வேண்டும் நிமந்தங்க ளுக்கும் அடியேன் பிறந்த நாள் சோதியிற் புறப்பட்டருளி *ஸ்நபந*மாடி அமுது செய் தருளுகைக்கும் ஒரு ஊர் இறையிலியாக என்பேரால் இட்டருள வேண்டு மென்று விண்ணப்பஞ்செய்ய திருவாய்மொழிந்த

6 ருளின ஜயங்கொண்டசோழமண்டலத்து ஊற்றுக்காட்டுக்கோட்டத்து நீர் வேளூர் நாட்டு ப்ரும்மதேயம் சிற்றீஞ்சம்பாக்கம் அளந்தபடி நிலம் எண்பத ரையே ஒரு மாவரை முந்திரிகை இதில் ஊர்நத்தம் உள்ளிட்டு நீங்கும் நிலம் பதின்மூன்றரையே ஒரு மா முக்காணி அரைக்காணிக் கீழரை

7 நீக்கி நிலம் ஆறுபத்தாறேமுக்காலே நான்மாவரையிற்....இதில் ஒரு பூவிளை நிலம் அறுபத்தொன்றரையே மும்மாவரை அரைக்காணியிநால் வேலி ஒன்றுக்கு நெல்லு முப்பதின் கலமாக நெல்லு ஆயிரத்தெண்ணூற்றைம்பதின் கலநே ஐங்குறுணி இருநாழியும் புன்செய் நிலம் ஐஞ்சே அ

8 று மாவின் கீழரை[யி]னால் வேலி ஒன்றுக்கு நெல்லு கலமாக நெல்லு ஐங்கலனே முக்குறுணி அஞ்ஞாழியும் ஆகப் புன்சை உட்பட நிலம் அறுபத்தாறே முக்காலே நான்மாவரை அரைக்காணிக் கீழரையினால் வரிசைப்படி நெல்லு ஆயிரத்தெண்ணூற்று ஐம்பத்தைங் கலனே இருதூணி எழுநாழி இதில் காஞ்சிபுர

9 த்து திருஊரகத்து ஆழ்வார்க்கு தேவதான இறையிலி இட்ட ஒரு பூவிளையும் நீர் நிலத்துக் கடைநிலத்து ஒரு பக்கம் அடைய ப்ரஹ்மதேயமாய் வருகிறபடியும் பழம்படியும் பாப்பன வகையில் முதலுந்தவிர்ந்து இத்தேவர்க்கு இத்திருநாள் களுக்கு வேண்டும் நிமந்தங்களுக்கு இறுப்பதாக நாற்பத்தொன்றாவது முதல் அந்தராயம்

10 உட்படத் தேவதான இறைஇலியாய் வேறு பிறிந்த கம்பதேவிநல்லூர் நிலம் பத்துவேலியினால் வேலி ஒன்றுக்கு நெல்லு முப்பதின் கலமாக நெல்லு முன்னூற்றுக் கலமும் நாற்பத்தொன்றாவது முதல் தேவதானம் இறை யிலியாக வேறு பிறித்துக் குடுக்க வென்று திருவாய் மொழிந்தருளிப் புக்க கேழ்விப்படி *ஸ்ரீ*பாதமுடை

11 புரவுவரி திணைக்களத்து முகவெட்டி காஞ்சிக் குறிஉடையானும் புரவுவரி திணைக்களநாயகம் பெருநாகனும் எழுத்திட்டு வந்த உள்வரிப்படியாலும் புரவுவரிதிணைக்களத்து முகவெட்டி குன்றங்கிழான் எழுத்திநாலும்

புரவுவரி திணைக்களநாயகம் நல்லாற்றூர் உடையானெழுத்திநாலும் புகுந்த உள் வரிப்படியாலும் நீங்கின கம்பதேவிநல்

12 லூர் வரிசைப்படி நெல்லு முன்னூற்றுக்கலமும் தேவர் ஸ்ரீ பண்டாரத்துக் கூடி இத்திரு நாட்களுக்கு வேண்டுவனத்துக்கும் ஆசாரிய தக்ஷிணையும் ஸ்ரீ வயிஷ்ணவ பூஜையும் அகப்படச் சந்திராதித்தவரை இத்தன்மஞ் செல்கைக்கு சிலாலேகை பண்ணித்து[ வத்தி]க்கு ஆக்கி வைத்தேன் அறத்தின் பொருளை அப்பொருளை ஒக்கி வைத்தேன் உயிர்க் கெல்லாம்

13 பொதுஆக இதனைக் காக்கலுற்றுக் கடன்பூண்டவர் தம்அடி என் தலைமேல் ஒக்கிவைத்தேன் அவ்வவ் காலத்துள்ளீர் உம் அடக்கமேய்[1]
*ஸ்ரீ* வயிஷ்ணவ *ரக்ஷை* ॥

## கலி விருத்தம்

ஆக்கிவைத்தேன் அறத்தின் பொருளைஅப் பொருளை
ஒக்கிவைத்தேன் உயிர்க்கெல்லாம் பொதுவாக இதனைக்
காக்கலுற்றுக் கடன்பூண்டவர் தம்மடிஎன் தலைமேல்
ஒக்கிவைத்தேன் அவ்வவ்காலத் துள்ளீர்உம் அடக்கிமேய்.

1. இவ்விடத்தில் சங்கு வரையப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ. தொல்லியல்துறை** | | **தொடர் எண்:** | **41/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 9 |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1175 |
| **ஊர்:** | காஞ்சிபுரம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 46/1921 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 2 |
| **அரசன்:** | இரண்டாம் இராஜாதிராஜன் | | |

**இடம்:** உலகளந்த பெருமாள் கோயில் அர்த்த மண்டப தென்சுவர்

**குறிப்புரை:** காஞ்சிநகரில் இரவிகுலமாணிக்கப் பெருந்தெருவில் வாழ்ந்த சாலிகன் சன்திறவன் மலைகுனிய நின்றான் அத்தியூராழ்வானான நியாயபாலன் என்பவன் திருவூரகத்து எம்பெருமானுக்கு ஸொம்பாதி விளைநிலம் திருத்த 200 புதுக்காசு வழங்கியதுடன் இறைவனுக்குத் திருப்போனகம் செய்வதற்கும் நிலக் கொடையளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு:

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச்சக்கரவத்திகள் ஸ்ரீராஜாதிராஜ தேவற்கு யாண்டு கூ ஆவது ஜயங்கொண்டசோழ மண்டலத்து எயிற்கோட்டத்து நகரங் காஞ்சிபுர மாநகரத்து ஆழ்வார் திருவூரகத்து நின்றருளின பரஸ்வாமிக்கு

2 இநகரத்து இரவிகுலமாணிக்கப் பெருந்தெருவில் சாலிகன் சன்கிறவன் மலைகுனிய நின்றான் அத்தியூராழ்வானான நியாயபாலனேன் இவ்வெம் பெருமானுக்கு நிலங் கொண்டு விடுகைக்கு நிலஞ் சோதித்த[வி]*டத்து இவ்

3 வெம்பெருமான் கோயில் தானத்தார் புற[ம்]பு நீர் கொண்டு விடுகிற நிலம் இறையிழிச்சபடி எம்பெருமானுக்கு ஸோமமாக குகையும் அருளிதுலாயிருக்கு மென்று சொல்லி இவ்வெம்பெருமானுக்குத் திருவிடையாட்ட

4 மாய் வருகிற துணிநிலம் வெண்ணைக்கூத்த விளாகம் கல்வெட்டுப்படி நிலத்தில் கொல்லை மேடாய்க் கிடன்தநிலம் வடபாற்கெல்லை வைசவூரார் காலுக்குத் தெற்கு கீழ்பாற் கெல்லை ஈக்காட்டார் பெருவழிக்கு மேற்கு தென்பா

5 ற்கெல்லை கல்வெட்டுப்ப[டி] கோலாசறுதிக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை கல்வெட்டுப்படி வளையில் வாணியன் குழியில் மேல்கரைக்குக் கிழக்கும் இன்னாற்பாற்கெல்லையுட்பட்ட நிலத்தில் மேற்கடை

6 ய வளையில் வாணியன் குழி உட்படச் சொம்பாதி ஆண்டானேரியென்று கல்லிக் கிழக்கடையச் சொம்பாதி விளைநிலமாகத் திருத்தவும் இருனூறு புதுக்காசு இட நிலங்கல்லி விளைநிலமும் திருத்தி இதனால் [வரும்] போகம்

7 திருவூரகத்தெம் பெருமானுக்கு 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯வரை திருப்போனகஞ் செல்வதாகச் செய்தான் இரவிகுலமாணிக்க

8 ப் பெருன்தெருவில் சாலிகன் சஜுறவன் மலைகுனிய நின்றான் அத்தியூராழ்வான் நியாயபாலரே ॥-

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ. தொல்லியல்துறை** | | **தொடர் எண்:** | **42/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 12, 13 ஆம் நூற்றாண்டு |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 47/1921 |
| **ஊர்:** | காஞ்சிபுரம் | | |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 3 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** உலகலந்த பெருமாள் கோயில் முன்மண்டபக் குமுதம்

**குறிப்புரை:** கச்சிப்பேட்டு 48,000 நகரத்தார்கள் தங்கள் கிராமதேவதையான திருவூரகத்து எம்பெருமானுக்குச் சித்திரைத் திருநாள், நந்தா விளக்கு, மூன்று சந்தியிலும் படைக்க புளியோதரை, பொங்கல், திருக்கண்ணமுது, திருவுத்சவம், திருநந்தத்தாழ்வாரமுது போன்ற செலவுகளுக்கு பல வரிகளைத்தானமாகக் கொடுத்திருக்கின்றனர். கல்வெட்டின் தொடக்கப் பகுதி கிடைக்கவில்லை.

## கல்வெட்டு:

1 காஞ்சிபுரம் பட்டணம் னாற்ப்பார்க்கெல்லை கிழக்கு திக்கு பொருளாளர் கோயிலுக்கு கிழக்கு வைசவூரார் ஏரி எதிர்வாயிலே யீக்காட்டார் பெருவழி மட்டாக கீழ்பார்கெல்லை தென்பார்கெல்லை வேகாவாறதுக்கு வடக்கு தென்பார் கெல்லை மேல்பார்கெல்லை சிறுகாவேரிப்பாக்கத்து எல்லைக்கு கிழக்கு மேல்பார் கெல்லை வடபாக்கெல்லை கோநேரிகட் தோப்புகரை எல்லைக்குத் தெக்கு வடபார் கெல்லை இசை[ந்த நான்] கெல்லைக்கு நடு நாற்பத் தெண்ணா

2 யிரங்குடி நகரம் இந்நகரத்தார் தங்களுக்கு கிராம தேவதையான திருவூரகத்தெம் பெருமானுக்கு தாங்கள் ஸ்வா மிக்கு செய்கிற ஸ்வதந்திரங்கள் நகரற்காரன் வாக்கி யம் ஆயம் வரிகுழி.... நிரை கூலி காலளவு கூலியும் [இ௨]தேவர் சித்திரைத் திருனாளுக்கு தரும் பலிசையும் இ௨தேவர் திருக்கோயில் படித்திரம் திருநந்தாவிளக்கு த்ரி ஸந்தி யவஸரம் தத்யோதிரப் பொங்கல் திருக்கண்ண னமுது திருவத்சரம்(ம்) சம்பாதி திருநந்ததாழ்வாரமுது செய்து மாசா படிவகையு சித்திரைத் திரு

3 னாளில் இவ்வெம்பெருமானுக்கு செய்யும் ஊடியில் இக்கச்சிப்பேட்டு நகரத்தார் மணையின் வட்டமாய் படியே கொடி குடை பந்தம் சிவிகை தாங்கும்

பணிவிடை [ஏ]கோஷ்வத்தில் குடை கலசம் முதலான .....நிமந்தமும் திரு...ளுள் நிமந்தமும் இத்தேவர்க்கு திரு வேகம்பமுடையார் கோயிலில் எட்டாந் திருநாள் திருப்பாஞ்சாடித் திருமஞ்சன நிமந்தமும் மற்றுமுள்ள..... [பண்டடைந்த] திருவொஸசவ பள்ளிச்சிவிகை .......திருனாள் போசனம் திரு வத்தியந் தந்திடு

4 நாள் தோப்புத் திருனாள் திருவூற்த்திருனாள் முதலான உஸசவங்களிலுள்ள நிமந்தமும் மாஸோஷ்வம் சங்கிறாந்தி பறுவங்கள் சிவிகை தாங்கவாரும் ஏவற்ப் பணிவிடை ஊழியங்கள் பண்ணுகுறவரும் காரகம்கு....ஸந்தியாராதனை செய்.... விடுதாரும்....களுக்கும் இக்கச்சிப்பேட்டு நகரற்தார்...ப் பிற் தெண்ணார் பிரங்குடிகளும் சேனை முதலியார் ஏவல்ப்படி ஏதுடையதும் செய முறய்யே செய்வது இதற்கு இவ்வேயபெருமாள்......களண்டக் குறி விற...... .விக்கிந......

5 லும் இக்கச்சிப்பேட்டு நகறதார் ஸஹ்ஹ க்ஷதிய வை[ஸ்ணுவ] ஸூத்ர் முதலான தொண்ணூற்றெட்டு சாதியிலுண்டான தொண்ணாயிரங் குடிகளும் சம யமிருந்து... ச்சுக் கொள்ளக் கடவர்கள் ॥-

| த.நா.அ. தொல்லியல்துறை | | தொடர் எண்: | 43/2005 |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 25 |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 1241 |
| ஊர்: | காஞ்சிபுரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 44/1921 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 4 |
| அரசன்: | மூன்றாம் இராஜராஜன் | | |

இடம்: உலகளந்த பெருமாள் கோயில் கருவறை தென்சுவர்

குறிப்புரை: காஞ்சிபுரத்திலுள்ள திருவூரகத்து நின்றருளின பரமஸ்வாமி கோயிலில் சந்தி விளக்கு ஒன்று எரிப்பதற்கு, பையூர்க் கோட்டத்து சிறுவான்பேட்டு மாப்பூதங் கிழவன் வில்லிஆழ்வான் தேவப்பெருமாள் என்பவர் இரண்டு மாடைகள் தானமளித்துள்ளார். அக்காசினைப் பெற்றுக்கொண்ட இக்கோயிலில் திருவாராதனம் பண்ணும் குண்டூர் இங்கபிரான்பட்டன் என்பவன் அவ்விளக்கெரிக்க சம்மதித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு:

1 ஸ்வஸ்திஸ்ரீ ராஜராஜதேவற்கு யாண்
2 டு உயரு ஆவது காஞ்சிபுரத்து திரு
3 வூரகத்து நின்றருளிய பரமஸ்வாமிக
4 ளுக்கு பையூர்க் கோட்டத்து சிறு
5 வான்பேட்டு மாப்பூதங்கிழவன் வி
6 ல்லி ஆழ்வான் தேவப் பெருமாளே[ன்*]வை
7 த்த சந்தி விளக்கு ஒன்றுஞ் சந்திர
8 ாதித்தவரை செல்வதாக இரண்டு
9 மாடை கைக் கொண்டேன் இக்கோ
10 யில் திருவாராதனம் பண்ணுங் குண்டூ
11 ர் சிங்கப்பிரான் பட்டனேன் சிங்கப் பிர[ான்]
12 பட்டன் எழுத்து

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **44/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 20 |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1241 |
| **ஊர்:** | காஞ்சிபுரம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 43/1921 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 5 |
| **அரசன்:** | மூன்றாம் இராஜராஜன் | | |

**இடம்:** உலகலந்த பெருமாள் கோயில் கருவறை தென் சுவர்

**குறிப்புரை:** திருவான்மியூரைச் சேர்ந்த மருதுழான் உடையாந் சேனாபதி பிள்ளை ஒரு சந்தி விளக்கெரிக்க 2½ மாடை பொன் கொடுக்க, கோயிலில் பூசை செய்யும் சிங்கபிரான்பட்டன் அப்பொன் பெற்றுக் கொண்டு விளக்கெரிக்க ஒப்புக்கொண்ட செய்தி சொல்லப்படுகிறது.

## கல்வெட்டு:

1 *ஸ்வஸ்திஸ்ரீ* ராஜராஜதேவற்குயாண்டு

2 காஞ்சிபுரத்து திருவூரகத்து

3 நின்றருளிய பரம*ஸ்வாமி*களுக்கு புலி

4 யூர் கோட்டத்து திருவான்மியூர் மரு

5 துழான் உடையாந் சேனாபதிப் பிள்ளை வைத்

6 த சந்திவிளக்கு ஒன்றுஞ் சந்திராதித்த

7 வரை செல்வதாக இரண்டரை மாடை

8 கக் கொண்டேன் இக்கோயில் திருவ

9 ாரதனம் பண்ணும் குண்டூர்ச் சிங்கம்

10 பிரான் பட்டனேன் சிங்க பிரான் எழுத்து

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **45/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | காஞ்சிபுரம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 42/1921 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சம்புவராயர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 6 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** உலகளந்த பெருமாள் கோயில் கருவறை கிழக்குச்சுவர்

**குறிப்புரை:** சோழ மண்டலத்தில் நிலவிய நடைமுறைப்படி தொண்டை மண்டலத்திலும் நாடகம், கூத்து நடத்துபவர்களுக்கு சம்புவராயர் மரியாதை தந்து இதற்கிணங்க அரண்மனையார் (வாயிலார்) நடந்து கொள்வர் என ஆணை வழங்கிய செய்தி சொல்லப்படுகிறது.

## கல்வெட்டு:

1 திருவாய்க் கேழ்வி முன்னாக சம்புவராயர்க்கு

2 *யஎ* வது ஜயங்கொண்டசோழ மண்டல

3 த்து எயிற்கோட்டத்து நகரங் காஞ்சிபுரத்து

4 கும்பநாயற்று *உ௵வ_ுவக்ஷ*த்து வெள்ளிக்கிழமை

5 *ஓபஉ*யும் பெற்ற திருவாதிரை நாள் தொண்டை மண்டலத்து

6 சாலைகள் தங்களுக்கு *உ௵வ_ு*மானபடியே சோழமண்டல

7 மரியாதி காஞ்சிபுரத்திலும் தொண்டைமண்டலத்தில்

8 தாங்கள் இருந்த ஊர்கள் தோறும் வாயிலாரை

9 தங்கள் நாடகம் கூத்துக் காணக்கடவர்கள்

10 இப்படிக்கு தாங்கள் இருந்த ஊர்கள் தோ

11 றும் கல்லுவெட்டி நாட்டிக் கொள்வது ‖-

**த.நா.அ. தொல்லியல்துறை** | **தொடர் எண்:** 46/2005

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 12 |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 13 ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | காஞ்சிபுரம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 41/1921 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | பாண்டியர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 7 |
| **அரசன்:** | சுந்தரபாண்டியன் | | |

**இடம்:** உலகளந்தபெருமாள் கோயில் கருவறை கிழக்குச்சுவர்

**குறிப்புரை:** இக்கோயிலுக்கு திருநந்தா விளக்கெரிக்க நெய்யளக்கும் இக்கோயிலைச் சேர்ந்த இடையர்கள் மீதான சாத வரி, புலவரி ஆகியவை புதிதாக விதிக்கப்பட்ட கூடுதலான வரியிலிருந்து விலக்களித்து பழைய வரிவிதிப்புப்படியே நடைமுறைப் படுத்துவதாக அரசன் ஆணை வழங்கிய செய்தி சொல்லப்படுகிறது.

## கல்வெட்டு:

1 திருவாய்க் கேழ்வி முன்னாக திருபுவனச் சக்கரவத்திகள் கோனேரின்மை கொ

2 ண்டான் *ஸ்ரீ* சுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு பன்னிரண்டாவது *வ௵வ*

3 *வக்ஷ*த்து சது*ஜ்ஜ*ுயும் வெள்ளிக்கிழமையும் பெற்ற ரேவதிநாள் ஜயங்கொண்டசோழ ம

4 ண்டலத்து எயிற்கோட்டத்து நகரங் காஞ்சிபுரத்துத் திருவூரகத்து நின்றருளிய பரம*ஸ்வா*

5 மிகளுக்குத் திருநுந்தா விளக்குக்கு உபையம் அளக்கும் இடைகுடி மக்களுக்குத் தங்க

6 க்கு தங்களை பன்னிரண்டாவது முதல் சாதவரி புல்வரி உட்பட்ட வரிகள் கொள்

7 ளக் கடவதல்லவாகவும் தாங்கள் முன்பிலாண்டுகள் இக்கோயிலுக்கு உபை

8 யம் அளக்கும்படியே இன்னாள் முதலும் அளந்து போதுவார்களாக

9 வும் சொன்னோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு சந்தி

10 ராதித்தவரை செல்வதாக கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக் கொள்வ

11 தே இ*ய௨௨* விலக்கினார் கெங்கைக் கரையில் குராப்பசுக் கொன்றார்பாவ

12 ங் கொள்ளக்கடவர்கள் இவை பழந்தியராயனெழுத்து ॥-

# த.நா.அ. தொல்லியல்துறை — தொடர் எண்: 47/2005

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 18 |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 864 |
| ஊர்: | காஞ்சிபுரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | — |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | பல்லவர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 8 |
| அரசன்: | தெள்ளாற்றெறிந்த (மூன்றாம்) நந்திவர்மன் | | |

**இடம்:** உலகளந்த பெருமாள் கோயில் உள்சுற்றுத் தளத்தில் பதிக்கப்பட்ட கல்

**குறிப்புரை:** விடேல்விடுகு குதிரைச்சேரியில் உள்ள கற்பூரம் முதல் செருப்பு இறுதியான பொருள்களை வியாபாரம் செய்பவர்களுக்கு அனுத்தரப் பல்லவரையன் கேட்டுக்கொண்டதற்கிணங்க அரசன் வரிவிலக்குச் செய்து கொடுத்த செய்தி சொல்லப்படுகிறது.

**கல்வெட்டு:**

1 தெள்ளாற்றெறிந்த நந்

2 திப் போத்தரையர்க்கு யாண்டு ப

3 தினெட்டாவது அனுத்தரப் பல்லவ

4 வரையன் விண்ணப்பத்தாற் கா

5 டு பட்டித் தமிழ்ப் பேரரையனா

6 ணத்தி ஆக விடேல்விடுகு குதிரை

7 ரச்சேரியார்க்குக் கருப்பூரந் தலையா

8 கச் செருப்புக் கடையாக எல்லா

9 வ்யாபாரமுங் கடை ஏறி வாணிக

10 ஞ் செய்யப் பெறுவாராகப் ப

11 ணித்தோம் ஸபை உள்ள அளவு

12 இதற்கு ஸர்வ [பரிஹாரமாகக்] கு

13 டுத்தோம் இப்பரிசு முற்றுவித்

14 தான் சட்டட்ட போசன் பெண்ண[ன்] ॥-

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **48/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 15 |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1265 |
| **ஊர்:** | காஞ்சிபுரம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 40/1921 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | தெலுங்குச் சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 9 |
| **அரசன்:** | விஜயகண்டகோபாலன் | | |

**இடம்:** உலகளந்த பெருமாள் கோயில் கருவறை வடசுவர்

**குறிப்புரை:** காஞ்சிபுரத்து இராஜராஜப் பெருந்தெருவைச் சேர்ந்த காமன் பெருங்காடப் பிள்ளை என்பவன் ஒரு சந்திவிளக்கெரிக்க 15 பழைய குளிகை பணம் கொடுக்க அதனைக் கோயிலில் பூசை செய்யும் சிங்கபிரான் பட்டன் பெற்றுக் கொண்டு விளக்கெரிக்க ஒப்புதல் தந்த செய்தி சொல்லப்படுகிறது.

## கல்வெட்டு:

1 திரிபுவனச் சக்கரவத்திகள் *ஸ்ரீ* விஜயகண்டகோபாலதேவற்கு யாண்டு *யரு* வது தை

2 மாதம் பதின்மூன்றந் தியதி திங்கட்கிழமையும் *உமா*மியும் பெற்ற உத்திரத்து நாள்

3 நகரங் காஞ்சிபுரத்து திருவூரகத்து நின்றருளின பரம*ஸ்வாமி*களுக்கு இந்நகரத்து இர

4 ாஜராஜப் பெருந்தெருவில் வியாபாரி கொடுஞ்சின்றி வணிகன் காமன் பெருங்காடப் பி

5 ள்ளை வைத்த சந்திவிளக்கு ஒன்றுஞ் சந்திராதித்த வரை செல்வதாக பதினைஞ்சு பழ

6 ங் குளிகைப் பணங் கைக்கொண்டோம் கோயில் திருவாராதினம் பண்ணும்

7 குண்டூர்ச் சிங்கப்பிரான் பட்டனும் கரியநாயனாரும் இவ்விருவோம் இவை

8 சிங்கப்பிரான் பட்டன் எழுத்து இவை கரியநாயனார் எழுத்து ||-

த.நா.அ. தொல்லியல்துறை | தொடர் எண்: 49/2005

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 40 |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு: | கி.பி.1210 |
| ஊர்: | காஞ்சிபுரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 39/1921 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 10 |
| அரசன்: | முதலாம் குலோத்துங்கன் | | |

இடம்: உலகளந்த பெருமாள் கோயில் முன் மண்டப வடசுவர்

## கல்வெட்டு:

1 *ஸ்வஸ்திஸ்ரீ* புகழ்மாதுவிளங்க ஜயமாது விரும்ப நிலமகள் நிலவ மலர்மகள் புணர உரிமையிற்சிறந்த மணிமுடி சூடி மீநவர் நிலைகெட வில்லவர் குலைதர ஏனை மன்நவர் இரியலுற்று ழிதரத் திக்கனைத்துந் தன் சக்கரநடாத்தி விஜயா அ*ஹி*ஷேகம் பண் வீர*ஸிம்ஹாஸ*னத்து

2 அவனி முழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோவிராஜகேசரி பஶரான *திரிபு*வனச்சக்கரவத்திகள் *ஸ்ரீ*கொலோத்துங்கசோழதேவற்கு யாண்டு *சய* ஆவது நாள் உள*சய*னால் ஜயங்கொண்டசோழ மண்டலத்து மனையிற்கோட்டத்துத் தக்கோலமான குலோத்துங்க சோழபுரத்துக் கோயிலி

3 னுள்ளால் வடபக்கத்து தேவாரத்து தேவாரஞ் செய்தருளிப் பள்ளிப்பீடத்து எழுந்தருளியிருக்க காஞ்சிபுரத் திரு ஊரகத்து ஆழ்வார் அடியாரில் ஆதித்தன் கம்பதேவியாரான நம்பிராட்டியார் திரிபுவநமுடையாரும் ஆதித்தன் ஆண்டகுட்டி யாரான அணுக்கியார் சோழகுலவல்லியாரும் எம்பெருமான் திருஊரகத்து ஆழ்வார்

4 அனாதியாக காஞ்சிபுரத்து நகரத்தார் பக்கலுந் துண்டுணுக்கச்சேரியார் பக்கலும் விலை குடுத்துக் கொண்டுடைய கோநேரி மேட்டு மதகின் வழி நீர்பாய்ந்து விளைந்து வருந் துணி நிலங்களாய்ச் செம்பிலும் ஆழ்வார் பழைய கோயிலிலும் திருச்சுற்றுமாளிகையிலும் உள்ள சிலாலேகைப்படி உள்ள நிலம் அவர்கள் பயி[ர்]

5 ச் செய்வார் இன்றிப் பாழ் கிடந்தமையில் காஞ்சிபுரத்து சாலிய நகரத்தார் திருவாய் மொழிந்தருளிப் பெற்றோமென்று அனுபவியா நின்றார்கள் இந்நிலம் முன்பு உடைய படியே ஆழ்வார்க்கே பெற வேண்டுமென்றும் அடியோம் விண்ணப்பத்தால் மீண்டமை சொல்லிப் பறையும் அறைவித்துப் பெருநான் கெல்லை

6 யும் பேசி ஆழ்வார் கோயிலிலே ஆழ்வார்க்குத் திருஅத்தசாமத்துக்குந் திருப்பள்ளி எழுச்சிக்குந் திருக்கண்ணாமடைக்கும் மற்றும் இத்தேவர்க்கு வேண்டும் விபவங்களுக்குமாக இந்நிலந்தந்தோமென்று திரு ஊரகத்து நின்றருளின் ஆழ்வார் திருக்கையிலே நிர்வார்த்தருளி கல்லும் வெட்டு வித்துக் கொள்ளப்பெறு

7 வோமாகத் திருவாய் மொழிந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்யத் திருவாய் மொழிந்தருளிக் காஞ்சிபுரத்துச் சாலிய நகரத்தார்க்குத் திரு ஊரகத்து தேவர் நிலமாய் நம் இடையில் பெற்று தாங்கள் அனுபவிக்கிற நிலம் திருஊரகத்து நின்றருளின

8 தேவர்க்கே பண்டு உடையபடியே குடுத்தோம் விட்டுக்குடுக்கவென்று ப்ரஸாதஞ் செய்தருளி வந்த திருமுகப்படியாலும் ஜயங்கொண்ட சோழமண்ட லத்துக்கு அதிகாரித் தண்டநாயகஞ் செய்கிற சோழமண்டலத்து நித்தவிநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து ஆவூர் ஆவூர்உடையான் சி..

9 சியாரூர் தேவன் காரியர்ரான முனையதரயர்க்குப் பிரஸாதஞ் செய்தருளி வந்த திருமுகப்படி ஜயங்கொண்டசோழ மண்டலத்து எயிற்கோட்டத்து நகரங் காஞ்சிபுரத்து திருஊரகத்து நின்றருளின தேவர் காஞ்சிபுரத்து நகரத்தார் பக்கல் மதிட்புறத்துந் துண்டுணுக்கச் சேரியார் பக்கலு[ம்]

10 விலை குடுத்துக் கொண்டு கோநேரி மேட்டு மதகின் வழி நீர்பாய்ந்து விளைந்து வருந் துணி நிலங்களாய்ச் செம்பிலுங் கல்லிலும் உடைய நிலம் அவர்கள் பயிர்ச் செய்வார் இன்றிப்பாழ் கிடந்தமையில் காஞ்சிபுரத்துச் சாலியர்க்கு நாங் குடுக்க அனுபவியா நின்றாகளென்றும் இந்நிலமா

11 னது தேவர்க்கே பழம்படியே பெற்றுத் திருவத்தசாமத்துக்குந் திருப்பள்ளி எழுச்சிக்குந் திருக்கண்ணாமடைக்கும் மற்றும் இத்தேவர்க்கு வேண்டும் விபவங்களுக்குமே பெறவேண்டுமென்று நம்மோடு இருக்கும் பெண்டுகளில் திரிபுவன முடையாளுஞ் சோழகுல வல்லியும் நமக்கு சொன்னாகள் திரு ஊ

12 ரகத்து நின்றருளின தேவர் முன்பு அநாதியாகக் காஞ்சிபுரத்து நகரத்தார் பக்கல் மதிட் புறத்துந் துண்டுணுக்கச் சேரியார் பக்கலும் விலை குடுத்துக்கொண்டு கோநேரிமேட்டு மதகின் வழி நீர் பாய்ந்து விளைந்து வருந் துணி நிலம் முப்பத்து ஆறு பட்டியும் முன்பு பழைய கோயிலிலும் திருச்சுற்று

13 மாளிகையிலும் உள்ள சிலாலேகைப்படியே இறைஇலியாக இத்தேவர்க்கு வேண்டும் விபவங்களுக்கே நாமே நிர்வார்த்துக் குடுத்தோம் இப்படி திரிபுவன முடையாளுஞ் சோழகுலவல்லியும் நமக்குச் சொல்ல மீண்டமை செப்பிப் பறையும் அறைவித்துப் பெருநான்கெல்லையும் பேசிக் கோயிலில்

14 கல்லும் வெட்டுவித்துக் குடுக்கவென்று திருமந்திரஓலை அபையநாராயணப் பல்லவரையர் எழுத்தினால் ப்ரஸாதஞ் செய்தருளி வந்த திருமுகப்படியாலும் கேழ்விப்படியாலும் இக்கோயிற் பூரண கும்பங்கள் பொன்னும் வெள்ளியும் மேய்வித்தருள கோயிலின் உள்ளே புகுந்தருளி ஆழ்வாரைத் திரு

15 வடித்தொழுது திருவாராதினை பண்ணி ஸ்ரீபாத ஷஷம் இட்டருளி திருவுண் ணாழிகை உள்ளே நிந்றருளின இடத்து நம்பிராட்டியார் திரிபுவன முடையார் எம்பெருமான் ஆழ்வார்க்குத் தந்தருளின நிலங்களுக்கும் அடியேன் பேரால் இட்டருளின ஊர்க்கும் ஆழ்வார்க்கு இந் நிமந்தங்களுக்கே தந்

16 தோமென்று ஆழ்வார் திருக்கையிலே நீர்வார்த்தருள வேண்டுமென்று விண்ணபஞ் செய்ய கலசப்பானையும் நீரும் எடுத்துக் குடுத்தருள வாங்கி யருளித் திரு ஊரகத்து நின்றருளின வராஹஸ்வாமிகளுக்கு இந்நிமந்தங்க ளுக்கே இந்நிலங்களும் இவன்பேரால் பிறிந்த ஊரும்

17 இறைஇலி தேவதானமாக சந்திராதித்தவரை செல்ல நாமே தந்தோமென்று நீர்வார்த்தருள ஸ்ரீஹஸ்தம் ஏற்றான் இவ்ஆழ்வாரை அனாதியாக ஸ்ரீ பஞ்சராத்திரஶாஸ்த்ரத்தினால் திருவாராதனை பண்ணி வரும் வேதப்ப்ராஹ்மணர் வங்ஶத்தில் காலியூர்க் கோட்டத்து தனியூர் ஸ்ரீராஜேந்த்ர சோழச் சருப்பேதி மங் கலத்து

18 சீதரச்சேரிக் குண்டூர்ப்பள்ளிகொண்டான் பட்டன் மகன் கேசவபட்டன் ஏற்க நீர்வார்த்தருளி இப்படிச் சொல்லி சிலாலேகை செய்து கொள்கவென்று திருவாய் மொழிந்தருளிச் சிலாலேகை செய்த நிலமாவது சித்திரவல்லிப் பெருஞ்செறுக் குழி ஆயிரமும் சீ தேவி குழி ஆயிரத்து எழுபதும் கோரைக் கொள்ளி தடி

19 மூன்றிநால் கரம்பு உட்படக் குழி தொளாயிரத்து ஒருபத்தாறும் திருக்காளீஶ்வர முடைய தேவதானத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை இத்தேவர் தேவதானத்துக்கு தெற்கும் தென்பாற்கெல்லை திருக்கந்தீஶ்வரமுடைய மஹாதேவர் கோயிலில் வடக்கில் மதிளின் வடபக்கத்து நந்தவனத்தின் வடக்கில் நீரோடு காலான கருமாணிக்க வாய்க்காலுக்கு

20 வடக்கும் கீழ்பாற்கெல்லை குளத்தின் மேல்கரை அகப்பட்ட மேற்கும் நடுவுப்பட குழி இருனூற்று ஐம்பதும் வலைச்சேரிக் குண்டில் குழி இருநூற்று ஐம்பதும் காடன் செறுக்குழி தொளாயிரத்தறுபதும் கல்மடை குழி ஆயிரத்திருனூற்று நாற்பத்தைஞ்சும் கருமாணிக்கப் பெருஞ்செறுக்குழி ஆயிரத்து முன்னூற்று இருபத்திரண்டும் உலக மாராயன்

21 குண்டில் இரண்டும் உட்படக் குழி ஆயிரத்து நூனூற்று நாற்பத்தைஞ்சும் இராரான் செறுத்தடி ஆறினால் குழி ஆயிரத்தறுனூறும் பொந்நியக்கி குழி தொளாயிரத்து எண்பத்து இரண்டும் நக்கபிரான் குழி ஆயிரத்து ஒருனூறும் இன்னும் ராஜராஜப் பெருவழிக்கு கிழக்கு துண்டுணுக்கச் சேரியார் எல்லையே கிழக்கு நோக்கிச் சென்று கஞ்சநந்தி விஷ்ணுக்ருஹத்து ஆழ்வார் தேவதான

22 ம் மேல் எல்லை உற்று இவ்வெல்லையே தெர்கு நோக்கி சென்று இவ்வெல் லையே கிழக்கு நோக்கி கம்புழான் பரம மாமணித் துக்கையார் தேவதானத்து

மேல் எல்லை உற்று இவ்வெல்லையே கிழக்கு நோக்கிச் சென்று மாநகரப் பெரும்பள்ளிப் பள்ளிச்சந்தம் குண்டிகைப் பட்டியிந் மேலெல்லை உற்று இவ்வெல்லையே தெற்கு நோக்கி பதிநறு சாண் கோலால் ஐங்கோல் செந்று இ

23 தந் தெந்நெல்லை உற்று இவ்வெல்லையே கிழக்கு நோக்கிச் சென்று முக்குடையாந் கண்ணிக் காலேயுற்று புலவர் தலைவர் ஜிநாலயப் பெரும் பள்ளித் தேவர்க்குத் திருவமுதிற்கு நகரத்தார் விட்ட நிலத்திந் தெந் மேல் மூலை உற்று இஜ நிலத்திற் தெற்கு மாநகரப் பெரும்பள்ளிப் பள்ளிச் சந்தம் மூந்று பட்டியிற் மேல் வரம்பில் இம்முக்குடையாந் க

24 ண்ணிக்காலே தெற்கு நோக்கிச் செந்று திருவூரகமுடைய தேவர் நிலத்திந் தெந்கீழ் மூலையே கிழக்கு நோக்கிந கருமாணிக்க வாய்க்காலையுற்று மாநகரப் பெரும்பள்ளிப் பள்ளிச்சந்தத்திந் வடவெல்லையே இக்கருமாணிக்க வாய்க்காலே மேற்கு நோக்கிச் செந்று இப்பள்ளிப் பள்ளிச் சந்தத்திந் வடமேந் மூலையுற்று இந்த மேலெல்லையே தெற்கு நோக்கிச் செந்று திருவேகம்பமுடை

25 டயார் தேவதாநம் ஆறுபட்டியிந் வட கீழ் மூலையுற்று இதந் வடவெல்லையே மேற்கு நோக்கிச் செந்று காமக் கொப்புளிப் பிடாரிப்பட்டியிந் வடவெல் லையே மேற்கு நோக்கிச் செந்று ராஜராஜந் பெருவழியுற்று இவ்வெல்லை பேசிந நிலங்களிந்நுள் நீர் நிலமும் புஞ்செய் நிலமும் உள்மேடும் உள்ளுள்ள குளங்களும் அகப்பட்டவும் இன்நம் ஆறுபட்டிக் கீழெல்லைக்குக் கிழக்

26 கும் அமண் சந்தத்து தெற்கும் தெந்பாற்கெல்லை திரயநேரிக்குப் போந பெருவழிக்கு வடக்கும் கீழ்பாற்கெல்லை சிவிழக்கேரி கீழ்கரை மண்பாட் டுக்கு மேற்கும் இவிசைந்த பெருநான்கெல்லைக்குள் அகப்பட்ட சிங்கருமாந் செறு பழங்கோலால் குழி ஆயிரத்திருநூறும் இந்நம் இத்தேவர்க்கே பகலடைப் பாந் வாசலாந மும்முடிசோழந் திருவாசலுக்குக் கிழக்கில் ஏரியி

27 ல் தலைப்பேழை பெற்று வைசவூர்ஏரிக்கு நீர்ப்பாயும்பெருவாய் காலிந் தெந்கரையில் நகர நிலமாந மாலைக்காரர் பூம்தோட்டங்களிந் கீழ்பாற் கெல்லையில் திருவூரகத்து நிந்றருளிந தேவர்க்குச் செங்கழுநீற்குளமாக வளையில் வாணியந் கல்லுவித்த குளத்தின் மேல் கரையே இந்நிலத்துக்கு மேல் எல்லையாக இத்ஷேவர் நிலத்தை வலமாக எல்லை குறித்த பரிசாவது

28 இக்குளத்திந் வடகரையே உற வைகவூர்க்கு நீர் பாய்கிற பெருவாய்காலை ஊடறுத்து இதின் வடகரையே துடங்கி பதினறு சாண் கோலாலே திரைய னேரிக்குப்போகிற பெருவழி உற வடக்கு நோக்கி இருபத்து எண்கோல் சென்று இன் நிலத்துக்கு வட வெல்லை ஆவது இப்பெரு வழியே கிழக்கு நோ

29 க்கி நூற்று ஒருபத்து ஐஞு கோல் ஐய்ய நேரி வடகீழ் மூலையுற்றுமிதின் கீழ்க் கரையே தெற்கு நோக்கி முப்பத்து எழுகோல் சென்று இன்னம் கிழக்கு நோக்கி பதிநாங்கோல் வள்ளுவந் சிற்றேரி வடகீழ் மூலையுற்று இந்நம் இவ்வேரி கீழ்கரை உட்பட தெற்கு நோக்கி ஐஞ்பத்து இருகோல் நீளம் சென்று வைகவூர் ஏரிக்கு நீர் பாய்கிற பெருவாய்க்கா

30 [லை] ஒருகோல் ஊடறுத்து இதிந் தெந்கரையுற்றுக் கிழக்கு நோக்கி வட கோயிலாந் பட்டிக்கு எல்லையாந நீரோடு வாய்க்காலிந் தெந்வரப்பேய் கிழக்குனோக்கிப் பதிநறு சாண் கோலால், ஐம்பத்தாறே முக்கல் கோல் வைகவூர் மேலெல்லையான ஈக்காட்டார் பெருவழியே முடிகொண்ட சோழப் பெருன் தெருவில் வீரராஜேந்திரத் துக்கையாருடைய நிலம் மூ

31 டியின் மேலெல்லையான ஈக்காட்டார் பெருவழியே திருவூரகமுடைய தேவர் நிலமானமைச் சிறுப்பாள பட்டிக்குக் கீழெல்லையாக ஈக்காட்டார் பெருவழியே தெற்கு நோக்கிப் பதிநறு சாண்கோலால் நாற்பத்தேழரைக் கோல் சென்று இன்நம் இக்கோயிலில் வெண்ணைக் கூத்தாழ்வார்க்கு திருவமுர்துள்ளிட்ட நிமன்தங்களுக்கு காஞ்சிபுரத்து நகரத்தார் பக்கல் ராஜேந்திரசோழ தேவர்

32 க்கு யாண்டு ஐஞ்சாவது ராஜேந்திர சோழ ப்ரஹ்மாதிராஜன் கொண்டுவிட்ட நிலம் தென்கோயிலான் பட்டிக்கு கீழ்பாற்கெல்லை பேசின திருவூரகமுடைய தேவர் நிலம் திருவரங்கதேவன் பட்டியின் வட வரம்பே மேற்கு நோக்கி இன்நம் இத்தேவர் நிலம் நாராயணன் பட்டியின்தென் வரம்பே இத்தென் கோயிலான் பட்டிக்கு வடவெல்லையாக கொண்டு மேற்கு நோக்கி இன்னம் திருவூரகமுடை

33 ய தேவர் நிலம் எழுமாவின் தென்வரப்பே இத் தென்கோயிலான் பட்டிக்கு மேலெல்லை பேசின கலிப்பகைப் பட்டிக்கு வடவெல்லையாக கொண்டு மாக்கொண்டது ஐஞ்னூறாகவும் பட்டி கொண்டது ஆயிரங் குழியாகவும் கோல் பதிநறு சாண் கொண்டது கோலாகவும் கொண்டு மேற்கு நோக்கி நூற்றொருபத்தொரு பத்தறுகோல் நகர நிலமுறச் சென்று இவ்வெழுமாவின் மே லெல்லையே வ

34 டக்கு நோக்கி இருபத்து முக்கோல் சென்று இன்னம் மேற்கு நோக்கி வளையில் வாணியன் ஏரியின் தென்கரையே மேற்கு நோக்கி முப்பத்தைங் கோல் மேல் கரையுறச் சென்று இன்னம் மேல் கரையே வடக்கு நோக்கி வையசவூரார் ஏரிக்கு நீர்பாயுங் காலின் தென்கரையுற இருபத்து முக்கோல் சென்று இன்னம் ஸ்வயம்பு தேவர் பள்ளத்து திருவூரகமுடைய தேவ

35 ர் கலியுகத்துக்கு முன்பு ஸ்ருஷ்டித்த திருவனந்தாழ்வார்க்கு நித்தமாக மாவும் பாலும் அமுது செய்தருளுகைக்கு விட்ட நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை சாத்து வாயேரிமண்பாட்டுக்கு மேற்க்கும் தென்பாற்கெல்லை ஸ்வயம்புதேவர் நிலத் துக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை வானவன் மஹாதேவீஸ்வரமுடையார் நிலத் துக்குக் கிழக்கும் வடபாற் கெல்லை நகர நிலத்துக்கு தெ[த]

36 ற்கும் நடுவுபட்ட நிலம் இரண்டுபட்டியும் இன்னம் ஸ்தானவாஸிகளில் நித்யமாக ஸ்நபநமாடியருளிப் பெருன் திருவமுது செய்தருளுகைக்கும் ஏகோத்ஸவம் எழுன்தருளுகைக்கும் வேண்டும் நிமந்தங்களுக்கு ஸ்ரீ வீர

ராஜேந்திரதேவர் அருளிச் செய்து நீர் வார்த்தருளி அமரபுஜஹதேயம் ஸ்ரீ வீரராஜேந்திரச் சருப்பேதிமங்கலத்து [இ]

37 றையிலி தேவதானமாக பிறிந்த துணி நிலமாவது இவ்வூர் ஐந்நூற்றொரு பத்திரண்டு குழி கொண்டது ஒரு மாவாகச் சுத்தமலி வதிக்கு மேற்கு வீரராஜேந்திர வாய்க்காலுக்குத் தெற்கு இரண்டாங் கண்ணாற்று ஆறாஞ் சதுரம் எட்டு மாவில் தெற்கடைய நிலம் நாலுமாவும் மூன்றாங்கண்ணாற்று ஆறாஞ் சதுரம் எட்டு மாவில் வடக்கடைய நிலம் நாலு மாவும்

38 [ஆக*] நிலம் எட்டு மாவும் இன்நம் திருவூரகத்தாழ்வார் திருந்நவனம் பேரருளாளனுக்குப் பெருநான்கெல்லை பேசினபடி கீழ்பாற்கெல்லை இரவி குல மாணிக்கப் பெருந்தெருவில் மேல்சிறகில் மேற்கில் வ[ா]நீளத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை இராஜராஜப் பெருன்தெருவில் வடசிறகில் வா நீளத்துக்கு வடக்கும் மேல் பாற்கெல்லை திரு நமரீஸ்வர முடைய உஹாதேவர் திருநன்தவ

39 னத்துக்குக் கிழக்கும் இதன் வடக்குத் திருவாய்ப்பாடி ஆழ்வார் சன்னதித் தெருவில் தென்சிறகில் வாணிளத்துக்குத் தெற்கும் இப்படி இந்நிலங்கள் சந்திராதித்தவரையும் செல்லச் சிலாலேகை செய்தோம் உ

**த.நா.அ. தொல்லியல்துறை** | **தொடர் எண்: 50/2005**

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 13 |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 1263 |
| ஊர்: | காஞ்சிபுரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 38/1921 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | தெலுங்குச்சோழர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 11 |
| அரசன்: | விஜயகண்டகோபாலன் | | |

**இடம்:** உலகளந்த பெருமாள் கோயில் மகாமண்டப வடசுவர்

**குறிப்புரை:** பங்கனூர் தாமோதிரப்பட்டன், காராம்பிச்சேட்டு பார்த்தசாரதி பட்டன் அதே குடி தாமோதிரப்பட்டன் ஆகிய மூவரும் அழகிய பல்லவ சதுர்வேதி மங்கலத்தில் அவர்களுக்கிருந்த பங்கான இளையான்செறு என்ற 300 குழி நிலத்தை கோயில் வழிபாட்டிற்காகக் (சங்கிரமம்) கொடுத்த செய்தி சொல்லப்படுகிறது.

## கல்வெட்டு:

1 திருவாய்க்கேள்வி முன்னாகத் திரிபுவநச்சக்ரவத்திகள் ஸ்ரீவிசையகண்ட கோபால தேவற்கி யாண்டு ௰௩ வது கும்ப நாயற்று* பூர்வ பக்ஷத்து திங்கட்

2 கிழமையு ஷஷ்டியையும் பெற்ற ரேவதி நாள் எயிற்கோட்டத்து நகரங் காஞ்சிபுரத்து திருவூரகத்து நின்றருளிய பரமஸ்வாமிகளுக்கு தாமற்கோட்டத்துக் களத்தூரராந விக்ரம ஸி

3 ம்ஹசதுர்வேதிமங்கலத்துப் பங்கனூர் தாமோதிரபட்டனும் காராம்பிசெட்டுப் பார்த்தசாரதி பட்டனுமிக்குடி*த்தாமோதர பட்டனுமிம் மூவருஞ் சங்கிரமப் படிக்குந் நாங்

4 கள் குடுத்த நிலமாவது இவ்வூர் வடபிடாகை சுகரம் யிரலடிப்பட்டாந அழகிய பல்லவ சதுர்வேதிமங்கலத்து எங்கள் காணிப் பங்காந நிலத்தில் இளையாந் செறுக்குழி ௩௱

5 இக்குழி முந்நூற்றுமிந்நாள் முதல் எங்களுதாப் பங்கு அனுபவிக்கறபடியே திருநாமத்துக்காணித் திருவிடையாட்டமாக விட்டுச் சிலாலேகை செய்து குடுத்தோமிம்மூ

6 வருமிவர்கள் பணிக்க எழுதிநேநிவ்வூர் மத்யஸ்தந் களத்தூருடையாந்ஸஹஸ்ரநாரா யனேநிவை எந் எழுத்து பங்கனூர்த் தாமோதிர பட்டன் காராம்பிசெட்டு பார்த்த

7 ஸாரதி பட்டன் இக்குடித் தாமோதிர பட்டன்

---

* தாயற்று என்றுள்ளது
* ழ என்றுள்ளது

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 7 |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு: | கி.பி.10 ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | காஞ்சிபுரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | — |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | இராஜகேசரி | ஊர்க் கல்வெட்டு எண்: | 12 |

**இடம்:** உலகளந்த பெருமாள் கோயில் இரண்டாம் திருச்சுற்று வடபுறச் சுவர்

**குறிப்புரை:** மணற்கல்லில் கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. ஒன்றடுத்து ஒன்றாக இருகல்வெட்டுகள் உள்ளன. தெளிவில்லை. பொன்கொடுத்து அதன் வட்டியில் (பலிசை) விளக்கெரிக்க நெய் வழங்கப்பட்டமை அறியமுடிகிறது.

**கல்வெட்டு:**

1 கோராஜ கே*ஸரிவ*ஐ ற்கு யாண்டு ஏழாவது தாமற் கோட்டத்து

2 ஊரகத்து நின்றருளிய . . . கொண்டு

3 [தரு]மனேன் ஸ்ரீ.....கொண்ட பரிசாவது இத் கொ . . .பொன்னால்ப் பலிசை [யால்] நிசதம்

4 க்கு . . .நெய் . . . .திங்கள் . . . ழுநாழி உரியாக ஆண்டுவரை . . .ழி

5 . . . யம் முட்டாமேயட்டுவோமானோம் அட்டாவ. . .கெங்கையிடை குமரியிடை செய்தான் செய்த . . .

6 [யட்டு]வதாக[உருமணிப்] பொன் பதினைங் கழஞ்சுங் கொண்டு. . . கொன்றுக்கு ரிமை அட்டுவதாக . . .

7 *ஸ்ரீ*ஷாஞேகை செய்து குடுத்தோம் . . . தினேன் . . .

8 . . . னேன் இவை என் எழுத்து கோராஜ[கேச]ரிபந்மராந ஸ்ரீமும்முடிச் சோழ ஷேவர்

9 கு யாண்டு ௬ ஆவது *ஸ்ரீவரா*ாந்தக[ஷே]வர் . . . திரு ஊரகத்து நின்றருளி

10 ய பரஉ*ஸ்லா*மிகளுக்கு போனகம் அமுது செய். . . .

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண்: 52/2005**

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.11ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | காஞ்சிபுரம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 13 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** உலகளந்த பெருமாள் கோயில் மண்டப வடக்குச்சுவர்.

**குறிப்புரை:** துண்டுக் கல்வெட்டு. நிலங்களின் எல்லை சொல்லப்படுகிறது. நிலங்கள் வரி நீக்கி இ றையிலியாகத் தரப்பட்டமையும் அறியப்படுகிறது.

**கல்வெட்டு:**

1 ............ ன்னபடிக்கு....

2 ....கிழக்கும் வட[பாற்கெல்லை] ...தேவர்......ழக்குக் தெற்கும் இவிசைத்த பெருநான் கெல்லை உள்ளுப்பட்ட .....

3 ய்....ளானுக்கு வடக்கும் மே....லை இத்தேவக நிலம் எழுமாவுக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை......

4 து.....வேண்டும் நிவந்தத்துக்கு....ன் இறையிலியாக *ஸர்வமான்யமாக* செய்து கொடுத்தோம் காஞ்சிபுரமான கர.....

## த.நா.அ. தொல்லியல்துறை

**தொடர் எண்:** 53/2005

**மாவட்டம்:** காஞ்சிபுரம்

**வட்டம்:** காஞ்சிபுரம்

**ஊர்:** காஞ்சிபுரம்

**மொழி:** தமிழ்

**எழுத்து:** தமிழ்

**அரசு:** —

**அரசன்:** —

**ஆட்சி ஆண்டு:** —

**வரலாற்று ஆண்டு:** 13.9.1908

**இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** —

**முன் பதிப்பு:** —

**ஊர்க் கல்வெட்டு எண்:** 14

**இடம்:** உலகளந்த பெருமாள் கோயில் கல்யாணமண்டபக் கிழக்குச் சுவர்

**குறிப்புரை:** சங்கு சக்கரம் நாமம் பொறிக்கப்பட்டுக் கீழே கல்வெட்டுள்ளது. உலகளந்த பெருமாள் கோயிலில் விஷ்வக்ஷேனர், ஆண்டாள், மணவாளப் பெருமாள் சந்ததிகள் கும்பனையங்கார் மன்னவி அமிர்த வல்லியம்மாள் ஏற்படுத்தியவை என அவரது மகன் ஸ்ரீனிவாசதாசன் கல்வெட்டி வைத்த செய்தி சொல்லப்படுகிறது.

### கல்வெட்டு:

1 *ஸ்ரீ உதே ராமாநுஜாய நம:*

2 கீலக ஷு ஆவணி *மீ* 29

3 ஸ்ரீ திருவூரகம் உலகளந்தப் பெருமாள்

4 சந்நிதியில் வாயு திக்கில் விஷ்வக்

5 சேனர் ஆண்டாள் மணவாள மாமுனி

6 கள் இம்மூவர் சந்நிதிகளும் இம்மூவ

7 ர் பிரதிஷ்டையும் இந்தச் சந்நிதிகளை

8 ச் சேர்ந்த முதல் பக்தி முன்மண்டப

9 மும் ஷ்டி உலகளந்தப் பெருமாள்

10 சந்நிதிவீதி குப்பனையங்கார் பாரியாள் அமிர்தவல்லியம்மாள் தர்ம
கைங்கர்யம்
இங்ஙனம்
ஷ்டி யார் குமாரன்
ஸ்கூல் இனிஸ்பெக்டர்
தா.மா.ஸ்ரீநிவாசதாசன்
13.9.1908

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **54/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | 24.6.1899 |
| **ஊர்:** | காஞ்சிபுரம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 15 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** உலகளந்த பெருமாள் கோயில் உள்வாயிலின் முன் நிறுத்தப்பட்டுள்ள கல்.

**குறிப்புரை:** சங்கு சக்கரம், நாமம் ஆகியவை பொறிக்கப்பட்டுக் அதன் கீழே கல்வெட்டுள்ளது. வாலாஜா - ராசி சத்திரத்தைச் சேர்ந்த வெங்கடாசலம் செட்டியார் உலகளந்தப் பெருமாள் கோயிலுக்கு வருஷா வருஷம் மார்கழி மாதம் நடைபெறும் வைகுண்ட ஏகாதசி திருவிழா நடத்துவதற்கு கொடுத்த தானத்தை அவர் சந்ததியார் தொடர்ந்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. இத்தர்மம் தொடர்பாக அவர் அளித்த நிலம் பற்றிய தகவல்கள் கூறப்பட்டுள்ளன.

## கல்வெட்டு:

1 ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

2 1899 ஆம் சூன் மீ 24. செங்கல்பட்டு ஜில்லா வாலா

3 ஜாபாத் டிஸ்த்திரிகட்டு ராசிசத்திரம் கோமட்டி ஜா

4 தி விஷ்ணுமதம் இவ்வூர் நாராயண செட்டியா

5 ர் குமாரர் வெங்கடாசல செட்டியார் ஷை ஜில்லா

6 காஞ்சிபுறம் ஸ்ரீ உளகளந்த பெருமா சுவா

7 மியாருக்கு வருஷப் பிரதி வருஷம் மார்கழி மீ வை

8 குண்ட ஏகாதசியில் கெருட உஸ்ஸவம் கைங்

9 கர்யம் நடக்கிறதர்க்காக ஷை வாலாஜாபாத்

10 டிஸ்த்திரிகட்டு 145 நெ.சிங்காடி வாக்கம் கிறா

11 மத்தில் 79 நெ பட்டா என் பேரில் தாக்கலாய் சுய

12 ராச்சிதமாய் அனுபவித்து வருகிற அடியி

13 ல் கண்ட நெம்பர் வாரி நிலங்களின் நெம்பர்

14 8 மொத்த ஏக்கர் 5.64 க்கு தீர்வை ரூபா
15 14-1-0 உள்ள நிலத்தை சுவாமியாருக்கு
16 தானம் செய்து விட்ட படியால் இது முதல்
17 ஷை நிலங்களில் வரப்பட்ட மாசூல்களில்
18 குடிவாரம் சர்க்கார் தீர்வை போகமி குத்து
19 கையில் வரப்பட்ட வரும்படியை என் சந்திதி
20 யார் ஆண் பெண் வகைராக்கள் ஷை வரும்ப
21 ப்டியை கைபற்றி உஸ்ஸவத்தை வருஷப் பிர
22 தி வருஷம் தப்பாமல் நடத்திக் கொண்டு வர வே
23 ண்டியது அப்படி என் சந்ததியார் வார்சுகள்
24 இல்லாத காலத்தில் கோயில் தேவஸ்த்தானம் த
25 ர்ம்மகர்த்தா ஷை நிலங்களை கைபற்றி சர்க்கா
26 ர் தீர்வை கட்டிக் கொண்டு உஸ்ஸவத்தை சாஸ்
27 வமாய் நடத்திக் கொண்டுவர வேண்டியது
28 இந்தப்படிக்கு நான் மனப் பூர்வமாய் எ
29 ழுதி வைத்த நஞ்சை நில சிலாசாதினம்
30 சர்வே. நஞ்சை. 585 நெ.எ.5.0. 12.8.0
31 ஷை 591. நெ.சி.வ.21. தீ. 0.8.0
32 ஷை நெ.டி.0.43. தீ..1.1.0
33 ஆக மொத்தம் 5.64. தீ. 14.1.0

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **55/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | 14.7.1900 |
| **ஊர்:** | காஞ்சிபுரம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 16 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** உலகளந்த பெருமாள் கோயில்கார்வான பெருமாள் சந்நதிச்சுவர்

**குறிப்புரை:** சங்கு சக்கரம் நாமம் பொறிக்கப்பட்டுக் கீழே கல்வெட்டுள்ளது. கற்வானத்தெம் பெருமாள் சந்நதி எடுத்து ஒவ்வொரு திங்களும் சித்திரை நட்சத்திரத்தில் வழிபாடும், ஆனிமாதம் திருஅவதார விழாவும் நடத்த ஏனாத்தூர் உட்கடை செட்டியார் பேட்டையில் நிலம் கொடுக்கப்பட்ட செய்தி சொல்லப் படுகிறது.

## கல்வெட்டு:

1 ஸ்ரீமதேராமானுஜாய நம:

2 1900 ஸ்ரீ சூலை மீ 14 உ காஞ்சிபுரம் ஸ்ரீஉலகள

3 ந்த பெருமாள் தேவஸ்தானத்தில் திருகார்

4 வானத்தெம்பெருமான் சன்னதி கட்டட கை

5 ங்கரியம் பிரதிஷ்டை முதலியவைகள் திரு

6 விக்கிரமன் நேமனப்படி ஷை தேவஸ்தானம் தர்மக

7 ர் தாஸ்ரீனிவாசார் கவுரகாரிய பரிபால பூர்த்திசெய்யப்

8 பட்டு ஷை ஸ்வாமிக்கு பிரதி மாச சித்திரை நக்ஷத்திர

9 த்தில் நடத்தி வேண்டிய திருநக்ஷத்திர கைங்கரியத்து

10 க்கும் ஆனி மாசத் திரு அவதார கைங்கரியத்துக்

11 கும் கருதி தாலுகா 117 நெ சுறாாத்திரியம் எனாதூர்

12 உள்கடை செட்டியார் பேட்டை கிறாமத்தில் ஷையா

13 ர் குமார ஐ ஷுமாய் கிரயத்துக்கு வாங்கி அனுப

14 வித்து வருகுர அடியில் கண்ட நெம்பர் வாரி

15 நிலங்களை ஏர்படுத்தி விருப்பதால் ஷியார் வாரி
16 சுகள் தானம் கிரயம் போக்யம் முதலிய பறாதின
17 ங்களுக்கு உட்படுத்தாமல் நிலங்களின் மாசூ
18 ல்களை கொண்டு கைங்கர்யத்தை சாஸ்வதம
19 ாய் நடத்திக் கொண்டு வரவேண்டியது இது
20 விஷயமாய் பத்திரமும் ரிஜிஸ்தர் செய்யபட்
21 டிருக்கிறது... நெம்பர்வாரி நஞ்சை சர்
22 வே.....ஏக்கர் செண்ட் 19

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **56/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 10ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | காஞ்சிபுரம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 17 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** உலகளந்த பெருமாள்கோயில் மண்டபத் தரையில் பதிக்கப்பட்டுள்ள கல்.

**குறிப்புரை:** 1500 காடி நெல் ஒரு குறிப்பிட்ட வரி விதிப்பிலிருந்து கோயிலைப் புதுப்பிக்க சபையாரால் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. துண்டுக் கல்வெட்டு. எனவே செய்தி முழுமையாய் அறியக்கூடவில்லை.

1 பெருமானடிகள் உடய ஷேவஹோ*ஶ*

2 [ஏ]க்கம்புரவு ஆயிர த்தஞ்நூற்றுக் காடி

3 யில் புதுக்குவோமானோம் *ஸஹ*யோ

4 ம் என்ற மஞாழ பெறுவாரானார் இவ்வூர்

5 க்காலால் நல்லூர் இலப்பாக்கம்

6 சதுர்களுட்டுவார் ஸவெயோம் ......

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ. தொல்லியல்துறை** | | **தொடர் எண்:** | **57/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | 24-5-1901 |
| **ஊர்:** | காஞ்சிபுரம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 18 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** உலகளந்த பெருமாள் கோயில் திருக்குளம்

**குறிப்புரை:** உலகளந்த பெருமாள் கோயில் முன்னே உள்ள வாமன புஷ்கரணி என்ற குளம் சென்னை ராயபுரம் மரவியாபாரி முனுசாமி நாயுடு என்பவரால் உண்டாக்கப்பட்டது என்ற செய்தி சொல்லப்படுகிறது.

**கல்வெட்டு:**

1 ஸ்ரீராம ஜெயம்
2 ஸ்ரீஆரணவல்லி சமேத
3 ஸ்ரீதிருவிக்கிரம சுவாமிநே நம
4 1901 ஸு மே மீ 24 உ
5 பிலவங்க ஸு வைகாசி மீ
6 11 உ காஞ்சீபுரம் திருவூரகம்
7 ஸ்ரீ உலகளந்த பெருமாள்
8 சன்னதி தர்மகர்த்தர் ஸ்ரீமா
9 ன் ஸ்ரீநிவாச ராகவாசாரிய
10 ரவர்கள் நேமித்தருளின
11 படிக்கு சென்னை இராயபுர
12 ம் பத்ம வேளாள ஜாதி வை
13 ஷ்ணவ மதம் தேக்கு மர வி
14 யாபாரம் -கா-முனுசாமி
15 நாயுடு அவர்களால் இந்த
16 நூதன ஸ்ரீ வாமன புஷ்க
17 ரணியின் கைங்கரியம்
18 பூர்த்தி செய்யப்பட்டது
19 ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணம்

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ. தொல்லியல்துறை** | | **தொடர் எண்:** | **58/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | 14.1.1914 |
| **ஊர்:** | காஞ்சிபுரம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 19 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** உலகளந்த பெருமாள் கோயில் முன் உள்ள குளக்கரையில் ஒரு வீட்டினை ஒட்டியுள்ள கல்.

**குறிப்புரை:** உலகளந்த பெருமாள் கோயிலின் முன்னே உள்ள குளக்கரையில் சென்னை மர வியாபாரி முனுசாமி நாயுடு தந்த காலி மனையில் அவரது மனைவி 6 வீடுகள் கட்டிக் கொடுத்து அதன் வாடகைப் பணத்தில் கோயிலில் திருவிழாவில் யானை வாகன மண்டகப்படி நடத்தவும் கோயில் பூசை முடிந்த காலத்தில் தயிர்சாத பிரசாதம் வழங்கவும் ஏற்பாடு செய்த விவரம் சொல்லப்படுகிறது.

## கல்வெட்டு:

1 ஸ்ரீராமஜெயம்

2 காஞ்சீபுரம் ஸ்ரீஉலகளந்த பெருமாள் தேவஸ்

3 தானம் தர்மகர்த்தா ஸ்ரீனிவாஸ ராகவா சாரியர்

4 எழுதி வைத்த சிலாசாஸனம்

5 ஷெ தேவஸ்தானத்திற்கு எதிரில் வாமனபுஷ்கர

6 ணி தென்கரையிலுள்ள காலிமனையானது சென்

7 னை இராயபுரம் தேக்குமர வியாபாரம் கா.முனி

8 சாமி னாயடுவும் காஞ்சிபுரம் மஹாநாடு இராஜ

9 சிகாமணி முதலியாரும் ஆசாரியன் திருவடி அ

10 டைந்த காலத்தில் எனக்கு தானமாய் கிடைத்ததி

11 ல் நாயடு பாரியாள் நரசிம்மாளுடைய திரவ்ய

12 சகாயத்தைக் கொண்டு கட்டப்பட்டிருக்கிற ஆறு வீ

13 டுகளில் வரும் வரும்படியில் வரி ரிப்பேர் சிலவு போக

மிகுதியை ஷை சுவாமியார் பிரம்ம உச்ஸவத்தில் யானைவாஹன உபயத்திற்கும் முதல் தெப்பல் உத்ஸவத்திற்கும் நாயடுவின் திருவத்தியான தினத்தில் ஷை சன்னதியில் சேவாகாலம் ததியாரதனைக்கும் சாஸ்வதமாய் ஏர்படுத்தப்பட்டிருக்கிறது இதை எவ்வித பராதீனமும் செய்ய யாவருக்கும் பாத்திய மில்லை தர்மங்களுக்கே உபயோகப்படவேண்டியது இது விஷயமாய் 6-2-1912ல் செட்டில்மெண்டு பத்திரம் ஏற்பட்டு காஞ்சீபுரம் சப்ரிஜஸ்த்தர் ஆபீசில் 241ம் நெம்பராக ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது 14.1.1914

த.நா.அ. தொல்லியல்துறை | தொடர் எண்: 59/2005

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | — |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு: | கி.பி.14 ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | காஞ்சிபுரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | — |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | — | ஊர்க் கல்வெட்டு எண்: | 20 |
| அரசன்: | — | | |

இடம்: உலகளந்த பெருமாள் கோயில் கருவறைபட்டியில் உள்ள கல்வெட்டு

குறிப்புரை: கலப்பைக்கொழு, பிறை ஆகிய கோட்டு வருங்களின் இடையே 'அ' பகுதி முதலிலும் 'ஆ' பகுதி இறுதியிலுமாக வெட்டப்பட்டுள்ளது. இரு கூட்டல் குறிகளின் இடையே அளவு இடைவெளி உள்ளது. இதனைக் கண்டார் கண்டன் கோலின் அளவு என்று கொள்ள வேண்டும்.

## கல்வெட்டு:

அ கண்டார் கண் டன் +

ஆ + கண்டார் கண்டன்

த.நா.அ. தொல்லியல்துறை | தொடர் எண்: 60/2005

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | — |
| வட்டம்: | காஞ்சிபுரம் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 11ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | காஞ்சிபுரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | — |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | — | ஊர்க் கல்வெட்டு எண்: | 21 |
| அரசன்: | — | | |

இடம்: உலகளந்த பெருமாள் கோயில்

குறிப்புரை: வெவ்வேறு எழுத்தமைதியில் உள்ள துண்டுக் கல்வெட்டுகள். ஒரு கல்வெட்டில் இராஜேந்திர சோழனது பெயர் உள்ளது.

கல்வெட்டு:

1. யி ரக் .... [ அ ] ரையனா ....உக்கி
2. வளனாட்டுக் கேரளாஜக

1. ப ரேரா..... ஓ

2. உடையார் ஸ்ரீ ராஜேந்த்ர சோழ

1. ஓ ற்கு யாண்டு
2. நாரிகள் [நா ]வின் கு
3. ....ந..

1. [ யேறி] . . . .வாஸ
2. . . . . .
3. ஊவுரயஓ

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **11/1998** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 14 |
| **வட்டம்:** | செங்கல்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1257 |
| **ஊர்:** | திருவடிசூலம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 342/1908 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | பல்லவர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 1 |
| **அரசன்:** | கோப்பெருஞ்சிங்கன் | | |

**இடம்:** ஞானபுரீஸ்வரர் எனும் இடைச்சுரநாதர் கோயில் அர்த்தமண்டபக் கிழக்குச் சுவர்.

**குறிப்புரை:** வரிகளின் தொடக்கம் கட்டடப் பகுதிக்குள் மறைந்து விட்டது. கோப்பெருஞ் சிங்கனுடைய பத்தாவது ஆட்சியாண்டில் சந்தி விளக்கு ஒன்று எரிப்பதற்கு மூன்று பசுக்கள் தானமாக அளிக்கப்பட்ட செய்தியினை அறிகிறோம்.

**கல்வெட்டு:**

1 ... ப்பெருஞ்சி[ங்*]க தேவற்கு யாண்டு *யச* லாவது

2 ... களத்தூர் கோட்டத்து வல்லநாட்டு திருவுடை

3 ... டைய நாயநாற்கு பிள்ளையார் நீலகங்கரையர்

4 ... நன்தி பன்மன் வைத்த சன்திவிளக்கு க ஒன்றுக்கு விட்டபசு ௩ இப்பசு மூன்

5 ... சுனான அறமுடையாநாந சூரியபட்டன் கைக்

6 ... திராதித்த வரை எரிக்கக் கடவேனாக சிலா லேகை பண்ணிக் குடுத்தேன்.

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **12/1998** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | செங்கல்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | 12-13 ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | திருவடிசூலம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 2 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** ஞானபுரீஸ்வர் எனும் திருவிடைச்சுரநாதர் கோயில் கிழக்கு அதிட்டனாப்பட்டி.

**குறிப்புரை:** துண்டுக் கல்வெட்டு. முன்னும் பின்னும் அடுத்த வரியும் கட்டடத்தினுள் மறைந்து விட்டது.

**கல்வெட்டு:**

1 ....சரியால் அளக்கு நெய் அறுபத்து நாழி.....
2 .......வெ திருவிடைச்சுரக் கோன் எழுத்து.

த.நா.அ. தொல்லியல்துறை — தொடர் எண்: 13/1998

மாவட்டம்: காஞ்சிபுரம் — ஆட்சி ஆண்டு: —

வட்டம்: செங்கல்பட்டு — வரலாற்று ஆண்டு: கி.பி.14-15 ம் நூற்றாண்டு

ஊர்: திருவடி சூலம் — இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: 17 / 1932 - 33

மொழி: தமிழ்

எழுத்து: தமிழ் — முன் பதிப்பு: —

அரசு: — — ஊர்க் கல்வெட்டு எண்: 3

அரசன்: —

இடம்: ஞானபுரீஸ்வரர் எனும் திருவிடைச்சுரநாதர் கோயில்

குறிப்புரை: களத்தூர் பற்று திரு......ண்டை பற்று ஆயிரவேலி பற்று வண்டுவராபதி நாட்டவர் கொள்ளும்படியாகத் திருவிளக்குக் குடியாக சிலரை வேளான் ஒருவர் வழங்கியதையும். அவர்கள் பெயர்களும் கூறப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சி கட்டடப் பகுதிக்குள் மறைந்துள்ளது.

## கல்வெட்டு:

1 .........செல்லாநின்ற *விரோதி* [வரு]ஷம் மீன னாயற்று *பூர்வ* பக்ஷத்து *த்விதியையு* வியாழக்கிழமையு

2 ......த்து களத்தூர் பற்று திரு.......ண்டை பற்று ஆயிர வேலி பற்று வண்டுவராபதி நாடவரோம்

3 ......க் கொள்ளும் படிக்கு சந்திர[ா * ]த்த வரைக்கும் திருவிளக்குக் குடியாக விட

4 .......ச்சுர வேளானேன் உடையார் திருவிடைச்சுரமுடைய நாயினார்க்கு

5 ......யான் கோன் மகன் வடுகநாதந் ஆன திருவிடைச்சுர வேளாண் கை.............

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **14/1998** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | செங்கற்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.12-13 ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | திருவடிசூலம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 4 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** ஞானபுரீஸ்வரர் எனும் திருவிடைச்சுரநாதர் கோயில் சுவாமி சன்னதி படியில் வைத்துக் கட்டப்பட்டுள்ள கல்.

**குறிப்புரை:** துண்டுக் கல்வெட்டு கணக்கன் சமைய நாராயண வேளான் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளார்கள்.

**கல்வெட்டு:**

1 . . . . . . . . . . . . . . . . . . . . . .
2 . . .ர ம் இது அகிதம் சொன்னவன் கெங்கை கரையில் குரால் பசுக்கொன்
3 . . .மையக் கண[க்*]கன் எழுதி வை சமைய நார[ ா ] யண வேளான் எழுத்து ஹ

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **15/1998** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | செங்கற்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.17-18 ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | திருவடிசூலம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 5 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** ஞானபுரீஸ்வரர் எனும் திருவிடைச்சுரநாதர் கோயில் வடக்கு அர்த்தமண்டப ஜகதி

**குறிப்புரை:** சிவக்கொழுந்து எனும் பெயரில் படி அமைத்து வாச்சப்பன் என்பவர் சேவை செய்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கின்றது.

**கல்வெட்டு:**

1 சிவக்கொழுந்து படி வாச்சப்பன் சத[ ா * ] சேவை

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ. தொல்லியல்துறை** | | **தொடர் எண்:** | **16/1998** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | செங்கற்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.12-13ம் நூற்றாண்டு |
| **ஊர்:** | திருவடிசூலம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 6 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** ஞானபுரீஸ்வரர் என்னும் திருவிடைச்சுரநாதர் கோயில் கருவறை வடக்கு அதிட்டான ஜகதி.

**குறிப்புரை:** களத்தூர்க்கோட்டத்து வல்லநாட்டுப் பெருந்தோபாக்கமும் ஆமூர் கோட்டத்துப் பெருந்தோபாக்கமும் நீர் நிலமும் கொல்லை நிலமும் இறையிலியாக விடப்பட்டன. அதனைப் பதிவு செய்யுமாறு திருவிடைச்சுரமுடையார் கோயில் தேவகன்மி, கோயில் கணக்கு, சிரி மாஹேஸ்வர கண்காணி போன்ற அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## கல்வெட்டு:

1 *ஸ்வஸ்திஸ்ரீ* . . . ட சோழ மண்டலத்து உடையார் திருஇடைச்சுரமுடையார் கோயிலில் ஷேவர்கந்மி கோயிற் கணக்கனுக்கும் சிரி மாஹே*ஸ்வ*ரக் கண்காணி செய்வார்

2 களுக்கும் *ஸ*ரிக்க .........வகளுக்கு இறுப்பதாக இந்நாட்டுக் களத்தூர்க் கோட்டத்து வல்ல நாட்டுப் பெருந்தோ பாக்கமும் ஆமூர் கோட்டத்து மேல் பெருந்தோபாக்கமும் ஆக நீர்நிலமும் இவ்வூர்களி[ல்]

3 கொல்லை நிலம் .........றையிலியாக இடக்கடவதாகச் சொல்லி இப்படிக் கணக்கிலும் இட்டுக் கொள்ளக் கடவார்களாக வரிக்கூறு செய்வார்களுக்கும் சொன்னோம் இந்நிலம்[1]

---

1. கல்வெட்டு முற்றுப் பெறவில்லை

த.நா.அ. தொல்லியல்துறை | தொடர் எண்: 17/1998

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | சகம் 1455 |
| வட்டம்: | செங்கல்பட்டு | வரலாற்று ஆண்டு: | கி.பி.1533 |
| ஊர்: | திருவடிசூலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 337/1908 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | விஜயநகரர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 7 |
| அரசன்: | அச்சுததேவமகாராயர் | | |

இடம்: ஞானபுரீஸ்வரர் என்ற திருவிடைச்சுரநாதர் என்றகோயில் கருவறை மேற்குச் சுவர்.

குறிப்புரை: அச்சுத தேவமகாராயர் தொண்டைமண்டல செங்கழுநீர்ப்பட்டுச் சீர்மைக்கு மகாமண்டலேஸ்வரராகத் திருமலை தேவமகாராயர் என்பவரை நியமித்து அப்பகுதி முழுவதையும் அவர் பொறுப்பில் அளித்திருந்ததால், அப்பகுதியில் வரிவசூலிக்கும் உரிமையையும் பெற்றிருந்தார். அப்பகுதியைச் சேர்ந்த வெங்கடக் கோன், நயினான்கோன் உள்ளிட்ட பலர் புல்வரி சாதம், இடைத்துறை சாதம் போன்ற வரிகளைச் செலுத்தி வந்தனர். அந்த வரிகளைத் திருமலைதேவ மகாராஜா, அரசன் அச்சுததேவ மகாராஜாவிற்குப் புண்ணயமாக (நலனுக்காக) திருவிடைச்சுரமுடையார் கோயிலில் நடுவறியும் தம்பிரான் என்ற இறைவர்க்கு தினமும் நைவேத்தியம் திருவிளக்கு ஆகியவற்றிற்கு அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு:

1 ஸ்வஸ்திஸ்ரீ ஊ ஊஹாஊணூலேமஸ்வர ராஜாதி
2. ராஜந் ராஜ பரமேஸ்வர சுஷதிக்கு ரராஜ [ம*] நோ பயங்க
3. ர கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு குடா
4. தான் பூறுவ ஊக்ஷிண பச்சிம உத்தர
5 சமுத்திராதிபதியும் ஐஜவேட்டை கண்
6 டருளிய ஸ்ரீ வீரப்பிறதாப ஸ்ரீ அச்சுதய தேவம
7 ஹா ராயர் வுரஉவீ ராச்சியம் பண்ணி அருளா நின்
8 ற சகா ஬்தம் சுசஎருயரு சத எருயரு இதின் மேல் செல்லா நின்றருள
9 ஸஂவஸ்ஸரத்து ......க நாயற்று அபரபக்ஷத்து ஹூஊஸியும் பெற்ற
10 ஹானு வாரத்து ஸ்வாமி அச்சுதய தேவ மகாயிராயற்கு புண்ய
11 மாக ஸ்ரீ ஊந் ஊணூமேஸ்வர ............திரு

12 மலய் தேவ மகாயி*ரா*ஜா

13 ப்பெருமாள் நயினாரு[க்*]கு காலச .........அச் சுதயதேவ உ

14 *ஹா*யிராயர் நமக்கு பாலித்தருளின செங்கழு நீர் பட்டுச் சீர்மை[ ம ]

15 . .த்ததில் தேவமணூலத்தில் புல்வரி சாதம்மிறுத்து வரும்

16 . . விமன்றும் வெங்கடக்கோன் உள்ளிட்டாரும் நயினான்

17 கோன் உள்ளிட்டாரும் யிறுக்கும் யிடைத்துறை சாதம் புல்வ

18 ட *சய* யிப்பணம் நாற்பதும் அச்சுததேவ ம*ஹா*யிரா

19 யற்கு புண்*ய*மாக நடுவறியும் தம்பிரானாற்கு கால சன்திக்கு

20 தினம் நானாழி அமுது படி நைவேத்தியம்......

21 [இ]ரா விளக்குக்கும் நாம் *யாராவ*ு*வ*ுவம் பண்ணுகையால்

22 யிந்த நின்ற *ய* த்திலே நாற்பது பணமும் கோயில் பண்

23 டாரத்துக்கு வர[பா]த்து கொண்டு திநமும் நைவேத்தியம் திருவி

24 ளக்கும் தப்பாமல் நடத்திவரக் கடவராகவும் யிந்த தன்ம

25 த்துக்கு யாதொருத்தர் அகிதம் நினைத்தாலும் கெங்கை கறை[யி]

26 லே காராம் பசுவைக் கொன்ற பாபத்திலே போக கடவரா[க]

27 வு *ம*ங்கைக் கரையிலே மாதா பிதாவை கொன்ற பாவத்தி

28 ல் போக கடவராகவும் *ஸ்ரீ ஹஉஷூ*

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **18/1998** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 10 |
| **வட்டம்:** | செங்கல்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1128 |
| **ஊர்:** | திருவடிசூலம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 8 |
| **அரசன்:** | விக்கிரம சோழன் | | |

**இடம்:** திருவிடைச்சுரம் என்ற ஞானபுரீஸ்வரர் கோயில் கருவறை மேற்கு, தெற்குப்புற முப்படைக் குமுதம்

**குறிப்புரை:** விக்கிரமசோழனின் மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. ஜெயங்கொண்ட சோழமண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து வல்ல நாட்டில் அமைந்திருக்கும் ஊர் திருவிடைச்சுரம். இவ்வூரிலுள்ள திருவிடைச்சுரமுடையார் கோயிலுக்குத் திருநந்தா விளக்கு எரிப்பதற்காகத் திருத்தப்படாமல் கிடந்த ஒரு நிலத்தைத் திருத்து வதற்குக் கோயில் தேவகன்மிகளும் ஸ்ரீமாகேஸ்வரர்களாக பணிபுரிந்து வந்த சில சிவனடியார்களும் நென்மலிகிழான் அன்னதான நம்பியும் இவ்வூரைச் சேர்ந்த தன்னந்த ராயர் என்பவரிடம் இரண்டு காசுகளைக் கொடுத்தனர். அந்நிலம் திருத்தப்பட்ட பின்னர் இவ்வூர்ப்பள்ளி ஆடவலான் மகதை என்பவருக்கு மேற்கூறிய அனைவரும் விற்றுக் கொடுத்தனர். விலைக்கு வாங்கிய அவர் தன்னந்தராயரிடம் கொடுத்த 2 காசுகளைப் பெற்றுக் கொண்டு தினமும் இரண்டு நொந்தா விளக்குகள் எரிக்கும்படி பணித்த செய்தியும் தேவகன்மிகளும், நென்மலிகிழான் அன்னதான நம்பியும் கையெழுத்திட்டுள்ள செய்தியும் தெரிய வருகிறது.

**கல்வெட்டு:**

1 *ஸ்வஸ்திஸ்ரீ* பூமாது புணர புவிமாது வளர நாமாது விளங்க ஜயமாது விரும்ப தன்னிரு பதுமலர் முன்னவர்சூட மன்னிய உரிமையால் மணிமுடி செங்கோல் [சென்று] திசைதோறும் வளர்ப்ப வெங்கலி நீங்க மெய்யறந்த தழைப்பக் கலிங்கமிரியக் கட[ல்*] மலை நடாத்தி வலங்கொளாழி வரையாழி திரிய இருசுடரளவும் ஒரு குடை நிழற்றிச் செம்பொன் வீர *ஸிංஹாஸ*னத்து முக்கோக்கிழாநடிகளோடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேசரிபந்மரான *திரிபுவ*நச்சக்கரவர்த்திகள் *ஸ்ரீ* விக்கிரமசோழ ஷேவர்க்கு யாண்டு *ய* ஆவது ஜயங் கொ

2 ண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து வல்லநாட்டுத் திருவிடைச் சுரத்துத் திருவிடைச்சுரமுடையார் ஷேவகன்மிகளும் ஸ்ரீமாஹேஸ்வ ர[ர்*]க்குச் சமைந்த பிடாரன் திருச்சிற்றம்பலமுடையானும் பிடாரன் விக்கிரமசோழ

பிச்சனும் பிடாரன் திருக்கழிப்பாலை உடையானும் பிடாரன் தில்லைநாயகனும் நென்மலிகிழான் அன்னதான நம்பியும் இவ்வூர் இருக்கும் பள்ளி ஆடவலான் மகதைக்குத் திரு நுந்தாவிளக்கு பூமி(ம)யாகத் திருத்திக் குடுத்த கொல்லை நிலத்துக்கு எல்லை

3 வாழை குடும்பு மலைக்கு மேற்கு இஷபதேவக் கண்ணப்பன் கொல்லைக்குத் தெற்கில் வேலியில் கிடந்த பர[லுக்கு]த் தெற்கு அருமொழிதேவப் புத்தேரி கரைக்குக் கிழக்கு சோழங்கை கொல்லையில் கீழைக் குன்றுக்கு வடக்கு நடுவுபட்ட கொல்லை காடும் வெட்டி ஏரியும் கல்லி விளை நிலமாகத் திருத்தி யுங் கொள்ளப் பெறுவாறாக இவ்வூர்த் தன்னந்தராயத[நு*]க்கு இட்ட காசு உ இக்காசு இரண்டும் கொண்டு இந்நிலத்[தால்] இரண்டு நொந்தா விளக்குச் செலுத்தக் கடவனாகப் பள்ளி ஆடவலான் மகதைக்கும் விற்றுக் குடுத்தோம் இவ்வனைவோம் இப்படிக்கு

4 இக்கோயிலில் தேவர்கன்மி காஶ்யபன் சரணதேவ ஭ட்டநேன் இவை என்னெழுத்து இப்படிக்கு இவை காஶ்யபன் பொன்ன ஭ட்டநேன் இவை என்னெழுத்து இப்படிக்கு இவை காஶ்யபன் பொன்ன ஭ட்டநேன் இவை என்னெழுத்து இவை பாரசிவன் குட்டேறன் ஸஹிஜ்ஞையாதன்மைக்கு சரணதேவ ஭ட்டனெழுத்து இவை திருக் கழிப்பாலை உடையானெழுத்து இவை விக்கிரமசோழப் பிச்சனெழுத்து இது நென்மலி கிழான் அன்னதான நம்பி ஸஹிஜ்ஞை [இப்படிக்]கு இவ்வூர் இருக்கும் வெள்ளாளன் மய்யேஜ்ஞானான திருவெண்காடுடையான் விழிகொண்டானெழுத்து இப்படிக்குத் தில்லை நாயகனெழுத்து

5 இப்படிக்குப் பிடாரன் திருச்சிற்றம்பலமுடையானெழுத்து ॥-

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **19/1998** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 10 |
| **வட்டம்:** | செங்கல்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.1128 |
| **ஊர்:** | திருவடிசூலம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 339/1908 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 9 |
| **அரசன்:** | விக்கிரமசோழன் | | |

**இடம்:** ஞானபுரீஸ்வரர் என்ற திருவிடைச்சுரநாதர் கோயில் கருவறை தென்புறச் சுவர்

**குறிப்புரை:** ஜெயங்கொண்ட சோழமண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து வல்லநாட்டு திருவிடைச் சுரத்திலுள்ள திருவிடைச்சுரமுடையார் கோயிலில் சந்திவிளக்கு ஒன்று எரிப்பதற்கு, இவ்வூரைச் சேர்ந்த பள்ளி புலிப்பாக்க நாடாழ்வான் கொடையாக அளித்த 12 ஆடுகளையும் புலியூர்க் கோட்டத்துப் பல்லவபுரத்தினைச் சேர்ந்த மன்றாடி நக்கன் சீரங்கன் என்பவர் பெற்றுக் கொண்டு ஆண்டு ஒன்றுக்கு 12 நாழி நெய்யளப்பதாக ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டுள்ள செய்தி கூறப் பட்டுள்ளது.

**கல்வெட்டு:**

1 *ஸ்வஸ்திஸ்ரீ* விக்கிரம சோழ ஼தவர்க்கு யாண்டு பத்தாவது ஜயங்கொண்ட சோழ மண்

2 டலத்துக் களத்தூர் கோ த்து வல்ல நாட்டுத் திருவிடைச் சுரத்துத் திருவிடைச்சுர

3 முடையார்க்கு இவ்வூர் இருக்கும் பள்ளி புலிப்பாக்க நாடாழ்வான் கு....[வை]

4 த்த சந்தி விளக்குக ஒன்றுக்கும் இன்னாட்டுப் புலியூர்க் கோட்டத்து பல்லவ

5 புரத்து இருக்கு[*ம்] மன்றாடி நக்கன் சீரங்கநேந் கைக் கொண்ட ஆடு யஉ ப

6 ந்நிரண்டும் சாவா மூவாப் பேராடாக கைக்கொண்டு ஆண்டு வரை

7 பந்நிரு நாழி சந்திராதி[த்*]த வரை இக்கோயிலிலே அளக்கக் கடவேநாே

8 [ந]ந் நக்கன் சிங்கநேன் இவை என்னெழுத்து உ.

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண்: 20/1998**

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 47 |
| **வட்டம்:** | செங்கல்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.117 |
| **ஊர்:** | திருவடிசூலம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 10 |
| **அரசன்:** | முதலாம் குலோத்துங்க சோழன் | | |

**இடம்:** ஞானபுரீஸ்வரர் என்ற திருவிடைச்சுரநாதர் கோயில் கருவறை தென்புறச் சுவர்.

**குறிப்புரை:** ஜெயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துக் களத்தூர் நாட்டுக் களத்தூரைச் சேர்ந்த தமிழதரையர் பெருமாந் நித்தமத்தடிகள் என்பவர் தான் மருமக்கள் தாயத்தால் பெற்ற நிலத்தில் நாலுபங்கில் மூன்று பங்குகளைத் திருவிடைச்சுரமுடையார் கோயிலுக்கு சுப்ரதிகிருஹமாக நீர்வார்த்துக் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது. இந்நிலத்திற்கு எல்லைகள் விரிவாகக் கூறப்பட்டிருக் கின்றன. பல தமிழதரையர்கள் கையெழுத்துக்களும் அதிகாரிகளின் கையெழுத் துகளும் இக்கல்வெட்டில் காணப்படுகின்றன.

**கல்வெட்டு:**

1 ஸ்வஸ்திஸ்ரீ புகழ் சூழ்ந்த புணரியகழ் சூழ்ந்த

2 புவியில் பொன்நேமி அளவுஞ்தன்நேமி நடப்ப வி[ளங்கு]

3 [ச]யமகளை இளங்கோப் பருவத்துச் சக்கரகோட்டத்து விக்கிர

4 மத் தொழிலாற் புதுமணம் புணர்ஞு மதுவரையீட்டம் வயி

5 ராகரத்து [அயிர்முனைக்] கொந்தளஅரசர் தஞளமிரிய வாளுரை கழித்துத்

6 தோள்வலி காட்டி போர்ப்பரி நடாத்தி கீர்த்தியை நிறுத்தி வடதி

7 [சை வாகை சூடி] தெந்திசை தேமரு கமலப் பூமகள் பொதுமையும் போஞ

8 நன்நில பாவையுஞ னிமையுஞ . . . . . ஞு அளிதரு திருமணி ம[குடம் உரிமையிற்]

9 சூடி தன்னடி இரண்டு ஞடமுடி ஆகத் தென்னில வேஞர் சூட மு

10 . . . . . . . . . . . .செங்கோல் திசைதோறும் செல்ல

11 [இருநிலவ]ளாகமெங்கணுஞநா[து] திருநிழல் வெண்நிலா திகழ [மேருவிற் புலிவி]

12 ளையாட [வார் கடற் தீ]வானரத்து பூபாலர் திறைவிடு சுஜ[ர கலஞ்]சொரி களிறு முறை நிற்ப வி[லக்கி]

13 ய தென்னவன் கருஜலை பருஜலைத்திடத் தன் பொன்னகர்ப் புறத்திடைக் கிடப்ப இ[ந்நாள்]

14 பிற்குலப்பிறைபோல் நற்பிழையென்னுஞ் சொல்லெதிர் கோடிற்றல்லது தந் கை[வி]

15 ல்லெதிர் கோடா வேழ்புலத்தரசரளத்தியிலிட்ட களிறினதீட்டமும் பட்ட அங்களிறும் விட்ட

16 மானமுங் கூறின வீரமுங் கிடப்ப ஏறின மலைகளு முதுகு நெளிப்ப இழிஞ நதிகளுஞ் சுழன்றுடைத்

17 தோட விழுஞ கடலுஞலை விரித்தலமரக் குடதிசைத்தன்னாளுகஞதானு ஞானையும் [பன்னா]

18 ளிட்ட பலபல முதுகும் [ப*]யத்தெதிர் மானி ஜ[யப்பெ]ருஞிருவும் பழி இகஞ குடுத்த புகழின் [செல்]

19 வியும் வாளாரொண்கண் மடந்தையர் ஈட்டமு[ம் மீ]ளாது குடுத்த வெங்கரி நிரையும் கங்க[மண்]

20 டலமும் சிங்கணமென்னும் [பாணியிரண்]டும் ஒரு விசைக் கைக்கொண் டிண்டிய

21 [புக]ழொடு பாண்டி மண்டலங் கொள்ளத் திருவிளத்தடைத்து வெள்ளம் வருபரித் தரங்கமு

22 [ம்பொ]ாருகரிச் சுரங்கமும் போலத் தஜிர வாரியுமுடைத்தாய் வஜ வடகடல் தென்கடல் படர்வது போ[ல]

23 தன் பெருஞ்சேனையை ஏவி பஞ்சவரைவரும் பொருத மொய்களத்தஞ்சி வெரு நெளித்தோடி

24 [அ]ரனெநப் புக்க காடறத் துடைத்து நாட்டிப்படுத்து மற்றவர் தம்மை வனசர[ர்*] திரியும் பொச்சை வெஞ்சு[ர]

25 [மேற்றிக்கொற்ற[1]] விசையத்தம்ஹஜிசைதொறு[ம்*] நிறுத்தி முத்தின் சபாலமும் முத்தமிழ்ப் பொதியிலும் மத்தவெங்கரி படும் மய்யச்சயமு[ம்]

26 [கன்னியுங் கைக்கொண்டு புனிதத் தென்]நாட்டெல்ல காட்டி குடமலை நாட்டுள்ள சாவேறெல்லாந் தனி விசும்பேற மாவேறிய தன் வரு தனித் தலைவ

27 [ரைக் குறுகலந் குலையக் கோட்டாறுட்]பட நெறிதொறும் நிலை கள்ளிட் டருளித் திறல் கொளாரமுஞிருப்புயத்தலங்கலும்போல வீரமுஞியாகமும் வி

28 [ளங்கப் பார்மிசைச் சிவனிடத்துமையென]த் தியாகவல்லி வாழிலைத்தநி திருப்ப அவளுடன் கங்கை வீற்றிருந்தென மங்கையர் திலதம் ஏழிசை வ ல்ல பி

29 [ஏழுலகமுடையாள் வாழிகை மலர்ந்தினி உலக]முடையாளோடும் வீர ஸிம்ஹாஸநத்து வீற்றிருந்தருளிய கோவிராஜகேஸரி பஜராந த்ரிபுவநச்

30 [சக்கரவர்த்திக]ள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு ௪௰௭ ஆவது ஜயங்கொண்ட சோழ

31 [மண்டல]த்துக் களத்தூர்க் கோட்டத்துக் களத்தூர் நாட்டு களத்தூர்த் தமிழ தரையர் [பெ]

32 ருமாந் நித்த மத்தடிகளான் இக்கோட்டத்து வல்லநாட்டு ஜயங்கொண்ட

33 [சோழ ந]ல்லூர் திரு[க்] கடம்பனை காணிபரிய அவநஹாவத்து மருமக்கள் தாயத்தால் நாநிவ[ர்]

34 .....நாய் ஆண்டு வருகிற இன்னாட்டுத் திருவிடைச்சுரத்தில் என் காணி ஆன நாலு கூறிட்ட[மு]

35 ......[ளுடை டயார்] திருவிடைச்சுரமுடையார் கோயிலில் ஆதி ஊஸர் சண்டேஷ்வர தேவற்கு ஸ[வ்ர

36 தி]ருஹமாக நீர்வார்த்துக் குடுத்த திருவிடைச்சுரத்துக்குக் கீழ்பாற்கெல்லை பெச்ச .......

37 . . . . .எல்லைக்கேயுறவும் தென்பாற்கெல்லை [மலிய]மங்கலத் தெல்லைக் கேயு[ற]

38 . . .. . .கே யுறவும் மேல்பாற்கெல்லை . .. .. .. . . . .

39 யும் பெருஞண்டலத்தெல்[லை]

40 க்கேயும் உறவும் இன்னாற்பா[ற்]

41 கெல்லைக்கும் நடுவுபட்ட நீர் [நி]

42 லமும் புஞ்சை நிலமும் காடும். . . .

43 லையும் மேல்நோக்கின மரமு

44 ம்[கீ]ழ் நோக்கின கிணறும் உள்ப்பட எ[ந்]

45 ஒ[பா]தி முக்கூறும் ஸவ்ர திருஹமாக நீர்[வா]

46 ர்த்து[க்] குடுத்தோங் தமிழதரையன் அரையன் பெ[ரா]

47 [த] ந் [உ]த்தமத்தடிகளேன் இவை என் எழுத்து

48 இவை தமிழதரையன் உத்தமந் திருச்சிற்றம்ப[ல]

49 மு[டைய] ான் எழுத்து இப்படிக்கிவை தமிழதரையன் அ[ப்பி]

50 [உ]த்தமத்தடிகள் எழுத்து இப்படிக்கிவை தமிழதரையன் அப்பி

51 விக்கிரம[ கே ]கஸரி எழுத்து இப்படிக்கிவை தமிழதரையந் அப்பிநா

52 டுடை[ய] ான் எழுத்து இப்படி அறிவேன் களத்தூர்த் திருமங்கல

53 க்கிழான் உத்தமன் அரயநேன் இவை என் எழுத்து இப்ப
53 க்கிழான் உத்தமன் அரயநேன் இவை என் எழுத்து இப்ப
53 க்கிழான் உத்தமன் அரயநேன் இவை என் எழுத்து இப்ப
54 டிஅறிவேன் களத்தூர் ஸவண்ணந் ஶாலே ஶ்ரௌலி ஹட்டே[ந]
55 ந் இவை[வ] என் எழுத்து இப்படி அறிவேன் கொற்றம்
56 ............னேன் இவை என் எழுத்து இப்
57 படி இசைஞு குடுத்தேன் கடம்பனை வேளாநான ஜெ[ய]ங்கொண்ட
58 சோழன் எழுத்து இப்படிக்கிவை பேராதான் தனபாலன் கலி
59 யநேன் இவை என் எழுத்து இப்படி அறிவேந் அநியூர்க் க
60 ாஞ்சி போசன் சக்கரபாணி ஹட்டநேந் இவை என் எழுத்து ||-

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **21/1998** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சியாண்டு:** | 47 |
| **வட்டம்:** | செங்கல்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1117 |
| **ஊர்:** | திருவடிசூலம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 11 |
| **அரசன்:** | | | |

**இடம்:** ஞானபுரீஸ்வரர் என்ற திருவிடைச்சுரநாதர் கோயில் தென்புற அர்த்தமண்டபச் சுவர், பட்டிகை.

**குறிப்புரை:** க.எண்.12-ல் மருமக்கள் தாயத்தால் பெற்ற நிலத்தைக் கோயிலுக்கு அளித்த அதே தமிழதரையன் அரைய பெருமான் உத்தமத்தமதடிகள் போல நாலுகூறில் ஒரு கூறைப் பெற்றிருந்த மற்ற மூவரும் திருவிடைச்சுரமுடையார் கோயில் ஆதிதாஸ சண்டேஸ்வரதேவற்கு சுப்ரதி கிரஹமாக நீர் வார்த்துக் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் கையெழுத்திட்டுள்ளனர்.

## கல்வெட்டு:

1 *ஸ்வஸ்திஸ்ரீ* சக்கரவத்தி

2 கள் *ஸ்ரீ* குலோத்துங்கசோழ தேவற்க்கு யாண்டு *சயஎ* ஆவது ஜயங்கொண்ட சோழ மண்

3 டலத்துக் களத்தூர்க் கோட்டத்து வல்ல நாட்டு ஈச்சங்காரணைப் பேராதர் தயா பாலந் மாதை பே

4 [தி] தயாபாலந் கலியநேனும் ஆதித்யர் பாலநேனும் இவ்வனைவே[ா]ம் இன்னாட்டுத் திருவி

5 டைச்சுரத்தில் எங்கள் காணியான நாலு கூறிட ஒரு கூறும் கடம்பனை காணியாய் மரு[மக்]

6 கள் தாயத்தால் உடைய தமிழதரையன் அரைய பெருமான் உத்தமத்தமதடிகள் இ

7 வ்வூரில் தம் ஒபாதி நாலு கூறிட்ட முக்கூறும் திருவிடைச்சுரத்து ஆளுடையார் ஆதி*தாஸ*

8 ர் *சண்டேஸ்*ர தேவற்கு *ஸுவ்பதிகிரஹ*மாக நீர்வார்த்துக் குடுத்த பரிசே நா

9 ங்களும் எங்கள் காணி ஆந இவ்வூரில் நாலுகூறிட்ட ஒரு கூறும் திருவிடைச் சுரத்து ஆளுடை[ட]

10 யார் ஆதி[ஷ]ரஸர் சண்டேஶ்வர ஷேவர்க்கு ஸர்வ த்ரவ்ய ஹமாக நீர் வார்த்துக் குடுத்தோ

11 ம் தனபாலன் மாதையேனும் தயாபாலன் கலியனேனும் ஆதிதயா பால[ே]னனும் இவ்வனை

12 வோம் இவர்கள் வேண்ட எழுதினேன் கோ*வூர் கிழவந் குணவ[ ந் ] கருணாகர [ே] தவன் எழுத்து ॥–

13 இப்படிக்கிவை பேராதான் தயாபாலன் கலியன் எழுத்து இப்படிக்கிவை போந்தான் தயாபாலந்

14 [மா]தை எழுத்து இப்படிக்கிவை போந்தான் ஆதித்யர்பாலந் எழுத்து இப்படி அறி வேன்தமிழ தரையன் உத்தமன் திருச்சி

15 ற்றம்பலமுடையான் எழுத்து இப்படிக்கிவை செம்பூருடையான் எழுத்து . . . . . . . . [கத்தேந்] . . . . . . .

16 யோராதாந் செம்பூர்க் கோட்டத்துச் செம்பூர்நாட்டுக் கலகுளத்து கோவொத்த [மா ல]யன் வளவ சுந்தர மூவே வேளானேன் திருவிடை

17 ச்சுரத்து என்பேறு கூறு ஷேவர்க்கு நீர்வார்த்துக் குடுத்தேன் வளவ சுஷர மூவேஷ வேளானேன் இவைஎன் எழுத்து இவை . . . . . . . இது பந்மாஹேஶ்வர ரக்ஷை ஹார ॥–

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **22/1998** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சியாண்டு:** | 22 |
| **வட்டம்:** | செங்கல்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.13,14ம் நூற்றாண்டு |
| **ஊர்:** | திருவடிசூலம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை:** | 16/1932-33 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 12 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** ஞானபுரீஸ்வரர் என்ற திருவிடைச்சுரநாதர் கோயில் அம்மன் சந்நிதி நுழைவாயில் மேற்குப்புறம்.

**குறிப்புரை:** கல்வெட்டின் தொடக்கமும் இறுதியில் சில வரிகளும் கட்டடப் பகுதிக்குள் மறைந்துவிட்டன. திருவிடைச்சுரமுடையார் கோயில் தேவரடியாள் செல்வப் பிள்ளை என்பவளுடைய மகள் நம்பியாழ்வியான திருஞானசம்பந்த மாணிக்கம் என்பவள் இக்கோயில் இறைவனையும் இறைவியையும் நடம் செய்கின்றவர்களாகப் பத்மபீடத்தில் அமைத்து அலங்கார பீடமும் செய்வித்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

**கல்வெட்டு:**

1 . . . உவற்குயாண்டு இருபத்திரண்டாவது உடையார் திருவிடைச்சு

2 . . . கோயிற் தேவரடியாள் செல்வப்பிள்ளை மகள் நம்

3 . . . ஞான சம்பந்த மாணிக்கம் தங்கள் நாயனார்க்கு விரு

4 . . . ன்த திருநடமுஞ் செய்வித்து அலங்கார பீடமும் பற்ம பீடமும்

5 . . . ஞ் செய்வித்து யிவரி[ட்*]ட நாச்சியாரையுந் திருநிறஞ் செய்வித்து

6 . . . ய்வித்தாள் இந்நம்பியாழ்வியான திருஞானசம்பந்த மா

7 . . . யனார் நடு. தளாடும் பெருமாள் ஸ்ரீபாதங்களான த . . . . .

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **23/1998** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | செங்கல்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.15, 16ம் நூற்றாண்டு |
| **ஊர்:** | திருவடிசூலம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 17/1932-33 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | விஜயநகரர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 13 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** ஞானபுரீஸ்வரர் என்ற திருவிடைச்சுரநாதர் கோயில் முன்மண்டபத் தென்புறச் சுவரில் அம்மன் சந்நிதி நுழைவாயிலுக்குக்கருகில் (கிழக்குப்புறம்)

**குறிப்புரை:** முதல் மூன்று வரிகள் மிகவும் சிதைந்துள்ளன. திருவிடைச்சுரமுடையார் கோயிலுக்கு மனையும் விளைநிலமும் திருநாமத்துக்காணியாக வழங்கிய செய்தி கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு:

1 ...... உடையாற்கு செல்லா நின்ற ஜய வருஷ௨ வைகாசி *மீ ௰௨* உடையார்

2 திருவிடைச்சுரமுடைய நாயனார்கு இவூர் ......

3 ....... யாண்டார் .... *சயஉ* ....... க்கும் இ வருஷ ....... கணக்கன்நான இம் மனையும் இவர் கொல்லை

4 .....பண்ணித்தந்த சாசநபடி திருவிடைச்சுரமுடைய நயினார்க்கு இசைஞ நப்பணிக்கு திருநாமத்துகாணியாக கைக்கொ[ண்டு]

5 அத்த-ுசாம திருநாளில் இறைவி [உ]ள்பட இந்த பணியில் பலம் கொண்டு நடத்தி ஒடுக்கும் பரிவட்டம் நிலத்திலே பெற ..........

6 டுங் குடுத்தபடிக்கு வேதிறை[கொண்]டான் எழுத்து பெருதிரு வே[ னாட்டு]..... வேளான் எழுத்து இவை அபிமாநபூஷன வேளான் எழுத்து.....

7 கோயில்கண்காணி பன்மாஹேசுர வேளான் எழுத்து இவை [தண்ண பாசன்] எழுத்து இந்த தந்மத்துக்கு அகிதம் பண்ணிநால் கெங்கைக்

8 கரையில் காராம்பசுவை கொன்ற பாவம் பண்ணுவான் *ஸ்ரீ ஊஹேஸ்வர ரக்ஷை* உ

த.நா.அ. தொல்லியல்துறை | தொடர் எண்: 24/1998

மாவட்டம்: காஞ்சிபுரம்

வட்டம்: செங்கல்பட்டு

ஊர்: திருவடிசூலம்

மொழி: தமிழ்

எழுத்து: தமிழ்

அரசு: பாண்டியர்

அரசன்: வீரபாண்டியன்

ஆட்சி ஆண்டு: 7

வரலாற்று ஆண்டு: —

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: —

முன் பதிப்பு: —

ஊர்க் கல்வெட்டு எண்: 14

இடம்: ஞானபுரீஸ்வரர் என்ற திருவிடைச்சுரநாதர் கோயில் முன்மண்டபத் தென்புறச் சுவரில் - அம்மன் சந்நிதி நுழைவாயிலுக்குக்கருகில் (கிழக்குப்புறம்)

குறிப்புரை: கல்வெட்டின் 6-வரியிலிருந்து இறுதி வரை பல இடங்களில் சிதைந்துள்ளன. ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து வல்லநாட்டு திருவிடைச் சுரத்து உடையார் திருவிடைச்சுரமுடைய நாயனார் கோயிலுக்கு இதுநாள் வரை பலரும் விட்ட பசுக்கள் முப்பது மற்றும் இஷபம் ஒன்றை இக்கோயில் தானத்தார்கள், அவ்வூரைச் சேர்ந்த மன்றாடியாகிய வரந்தரு கோனாரான வாள் தருவான் திருவிடைச்சுரக்கோன் என்பவர் பொறுப்பில் விட்ட செய்தியும் அவ்வாண்டு மாசி மாதம் முதல் பொறுப்பேற்றுக் கொண்டு ஒரு நொந்தா விளக்கெரிக்கச் சம்மதித்த செய்தியும் கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு:

1 *ஸ்வஸ்திஸ்ரீ* கோ[ச்சடைய] பந்மரான திரிபுவனச்சக்கரவத்திகள்*ஸ்ரீ* வீரபாண்டிய தேவற்குயாண்டு ஏழாவது

2 ஜயங்கொண்ட சோழமண்டலத்துக் களத்தூர்க்கோட்டத்து வல்லநாட்டுத் திருவிடைச்சுரத்து உ

3 டையார் திருவிடைச்சுரமுடைய நாயனார்க்கு இம்மண்டலத்து இக்கோட்டத்து திருவிடை

4 ச்சுரத்து மன்றாடிகளில் வரந்தருங்கோனா[ரா]ன வாள் தருவா[னே]ன் திருவிடைச்சுரக்கோனேன் இன்

5 னாள் வரைக்கும் முன்னாள் பலரும் விட்ட பசுவாய் தானத்தார் என் பக்கல் நிறுத்தின பசுக்களுக்கும் வத்த

6 ங்ன.....ம் [அறுசடும்] பசு முப்பது இஷபம் ஒன்று இப்பசு முப்பதுக்கும் இவ்வாண்டை மாசிமாதம் *ச*. . . . .

7 டுவரை பண்ணிக்குடுத்த திருநுந்தா விளக்கு ஒன்று இவிளக்கு ஒன்றுக்கும் ஆண்டு ஒன்று இரண்டுச்சரிய

8 . . . . ண்ணும் ஸ்ரீமுவிநய்யகவன் . . . [சந்தி]ராதித்தவரைய்யளக்கக் கடவேனாக

9 . . . நொந்தா விளக்கு . . . உடையார் திருவிடைச்சுரமுடைய[னாய*]னார்க்கு வரந்தருவானான [க]டுவன்

10 . . . . இப்படிக்கு இவை வரந்தருங் கோனான திருவிடைச் சுரக்கோன் எழுத்து இவை விநா

11 யக [ஜ] ன்றல் வீரபாண்டியதேவற்க்கு யாண்டு *௨௰௫* ஆவது ஆன

12 ழகய பட்டனு வஞ்சூர் நடு . . . . தவன் மகன் [காம]கக் கோன் கைக் கொ . . . .

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **25/1998** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சியாண்டு:** | — |
| **வட்டம்:** | செங்கல்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 16 ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | திருவடிசூலம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | விஜயநகரர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 15 |
| **அரசன்:** | புக்கண உடையார் | | |

**இடம்:** ஞானபுரீஸ்வரர் என்ற திருவிடைச்சுரநாதர் கோயில் அம்மன் சந்நிதியின் முன் மண்டபத்தின் மேற்குச் சுவர்.

**குறிப்புரை:** கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது. ஜயங்கொண்ட சோழமண்டலத்து களத்தூர்க் கோட்டத்து வல்லநாட்டுத் திருவிடைச்சுரமுடையார் கோயிலுக்கு, கோவி நத்தம் என்ற பெயரில் திருத்திய 'நிலத்தை கொடையளித்த செய்தியைக் கூறுவனவாக இருத்தல் வேண்டும்.

**கல்வெட்டு:**

1 ஸ்வஸ்திஸ்ரீ மஹாமண்டலேஸ்வரன் ஹாஷைக்கு தப்புவராய கண்டந்....
2 உடையா[ர்*] குமாரந் புக்கண உடையா[ர்க்*]கு செல்லா நின்ற . . . . . வருஷ[ம்] . . .
3 கருய இந்நாயற்று வூவடி ஹக்ஷத்து . . . . ஜெசமியும் பெற்ற நாயற்றுக் . . . .
4 ஜயங்கொண்டசோழ மண்டலத்து களத்தூற்கோட்டத்து வல்லநாட்டு . . . .
5 ச்சுரத்துஉடையார் திருவிடைச்சுரமுடைய நயிநாற்கு இம் . . .
6 இக்கோட்டத்து இரண்டாயிரவேலிப்பற்று . . . . . ளில் நன்
7 யண். . . . . . . . . . . . . . . . . . . . . .யிந்நாயிநா
8 [ே]காவி நத்த]மென்று திருத்திய பற்றில் புற்றூரில்லிருக்கும் . . . .
9 ச்சேர நம் [ கருவறை]த் திருவிடைச்சுர . . . . . விலுக்கு
10 நெய்யன இவனுக்கு ஒத்த........னால் . . . . . . தம்மையும் செ . . . .
11 டக்கு விட்டோம் இப்படிக்கு இவை நன்ம[ங்]கலன் எழுத்து இப்படிக்கு . . . . . .
12 லேகை பண்ணிக் குடுத்தோம் . . . . . . . . .ண்டுத்தேவ . . . . . . .
14 . . . . . . . . உண்டாநால் கெங்கைக்கரையில் காராம்பசுவைக் . . . . . . .
15 . . . . . . . . . . . . . . .இதுடன் மா

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண்: 26/1998**

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | [ 10 ] |
| **வட்டம்:** | செங்கல்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | 11[19] |
| **ஊர்:** | திருவடிசூலம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | அரசு | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 16 |
| **அரசன்:** | விக்கிரமசோழன் | | |

**இடம்:** ஞானபுரீஸ்வரர் என்ற திருவிடைச்சுரநாதர் கோயிலில் உள்ள பிரம்மாண்டேஸ்வரர் சந்நிதியின் வடபுற முப்படைக் குமுதம்.

**குறிப்புரை:** கல்வெட்டின் கடைசி பகுதி உயர்த்தப்பட்ட தரைத்தளத்தினுள் மறைந்துள்ளது. ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து வல்லநாட்டு திருவிடைச்சுரமுடையார் கோயில் வளாகத்தில் விக்கிரமசோழன் காலத்தில் விக்கிரம சோழீஸ்வரமுடையார் என்ற கோயில் எடுக்கப்பட்டு அக்கோயில் இறைவனுக்கு வேண்டும் நித்த நிமந்தங்களுக்காக களத்துர்க் கோட்டத்து உறோடக நாட்டுத் தண்டுறை என்ற ஊரில் நிலக்கொடை அளிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அச் செய்தியைக் கூறவரும் பகுதிகள் மறைந்துவிட்டன.

## கல்வெட்டு:

1 *ஸ்வஸ்திஸ்ரீ* பூமாதுபுணர புவிமாது வளர நாமாது விளங்க ஜயமாது விரும்ப தன்னிரு பதுமலர் மன்னர் [சூட] மன்னிய உரிமையால் மணிமுடி சூடி செங்கோல் சென்

2 று திசைதோறும் வளர்ப்ப வெங்கலி நீங்கி மெய்யறந் தழைப்ப கலிங்கமிரியக் கடற்மலை நடாத்தி வலங்கொளாழி வரையூழி நடாத்தி இருசுடரளவும் ஒருகுடை நிழற்றிச் செம்பொன்

3 வீர*ஸிம்ஹாஸ*நத்து முக்கோக்கிழானடிகளோடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி பன்மரான *த்ரிபுவ*நச் சக்கரவர்த்திகள் *ஸ்ரீ* விக்கிரமசோழ தேவற்கு[*ய*]வது ஜயங்கொண்ட சோழமண்டல

4 த்து களத்தூர்க் கோட்டத்து வல்ல நாட்டு திருவிடைச்சுரமுடையார் விக்கிரம சோளீ*ஹஸ்வர*முடையார் கோயிலில் தேவகன்மி கோயில் கணக்கனுக்கும் *ஸ்ரீ*சிமா*ஹேஸ்வர* கண்காணி செய்வார்களு

5 க்கும் சிகாரியம் செய்வானுக்கும் இத்தேவர்க்கு வேண்டு[ம்*] நிமந்தங் களுக்கு இறுப்பதாக இன்நாட்டுக் களத்தூர்க் கோட்டத்து உறோடக நாட்டுத் தண்டுறையாக விக்கிரம சோ[1].

---

1. தரைக்குள் மறைந்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **10/2000** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 19 |
| **வட்டம்:** | செங்கற்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.1004 |
| **ஊர்:** | கிளாம்பாக்கம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 30/1934-35 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | | |
| **அரசன்:** | முதலாம் இராஜராஜன் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 1 |

**இடம்:** கிளாம்பாக்கம் செல்லியம்மன் கோயிலுக்கு அருகில் தொடர்வண்டிச் சாலையை ஒட்டியுள்ள பலகைக்கற்களில் ஒன்று.

**குறிப்புரை:** புலியூர்க் கோட்டத்து நெடுங்குன்ற நாட்டுக் கிளாம்பாக்கத்திலுள்ள மஹாதேவர் நக்கர் கோயிலுக்கு நுந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்கு அவ்வூரைச் சேர்ந்த பொன்களந்தை மன்றாடி என்பவர் தினமும் ஆழாக்கு நெய்யளிப்பதற்குத் தேவையான 45 ஆடுகளைத் தானமளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

இவ்வூரில் மொத்தம் மூன்று கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. இம்மூன்றும் பலகைக்கற்களில் பொறிக்கப்பட்டு அவ்வூர் செல்லியம்மன் கோயில் அருகே கிடக்கின்றன.

## கல்வெட்டு:

1 ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போலப்
2 பெருநிலச் செல்வியுந் தனக்கேயுரிமை
3 ம பூண்டமை மனக்கொள காந்தளூர்ச் சாலை
4 கலமறுத்தருளி வேங்கை நாடு ஙுளம்பபாடி
5 யும் கங்கபாடியும் தடிகைபாடியும் குடகம
6 லைநாடுங் கொல்லமுங் கலிங்கமும் எண்டிசை
7 புகழ்தரவீழ மண்டலமும் திண்டிறல் வென்றி தண்
8 டாற்கொண்ட தன்னெழில் வளருழியெல்லா யாண்டுமொழுத
9 கை விளங்கும் யாண்டே செழியரை தேசுகொள் ஸ்ரீ கோவிரா
10 ஜ ராஜ ரா[ஜ*]கேஸரி வன்மரான ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு ப
11 த்தொன்பதாவது புலியூர்க்கோட்டத்து நெடுங்குன்ற நாட்டு கிளாம்பாக்

12 கத்திருக்கும் மன்றாடி பொன்[ன]களந்தை மன்றாடியென் இவ்வூர் மஹாதேவர் கள

13 ந்தை நக்கர்க்கு யான் வைத்த நுந்தா விளக்கினால் வைத்த ஆடு

14 நாற்பத்தைஞ்சு இவை *சந்த்ரா*தித்த வரை சாவா மூவாப் பேராடாக[வும்]

15 இவாட்டினால் ஆழாக்கு நெய்யட்டுவிதாக [கு]டுத்தேந் இவை [இறக்குவான் கங்கை]

16 யிடைக் குமரியிடைச் செய்தான் செய்த பாபத்தில் போ[வா]ணாகவும்

17 இவை காப்பான் *ஸ்ரீ* பாதமென் தலை மேலது இவன் வேண்ட வெட்டி

18 நேன் . . . . . . பொன்னநேன் அம்பலத்தாடி பெருமாளேன் ॥–

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **11/2000** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 23 |
| **வட்டம்:** | செங்கற்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1008 |
| **ஊர்:** | கிளாம்பாக்கம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 31/1934-35 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 2 |
| **அரசன்:** | முதலாம் இராஜராஜன் | | |

**இடம்:** கிளாம்பாக்கம் செல்லியம்மன் கோயிலுக்கு அருகில் தொடர் வண்டிச் சாலை ஓரம் உள்ள பலகைக் கற்களில் ஒன்று.

**குறிப்புரை:** புலியூர்க் கோட்டத்து நெடுங்குன்ற நாட்டு கிளாம்பாக்கத்து மஹாதேவர் களந்தை நக்கர் கோயிலுக்கு அரை விளக்கு எரிப்பதற்கு ஒருவர் (பெயர் சிதைந்துள்ளது) அளித்த நாற்பத்தைந்து ஆடுகளை அதே ஊரைச் சேர்ந்த வல்லங்கிழான் நம்பி அழகன் என்பவர் பெற்றுக் கொண்டு தினமும் ஆழாக்கு நெய்யால் விளக்கெரிக்கச் சம்மதித்த செய்தி கூறப்பட்டுள்ளது. இச்செய்தியைக் கல்தச்சன் அம்பலத்தாடி பெருமான் கல்லில் வெட்டிய செய்தியும் குறிப்பிடப் பட்டுள்ளது.

**கல்வெட்டு:**

1 *ஸ்வஸ்திஸ்ரீ* திருமகள் போல பெருநில

2 ச் செல்வியுஞ்தனக்கேயுரிமை பூண்டமை மன

3 க்கொளக் காந்தளூர்ச்சாலைக் கலமறுத்தருளி வேங்கை

4 நாடு ஞுளம்பபாடியும் கங்கபாடியுந் தடிகைபாடியுங் கு

5 டகமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமுந் தெண்டிசை புகழ்தர

6 வீழமண்டலமும் இ[ர*]ட்டபாடி ஏழ் அரை இலக்கமும் திண்

7 டிரல் வென்றி தண்டாற் கொண்ட தன்னெழில் வளரூழி[யெ]ல்

8 லா யாண்டு ஜொழுதகை விளங்கு யாண்டே செழி

9 யரைத் தேசுகொள் ஸ்ரீகோவிராஜ ராஜகேசரி பன்ம ராகி

10 ய *ஸ்ரீ* ராஜராஜ தேவர்க்கு யாண்டு இருபத்துமூன்றாவது புலி

11 யூர்க் கோட்டத்து நெடுங்குன்ற நாட்டு கிளாம்பாக்கத்து வல்லங்கிழ

12 ான் நம்பி அழகநேன் இவ்வூர் மஹாதேவர் களந்தை நக்கர்க்கு குள....

13 . . . . தநியூர் . . .நொதி . . .யான் வைத்த விளக்கு அரை விளக்கினாற் சாவா மூ

14 வா பேராடு நாற்பத்தைஞ்சு இவாடு *சந்த்ராதித்த* வரை வைத்தேன் நிசதம்

15 இவ்வூர்......னுக்களக்கு மரக்காலோடொக்கும் ஆழாக்கினால் அட்டுவேனா

16 நேன் நம்பி அழகனேன் இத்தன்மத்தை இறக்குவான் கெங்கையி

17 டை குமரியிடைச் செய்தான் செய்த பாவத்திலே படுவான்

18 இத்தன்மத்தை இரக்ஷித்தான் *ஸ்ரீபாத*மென் த

19 லை மேலிது இவன் வேண்ட வெட்டினேன் [கல்] தச்சன்

20 அம்பலத்தாடி பெருமான் ‖–

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **12/2000** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 24 |
| **வட்டம்:** | செங்கற்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.1009 |
| **ஊர்:** | கிளாம்பாக்கம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 32/1934-35 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 3 |
| **அரசன்:** | முதலாம் இராஜராஜன் | | |

**இடம்:** கிளாம்பாக்கம் செல்லியம்மன் கோயிலுக்கு அருகில் தொடர் வண்டிச் சாலையை ஒட்டியுள்ள பலகைக் கற்களில் ஒன்று.

**குறிப்புரை:** ஜயங்கொண்ட சோழமண்டலத்து புலியூர்க் கோட்டத்து நெடுங்குன்ற நாட்டுக் கிளாம்பாக்கத்திலுள்ள மஹாதேவர் களந்தை நக்கர் கோயிலுக்கு அவ்வூர் மன்றாடி பொன்னன் சென்றியான களந்தை மன்றாடியும் மற்றொருவரும் இணைந்து அரை நுந்தாவிளக்கு எரிப்பதற்கு நாற்பத்தைந்து ஆடுகள் அளித்து அதன் மூலம் நிசதம் ஆழாக்கு நெய்யளிக்கவும் ஒப்புக்கொண்ட செய்தி கூறப் பட்டுள்ளது.

**கல்வெட்டு:**

1 *ஸ்வஸ்திஸ்ரீ* திருமகள்

2 போல பெருநிலச் செல்வியு

3 ந் தனக்கேயுரிமை பூண்டமை மன

4 கக்கொளக் காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி ே

5 வங்கை நாடுங் கங்கபாடியுஞுளம்[ப] பாடியும் தடிகை

6 பாடியுங் குடமலைநாடும் கொல்லமுங் கலிங்கமு

7 மெண்டிசை புகழ்தர வீழமண்டலமுமிரட்டபாடி ஏழரை இலக்க

8 மும் திண்டிறல் வென்றி தண்டாற்கொண்ட தண்ணெழில் வளரூ

9 ழியுள் எல்லாவியாண்டுந் தொழுதக விளங்கும் யாண்டேய் செழி

10 யரைத் தேசுகொள் *ஸ்ரீ*கோவிராஜகேசரி பன்மரான *ஸ்ரீ*ராஜ

11 ராஜஷேவர்க்கு யாண்டு *உயச* ஆவது சயங்கொண்ட சோழ

12 மண்டலத்து புலியூர் கோட்டத்து நெடுங்குன்றநாட்டுக் கிழாம்பாக்க

13 த்து இருக்கும் மன்றாடி பொன்னன் சென்றியான களந்தை மன்றாடியு
14 ம் இவன் . . . . . . . ய் இவ்வூர் களந்தை நக்கர்க்கு
15 வச்ச நந்தா விளக்கு அரை இவ்விளக்கால் ஆடு சாவாமூவாப் பேராடு
16 நாற்பத்தைஞ்சும் இவ்வாட்டால் இவன் கடவ நெய் நிசதம் ஆழ
17 ாக்கு . . . . . . . . ஒக்கும் உழக்கால் நிசதம் ஆழாக்குஞ் சந்த‿ராதித்த வ
18 ரையும் அட்டக்கட[வேனாக]வும் இத்தர்மம் இரக்சிப்பான் ஸ்ரீபாதமெந்ற
19 லைமேலன இவன் வேண்ட வெட்டி னென் . . . . . .

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **52/1990** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | சகம் 1422 (ரௌத்திரி வருஷம்) |
| **வட்டம்:** | செங்கல்பட்டு | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.1500 |
| **ஊர்:** | மண்ணிவாக்கம் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 169/1929-30 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | விஜயநகரர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 1 |
| **அரசன்:** | இம்மடி நரசிங்கராயர் | | |

**இடம்:** மண்ணீசுவரர் கோயில் உண்ணாழிகைக் குமுதப்படை

**குறிப்புரை:** இம்மடிநரசிங்கராயர் காரியத்துக்குக் கர்த்தரான தெக்ஷிணா சமுத்திராதிபதிசுவாமி நரசநாயக்கர் உடையார் காரியத்துக்குக் கர்த்தரான பொப்பயராசாவின் குமாரர் கொப்பயிராசா இப்பகுதியை நாயக்கதனம் செய்து வந்துள்ளார். அப்போது பெரிய குப்பய்யரும் சிறுதம்பயரும் முன்னாள் பூர்வத்தில் இறைவன் அமுது செய்து அருளின நிலங்கள் மண்ணீசுவரமுடையார் கோயிலுக்கு வழங்கியிருந்தனர். இவ்வமுதுபடியுடன் மூன்று சந்தி விளக்குக் கும் கார்த்திகை அமுதுபடிக்கும் மேலும் நிலங்கள் வழங்கப்பட்டவிவரத்தை இக்கல்வெட்டுச் சுட்டுகிறது. பல்வேறு நிலங்களின் பெயர்களும் அளவுகளும் கூறப்பட்டுள்ளன. இறைவன் பெயர் மண்ணீசுவரமுடையார் என அழைக்கப் பட்டுள்ளது.

**கல்வெட்டு:**

1 *ஶு஭மஸ்து* *ஸ்வஸ்திஸ்ரீ* செல்லா நின்ற *ஸா*லீவா*ஹ*ன செல்லாநின்ற *ஸகவருஷம்* *ருசஉயஉ*ன் மெல் செல்லா நின்ற ரவுத்திரி வருஷ*ஂ* சித்திரை மாதம் [*யரு* வ] அசுவதியும் பெற்ற சோமவாரத்து நாள் *ஸ்ரீ*மன் ம*ஹா*மண்ட லேசுர மேதினி மீசுர கண்ட கட்டாரி ஸாளுவ ஸாளுவ இம்மடிநரசிங்கராய மகா யிராயர் காரியத்துக்கு கற்தரான தெக்ஷிணா ஸமுத்திராதிபதிசுவாமி நரசநாயக்கர் உடையார் காரியத்துக்கு கடவார் புஜபள பொப்பய ராசாவின் குமாரர் கொப்பயி ராசாவின் நாயக்கத் தனமான மண்ணிப்பாக்கம் உள்ளிட்டு . . . . . . பூண்டி . . . . . ம் நாயக்கர் மகனார் பெரிய குப்பயரும் சிறுதம்பயரும் நாயனார் மண்ணீசுரமுடைய நயினாற்கு முன்னாள் பூறு வத்தில் யிரண்டு தேச காலத்துக்கும் அமுது செய்து அருளிந யிந்த ஏரிக்கீழ் கழனியில் மு. .பொ. . .த்து [திருமுன் கண்டும்] மணலி தடிக்குழி *உளசுயசு*[க்கும்] மாம்புலம் தடிக்குழி *ளயசுரு* ம்.....

2 மண்ணிப்பாக்கத்து தடிக்குழி [௬]௰௪ ஆளமது தடிக்குழி ௨௭அ௰ன....தவளை..... தடிக்குழி ௭௰௬க்கும் தேரடி தடிக்குழி ௩௭௰௩௫ பெரியமருதன் தடிக்குழி ௭௬௰௫ செறுமருதன் தடிக்குழி ௭௨௰௫ . . . . ண கோயில் பெருஞ்செறு தடிக்குழி [௭]௰௬௫ தாருவா வட்டம் தடிக்குழி ௭௬௰௫ திருவிளக்கு முட்டிச்செறு தடிக்குழி ௨௭௫௰௧௫ குடிபள்ளி தடிக்குழி ௭௰௫ தினைபட்டி தடிக்குழி ௭அ௰௭க்கு திருப் பொரிப் பெருஞ்செறு தடிக்குழி ௭௩௰ செங்கல் சூளை தடிக்குழி ௭௫௰ வடக்கு குற்றேற்றம் பௌபபடி தடிக்குழி ௭௬௰௬ மருத்தவல்லிப் பெருஞ்செறு தடிக்குழி ௨௭௰௨௫ ஆகக் கழனியில் பூறுவ மாண்ணியம் குழி ௩௭௫௰௬ ம் இ ஏரி எதுவாயிலே தடி குமிளைகொல்லை பற்றிலே குழி ௬௨௭ ஆக கழனி கொல்லை ஏரி எதுவாய் உள்பட குழி குப்பயர் தன்மமாக சிறுகால சந்தி அமுதுசெய்தருள தக்கதாக விட்ட வேசுரம் தடிக்குழி ௭௬௰௬ யிவற்த் தடிக்குழி ௭௬௰ ஆக குழி ௩௭௨௰௬ வ வானவாரி கொல்லை பற்றிலே குழி ௭௭௪௰ ஆக குழி ௬௬௰வ

௰ 3 ஆக . . . . . உள்பட மூன்று சந்தியும் திருவிளக்கும் திருகாத்திகைக்கு அமுது செய்து செய்தருளத் தக்கதாக கொ........ [இத்தன்ம]த்துக்கு அகிதம் பண்ணினவர்கள் உண்டானாலும் இடங்கள் சொன்னவர்கள் உண்டானா லும்............ கடவனாகவும் கெங்கை கரையிலே காராம் பசுவைய்

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **1/1999** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 27 |
| **வட்டம்:** | மதுராந்தகம் | **வரலாற்று ஆண்டு:** | 8-9ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | களத்தூர் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 1 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** களத்தூர் தொடக்கப்பள்ளி அருகே உள்ள ஒரு வீட்டின் சுவரோடு சார்த்தி வைக்கப் பட்டுள்ள பலகைக் கல்.

**குறிப்புரை:** கல்வெட்டில் அரசன் பெயர் ஏதும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் ஆட்சி யாண்டு மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. எழுத்தமைதியைக் கொண்டு இக்கல்வெட்டு 8 அல்லது 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதலாம்.

கொங்கரையர் கள்ளப்பெருமானார் என்னும் குறுநிலத் தலைவனின் மனைவி கொங்கச்சியார் என்பவர் களத்தூர் ஏரியில் ஒரு தூம்பு அமைத்துக் கொடுத்ததைக் குறிக் கிறது. இக்கொங்கரையர் பேரால் கொங்கரை என்னும் ஓர் ஊரும் களத்தூருக் கருகில் உள்ளது குறிப்பிடத் தக்கது.

## கல்வெட்டு

1 *ஸ்ரீ* யாண்டு

2 கொங்கரையர் கள்ளப்பெ

3 ருமானார் தேவியார் கொங்கச்சியா

4 ர் களத்தூரேரிச் செய்வித்த

5 தூம்பு *ஸ்ரீ*

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | சகம் 1446 |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு :** | கி.பி.1524 |
| **ஊர்:** | தாமல் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 139/1896 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | S.I.I. Vol. V No. 1004 |
| **அரசு:** | விஜயநகரர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 1 |
| **அரசன்:** | கிருஷ்ண தேவமகாராயர் | | |

**இடம்:** வராகீசுரர் கோயில் உண்ணாழிகை மேற்குக் குமுதம்

**குறிப்புரை:** கிருஷ்ணதேவராயர் ஆட்சியின்போது திருமலை தேவமகாராயற்குத் தன்மமாகத் தாமர் உடையவர் திருப்பன்றீஸ்வரமுடைய தம்பிரானார் கோயில் பூசை புனஸ்காரமும் திருப்பணியும் நடைபெற வேண்டி அனந்தாழ்வார் பிள்ளை உபயமாகப் புங்கஞ்சேரி உடையார் நமசிவாயரிடம், தாமர் என்ற ஊரின் பிடாகையான புறகால் கிராமம் மடப்புறமாக விடப்பட்டது. இக்கிராமத்தில் வேண்டுங் குடிகளைக் குடியமர்த்தி வேளாண்மை செய்து சித்தாயம் முதல் பல்வேறு வரிகளையும் கோயிலுக்கு அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு:

1 *ஶுபமஸ்து ஸ்வஸ்திஸ்ரீ உ ஊஹாணுஙேஶ்ர*
அரியராய விபாடன் பாஷைக்குத் தப்புவராயர் கண்ட துருக்கதள விபாட*ராஜாதி ராஜ ராஜ*பரமே*ஶ்வரரு க்ருஷ்ணதேவ மஹாராய*ர் *ப்ருதிவிராஜ்யு*

2 பண்ணி அருளா நின்ற சகாற்தம்*ருசளசயக* மேல் செல்லாநின்ற தாரண வருஷத்து *ப்ருஶ்சி*க நாயற்று *பூர்வ*

3 பக்ஷத்து *ஜெயஶ*மியும் *ஶுக்ரவா*ரமும் பெற்ற *ஹஸ்த* நக்ஷத்ரத்து நாள் திருமலைய *தேவ மஹா*ராயற்குத் தன்மமாகத் தாமர் உடையவர் திருப்பன்றீசுர முடைய தம்பிரானார் திருக்கோயில் பூசை புனஸ்காரமும்

4 பலதிருப்பணியும் சந்திறாதி*த்ய* வரையும் நடக்கும்படியாகவும் அனந்தாழ்வார் பிள்ளை உபயமாகப் புங்கஞ்சேரி உடையார் நமசிவாயம் விடுவித்த கிறாமம் தாமரில் பிடாகையான புறகால் கிறாமம் ஒன்று

5 இந்த புறகால் கிறாமம் ஒன்றும் ஏறுங்குடியும் ஏற்றிக் கொண்டு நஞ்சை புஞ்சை நாற்பாற்கெல்லை வேண்டும் பயிரும் ஏற்றிக் கொண்டு இதில் உண்டான சித்தாய முதலும் சகல

6 ஆதாயமும் இன்னயினார் திருக்கோயில் பூசை திருப்பணியிலே இட்டு நடத்தக் கடவதாகவும் இந்த புறகால் கிறாமம் ஒன்றும் இன்னயினாற்குச் சந்திறாதித்த வரையும் தேவதானம்

7 ஆக நடக்கக் கடவதாகவும் இந்த தன்மத்துக்கு யாதொருத்தர் அகிதம் பண்ணினவர்கள் கெங்கைக்கரையிலே காராம்பசுவையும் தன்னுடைய குருவையும் தன்

8 மாதாபிதாவையும் கொன்ற பாவத்திலே போகக் கடவர்களாகவும் உ

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ. தொல்லியல்துறை** | | **தொடர் எண்:** | **2/1991** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | சகம் 1459 |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.1537 |
| **ஊர்:** | தாமல் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | விசயநகரர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 2 |
| **அரசன்:** | அச்சுதராயர் | | |

**இடம்:** வராகீசுரர்கோயில் உண்ணாழிகை தெற்குக் குமுதம்

**குறிப்புரை:** அச்சுத தேவமகாராயர்க்குத் தன்மமாகத் திருமலைராசா உபையமாகப் புங்கஞ்சேரி உடையார் நமசிவாயத்திடம் விடுவித்த வெண்பாக்கம் என்ற இக்கிராமத்தின் விளைச்சல் மற்றும் சித்தாயம் முதலிய வரிகளைக் கொண்டு திருப்பன்றீஸ்வரமுடைய தம்பிரானார் திருக்கோயில் பூசை, புனஸ்காரம் போன்ற பல திருப்பணிகள் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. கிருஷ்ணதேவராயர் சாசனத்தில் இடம் பெற்ற கொடையாளர்களே இதிலும் இடம் பெற்றுள்ளனர்.

**கல்வெட்டு:**

**(அ)**

1 *ஸ்வஸ்தி ஸ்ரீ மஹா*மண்டலே*ஸ்வ*ரன் அரியராய விபாடன் பாஷைக்குத் தப்புவராயர் கண்டன் துருக்கதளவிபாட[ன்] ராஜாதி ராஜ ராஜ பரமேசுவரன் மூவராய

2 கண்டன் *ஸ்ரீ* அச்சுததேவராய ம*ஹா*ராயர் *ப்ரு*திவிராச்சியம் பண்ணியருளா நின்ற *ஸ*காத்தம் [ *௲௪௱௫௰௯* ]ன் மேல் செல்லாநின்ற நந்தன வருஷத்து ரிஷப நாயற்று *பூர்வ பக்ஷ*

3 த்து துவிதியையும் ஸோமவாரமும் பெற்ற *ஏ*க சீர்ஷ நக்ஷத்திரத்து நாள் அச்சுத தேவ மகாராயற்கு தன்மமாக தாமர் உடையவர் திருப்பன்றீ*ஸ்வ*ரமுடைய தம்பிராநார்

4 திருக்கோயில் பூசை புநற்காரம் பலதிருப்பணியும் சந்திறாதித்திய வரையும் நடக்கும் படியாக ஜலக்கா.....த் திருமலை ராசா உபயமாகப் புங்கஞ்சேரி உடையார்

## (ஆ)

1 நமசிவ[ா]யம் விடுவித்த கிறாமம் மேலை வெண்பாக்கம் கிறாஉழ
[ஒன்றுக்கு] வெண்பாக்கம் கிறாமம்

2 நஞ்சை நாற்பாற்கெல்லையும் வேண்டும் பயிறும் ஏற்றிக் கொண்டு இதில் உண்டான சித்தாயம்

3 திருப்பணியிலே இட்டு நடத்தக்கடவதாகவும் இந்த வெண்பாக்கம் கிறாமம் ஒன்றும் இந் . . . . நடக்க கடவதாகவும்

4 . . . . இந்த தந்மத்துக்கு யாதொருத்தர் அஹிதம் பண்ணினவர்கள் கெங்கைக் . . . . . . . . .. . . . . . ..

5 [குருவையும்] மாதாபிதாவையும் கொன்ற [பாவத்திலே] போகக்கடவ தாகவும் உ

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **3/1991** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | — |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.16 ஆம் நூற்றாண்டு |
| **ஊர்:** | தாமல் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தம் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | விஜயநகரப் பேரரசு | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 3 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** வராகீசுவரர் கோயில் கோபுர நுழைவாயிலில் பதிக்கப்பட்டுள்ள கல்.

**குறிப்புரை:** சிதைந்த விஜயநகர அரசர் கல்வெட்டான இதில் தேவதானமாகக் கோயிலுக்கு நிலம் வழங்கப்பட்ட விவரமுள்ளது. ஓம்படைக் கிளவியில் தமிழும் பின் வடமொழியும் வெட்டப்பட்டுள்ளன.

## கல்வெட்டு:

(அ)

1 *ஸ்வஸ்தி ஸ்ரீ* ம

2 ண்டலேசுர[ந] . . . .

3 ராயர் பிறுதுவிராச்சியம் பண்ணி [அருளா]

4 நின்ற *சகாப்தம்* . . . . . . . . .மேல்

5 செல்லா நின்ற . . . . .

6 . . . . . . .

7 தேவதானமாக

8 .........

9 ........

10 ....திருப்பன்றி

11 தம்பிரானார் திருக்கோயிலிலே . . . .

12 தேவதானங்களிலே. . . .

13 த்திலே.. . .. . ..

## (ஆ)

1 ...மலும் நடத்தக் கடவ[தாகவும்]

2 யித்தன்மம் சந்திராதித்தவை

3 ரயும் நடத்தக் கடவதாகவும் இந்த

4 த் தன்மத்துக்கு யாதொருவர் அகி

5 தம் பண்ணினவர் ஐங்கை

6 க்கரையிலே காராம்பசுவையு

7 ம் பிராமணனையும் . . . . .க்களையு

8 ங் கொன்ற தோஷத்திலே போக

9 க்கடவராகவும்

10 துதாஃ வாயோக இரக . . . . . . .

11 ஒஷ வரஷ ஸஹல

12 உாயாழ ரயகெஃசி:

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ. தொல்லியல்துறை** | | **தொடர் எண்:** | **4/1991** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | (சகாப்தம்) 1798 யுவ. |
| **வட்டம்:** | காஞ்சிபுரம் | **வரலாற்று ஆண்டு:** | கி..பி.1871 |
| **ஊர்:** | தாமல் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | — | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 4 |
| **அரசன்:** | — | | |

**இடம்:** மந்தைவெளி மாரி[எல்ல] யம்மன் கோயில் வாயில் மேல் நிலைக்கல்.

**குறிப்புரை:** சக ஆண்டு 1798, யுவ வருடம் தை மாதம் தாமல் மாரியம்மன் கோயில் கட்டி முடிக்கப்பட்ட பொழுது அதன் வாயில்நிலையை [வாசக்கால்] தச்சன் வீராசாமி மகன் அரிமுத்து என்பவன் கொடையாகச் செய்து வைத்ததைக் குறிக்கிறது.

**கல்வெட்டு :**

1 ஸ்ரீ சாலிவாகன சகாப்தழ *களஎகூஅ* பிரபாவதி ....

2 கு [ *சதுகூளஎயகூ*] க்கு மேல் யுவ ௵ தை *மீ உகூ* தாம

3 ல் ஸ்ரீ மாரியம்மன் கோயில் வேலை கட்டி முடி[த்]து

4 [தாளகு]செரும் தச்ச வீராசாமி குமாறன்

5 அரிமுத்து செய்[த*] தற்ம வாசகால்.

## த.நா.அ. தொல்லியல்துறை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | தொடர் எண்: | 2/1999 |
| வட்டம்: | திருக்கழுக்குன்றம் | ஆட்சி ஆண்டு: | 8 |
| ஊர்: | நென் மேலி | வரலாற்று ஆண்டு: | — |
| மொழி: | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 14/1932-33 |
| எழுத்து: | கிரந்தங்கலந்த தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 1 |
| அரசன்: | விக்கிரம பாண்டியன் | | |

இடம்: அவிமுக்தீசுவரமுடையார் கோயில் உண்ணாழிகை வடக்கு, மேற்கு, தெற்குக் குமுதப்படை.

குறிப்புரை: விக்கிரமபாண்டியனுடைய ஆட்சியின்போது ஜயங்கொண்ட சோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துக் களத்தூர் தமிழதரையர்கள் இதே கோட்டத்து வல்ல நாட்டு நென்மேலியான புண்டரிக நல்லூரில் உள்ள தங்களுடைய 2912 குழி நிலங்களை அவிமுக்திஸ்வரமுடையார் கோயிலுக்குத் திருப்படி மாற்றுக்கும் பல பணி நிமித்தங்களுக்குமாக வழங்கிய செய்தி கூறப்பட்டுள்ளது. இதன் எல்லை கூறும் பொது பழந்தேவதானமான சேரமான்கால், சத்துரு காலன் கிணறு, போன்றவை சுட்டப்பட்டிருக்கின்றன.

### கல்வெட்டு:

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திருவாய்க்கேழ்வி முன்னாக கோமாறபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ விக்கிரமபாண்டிய தேவற்கு யாண்டு அ-வது கும்பநாயற்று பூறுவ பஷத்து பிறதமையும் திங்கட்கிழமையும் பெற்ற சதையத்து நாள் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து களத்தூர் கொட்டத்து களத்தூர் தமிழ தரையர்களொம் இக்கோட்டத்து வல்லநாட்டு எங்கள் காணியான நென்மலியான புண்டரிக நல்லூர் உடையார் அபிமுக்தீசுரமுடைய நாயனார் கொயிலுக்கு இக்கோயில் கா

2 ணி உடைய சிவஸ்ராஉ ண[ன்] காஞ்[சி] குறி காஸ்ய யவ[ந்] காக்குநாயகப் பட்டனான ஆண்டார் ஆவுடைதேவர் எழுன்தருளுவித்த புண்டரிக நாயகற்கு திருப்படி மாற்றுக்கும் பலபணி நிமந்தங்களுக்கும் நாங்கள் திருநாமத்துக்காணித் தேவதானமாக இந்நென்மலியில் விட்ட நிலமாவது கீழ்பாற்கெல்லை இந் நாயனார் பழன் தேவதானமான சேரமானுக்கு மேற்கு தெற்கு நோக்கிப் போன காலுக்கு மேற்கும் தென்பாற்கெல்லை சத்துருகாலன் கிணற்றுக்கு வடக்கு மேற்கு நோக்கிப் போ[ ன] வதிக்கு வ

3. டக்கும் மேல்பாற்கெல்லை பள்ளக்காலுக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை ஏரிக்கரைக்கு தெற்கு பழந்தேவதானத்திலே உறவும் ஆக இந்நாற்பாற் கெல்லைக்கு நடுவுபட்ட நிலம் பலதடியினால் குழி இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து ஒருபத்து இரண்டும் இதில் நிலவேற்றதாழ்வும் இதில் மேனோக்கின மரமும் கீனோக்கின கிணறும் உட்ப[ட*] இந் நாயனார்க்கு திருநாமத்துக்காணி இறையிலி தேவதானமாக சந்திராதித்தவரை செல்வதாக *ஶிலாலேகை* பண்ணிக்குடுத்தோம் தமிழதரையர்களோம், இது *ரக்ஷித்*தான் *ஸ்ரீ*பாதங்கள் எங்கள் தலைமேலின இது பன்மா*ஹேஶ்வர ரக்ஷை*

| | | | |
|---|---|---|---|
| .நா.அ. தொல்லியல்துறை | | தொடர் எண்: | 3/1999 |
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | — |
| வட்டம்: | திருக்கழுக்குன்றம் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 12-ம் நூற்றாண்டு |
| ஊர்: | நென் மேலி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | — |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | கிரந்தங்கலந்த தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 2 |
| அரசன்: | விக்கிரமசோழன் | | |

**இடம்:** அபிமுக்தீசுவரர் கோயில் உண்ணாழிகை மேற்கு, தெற்குக் குமுதப்படை.

**குறிப்புரை:** விக்கிரமசோழனுடைய மெய்க்கீர்த்திப் பகுதி மட்டும் உள்ளது.

**கல்வெட்டு:**

1 *ஸ்வஸ்தி ஸ்ரீ* பூமாது புணர புவிமாது வளர நாமாது விளங்க ஜயமாது விரும்பத் தன்னிரு பதமலர் மன்னர்கு மன்னி[ய*] வுரிமையில் மணிமுடி சூடிச் செங்கோல் சென்று திசைதொறும் நடப்ப வெங்கலி நீங்கி மெய்யறந் தழைப்ப கலிங்க மிரியக் கடமலை நடாத்தி வலங்கொளாழி வரையாழி திரிய இருசுடரள வும் ஒருகுடை நிழற்றி வீர*ஸிம்ஹாஸ*நத்து முக்கோக்கிழானடிகளொடும் வீற்றி ருந்தருளிய கோப்பரகே*ஸரிவ*ந்மரான

2. ..................

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **4/1999** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 8 |
| **வட்டம்:** | திருக்கழுக்குன்றம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.1126 |
| **ஊர்:** | நென்மேலி | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 15/1932-33 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங்கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 3 |
| **அரசன்:** | விக்கிரமசோழன் | | |

**இடம்:** அபிமுக்தீசுவரர் கோயில் உண்ணாழிகைத் தென்சுவர்க் குமுதம்.

**குறிப்புரை:** ஐயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து வல்லநாட்டு கீழ்க்கொடு நென்மலியான புண்டரிக நல்லூர் அவிமுக்தீசுவரமுடையார் கோயில் இறைவனுக்குக் களத்தூர் தமிழதரையன் உத்தமன் திருச்சிற்றம்பலமுடையான் என்பவன் பல நிமந்தங்களுக்கும் மடைவிளாகத்திற்கும் அவரது காணியான புண்டரிக நல்லூரில் பலதானங்கள் செய்துள்ளார். அவையாவன: புண்டரிக நல்லூரில் ஆயிரத்தறு நூறுகுழி ஓர் இடத்திலும் அதே ஊரில் காடுவெட்டி கட்டை பறித்துத் திருத்தின நிலம் கமுகந் தோட்டம், கமுகந்தோட்டத்தில் கிழக்கில் ஒருகுழி நிலம், திட்டைச்செறு நூற்றுநாற்பது குழி மற்றோர் நிலம் மற்றும் திருநுந்தா விளக்கு இரண்டு.

**கல்வெட்டு:**

**(அ)**

1 ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவந சக்ரவத்திகள் விக்ரம சோழ
தெவற்கு யாண்டு எட்டாவது ஐயங்கொண்ட சோழ மண்டலத்துக் களத்தூர்க்
கோட்டத்து வல்ல நாட்டுக் கீழ்க்கொடு நென்மேலியான புண்டரிக
நல்லூர் அவிமுக்தீஸ்வரமுடையார்க்குக் களத்தூர் தமிழதரையன் உத்தமன்
திருச்சிற்றம் பலமு[டையா*]

2 நேன் என்காணியான புண்டரிக நல்லூரில் பல நிமந்தங்களுக்கும் மடை விளாகத்துக்கும் விட்ட நிலமாவது மடைவிளாகத்துக்கு வடபாற்கெல்லை வெள்ளவாய்க்காலுக்கு மேற்கும் தென்பாற்கெல்லை அடவியேரி தென்கரை யுற்றும் மேல்பாற்கெல்லை இவ்வேரி கீ[ழ்].....

3 யெ வடக்கு நோக்கிப் பெரியேரிக்கரையே யுறவும் இனித் திருப்படி மாற்றுக்கும் பல நிமந் தங்களும் விட்ட நிலமாவன சேரமான் செறுவில்

வடவ்ரம்புக்குத் தெற்கு உள்ளிட்டான தடிபலவினாற் குழி[ஆ]யிரத் தறுநூறும் சேரமாந் செறுவுக்கு தெற்கில் குடியிருப்பும் இவ்வூர் பெரியேரி எதிர்வாய் அவிமுத்தீஸ்வர விளாகம் கீழ்பாற் கெ

4. ல்லை திருவிடைச்சுர மேற்போனவழியில் நட்ட சூலக்கல்லுக்கு மேற்க்கும் தென்பாற்கெல்லை ஏரி நீர்கோவைக்கும் மேல்பாற்கெல்லை வல்லத்தில் கீழா சறுதியில் நட்ட சூலக்கல்லுக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை சூலக் கல்லுக்குத் தெற்கும் இந்நாற்பாற்கெல்லை.....

5. கெல்லைக்கு உட்பட்ட நிலம் காடுவெட்டி கட்டை பறித்துத் திருத்தி இறையிலி தெவதானமாக பல நிமந்தங்களுக்கு விட்டேன் தமிழதரையன் உத்தமன் திருச்சிற்றம்பலமுடையாநேந் இத்தெவர்க்கு நான் விட்ட கமுகந் தோட்டமாவது எந்நுடைய கமுகந் தோட்டத்தில் கிழக்கில் எறுசெ.

(ஆ)

1 . . .மிடத்து குழியும் வேறு திட்டைச் செறு குழி நூற்று நாற்பதும் இதன் வடக்கில் திட்டைச் செறுக் குழி நூற்றறுபதும் மா . . . லெவனால் குழி

2 . . . தேழரையும் இதெவற்கு நான் வைத்த திருநுந்தாவிளக்கு இரண்டுக் கும் *வஜூ_ாதித்தவரை* செல்வதாக *ஶிஓாமெஷெ* பண்ணிக் குடுத்தேந்]

3 தமிழதரையன் உத்தமன் திருச்சிற்றம்பலமுடையாநேன் இஜூ ஜூஜ
ரக்ஷித்தான் ஸ்ரீபாதங்கள் என் தலைமேலின இஜூ ஜூஜ பஜூாே

4 *ஹஶூஶஶெகஷ*

## த.நா.அ. தொல்லியல்துறை தொடர் எண்: 61/2005

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 15 |
| வட்டம்: | உத்தரமேரூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 1265 |
| ஊர்: | வயலக்காவூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 248/1922 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 1 |
| அரசன்: | முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன். | | |

இடம்: ஸ்ரீ வாகிசுவரர் கோயில் கருவறை வடக்குச் சுவர்.

குறிப்புரை: வயலைக்காவூரில் உள்ள ஸ்ரீவாரணாதீசுவரமுடைய நாயனார் கோயிலில் சந்தி விளக்கு ஒன்று எரிப்பதற்குச் செம்பூரைச் சேர்ந்த ஒருவர் அளித்த பத்து காசுகளை, இக்கோயிலில் காணி உடைய சிவபிராமணர்கள் சிலர் பெற்றுக் கொண்டு விளக்கு எரிக்கச் சம்மதித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

### கல்வெட்டு:

1 ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடபன்மர் திருபுவனச்சக்கரவத்திக

2 ள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு யரு வயலைக்காவூர்

3 உடையார் ஸ்ரீவாரணாதீசுரமுடைய நாயனார் கோயிற்

4 காணி உடைய ஶிவப்ராஹ்மணன் ஆண்டான் பட்டன் உள்ளி

5 ட்டாரும் இக்குடி ஆட்டையன் பட்டனும் ஐய்ய[ன்] பிள்ளை உள்ளி

6 [ட்டா]ரும் இவ்வனைவோம் செம்பூரில் சிவனம................

7 கள் கைக்கொண்ட பணம் ய இப்பணம் பத்தும் கைக் கொ

8 ண்டு இக்கோயிலுக்குச் சந்தி விளக்கெரிக்கும் முறை

9 மையிலே ஒரு திருவிளக்குச் சந்திராதித்தவரையும் ஒருதி

10 ரு விளக்கு எரிக்கக் கடவோம் இவ்வனைவரோம் இவை

11 திரு நாகீசுரமுடையான் எழுத்து இவை பட்டன் எழுத்து

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண்: 62/2005**

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 22 |
| **வட்டம்:** | உத்தரமேரூர் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1168 |
| **ஊர்:** | வயலக்காவூர் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 250/1922 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 2 |
| **அரசன்:** | இரண்டாம் இராஜராஜன் | | |

**இடம்:** ஸ்ரீ வாகீசுவரர் கோயில் கருவறை மேற்குச்சுவர்

**குறிப்புரை:** வயலைக்காவூர் சி வாரணாதீஸ்வரமுடைய நாயனார் கோயிலில் சந்தி விளக்கு ஒன்று எரிப்பதற்கு இவ்வூர் அரும்பாக்கிழான் கூத்தாடும் தேவன் என்பவர் கொடையாக அளித்த மாடை ஒன்றை இக்கோயிலைச் சேர்ந்த சிவபிராமணர் இருவர் பெற்றுக் கொண்டு விளக்கெரிக்க சம்மதித்தனர். அதே கல்வெட்டில் விஜயகண்ட கோபாலனின் 24-ம் ஆட்சியாண்டில் சந்திவிளக்கு ஒன்று எரிப்பதற்கு இவ்வூரில் உள்ள பள்ளிகளில் சீபாத நாடாழ்வான் மகன் செல்வபிள்ளை என்பவர் கொடையளித்த ஒருமாடையை சிவபிராமணர்கள் சிலர் பெற்றுக் கொண்டு விளக்கெரிக்கச் சம்மதித்த செய்தியும் கூறப்பட்டுள்ளது.

**கல்வெட்டு:**

1 ஸ்வஸ்திஸ்ரீ இராசராச தேவற்கு யாண்டு *உயஉ*ஆவது வய
2 லக்காவூர் உடையார் சி வாரணாதீசுரமுடைய நாயனாற்
3 கு இவ்வூர் அரும்பாக்கிழான் கூத்தாடுந்தேவன் வை
4 வத்த சந்தி விளக்கு ஒன்றுக்கு நாங்கள் கைக் கொண்ட
5 மாடை ஒன்றுக்கும் சந்திராதித்தவரையும் செலுத்தக் கட
6 வோம் தனிப்பள்ளிசுரமுடையான் பட்டன் உள்ளிட்டாரும் திம்
7 நம் பட்டன் உள்ளிட்டாரும் இவ்வனைவோம் கண்ட கோபாலர்[க்]
8 கு *உயக* இவ்வூரில் இருக்கும் பள்[ளி]களில் சி பாத நாடாழ்வா[ன்]
9 மகன் செல்வப்பிள்ளை வைத்த சந்[தி] விளக்கு ஒந்றுக்கு தந்த ம[ா]
10 டை ஒன்றுக்கும் சந்திராதித்தவரை செலுத்தக் கடவோமா[க]
11 தனிப்பள்ளிசுரமுடையான் பட்டன் உள்ளிட்டாரும் தியநமபபட்
12 டன் உள்ளிட்டாரு[ம்]

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண்: 63/2005**

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 27 |
| **வட்டம்:** | உத்தரமேரூர் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1173 |
| **ஊர்:** | வயலக்காவூர் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 249/1922 |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 3 |
| **அரசன்:** | இரண்டாம் இராஜராஜன் | | |

**இடம்: ஸ்ரீ வாகீசுவரர் கோயில்**

**குறிப்புரை:** வயலைக்காவூர் ஸ்ரீவாரணாதீசுவரர் கோயில் இறைவனுக்கு சந்தி விளக்கு ஒன்று எரிப்பதற்கு இவ்வூர்க் கண்ணந்தைக் காவிதி காரியாழ்வான் என்பவர் உபயமாக அளித்த கண்ட கோபாலன் புதுமாடை ஒன்றை, இக்கோயில் சிவபிராமணர்கள் சிலர் பெற்றுக் கொண்டு விளக்கெரிக்க சம்மதித்து கையெழுத்திட்டுக் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு:

1 *ஸ்வஸ்திஶ்ரீ* திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ
2 தேவர்க்கு யாண்டு *உயஎ* வயலைக்காவூர்
3 உடையார் ஸ்ரீ வாரணாதீசுரமுடையார்
4 கோயில் *ஶிவப்ர*[*ா**]ஹ்மணன் *ஸும*த்தியன் ஆண்
5 டாள் [சே] ஷன்ப் பள்ளிசுரமுடையானும் ஆ
6 ழிப் பிள்ளையும் இக்குடி திருநட்டப் பெருமாள் உ
7 ள்ளிட்டாரும் ஐய்யன் கூத்தபட்டன் உ
8 ள்ளிட்டாரும் இவ்வனைவோம் இன் நாயநார்க்கு
9 சந்தி விளக்கு எரிக்க உபையமாக இவ்வூர்க்க
10 ண்ணந்தைக் காவிதி காரியாழ்வான் தி.த்த நா
11 யகன் விளக்கு *க* இவ்விளக்கு ஒன்றுக்கும் கைக்
12 கொண்ட கண்ட கோபாலன் புதுமாடை ஒன்றும்
13 கைக்கொண்டு சந்திராதித்தவரை இவ்விளக்
14 கு ஒன்றும் எரிக்க கடவோம் இவ்வனைவோம் இப்

15 படிக்கு இவை *சுமத்*தியன் ஆண்டான் பட்டன்

16 தனிப்பள்ளி சுரமுடையான் எழுத்து இப்படிக்கு இவை

17 ஆழிப்பிள்ளை எழுத்து இப்படிக்கு இவை திருநட்டப்பெ

18 ருமான் எழுத்து இப்படிக்கு இவை ஐய்யன் கூத்தபட்டன் எ[ழுத்து]

த.நா:அ. தொல்லியல்துறை | தொடர் எண்: 64/2005

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 27 |
| வட்டம்: | உத்தரமேரூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 1173 |
| ஊர்: | வயலக்காவூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 254/1922 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 4 |
| அரசன்: | இரண்டாம் இராஜராஜன் | | |

இடம்: ஸ்ரீ வாகீசுவரர் கோயில் கருவறை தெற்குச் சுவர்

குறிப்புரை: ஸ்ரீவாரணாதீசுவரமுடையார் கோயிலில் திருமண்டபம், திருக்கற்றளி செய்வித்துக் கோட்டத்தில் தேவர்களையும் [இறை உருவங்கள்] எழுந்தருளுவித்தவர் திருக்காளத்தி உடையான் வாரணாசி உடையான் களப்பாளன் என்பவராக இருத்தல் வேண்டும். இவர் தன் மகள் ஆளுடை நாச்சிக்காக ஒரு சந்திவிளக்கு இக்கோயிலில் எரிப்பதற்குக் கண்டகோபாலன் புதுமாடை ஒன்றை அளித்தார். இக்காசைப் பெற்றுக் கொண்ட அக்கோயில் சிவபிராமணர்கள் விளக்கெரிக்கச் சம்மதித்த செய்தியும் கையெழுத்திட்டுள்ளமையும் தெரியவருகிறது.

கல்வெட்டு:

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள்

2 ஸ்ரீ இராஜ இராஜ தெவற்கு யாண்

3 டு உயஎ வது காலியூர்க் கோட்டத்து

4 வயலைக்காவூர் உடையார் ஸ்ரீவா

5 [ர] ணாதி சுரமுடைய [நாயனார் கோ]யிற்கா

6 ணி உடைய ஶிவ ப்ராமணன் ஸமஸ்தன் ஆண்டா

7 ன் பட்டன் தனிப்பள்ளிசுரமுடையானும் ஆழி பி

8 ள்ளையும் இக்குடி மூவரன் திருநட்டப்

9 பெருமாளும் இக்குடி ஐய்யன் கூத்த பட்டன்

10 உள்ளிட்டாரும் இவ்வனைவோம் இன்நாய

11 னார்க்கு சந்தி விளக்கு எரிக்க உபையமாக இ

12 ன்னாயனார் கோயி[ லுள்] திருமண்டபமும் திருக்

13 [ க]ற்றளியும் செய்வித்து குட்டத்தில்[1] தேவர்க

14 ளையும் எழுந்தருளுவித்து

15 . . . வித்த

16 வதி திருக்காளத்தி உடையான் வாரணவாசி உடை [ ட]

17 யான் களப்பாளன் இவர் மகள் ஆளுடை நாச்சிக்

18 கு ஆக வைத்த சந்தி விளக்கு க இவ்விளக்கு ஒந்று

19 க்கும் கைக்கொண்ட கண்ட கோபாலன் புது

20 மாடை ஒன்றும் கைக் கொண்டு சந்திராதித்த

21 வரை இவ்விளக்கு ஒன்றும் எரிக்க [ க்க*]டவோம் இவ்

22 வனைவோம் இப்படிக்கு இவை *ஸமஸ்த*யன் ஆ[ ண்]

23 டான் பட்டன் தனிப்பள்ளிசுரமுடையான் பட்டன்

24 எழுத்து இவை ஆழிப் பிள்ளை எழுத்து இவை திரு

25 [ நட்டப்]

26 பெருமா

27 ள் எழுத்

28 து இவை

29 வ கூத்த

30 ஹட்டன்

31 எழுத்

32 து ||-

---

1. கோட்டத்தில் - என்று இருத்தல் வேண்டும்.

| த.நா.அ. தொல்லியல்துறை | | தொடர் எண்: | 65/2005 |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 27 |
| வட்டம்: | உத்தரமேரூர் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 1173 |
| ஊர்: | வயலக்காவூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | 253/1922 |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 5 |
| அரசன்: | இரண்டாம் இராஜராஜன் | | |

இடம்: ஸ்ரீ வாகீசுவரர் கோயில் கருவறை தெற்குச்சுவர்

குறிப்புரை: வயலைக்காவூர் வாரணாதீசுவரமுடையார் கோயிலில் சந்தி விளக்கு ஒன்று எரிப்பதற்குச் சோழ மண்டலத்து ஜயங்கொண்டசோழ வளனாட்டுச் செம்பியன்......கொம்பூருடையார் ஆதித்ததேவர் என்ற வில்லவராயர் அளித்த கண்டகோபாலன் புதுமாடை ஒன்றைப் பெற்றுக் கொண்ட இக்கோயில் சிவபிராமணர்கள் சிலர் விளக்கெரிக்க ஒப்புக்கொண்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு:

1 *ஸ்வஸ்திஸ்ரீ* திருபுவனச்
2 சக்கரவ[ர்*]த்திகள் *ஸ்ரீ* ராஜராஜ
3 தேவர்க்கு யாண்டு *உயஎ* வது
4 [காணி] கோயிற் வயலைக்
5 காவூர் உடையார் ஸ்ரீ வா[ர]
6 ணாதி சுரமுடையார் கோயில்
7 காணி உடைய *ஸிவப்ரா*[ர*]ஹ்மணன்
8 *ஸுமஸ்த*ன் ஆண்டான் பட்டன்
9 தனிப்பள்ளி சுரமுடையா நும் இப்
10 படி ஆழிப் பிள்ளையும் இக்குடி[ய]
11 ர் மூவரன் திருநட்ட பெருமா[ள்] உ
12 ள்ளிட்டாரும் இக்குடி ஆளுடையார் ஐய்
13 யப்பிள்ளை உள்ளிட்டாரும் இவ்வனை
14 வோம் சோழமண்டலத்து ஜயங்கொண்
15 ட சோழவளனாட்டுச் செம்பியன்.......கொ

16 ம்பூருடையார் ஆதித்த [ ]தேவர் .....தேவரா[ ன]
17 வில்லவராயர் பக்கல் இன்னாயனார் கோயிலி
18 ல் சந்தி விளக்கு எரிக்க உபையமாகக் கை[ க்]
19 கொண்ட கண்டகோபாலன் புதுமாடை க இ
20 ம்மாடை ஒன்றும் கைக்கொண்டு சந்திராதித்த
21 வரை சந்தி விளக்கு எரிக்கக் கடவோம் இவ்வ
22 [ னைவோம்*] ||

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண்: 66/2005**

**மாவட்டம்:** காஞ்சிபுரம்
**வட்டம்:** உத்தரமேரூர்
**ஊர்:** வயலக்காவூர்
**மொழி:** தமிழ்
**எழுத்து:** தமிழ்
**அரசு:** பல்லவர்
**அரசன்:** கோப்பெருஞ்சிங்கன்

**ஆட்சி ஆண்டு:** 16
**வரலாற்று ஆண்டு:** கி.பி.1259
**இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** 255/1922
**முன் பதிப்பு:** —
**ஊர்க் கல்வெட்டு எண்:** 6

**இடம்:** ஸ்ரீவாகீசுவரர் கோயில் கருவறை தெற்குச்சுவர்

**குறிப்புரை:** வயலைக்காவூர் வாரணவாசிசுரமுடையார் கோயிலில் சந்தி விளக்கு ஒன்று எரிப்பதற்கு இரையூர் பலகண்ணன் தழுவக் குழைந்தான் திருவீழிமிழலை உடையான் என்பவர் கொடையளித்த ஒரு மாடையைப் பெற்றுக் கொண்டு இக்கோயில் சிவபிராமணர்கள் விளக்கெரிக்கச் சம்மதித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

பிற கல்வெட்டுகளில் வாரணாதீசுவரமுடையார். என்ற கோயில் பெயர் குறிப்பிட்டிருக்க, இக்கல்வெட்டில் மட்டும் வாரணவாசிசுரமுடையார் - என்று கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**கல்வெட்டு:**

1 *ஸ்வஸ்திஸ்ரீ* சகலபுவன சக்கரவத்திகள் ஸ்ரீகோப்
2 பெருஞ்சிங்க தேவர்க்கு யாண்டு *யசு* வயலைக்கா
3 வூர் உடையார் ஸ்ரீ வாரணவாசீசுர முடையார் கோ
4 யில் காணி உடைய சிவப்[ா*]ஹ்மணன் *ஸமஸ்த*ன் ஆண்டான்
5 பட்டன் தனிப்பள்ளிசுர முடையாரும் மேற்படி ஆழிப்பி
6 ள்ளையும் இக்குடி பட்டர் மூவரன் திருநட்டப் பெருமா[ள்]
7 உள்ளிட்டாரும் ஆளுடையான் ஐய்யப் பிள்ளை உள்ளிட்டா
8 ரும் இவ்வனைவோம் இரையூர் பலகண்ணன் தழுவ[க்]
9 குழைந்தான் திருவீழிமிழலை உடையான் பக்கல் இன்
10 னாயனார் கோயிலிலே சந்திவிளக்கு எரிக்க உபையமா
11 கக் கைக்கொண்ட மாடை *க* இம்மாடை ஒன்று[ம்] கைக்
12 கொண்டு சந்திராதித்தவரை ஒரு விளக்கு எரிக்கக் கட
13 வோம் இவ்வனைவோம் ॥

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ.** | **தொல்லியல்துறை** | **தொடர் எண்:** | **67/2005** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 27 |
| **வட்டம்:** | உத்தரமேரூர் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1173 |
| **ஊர்:** | வயலைக்காவூர் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | 252/1922 |
| **எழுத்து:** | தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 7 |
| **அரசன்:** | இரண்டாம் ராஜராஜன் | | |

**இடம்:** ஸ்ரீ வாகீஸ்வரர் கோயில்

**குறிப்புரை:** வயலைக்காவூர் வாரணவாதிசுரமுடையார் கோயிலில் சந்திவிளக்கு எரிப்பதற்கு மூன்று பேர் தனித்தனியாக அளித்த மூன்று கண்டகோபாலன் மாடைகளைப் பெற்றுக் கொண்ட இக்கோயில் சிவபிராமணர்கள் விளக்கெரிக்க சம்மதித்துக் கைமெழுத்திட்டுள்ள செய்தி காணப்படுகிறது.

## கல்வெட்டு:

1 *ஸ்வஸ்திஸ்ரீ* திரிபுவனச் சக்கரவத்திகள் *ஸ்ரீ* ராஜராஜ [தேவர்க்கு] யாண்டு *உயஎ* வயலைக்க[ாவூர் கோ]யில் [காணி உடைய] *ஸிவவ்ரா*[ா*]ஙணன் *ஸுமத்*தியன் ஆண் டான்பட்டன் தனிப்பள்ளிசுரமுடையானும் ஆழிப்

2 பிள்ளையும் இக்குடி திருநட்டப்பெருமா[ள் உள்]ளிட்டாரும் இக்குடி ஐய்[யப் பிள்ளை உள்ளிட்டாரும் இவ்வனை]வோம் இன்னாயனார்க்கு சந்தி விளக்கு எரிக்க உபையமாக இவ்வூர்க் கண்ணந்

3 தைக் காவிதி காவிதி திருச்சிற்றம்பலமுடையான் துலையாத செல்வன் விளக்கு......யா.......ன வடுகநாதன் விளக்கு ஒன்றும் இக்குடி திருக்காளத்தி யுடையான்

4 திருவகத்திசுரமுடையானும் திருக்காளத்தி உடையானும் விளக்கு ஒன்று . . . கைக் கொண்ட கண்டகோபாலன் மாடை மூன்றும் கைக்கொண்டு

5 சந்திராதித்தவரை இவ்விள[க்கு] . . .

6 க் கடவோம் இவ்வனை வே[ாம்] . . .

7 *ஸுமத்*தியன் ஆண்டான் பட்ட[ ன்] . . .

8 யான் எழுத்து இவை ஆழிப்பிள்ளை . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 11 |
| வட்டம்: | மதுராந்தகம் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 1177 |
| ஊர்: | பழனையூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | — |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | கிரந்தங்கலந்த தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | சோழர் | | |
| அரசன்: | இரண்டாம் இராஜாதிராஜன் | ஊர்க் கல்வெட்டு எண்: | 1 |

**இடம்:** மாகாளேசுவரர் கோயில் அர்த்தமண்டப வடக்குக் குமுதம் ஜகதி.

**குறிப்புரை:** செயங்கொண்ட சொழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துத் தனியூர் மதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்து வடபிடாகை பழனையூருடையார் திரு மாகாள முடையார் கோயிலில் ஒரு சந்தி விளக்கெரிப்பதற்காக சந்திரமௌலிபட்டன் மனைவி அளித்த 4½ பழங்காசுகளை ஏற்றுக்கொண்டு இக்கோயில் சிவபிராமணர் களான பாரத்வாசி அக்காளிபட்டன், கண்டி சிவபட்டன் மகன் திருவேகம்பட்டன் பொன்னம்பலக் கூத்தபட்டன் மகன் திருச்சிற்றம்பல பட்டன் ஆகியோர் விளக் கெரிக்க ஒப்புக்கொண்டதைக் குறிக்கிறது.

**கல்வெட்டு:**

1 *ஸ்வஸ்திஸ்ரீ* திருவாய்க்கே[ள்*]வி முன்னாகத் திரிபுவனச்சக்கரவத்திகள் *ஸ்ரீ* ராஜாயி ராஜ ஜெவர்க்கு யாண்டு

2 *யக* ஆவது ஆநி மாஸ முதல் ஜயங்கொண்ட சோழமண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து தனியூர்

3 ஸ்ரீ மது*ராந்த*க சதுவெ*ூதி*மங்கலத்து வடபிடாகை பழனையூருடையார் திருமாகாள முடையர் கோயில் சிவ

4 *ப்ராஹ்*மணன் *பாரத்வாஜி* அக்காளி ஹட்டனும் இக்குடி கண்டி சிவஹட்டன் மகன் திருவேகம்ப பட்டனும் கா*ஸ்*[பன்*] பொன்னம்[ப]

5 லக் கூத்த ஹட்டன் மகன் திருச்சிற்றம்பல பட்டனும் இம்வோமான. . . கால் *பா*க . . .

(1) இம்மூவோம் என இருக்க வேண்டும்.

6 ஸ்ஷூ மௌலி ஹட்டன் அகமுடையாள் வாழவந்தாள் சாநி பக்கல் னாங்கள் . . .
க ஸ்லூந்தி விளக்கு எரிக்க கடவோமாக

7 கைக்கொண்ட பழங்காசு சரு இ னால்ரையுங் கைக்கொண்டு சந்திராதித்தவரை
செலுத்துவோமா

8 கச் சிலாலேகைவெ செய்து குடுத்தோம் இம் மூவோம் ||

## த.நா.அ. தொல்லியல்துறை

**தொடர் எண்:** 6/1991

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 24 |
| **வட்டம்:** | மதுராந்தகம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி.1094 |
| **ஊர்:** | பழனையூர் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 2 |
| **அரசன்:** | முதலாம் குலோத்துங்கன் | | |

**இடம்:** மாகாளேசுவரர் கோயில் உண்ணாழிகை மேற்கு, தெற்குக் குமுதம்.

**குறிப்புரை:** குலோத்துங்க சோழனுடைய ''புகழ்மாது விளங்க'' என்னும் மெய்க் கீர்த்தியோடு தொடங்குகிறது. குலோத்துங்கனுடைய இருபத்து நான்காம் ஆட்சி யாண்டில் (கி.பி.1094) ஜயங்கொண்ட சொழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துத் தனியூர் மதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்து திருமாகாள தேவர்க்கு இவ்வூர் நாராயணப் பட்டன் என்பவன் ஒரு சந்தி விளக்கு வைத்ததையும், இக்கோயில் சிவ பிராமணர்கள் அதனை ஏற்று எரிய வைத்ததையும் குறிக்கிறது.

### கல்வெட்டு:

1 *ஸ்வஸ்திஸ்ரீ* புகழ்மாது விளங்க ஜயமாது விரும்ப நிலமகள் நிலவ மலர்மகள் புணர
உரிமையிற் சிறந்த மணிமுடிசூடி மீநவர் நிலைகெட வில்லவர் குலைதர
ஏனை மன்னவரிரியலுற்றிழிதரத் திக்கணைத்துந்தன் சக்கரந் நடாத்தி
விஜயாபிஷெகம் பண்ணியருளி வீரஸிம்ஹாஸ நத்துப் புவன முழுதுடையா
ளொடும்வீற்றிருந்தருளிய கோ ராஜகேஸரி பந்மாந திரிபுவனச்
சக்கரவத்திகள் *ஸ்ரீ* குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு *உயச* ஆவது
ஸ்ரீ மது ராந்தகச் சதுவே்தி மங்கலத்துவடபிடாகை பழனையூரில் ப்ராஹ்மணன்
[ர]யகரை நாராயண பட்டனேன் இவ்வூர்த்திருமாகாள தெவர்க்கு வைத்த
ஸந்தி விளக்கு க ஒன்றும் இக்கோயிற் சிவசிவ ப்ராஹ்மணர் காஸ்யபன்
ஏகா.. .. பட்டனும் இக்குடி ஆட்சிகொண்டான் பட்டனும் பாரத்வாஜி
உமாஸ மித பட்டனும் இக்குடி காண்ட சிவபட்டனும் இன்னால்வோம்
இக்கோயிலில் முன்னின்றாரோம் செலுத்தக் கடவதாகக் கைக்கொண்டோம் ||

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | 4 |
| வட்டம்: | மதுராந்தகம் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 989 |
| ஊர்: | பழனையூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | — |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | கிரந்தங் கலந்த தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 3 |
| அரசன்: | முதலாம் இராஜராஜன் | | |

**இடம்:** மகாகாளேசுவரர் கோயில் மேற்கு, தெற்குக் குமுதம்.

**குறிப்புரை:** ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துத் தனியூர் மதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்து வடபிடாகை பழனையூர் உடையார் திருமாகாள முடையார்க்கு ஸ்ரீபலிக்கும் திருநந்தவனத்துக்கும் இவ்வூர் மஹாஸபையார் இறை யிலியாக நிலம் விட்டதையும், அதன் அளவுகள் மற்றும் எல்லைகளையும் குறிக்கிறது.

**கல்வெட்டு:**

1 ஸ்வஸ்திஸ்ரீ காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளின கோராஜகேஸரிபஂர்க்கு யாண்டு ௪ னாலாவது னாள் ௩௰[1] னால் ஸ்ரீ மது ராந்தகச் சதுவேதிமங்கலத்து பெருங்குறி ஸபையோம் எ[ழுத்] து எம்மூர் வடபிடாகை பழனையூர்த் திருமாகாள ஷேவர்க்கு திருவமுது ஸ்ரீ திருநந்தவனத்

2 துப்புறங்களுமாக ஸபையோம் சந்திராதித்தவரை இறையிலியாக விட்ட பூமியா வன ராஜாதித்த வாய்க்காலுக்குத் தெற்குக் கோதண்டராம வதிக்குக் கிழக்கு இரண்டாஞ் சதிரத்துப் பழனையூர் மேலை ஏந்தலுங் கரையுங் கழுகு கொள்ளி யுங் கணவாயும் நீக்கித் தெற்குச் சார்க்கைய் வந்தவாற்றாற் பாடகம் ௪ னாலும் இங்கேய் மூன்றாஞ் சதிரத்துத் தண்ணீரேரியும் இத்தேவர் ஸ்ரீ கோயிலும் குடி யிருப்பும் நீக்கித் தென் மேற்குச் சார்க்கை வஂதவாற்றாற் பாடகம் ஒன்றும் இங்கேய் னாலாஞ் சதிரத்துத் தண்ணீரேரிக்கரையும்இஷேவர் ஸ்ரீ கோயிலுந் திருச்சுற்றுஂதிரு முற்றமுஂதெற்குச் சார்க்குடியிருப்பும் தண்ணீரேரிக் க.......பன்னிரு கோலகலம் வழி நீக்கிக் கைய்வஂதவாற்றாற் பாடகம் ௪ னாலு இவ்வாய்க் காலுக்குத் தெற்கு இரண்டாங் கண்ணாற்று இவ்வதிக்குக் கிழக்கு இரண்டாஞ் சதிரத்து மடுவுங் கரையும் நீக்கிக் கைய்வந்தவாற்றால் வடக்கடைய பாடகம்

1. ௩௰க

சனாலும் இங்கேய் மூன்றாஞ் சதிரத்து தெற்குச் சார்க்கைய் ஏரியுங் கரையும் கிழக்குச் சார் ஊர் பேடும் நீங்கி வந்த மேற்குச்சார்ப் பாடகம்.... ராஜாதித்த வாய்க்காலுக்குத் தெற்கு மூன்றாங் கண்ணாற்று ஸ்ரீவ.....க வதிக்கு னாலாஞ் சதி ரத்துப் பார்த்தூர்க்குப் பாயும் ஆற்று வாய்க்காலும் செயாறுகோளும் நீக்கி இவாய்க்காலுக்குக் கிழக்கும் மேற்குமாகக் கைவஷவா

3 ற்றாற் பாடகம் ௩ரு மூன்றரையும் ஆகச் சுட்டப்பட்ட இப்பதினேழரைப் பாடகமும் இதேவர்க்குச் சஷு ாதித்தவரை இறையிலியாகக் குடுத்தோம் பெருங்குறி ஸபையோம் இங்கேய் ராஜாதித்த வாய்க்காலுக்குத் தெற்கு [முதற்] கண்ணாற்று [வீரகேரள]வதிக்குக் கிழக்கு எட்டாஞ்சதிரம் மடுவுங்கரையும் நீக்கிப் பாடகம் சனாலும் கொல்லை பாடகம் ௨ இரண்டு இவ்வாய்க்காலுக்குத் தெற்க்கு முதற் கண்ணாற்றுக் கோதண்டராம வதிக்குக் கிழக்கு முதற் சதிரத்தில் தெற்கடைய நெல்விளைவு பாடகம் சவ னாலே கால் நின்றது ஏரியுங்கரையும் இங்கேய் இரண்டாங் கண்ணாற்று கோதண்டராம வதிக்குக் கிழக்கு முதற்சதிரத்து நெல்விளைவு பாடகம் ௩ மூன்று நின்றது மடுவுங் கொல்லையு[ம் பா]டகம் சனாலு ஆகப் பாடகம் எ ஏழு ராஜாதித்த வாய்க் காலுக்குத் தெற்கு இரண்டாங் கண்ணாற்றுக் கோதண்டராம வதிக்குக் கிழக்கு இரண்டாஞ் சதிரத்து ....... னாலில் வடக்கடைய நெல் விளைவு பாட கம் க[ரு] நின்ற........... மடுவுங்கரையும் பாடகம் உரு ஆகப் பாடகம் சனாலும் அரிகுல கேஸரி வாய்க்காலுக்குத் தெ[1]

1. கல்வெட்டின் பிற்பகுதி கிடைக்கவில்லை.

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண்: 8/1991**

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 19 |
| **வட்டம்:** | மதுராந்தகம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1165 |
| **ஊர்:** | பழனையூர் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 4 |
| **அரசன்:** | இரண்டாம் இராஜராஜன் | | |

**இடம்:** மாகாளேசுவரர் கோயில் தென்புற ஜகதிப் படை

**குறிப்புரை:** ஜயங்கொண்ட சோழமண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துத் தனியூர் மதுராந்தகச் சதுர்வெதிமங்கலத்து வடபிடாகை பழனையூர்த் திருமாகாளமுடைய நாயனார்க்குப் பல்லவாண்டார் என்பவருடைய மகன் அழகிய சீயரான அழகிய சோழ சம்புவராயன் இரண்டு நந்தாவிளக்குகள் எரிக்கப் பொன் கொண்டு நிலம் விலைக்குப் பெற்று அளித்த செய்தியை இக்கல்வெட்டுக் கூறுகிறது.

**கல்வெட்டு:**

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜதேவர்க்கு யாண்டு பத்தொன்ப தாவது ஜயங்கொண்ட சோழமண்டலத்து ஸ்ரீ மதுராந்தகச் சதுவெ௯ீ மங்கலத்து வடபிடாகை பழனையூர்த் திருமாகாளமுடைய நாய

2 னார்க்குப் பல்லவாண்டார் மகன் அழகிய சீயரான அழகிய சோழச் சம்புவ ராயர் வைத்த திருநந்தா விளக்கு உ இத்திருவிளக்கு இரண்டுக்கும் இவ்வூரிற் பொன் இட்டுக் கொண்ட நிலமாவது இராஜாதித்த வாய்க்காலுக்கு.

3 வடக்கு முதற் கண்ணாற்று கோதண்டராம வதிக்கு கிழக்கு இரண்டாஞ் சதிரத்திலும் மூன்றாஞ் சதிரத்திலும் பெயர[ா]ல்க் கழனியில் பழந்தேவதானம் நீக்கக் கண்டஞ் சேரவிட்ட பாடகம் அ இப்பாடகம் எட்டுங் கைக் கொண்

4 டு இத்திரு நந்தாவிளக்கு இரண்டும் சநூ ராதித்தவரை செலுத்தக் கடவோம் இக்கோயிற் காணியுடைய சிவப்பிராமணரோம் இப்படிக்குச் சமைந்து வீரபத்திரப் பட்டன் எழுத்து இவை கூத்தப்பட்டன் எழுத்து இவை கம்ப வாணன் பட்டன் எழுத்து.

| த.நா.அ. | தொல்லியல்துறை | தொடர் எண்: | 9/1991 |
|---|---|---|---|
| மாவட்டம்: | காஞ்சிபுரம் | ஆட்சி ஆண்டு: | — |
| வட்டம்: | மதுராந்தகம் | வரலாற்று ஆண்டு: | கி.பி. 11, 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர்: | பழனையூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை: | — |
| மொழி: | தமிழ் | | |
| எழுத்து: | கிரந்தங் கலந்த தமிழ் | முன் பதிப்பு: | — |
| அரசு: | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண்: | 5 |
| அரசன்: | — | | |

இடம்: மாகாளேசுவரர் கோயில் அர்த்தமண்டபம்

குறிப்புரை: பழனையூர் மாகாளமுடையார் கோயிலைக் கருங்கல்லால் கட்டியவன் மயிபாலன் சாத்தன் என்பதை இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

## கல்வெட்டு:

1 ஸ்வஸ்திஸ்ரீ இத்திருக்கற்றளி செய்தாந் பா... மயிபால

2 ந் சாத்தன்

| | | | |
|---|---|---|---|
| **த.நா.அ. தொல்லியல்துறை** | | **தொடர் எண்:** | **10/1991** |
| **மாவட்டம்:** | காஞ்சிபுரம் | **ஆட்சி ஆண்டு:** | 17 |
| **வட்டம்:** | மதுராந்தகம் | **வரலாற்று ஆண்டு:** | கி.பி. 1002 |
| **ஊர்:** | பழனையூர் | **இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை:** | — |
| **மொழி:** | தமிழ் | | |
| **எழுத்து:** | கிரந்தங் கலந்த தமிழ் | **முன் பதிப்பு:** | — |
| **அரசு:** | சோழர் | **ஊர்க் கல்வெட்டு எண்:** | 6 |
| **அரசன்:** | முதலாம் இராஜராஜன் | | |

